


# வாசகம்

எம்.எம்.தீன்


யாசகம்
எம்.எம்.தீன்

# யாசகம்

## எம்.எம்.தீன்

யாசகம்

**(Novel)**

Author : எம்.எம்.தீன்

ஜீவா படைப்பகம்©

Language : Tamil
First Edition: April-2019
Published by : Jeeva Pataippagam,

#351-MIG, NH-1, Nakkeerar Street,
Maraimalai nagar, Kanchipuram- 603209.
Ph : +91 **9841300250**
email: jeevapataippagam@gmail.com

**ISBN : 9788194386513**

Wrapper : ©Louis Benzell, USA

Creative Head : Sivakasi Suresh.
Conception : Karthick Pugazhendhi
Proof : Subha Devanathan.

பதிப்புரை
அத்தியாயம் -01
அத்தியாயம் -02
அத்தியாயம் -03
அத்தியாயம் -04
அத்தியாயம் -05
அத்தியாயம் -06
அத்தியாயம் -07
அத்தியாயம் -08
அத்தியாயம் -09
அத்தியாயம் -10
அத்தியாயம் -11
அத்தியாயம் -12
அத்தியாயம் -13
அத்தியாயம் -14
அத்தியாயம் -15
அத்தியாயம் -16
அத்தியாயம் -17
அத்தியாயம் -18
அத்தியாயம் -19
அத்தியாயம் -20
அத்தியாயம் -21
அத்தியாயம் -22
அத்தியாயம் -23
அத்தியாயம் -24
அத்தியாயம் -25
அத்தியாயம் -26
அத்தியாயம் -27
அத்தியாயம் -28
அத்தியாயம் -29
அத்தியாயம் -30
அத்தியாயம் -31
அத்தியாயம் -32
அத்தியாயம் -33
அத்தியாயம் -34
அத்தியாயம் -35
அத்தியாயம் -36
அத்தியாயம் -37
அத்தியாயம் -38

சமர்ப்பணம்

எனது மூத்த வழக்கறிஞர்கள்

லேட்.திரு.s.ஜெய்பால் MA.,BL.,

ஹாஜி.N.M.அப்துல் வஹாப் MA.,BL.,

ஆகியோர்களுக்கு...

## பதிப்புரை

எழுத்தாளர் எம்.எம்.தீன் அவர்களுடைய இந்த நாவலை எங்களது ஜீவா படைப்பகத்தின் வாயிலாக வெளியிடுவதில் அளப்பரிய மகிழ்ச்சி உண்டு. கடந்த ஆண்டில் திருநெல்வேலி 'படித்துறை' இலக்கியச் சந்திப்பின்போது, தன்னுடைய இந்த நாவலின் கதைக்களத்தைச் முதன்முறையாக என்னிடம் சொன்னார் எழுத்தாளர் எம்.எம்.தீன் அவர்கள். தட்டச்சுப் பிரதியை வாசித்துப் பார்த்தபோது, நாவலுக்குள் அவர் தேர்ந்தெடுத்திருக்கும் களமும், அதற்காக மேற்கொண்டிருக்கும் பயணங்களும், வாசிப்பும், நெல்லையைச் சுற்றியுள்ள பிராந்தியங்களில் வசிக்கும் இஸ்லாமிய ஜனங்களுக்குள் உலவும் பேச்சு மொழியை எழுத்தில் தொட்டுவிடும் அபூர்வ முயற்சியும் கண்முன் தெரிந்தது. இனிவரும் தன் படைப்புகளில் அந்தத் தொடுதலை முழுமையாக நிரப்பக் கூடியவராக எழுத்தாளர் தீன் அவர்கள் இருப்பார். அதற்கான கட்டியங்களை அவரோடு பேசிக்கொண்டிந்த தருணங்களில் அவர் பகிர்ந்த பலசம்பவக் கோர்வைகள் வாயிலாகவும், சொல்லாடல்களில் இருந்தும் புரிந்துகொண்டேன். நூலாசிரியருக்கு எங்களது வாழ்த்துகள். இந்நாவலுக்குச் சிறப்பானதொரு அணிந்துரை வழங்கியுள்ள தம்பி பி.குவிற்கு மிகப்பெரிய நன்றி.

-கார்த்திக் புகழேந்தி,

ஜீவா படைப்பகம்.

## அத்தியாயம் -01

தாயிடம் பாசப் பிச்சை
தந்தையிடம் அறிவுப் பிச்சை
குருவிடம் ஞானப் பிச்சை
மனைவியிடம் இச்சைப் பிச்சை
பிள்ளைகளிடம் உறவுப் பிச்சை
முதலாளியிடம் வாழ்வுப் பிச்சை
எல்லோரிடமும் அன்புப் பிச்சை
சாகுகையில் புண்ணியப் பிச்சை
எடுப்பதே வாழ்வின் எச்சை.

-கொங்கணச் சித்தர்,
சட்டைமுனிக்குச் சொன்ன உபதேசம்.

சிந்தாமதார்

பள்ளிவாசலின் சுற்றுச் சுவரை ஒட்டியபடி நின்று கொண்டிருக்கிறது அடர்பச்சை நிற இலைகளைக் கொண்ட நாவல் மரம். மீனின் செதில்களைப்போல கரும் மரப்பட்டைகள் மரத்தின் மேல் கிளை வரைப் படர்ந்திருந்திக்கின்றன. நாவல் மரத்திற்கு ராவணனைப் போல கிளையெல்லாம் தலைதான். காற்று அடிக்கும் போதெல்லாம் வட்ட இலைகள் ஒன்றோடொன்று பிணைந்து, கிளைகளோடு சேர்ந்து தலை சுழற்றி ஆடும்போது விர்விர்ரென்று ஒரு பேய்ச்சத்தம் கிளம்பும். மனிதர்களைப் போலவே அது ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் நாளைக்கடத்தும். காற்று கிளர்த்தும் நாளெல்லாம் அதற்கு திருநாள்தான். இந்தப் பழங்களைத் தின்னக் குயிலும், மைனாவும், மாம்பழச் சிட்டுகளும், காட்டுக் குருவிகளும் எங்கிருந்தோ வந்துவிடுகின்றன.

தோளில் ஜோல்னா பையும், கையில் கரு நொச்சிக் கம்பும், தலையில் முக்கோணமாய் மடித்துப் போட்ட துண்டுமாய் அமர்ந்திருந்தான் தக்கரை என்ற தக்கரை பீர்முகம்மது. அடர்த்தியான ஏழுநாள் தாடி

முகத்தின் பெரும்பான்மைப் பகுதியை ஆக்கிரமித்திருந்தது. அதுகுறித்தும் அக்கறைப் படாத மனிதனைப் போல அவன் முகம் கல்லென இறுகிப் போயிருந்தது அவன் எப்போதும் அப்படித்தான். இப்போதுமட்டுமல்ல, எப்போதும் அதிகமாகப் பேசுவதில்லை. பேசுவதால் தனது சக்தி வீணாகிவிடுமோ என்று பயந்திருக்கலாம். எதுவும் தேவையற்ற ஒருவனுக்கு என்ன பேச்சு வாழ வேண்டிகிடக்கிறது என்று கூட எண்ணி இருக்கலாம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்த பள்ளிவாசலுக்குத்தான் ஜீம்ஆ தொழுகைக்கு முன்பு நாவல் மர நிழலில் சம்மணம் போட்டோ, ஒரு காலைக் குந்தியபடியோ உட்கார்ந்திருப்பான். அவன் முகத்தைப் பார்த்தவர்கள் அவனுக்கு கோபதாபம், வம்புதும்பு எதுவும் கிடையாது என்று முடிவு செய்துவிடுவார்கள். அவ்வளவு சாந்தம், தாடிகளுக்குள் ஒளிந்திருக்கும். அன்று ஜோல்னாப் பையை தோளிலிருந்து தரையில் வைத்துவிட்டு, வானொலி நிலையப் பின்புற சுற்றுச்சுவரை ஒட்டி நிற்கும் வாகைமரத்தின் கீழ் சம்மணமிட்டு அமர்ந்தான். அவனது முகம் ஒடுங்கி, அசைவற்று இருந்தது.

சிறிது நேரத்தில் பெருவியாதிக்காரன் சூசை காலைக் கெந்திக் கெந்தி நடந்தவாறு அவனை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் தலையில் கட்டம் போட்டத் துண்டை முக்காடு போட்டிருந்தான். கடும் வெயிலுக்கு அவன் காதுமடல்கள் புண்ணாகி இருந்தன. அவன் உதடுகளும் வெடித்திருந்தன. காலைக் கெந்திக்கொண்டே சூசை மாணிக்கம் நடந்து வருவதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் தக்கரை.

சூசை எங்கேயோ பார்த்தபடி வந்து கொண்டிருந்தான் சளிபிடித்தவன் போல மூக்கை அடிக்கடி விடைத்துக் கொண்டான். எதுவும் பேசாமல் தக்கரை பீருக்கு எதிரே அமர்ந்தான் சூசை. தலையில் முக்காடு போட்டிருந்த துண்டை மொட்டை விரல்களால் எடுத்து மடித்துத் தலைப்பாகை போலப் போட்டுக் கொண்டான். அவனாக எப்போதும் பேச்சை ஆரம்பிக்க மாட்டான். எதையாவது பேசி தக்கரையிடம் வாங்கிக்கட்டிக் கொள்ள அவன் தயாரில்லை. ஆனாலும் அவனது பொல்லாத மனம் சும்மாயில்லாமல் எதையாவது சொல்லி தக்கரையைச் சீண்டிவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டேயிருக்கும்.

"யண்ணே.. பஸ்ஸ்டாண்டயே பாத்தபடியே இருக்கீங்களே. முத்தாச்சியெ தேடுதியளா...?" பெருத்து வெடித்து புண்ணாகிய உதடுகளை விரித்து சிவந்த ஈறுகள் தெரியச் சிரித்தான்.

தக்கரைக்கு அந்தச் சிரிப்பு பிடிக்கவில்லை. பார்க்க விரும்பாமல் தவிர்த்தான். தலை கவிழ்ந்து பக்கத்தில் நின்றிருந்த குறுஞ்செடியின் இலையப் பிடுங்கினான். பசலி இலை போல தடித்திருந்தது. அப்படியே எடுத்து முகர்ந்து பார்த்தான். வாசனையாய் இருந்தது. இன்னும் இரண்டு இலையைக் கிள்ளி அதையும் நாசியில் வைத்து மூச்சை இழுத்தான். அந்த இலையின் புதிய வாசம் அவனை மயக்கியது. தன்னாலே அவன் பார்வை பேருந்து நிலையத்தை நோக்கித் திரும்பியது.

"ஏண்ணே... முத்தாச்சியே காணோம். இன்னிக்கி வர மாட்டாளா?" என்றான் சூசை மாணிக்கம். தக்கரை அவனை ஏறிட்டுப் பார்த்தான். சூசை தனது லுங்கியை இடுப்புக்கு மேலே கட்டியிருந்தான். சட்டையை மடித்து கையில் வைத்திருந்தான்.

வேண்டுமென்றே தக்கரையைச் சீண்டும் நோக்கத்தில் இருந்தது அவனது கேள்வி. எதுவும் சொல்லாமல் தரையைக் கிளற ஆரம்பித்தான் தக்கரை. புழுதி மணலில் எதையோ எழுதியபடி இருந்தான். எழுதியதை அழித்து மீண்டும் எழுதியபடி இருந்தான். அழிக்காத பொழுதுகளில் அவன் கைகள் காற்றில் எதையோ அளைந்து கொண்டிருந்தன.

"எண்ணன்ணே.. நா கேட்டதுக்கு பதிலக் காணோம்?", மீண்டும் சிரித்தான் சூசை. தலையில் பொட்டென ஒரு மழைத் துளி விழுந்துத் தெறித்தது.

தக்கரை ஜோல்னாப் பையைத் திறந்து, அதிலிருந்த பூந்துண்டை எடுத்து தலையில் முக்காடு போட்டுக் கொண்டான். சாரல் துளிகள், அந்த மரத்தின் இலைகளைத் தாண்டி கீழே விழவில்லை. அப்படியே நன்றாகத் தூறினாலும் தக்கரை அந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மாட்டான் என்பது சூசைக்கு நன்றாகத் தெரியும்.

"பேட்டையில் மழையாயிருக்கும் போல... அதான் அக்காவும், புள்ளையும் வரல்ல போலிருக்கு" என்றான் சூசை.

"போலே.. பொசக்கெட்டவனே.. வாயில நல்லா வந்துரும். அதாம்ல உங்கம்மா வவுத்துலேர்ந்து உருவிப் போட்டுட்டு போய்ட்டா, தெருவுல கிடந்து சீரழின்னு"

"ஏண்ணே கோவப்படுதியோ... இன்னும் வரக் காணோம்னு தானே கேக்கேன். கையேந்த வராட்டாலும் உங்களெ பாக்காம இருக்க மாட்டாளே"

தக்கரை பதிலேதும் சொல்லவில்லை. அவனுக்கு முத்தாச்சி வந்தால் பையனும் வருவானே என்று தோன்றியது. சரி.

அவளும் அவபுள்ளயும் வேறு எங்கேயும் போயிட்டுதுகளோ என்னவோ... சரி பார்ப்போம் என எண்ணிக் கொண்டான் தக்கரை.

"ஏலே.. சூசை, முத்தாச்சி இன்னும் சின்னப்புள்ளயா தானேலே இருக்கா. நாமதான் கிழட்டு மூதியளா மாறிட்டோம்" என்றான். சத்தம் போட்டு ஈறு தெரிய சிரித்தான் சூசை. ஈற்றில் ரத்தம் கசிந்து சிங்கப்பல்லில் வழிந்திருந்தது.

"தக்கரைண்ணே... உம்ம தவித்து அவளுக்கு பேட்டையிலயும் ஒரு தொஸ்க்கு உண்டுமாக்கும்" என்றான் சூசை சன்னமான குரலில். தக்கரை பதிலேதும் சொல்லாமல் மேற்காகப் பார்த்தபடி யிருந்தான். தூரத்தில் முத்தாச்சியும் அவ மகனும் வேகமாக பள்ளிவாசலை நோக்கி வந்தபடியிருந்தார்கள். முத்தாச்சி மகனின் கைத்தடியை அவள் கையில் வைத்திருந்தாள்.

சுருங்கிய கண்களோடு வரும் அவளது கண்தெரியாத மகன் முத்தாச்சியின் கைகளைப் பிடித்தபடி கூட வந்தான். அவனது கண்களில் பூ விழுந்து இருந்தது. அவளை ஒட்டியபடி நடந்து வந்தான் அவள் மகன் துரைகுட்டி. அவள் வருவதைப் பார்த்துவிட்ட தக்கரை தலையைத் தொங்கப் போட்டபடி பார்க்காதது போல அமர்ந்திருந்தான். முத்தாச்சியையும் அவள் மகனையும் அவன் காணோம் என்று தவித்துக் கொண்டிருந்த மனம், அவர்களைப் பார்த்தவுடன் ஏன் இவர்கள் வருகிறார்கள்..? என்பது போல எண்ணியது. சூசையைப் பார்த்த போது அவன் கண் சொருகி இருந்தான். அது கொஞ்சம் நிம்மதியைக் கொடுத்தது.

முத்தாச்சிக்குத் தக்கரையின் குணம் நல்லாத்தெரியும். அவன் தின்றுவிட்டு அக்கடான்னு அமர்ந்திருப்பவன். பட்டினி கிடந்தாலும் அது போலத்தான் மூன்று நாள் ஆனாலும் சோறு தண்ணியில்லாமக் கூட இருப்பான் என்பதும் தெரியும்.

அவனைத் தன் வழிக்குக் கொண்டு வர அவள் எவ்வளவு முயன்று பார்த்தும் முடியவில்லை. அவன் போக்கிலேயே விட்டுவிட்டாள். ஆனாலும் அவன் போகிற இடங்கள், தங்குகிற கோயில்கள், தர்க்காக்கள் எல்லாம் அவளுக்கு அத்துபடி. வாரத்துக்கு ஒருநாளைக்காவது அவனைப் பார்த்துவிட்டு போய்விடவேண்டும் என்பதைத் தாண்டி எதுவும் அவளுக்கு வேறு தேவையில்லை.

"முத்தாச்சி வந்துட்டியா.. வா எம்புட்டு நேரமா காத்திருக்கோம் தெரியுமா?" என்றான் சூசை அவள் பதிலுக்குத் தலையாட்டினாள் வேறு

எதுவும் பேசவில்லை. அவள் மகனும் அவளோடு அமர்ந்தான். தக்கரை அவர்கள் அமர்ந்தது குறித்து அக்கரைப் படாதவன் போல நாவல் மரத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

தக்கரை அவளை பார்க்காதது பார்த்தான். காதுகளின் ஓரங்களில் வழிந்துக் கிடக்கும் சுருள் முடி காற்றில் ஆடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அதைவிடவும் அவளது சுருண்ட தலைமுடி நெற்றியெங்கும் ஒரு அரைவட்டக் கிரீடம் போலிருந்தது. தக்கரைக்கு தன்கையால் தடவிப் படிய வைத்துப் பார்க்க வேண்டுமென்று ஆசையாய் இருந்தது.

அடர்ந்தக் கறுப்புக் நிறத்தில் இருந்தப் பூனை, பெண்கள் விடுதியின் சுவர்மீது படுத்துக் கிடந்தது. கண்களை மூடிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்துக்கு ஒரு தடவை மீசை முடிகளை ஆட்டிவிட்டு, கண்களை பிரிப்பது போல் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் மூடித் தூங்கியது. அது காலை நீட்டியபடிச் சுவரில் படுத்திருப்பது அழகாத்தான் இருக்கிறது.

ஒவ்வொரு பறவைக்கும், பிராணிக்கும் ஒவ்வொரு குணம் இருக்கிறது. பூனைக்கு இருப்பது தனிக் குணம். தன்னைத்தான் கொஞ்ச வேண்டும், தடவிக் கொடுக்கவேண்டும் என்று எண்ணுபவை. சொந்த வீட்டிலும் யாருமில்லாத வேளையில் திருடித்தான் தின்ன வேண்டும். என்று எண்ணும். பொதுவாக விழித்துப் பார்த்துவிட்டு, நீண்டநேரம் படுத்து தூங்கியிருக்கவேண்டும். உடம்பை நீட்டி நெளித்துவிட்டு எழுந்து மெதுவாகத் தூக்க அசதியுடன் நடந்து விடுதிக்குள் போனது பூனை.

"ஏலே... சூசை... சோத்துப்பெட்டி வந்துட்டானா பாரு"

"அண்ணே.. நம்மள மாரி இல்ல, சோத்துப்பெட்டி. ரொம்ப தெளிவா கீக்கேட்டு வழியாப் போய் நவ்வாப் பழ மரத்து நெனலுல ஜம்முன்னு உக்காந்திருப்பான்... ஆமாண்ணே அவனுக்கு ஏன் சோத்துப்பொட்டின்னு பேரு வந்துச்சி".

"நீ லூசுப் பயன்னா சரியாத்தான் இருக்கு. அவென் வயத்த பாத்தா தெரியலயா குருட்டுப்பயலே. இன்னிக்காவது கண்ண முழிச்சுப் பாரு... அவன் துட்டு காசுக்கு ஆசப்படமாட்டாம்ல. ஒரு பெரிய பை வச்சிருப்பான் ராத்திரி அதை தோளுல தூக்கி வச்சிக்கிட்டு காலு போற போக்குல நடப்பான். காலைல கரெக்டா கொட்டு முழக்கத்தோடு கலியாண மண்டபத்துல போயி நிப்பாம்ல. அவென் அப்பன் சோத்த தின்னுட்டு கோமணத்த அவுத்திருப்பான் போல" என்று சொல்லிட்டு வாய்விட்டுச் சிரித்தான் தக்கரை.

முத்தாச்சியும் அவள் மகனும் எதுவும் கேட்காததுப் போலச் செவுட்டு முகத்தோடு குந்தியிருந்தார்கள். சூசை அவளை ஒரு பார்வைப் பார்த்துவிட்டு தனக்குள் சிரித்துக் கொண்டான். கீழுதட்டில் எச்சில் வழிந்ததைப் புறங்கையால் துடைத்துவிட்டு மீண்டும் பல் தெரிய மனதுக்குள் சிரித்தான்.

"முத்தாச்சி... இந்த சூசைப்பயலுக்கு கோமணத்தப் பத்தி பேசுனாலே கொண்டாட்டமாயிரும். நெனச்சி நெனச்சி சிரிக்காம் பாரு, நாயி சிரிச்சி முடிச்சிட்டு வரட்டும். தேரமாச்சி போவோம்..." காலுக்கடியில் வைத்திருந்தத் துண்டை உதறித் தலையில் கட்டிக் கொண்டான்.

தக்கரையும், முத்தாச்சியும், அவள் மகனும் நடக்க ஆரம்பித்தார்கள். கொஞ்சம் இடைவெளியில் சூசை காலை கெந்தி நடக்க ஆரம்பித்தான். யாசகம் கேட்பதற்காக நடக்கும் போதெல்லாம் அவன் நடையே ஒரு தினுசாக மாறிவிடுகிறது. சூசையின் பொய்நடையை முன்னால் நடக்கும் மூவரும் அறிவார்கள்தான். அவர்கள் அது குறித்து எதுவும் பேசுவதில்லை. அது அவர்களின் தொழில் தர்மம் ஆகிவிடுகிறது.

பிச்சைக் கேட்கும் ஒவ்வொருவரும் ஒரு தனிப் பாவனை வைத்துக் கொள்கிறார்கள். பாதிப் பார்வை உள்ளவன், குருடனைப் போலவும், கால்களில் சின்ன புண்ணுக்குப் பெரிய கட்டுப் போட்டுக் கொள்வதாலும். புதிய மேக்கப்பில் இறைத் தொண்டரைப் போலவும் மாறிவிடுகிறார்கள். அவர்களின் முதலீடு இதுதான். தினமும் அதைக் காப்பாற்ற ஒப்பனையைத் தொடர வேண்டியதும் இருக்கிறது.

சூசை கெந்தி கெந்திப் பின்தங்கியபடியே அவர்களுக்குப் பின்னால் நடந்தான். அவன் சொல்கிறபடி சொல்வதாயிருந்தால், உலகப் பரியந்தம் நடக்கும் எந்தச் செயலுக்குள்ளும் அவர்களுக்கு ஈடுபாடு வருவதே இல்லை. அது அரசியல், ஆன்மீகம், என்று எதுவானாலும் சரி. ஆனால் கோயில்களுக்குச் செல்லும்போது அதை முழுவதும் உள்வாங்குவது போன்ற பாவனையில் இருப்பார்கள். எல்லோருக்கும் வாழ்விற்கான உத்திதர்மம் இருக்கத்தான் செய்கிறது.

வெள்ளிக்கிழமைத் தொழுகைக்கான பாங்குச் சத்தம், மோதினாரின் கனத்தக் குரலில் ஒலிக்க ஆரம்பித்தது. தக்கரை தலையில் கிடந்த துண்டை எடுத்து மீண்டும் மடித்து போட்டுக்கொண்டான். நீட்டி முழக்கியபடி சொல்லிக் கொண்டிருந்த கரகரத்த குரல் ரசிக்கும்படியாய் இல்லை. ஆனாலும் அதைக் கூர்ந்து கேட்கிற பாவனையில் அமைதியாய் இருந்தான்.

சூசை எழுந்து தலையில் சட்டையை வைத்துக் கொண்டு லுங்கியை அவிழ்த்து ரெண்டு சுற்றுச் சுற்றி உதறிவிட்டுத் திருப்பி உதறிக் கட்டினான். சட்டையை எடுத்துக் போட்டுக் கொண்டான். கசங்கிய சட்டையில் ஒரு கோட்டை அழுக்கு இருக்கிறது.

"ஏலே.. கொஞ்சம் இரில்லே.... போவோம்" என்றான் தக்கரை எதுவும் சொல்லாமல் மீண்டும் அமர்ந்தான் சூசை. இப்போது அவனுக்குத் தெரிந்தது. முத்தாச்சி காத்திருக்கிறாள் என்பது.

## அத்தியாயம் -02

பள்ளிவாசல்

நாவல் மரத்திலிருந்த சில பறவைகள் சடக்கெனப் பறந்து வானொலி நிலையத்திற்குள் இருக்கும் மரங்களில் அமர்ந்தன. சின்னதாக மழைத்துளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பொட்டுப் பொட்டாய் விழுந்து புள்ளிகளாகத் தார் சாலையில் விரிந்தன. அதன் மேலே மீண்டும் துளிகள் விழ ஒரு வட்டத்தட்டாய் விரிவதைப் பார்த்தபடியிருந்தான். பொரிப் பொரியாய் விழுந்தது, தூத்தல் மழை. இந்தத் தூத்தல் கண்டிப்பா மேல் தரையைக் கூட நனைக்காது. அப்படி சிணுசிணுன்னு பெய்வதும் ஓய்வதுமாக இருக்கிறது. பரம்பரம் என்று அடிக்கும் காற்று மழையை அதனோடு கூட்டிப் போய்விடுகிறது.
சிந்தா மதார் தர்காவின் வடபுறமிருந்த பெரிய கொடிமரத்தில் தொங்கிய பிறைக்கொடி மழையில் நனைந்து சுருண்டு கிடந்தது. கந்தூரி விசேஷத்திற்காக பச்சை பெயிண்ட் அடிக்கப்பட்ட மரக்கம்பம் நனைந்து அடர்பச்சையாகியது. நனையாத இடங்களில் மழை நீர் ஒழுகி பெயிண்டில் வழுக்கியபடிச் சிறுநதியாகிக் கீழிறங்கியது. நனைய நனைய அந்த இடமும் அடர்பச்சை நிறத்துக்கு மாறிக்கொண்டிருந்தது. வேப்ப மரத்தின் கீழும், நாவல் மரத்தின் கீழும் ஒரு சொட்டு கூட விழாததால் மஞ்சள் தரையாய் தனித்துத் தெரிந்தது. அதை பார்க்கும்போது மழையின் நிழல் போலத் தோன்றியது.
சிறுமழையானாலும் குளுமை படர்ந்து தர்காவிற்குள் ஒரு புதுவாசத்தைக் கொடுத்தது. பள்ளிவாசல் மோஸ்தர் விளக்கில் கண்ணாடித் துண்டுகள் மின்னுவதைப்போல குட்டிச் சதுரப் பூக்கள் தோன்றின. பேஷ்இமாம் நீண்ட வெள்ளை பைஜாமாவும் தலைப்பாகையுமாகக் காட்சியளித்தார். கொசுவம் மடித்துக் கட்டிய அவரது தலைப்பாகையின் மேல்பகுதி அடுக்கடுக்காக விரிய, நீண்டு தொங்கும் அதன் பின்மடக்கு ஃபேன் காற்றில் அலைபாய்ந்தது. பளிச்சென்ற முகத்தில் சிறிய தாடி. கறுப்பு நரை முடிகளுடன் பொலிவாக இருந்தார் அவர். இமாம் தன் பைஜாமா காலரில், மிம்பர் மைக்கை மாட்டிக்கொண்டு படிகளில் ஏறி ஜீம்ஆ வெள்ளிக் கிழமையான பிரசங்கத்தை அரபியில் படிக்க ஆரம்பித்தார். மழைத் தூறல்களுக்கு ஊடாக அவரின் இனிமையான குரல் பிசிரின்றித் தெளிவாகக் கேட்டது.
இன்னும் சிறிது நேரத்தில் தொழுகை ஆரம்பித்து விடும் என்பது அவர்களுக்கு தெரியும். தக்கரை தலையைத் தூக்கி மீண்டும் பார்த்தான். யாரும் வருவதாகத் தெரியவில்லை. அது ஐந்து பேரும் மெதுவாக

எழுந்து பள்ளிவாசலின் முகப்பிற்கு வரவேண்டிய நேரம். முதலாவதாக தொழுகைக்கு வந்த ஒருவர், அவர்களுக்கு சாப்பாடுப் பொட்டலங்களைத் தந்துவிட்டுப் போனார். தக்கரையால் சடக்கென எழுந்திரிக்க முடியவில்லை. முத்தாச்சி அருகில் போய்க் கைகொடுத்துத் தூக்கிவிட்டாள். கால் மரத்துபோய் இருக்க வேண்டும். அவன் அப்போதும் போல உம்முனா மூஞ்சியோட எழுந்தான். "ஏன்ய்யா காலையலே சாப்புடலியா" முத்தாச்சி மெதுவாகக் கீச்சுக் குரலில் கேட்டாள். அதற்கும் அவன் எதுவும் சொல்லவில்லை. முன்னே போ என்பதைப்போல சைகை செய்தான். அவள் தன் மகனின் கையைப் பிடித்துக் கொண்டு முன்னே நடந்தாள்.

தக்கரை கம்பைத் தரையில் ஊன்றி ரெண்டு எட்டு நடந்துவிட்டு, எப்போதும்போலகம்பைக் கையில் வைத்தபடி சாதாரணமாக நடந்தான். சூசை செயற்கையாய் கெந்திக் கெந்தி பின்னால் வந்தான். அவன் சாதாரணமாக நடந்தால் எல்லோரையும்போல வேகமாக நடக்க முடியும். சோத்துப் பெட்டியும், கால் ஆணிக்காரனும் எந்திரிக்கவே இல்லை. அவர்களுக்குத் தெரியும் தொழுகை முடிய இன்னும் கொஞ்சம் நேரம் ஆகுமென்று. ஆணிக்காரன் தன் அடர்ந்த தாடியைச் சொறிந்தபடி இருந்தான். அவன் முகம் மழித்து இரண்டு மாதத்திற்கு மேல் இருக்கும் குடிச்சிக் குடிச்சே அழித்துப் போட்டான் அவன் சொத்தையும் குடும்பத்தையும். அதன் பிறகு கோயில்களிலேயே தன் வாசத்தை வாழ்ந்து வருகிறான். நாற்பது வருஷத்துக்கு முன்னாடிச் சுவர் முட்டி குடிக்க ஆரம்பித்து இப்போது குவாட்டரில் வந்து நிற்கிறான். ராத்திரியானால் ஒரு கட்டிங் போட்டுவிட்டு இரவு பூராவும் பினாத்திக்கிட்டேக் கிடப்பான். இன்று ஒரு குவாட்டருக்கு பணம் தேத்தணும் என்று அவன் மனம் சொல்லியது.

அவன் பொஞ்சாதி இன்னேரம் வேறு ஏதாவது ஒரு பள்ளிவாசலில் கையை ஆட்டியபடி நின்று கொண்டிருப்பாள்.

பிச்சைக்காரர்களுக்கென்று ஒரு தனி வாழ்வும், மொழிகளும் இருக்கிறது. தங்களுக்கு வருமானம் வருகிறதோ இல்லையோ கொடுப்பவர்கள் நேரத்தில் அவர்கள் யாருக்கும் ஒட்டோ உறவோ நட்போ இல்லாததுபோல் மாறி விடுகிறார்கள். எல்லோரும் தனித்தனியான மனிதர்கள், தனித்த கோரிக்கைகள், தனித்த வருமானம் என்று ஆகி விடுகிறார்கள். ஒருத்தருக்கு ஒருத்தர் தெரிந்தவர் என்று சொன்னால் ஒண்ணும் கெட்டுப் போவதில்லை தான். ஆனாலும் அது அவர்களுக்கான வருவாயைக் குறைத்துவிடக் கூடும். அதனாலே பெரும்பகுதி ஒவ்வொருவரும் தனித்தனி மனிதர்கள் நாங்கள் என்கிற முகபாவனைகளிலே இருப்பார்கள். அப்படி இருந்தால்தான் கொடுக்கிற

கைகள் இருக்கின்ற தலைகளைக் கணக்கு பண்ணிக் கொடுக்கும்.
முத்தாச்சி அதில் கைதேர்ந்த கெட்டிக்காரி. இருவருக்குமாகச் சேர்த்துக் கொடுத்ததை வாங்கிக் கொண்டு, "கண்ணு தெரியாத புள்ள வாப்பா... அவனுக்கும் ஏதாச்சும் கொடுங்க வாப்பா... அல்லா பரக்கத் செய்வான்" என்று சொல்லி அவனுக்கென்று மீண்டும் வாங்கிவிடுவாள். இதில் மிகவும் சத்தமில்லாதவன் தக்கரைதான். எதற்கும் வாயைத் திறக்க மாட்டான். அவனது ஜோல்னாபை அசையாமல் கிடப்பதைப் போலவே ஊமையாகத்தான் நிற்பான். கொடுப்பதை வாங்கிக் கொள்வான்.முத்தாச்சிக்கு அவன் மேல் ஆத்திரமாய் வரும்.
"எதுக்கய்யா நீயெல்லாம் வாறே.. வாயெத் தொறந்தா முத்தா உதுந்துரும். ஊமை போல நிக்கிறதுக்கு அந்த மரத்தடியே கெதின்னு கிடக்க வேண்டியதுதானே..."
அவன் காதில் வாங்காதவன் போல இருந்து விடுவான். அவனுக்கும் சேர்த்து காசுக் கொடுப்பதையும் அவள்தான் வாங்கிக் கொடுக்கணும். ஏன் அப்படி இருக்கிறான் என்பதற்கு அவளிடம் மட்டுமல்ல அவன் சிநேகிதர்களிடமும் பதிலில்லை. அவன் அப்படித்தான் என்று விட்டார்கள்.
தொழுகை முடிந்து எல்லோரும் வெளியே கிளம்புகையில் இவர்கள் வாய்கள் முணுமுணுக்கத் தொடங்கிவிடும் "வாப்பா.. வாப்பா... தர்மம் கொடுங்கோ வாப்பா... சக்காத்து கொடுங்க வாப்பா" எனத் தாளம் தப்பாமல் சொல்வான் முத்தாச்சியின் மகன். அவனது கசிந்துருகும் குரல் எல்லோரையும் தர்மம் செய்ய வைத்துவிடும் தொழுகைக்கு வருபவர்கள் காலடிச் சத்தம் கேட்கும் போதெல்லாம்
அவனது வாய் இந்த மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்து விடும். அப்படி ஒரு தினுசான பயிற்சி. அவனது இரக்கமான கேட்பில்தான் இவ்வளவு நாளை அவள் ஓட்டிக் கொண்டிருக்கிறாள் முத்தாச்சி.
அன்றைய வசூல் சுமாராகத்தான் இருந்தது. எப்போதும் போலச் சாப்பாடு பொட்டலம் கிடைத்தது. தலைக்கு எழுபது ரூபாய்தான் கிடைத்தது. தக்கரை தனக்குரிய பணத்தை வாங்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். அவனை சூசையும், முத்தாச்சியும் அவளது மகனும் பின் தொடர்ந்தார்கள். சோத்துப்பெட்டி தனது பெரிய துணிப் பையைத் தோளுக்கு ஏற்றிக் கொண்டு இலந்தைகுளம் வழியாகத் தெற்காகப் போனான்.
அவன் பாளையங்கோட்டை ரயில்வே நிலைய சிமிண்டு பெஞ்சில் போய் அமர்ந்து கொண்டு தண்டவாளத்தின் மேல்பகுதியில் பார்த்தபடியே இருப்பான். அவனுக்கு அதில் தனி சுகம். அப்படியே தண்டவாளங்களின் மேல் மினுங்கும் மேல்பகுதியோடு பயணித்துப்

பெருமாள்புரம் ரயில்வே கேட்டு வரைக்கும் கண்கள் சென்று மீண்டும் திரும்பி முதலில் இருந்து ஆரம்பிப்பான். இடையில் அவனது துணிப்பையில் சோறிருந்தால் எடுத்து சாப்பிட்டுக் கொள்வான். சூசையிடமோ, முத்தாச்சியிடமோ கடன் கேட்பான். கொடுக்கவில்லையென்றால்
அறுத்துக் கிளிப்பான். அதை யாரும் தாங்கமுடியாது. ஏச்சில் எல்லா அந்தரங்க உறுப்புகளையும் அக்குவேறு ஆணிவேராகப் பிரித்து எறிந்து விடுவான். இலந்தைகுளம் டாஸ்மாக் கடையில் கட்டிங் போட்டால்தான் அவனது உளறல் நிற்கும். இன்றைக்கு யாரிடம் கடன்கேட்பது என்பது தெரியாமல் தன் கையில் இருக்கும் சில்லரைகளைக் குலுக்கியபடியே அவன் நடந்து போவதைப் பார்த்தபடி இருந்தான் சூசை.
இன்னும் ஒன்றிரண்டுப் பேர் பள்ளிவாசலுக்குள்ளிருந்து தனித்து தொழுது கொண்டு இருந்தார்கள். ஒருத்தர் பாயில் தலையைக் கிடத்தி அல்லாவிடம் மன்றாடிக் கொண்டிருந்தார். தக்கரையும் சூசையும் பள்ளிவாசலை விட்டு வெளியேறி, ரோட்டில் வாகை மரத்தின் நிழலில் நின்று கொண்டிருந்தார்கள். மெதுவாக மகனைக் கையில் பிடித்தபடி சாலையைக் கடந்து அவர்கள் அருகில் வந்து நின்றாள். அவள் ரோட்டைத் தாண்டுகையில் சூசை " "பார்த்து வா பார்த்து வா" என்று சத்தமிட்டுக் கொண்டே யிருந்தான். அவள் அதைச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.
அவள் வந்து நிற்கவும், தக்கரை தனது ஜோல்னாப் பைக்குள் கைவிட்டுத் தேடினான். எதுவும் கிடைக்கவில்லை. அப்படியே அமர்ந்து பையைத் தரையில் வைத்துப் பிரித்துப் பார்த்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து முத்தாச்சி யிடம் கொடுத்தான்.
"எதுக்குய்யா... எனக்கு வேணாம்..." என்றாள்
"இல்லே... மொவனுக்கு ஏதாவது டானிக் வாங்கிக்கொடு. போனமாசம் அவனுக்கு வைசூரி போட்டிருக்கும்போதே கொடுக்கணும்னு நெனைச்சேன். முடியாம போச்சு. முத்து... வச்சிக்கோ"
அவள் எதுவும் சொல்லாமல் வாங்கிக் கொண்டாள். சூசை தன் கண்ணில் தளும்பிய கண்ணீரை மறைக்க தலையில் கிடந்த துண்டை எடுத்து முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.
சர்க்கரைப்பழ பழ மரத்திலிருந்து பறந்துவந்த வால் நீண்ட ஆரஞ்சுநிறக் குருவி, வாலைச் சுழற்றி சுழற்றி பறந்தபடியே இருந்தது, ஒரு கிளையில் வந்தமர்வதும் உடனே அங்கிருந்து வாலடித்துப் பறப்பதுமாக இருந்தது. தொங்கிய காய்களின் சலசலப்பு அடங்காமல் கேட்டுக் கொண்டேயிருந்தது. வானம் மூடாக்குப் போட்டிருந்தது.
மழை வரும் காலம் எல்லாவற்றையும் அழகாக்கிவிடுகிறது.

தக்கரை உட்கார்ந்திருப்பதைப் பார்த்த முத்தாச்சியும், தன் மகன் தோளை அழுத்தி உட்காரச் சொன்னபடி உட்கார எத்தனித்தாள்.
"ஏய்.. மழை வர்றமாரி இருக்கு. நீ தம்பியைக் கூட்டிக்கிட்டுப் போ. நானும் கங்கை கொண்டான் தர்க்காவுக்கு போரேன்." என்றான். கொஞ்சநேரம் அவனையே பார்த்த முத்தாச்சி, அவன் முகத்தில் எந்த மாறுதலையும் காணாததால் ஏதும் சொல்லாமல் மகனை அழைத்துக் கொண்டு பஸ்ஸ்டாண்டு நோக்கிப் போனாள். அவள் நடையில் சோர்வு தெரிந்தது. ஒவ்வொரு மனிதருக்குள் ஓராயிரம் எண்ணங்களும், கவலைகளும் ஒன்றுக்கொன்று எதிர்நீச்சல் போட்டபடிதான் இருக்கின்றன. முத்தாச்சியும் அதற்கு விதிவிலக்கா என்ன?
உட்கார்ந்தபடி, தக்கரையும், சூசையும், முத்தாச்சி அவளது மகனின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்து போவதையே பார்த்தபடி இருந்தார்கள்.
இருவரின் தூக்கமற்ற சிவந்த கண்களின் ஓரம் நீர்கோர்த்து நின்றன.

## அத்தியாயம் -03

சேரன்மகாதேவி

முத்தாச்சியை பலமுறை பார்த்து இருந்தாலும் தக்கரை சேரன்மகாதேவி யிலிருந்து நடந்துவரும் போதுதான் நெருக்கமானான். என்னமோ நினைத்துக் கொண்டு சேரன்மகாதேவித் தர்காவிற்கு வந்திருந்தான். அந்த பக்கீர் பாவா கந்தூரி ரொம்பப் பெரிய விசேஷமாய் நடக்கும். அதனால் தர்க்காவிற்கு நிறைய ஆள் வருவார்கள் சாப்பாடும், காசும் கிடைக்கும் என்று எண்ணி வந்துவிட்டான்.

பகல் பத்து மணிக்கெல்லாம் வந்துவிட்டவனுக்கு தர்காவில் ஒரு சுடுகுஞ்சிகூட இல்லை என்பது ஆச்சரியமாக இருந்தது. யாராவது பக்கத்தில் குடியிருக்கக்கூடும் என்றால் அப்படியும் இல்லை. தர்காவிற்கு விளக்குபோடும் நபர் மாலையில்தான் வருவார் என்று தர்காவின் பக்கத்தில் உள்ள கல்காலில் காலை ஊன்றியபடி நின்ற சைக்கிள் வியாபாரி சொல்லிவிட்டுப் போனான். இரைக்காத தர்கா கிணற்றில் புளிய இலைகள் பச்சையாய்க் கிடந்தன. அதன் நடுவில் ஓலை இரைபெட்டி ஒன்றும் கிடந்தது. எந்த அசைவுமின்றி ஆழத்தில் அப்படியே கிடக்கிறது.

அடர்ந்து செழித்து நிற்கும் கொடிமரமும், மற்ற வாதமடக்கி மரங்களும் இலைகளை இழந்து வறண்டு நிற்கிறது. தர்காவைத் தாண்டி விழுந்த வெயில் கல்படியைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது. தூரத்தில் ரயில் நிலையமும் அதன் பெரிய நடைமேடையிலும் யாருமற்ற வெயில் மட்டும் மேய்ந்து கொண்டிருந்தது.

தாகத்தோடு பறந்தது போல வாயைப் பிளந்தபடி இரண்டு காக்கைகள் அங்குமிங்குமாய் அலைந்தன. மெதுவாக தர்கா அடிபம்பில் அடித்து தண்ணீர் குடித்தான். உப்புக்கரித்திருந்தது. அந்த நேரத்தில் அவன் பசிக்கு அந்த உப்புக்கரிப்புத் தண்ணீர் அவசியமாகவே இருந்தது. இரண்டு மூன்று ரயில் செங்கோட்டைக்கும் திருநெல்வேலிக்குமென மேற்கும் கிழக்குமாய்ப் போய்க் கொண்டிருந்தன. அதைத் தாண்டித் தர்கா எந்த அசைவுமின்றி வேனாக் கொதிக்கிற வெயிலில் சுருண்டு கிடக்கிறது. தர்காவினுள் சமாதியாயிருக்கிற மகான் பச்சைப் போர்வைக்குள் அடங்கிஇருந்தார். குத்துவிளக்கின் அகல் முனைகளும் கறுத்துக்கிடந்தன.

அவன் தன் தோள்ப்பையை எடுத்து ஏதாவது பணம் இருக்கிறதா என்று பார்த்தான். ஏழெட்டு ரூபாய்க்கான சில்லறைக் காசுகளைத் தவிர எதுவுமில்லை. மாலையில் ஒன்றிரண்டு பேராவது வருகிறார்களா என்று

இருந்து பார்த்தால் யாரும் வந்தபாடில்லை.
கடந்த பத்தாண்டுகளில் தர்காவைக் குறித்த கண்ணோட்டம் முற்றிலுமாகச் சிதைந்து போய்விட்டதை உணர முடிந்தது. தர்காவில் வந்து அங்குள்ள சமாதியை வணங்குவது கூடாது என்ற குரலை உயர்த்தியவர்களுக்கு மற்றவர்கள் எல்லோரும் அடங்கிப் போய்விட்டார்கள். இனிமேல் தர்காவிற்கு வருவது பத்தாம்பசலித்தனம் என்றாகி விட்டது. சேரன்மகாதேவிக்கும் அப்படி ஒரு நோய் பிடித்துவிட்டது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. வந்தது மிகவும் தப்பாகப் போய்விட்டது என்பதை அவன் உணரும்போது மணி ஆறு ஆகிவிட்டது. தர்காவிற்கு மேற்கே இருந்த செவ்வானம் கறுக்கத் துவங்கிவிட்டது.
தர்காவிற்கு பின்னால் நின்ற பெரிய புளியமரத்திற்கு சகல திசைகளிலிருந்தும் காக்கைகள் கூட்டம் கூட்டமாக வந்து குவியத் தொடங்கிவிட்டன. புங்கமரத்தில் கூடிய சிறுபறவைகள் கெச்சட்டம் போட்டுக் குதூகலித்தன. மொட்டையான வாகை மரத்தில் வந்திறங்கிய சில காக்கைகள் கத்தியபடி பறப்பதும், பிறகு வேறொரு மரத்தில் அமர்வதுமாக இருந்தன. கூட்டம் கூட்டமாய் சிறு பறவைகளும் வர ஆரம்பித்தன. மைனா, குருவிகளின் சத்தம் வரவர கூடிக்கொண்டே போனது.ரயில்வே நிலையம் வழியாகத் தண்டவாளங்களைத் தாண்டி, நடைமேடையில் ஏறுவதற்குள் ஜீவன் போய்விட்டது. அங்கிருந்த தண்ணீர் பானையில் கீழே தூர்ந்து கிடந்தத் தண்ணீரைக் குடித்தான். நாளாகிவிட்டதுபோல ஒரு வாடை வந்தது. அப்படியும் முடியாமல் தொண்டையை நனைக்க வேண்டுமென முழுங்கினான்.தொண்டை வலித்தது. காலையிலிருந்த பசி இல்லை. வயிறு காய்ந்து போய் பசியை மறந்திருந்தது. அதற்குப் பதிலாய் தலைக்கனமும், சோர்வும் வந்து சேர்ந்திருந்தது.மெதுவாக நடந்து நடந்து பார்த்தான் நடக்கமுடியவில்லை. காலைத் தூக்கி வைக்கவே சிரமமாக இருந்தது.
சிறிது நேரம் தரையில் அமர்ந்தான். குறண்டி, கொழுஞ்சி, சிறுபுல் என எல்லாம் காய்ந்து போய் கிடந்தன. குறண்டியின் ஒன்றிரண்டு பச்சையிலைகளில் வெள்ளைப் பூ பிரகாசமாகப் பூத்திருந்தது. ஒன்றிரண்டு எடுத்து உறிஞ்சிப்பார்த்தான். தேனோ எதுவுமே இல்லை. சாப்பிடலாமா எனத் தோன்றியது. நஞ்சாக இருக்குமோ என வாயில் போட்டதைத் துப்பினான்.
மூளைக்குள் ஏதோ பாறாங்கல்லை வைத்து அழுத்துவதுபோல் தலைவலித்தது. கொடிபோல் படர்ந்திருந்தக் காட்டுச் செடி காய்ந்து அதன் கொடிகள் நீண்டுகிடந்தன. வேலிப்பருத்தியின் கொடிகள் மஞ்சள் கம்பிகளைப் போல மரத்தில் தொங்கின.

ஒரு மணிப்புறா, மரத்தின் பட்டகிளையில் உட்கார்ந்து புர்... புர்... என்று குராவிக் கொண்டிருந்தது. அவன் மனம் எதிலும் அக்கறைப்படாமல் பசியினால் களைத்துப் போயிருந்தது. அவன் காலில் ஏதோ ஒன்று ஊர்வதுபோல இருந்தது. காலைப் பார்த்தான். கறுத்த எரும்பு ஒன்று அவன் காலில் ஏறிக் கொண்டிருந்தது. அது ஒன்றும் பெரிதாகக் கடித்துவிடாதுதான். அதை மெதுவாகக் கையினால் தட்டி விடலாம். அவனது சோம்பேறித்தனமும், பசியும் அவனை ஒன்றும் செய்யவிடவில்லை.

எறும்பு அப்படியே கணுக்கால்தாண்டி முழங்காலுக்கு ஏறியது. அதன்பின்பும் அவனுக்கு அதைத்தட்டிவிடவேண்டும் என்று தோன்றவில்லை. அந்த எறும்பு முழங்காலில் நின்று சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மீசையை முன்கால் கொண்டு தடவிவிட்டு மீண்டும் முட்டுக்குக் கீழே இறங்கியது. அவன் காலைக் கொஞ்சம் நகட்டினான். அவ்வளவுதான் நறுக்கென்று ஒரு கடி கடித்து, அதன் சிறிய கொடுக்குகள் சதையைப் பற்றி இறுகியிருந்தன. சுரீர் என்று வலியை அவன் மூளை உணர்ந்தது.

அவனுக்கு அந்த வலி தேவையான ஒன்று போல இருந்தது. அது அவன் வயிற்றுப்பசியைக் கொஞ்சம் மறக்கடிக்கச்செய்தது. கடித்த எறும்பு இப்போது முட்டுக்குக் கீழே இறங்கிப் போய்க்கொண்டிருந்தது. மொழியைக் கடந்து இப்போது நடுவிரல் வழியாக அது இறங்கிப்போவதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

இனிமேலும் அங்கிருக்கமுடியாது இருட்டிவிட்டால் தாழையூத்து போய்ச்சேர முடியாமல் போய்விடும். கொஞ்சம் நடக்கலாம் என்றுத் தோன்றியது. டீ குடிக்க காசு தேத்த வேண்டும். பஸ் ஸ்டாண்ட் முன்னால் நின்றுகொண்டிருந்த ஒரு ஐம்பது பேர்களிடம் கெஞ்சிப் பார்த்தான். யாரும் மசியவில்லை. கஷ்ட காலங்களில் இப்படித்தான் நிகழும். சில நாட்களில் அதிகமாகத் தின்ற பின்பும் மேலும் புதிதாய் உணவுகள் கிடைத்தபடியே இருக்கும். மாசக் கடைசியில் கருணையே நிகழாது.வெறும் உதட்டுச் சுழிப்புகள் ஏமாற்றும். நினைத்த நேரத்தில் நினைப்பதெல்லாம் நடந்துவிடுமா என்ன? பிச்சைக்காரர்களின் வாழ்வின் இது மிகவும் பழகிப் போன ஒன்று. சிலநாளில் பசி குடலைச் சுண்டி இழுந்து விளையாடும். அப்போதெல்லாம்கூட பெரிய கலங்கம் வருவதில்லை. குறிப்பிட்ட பத்து வீடுகளுக்குப் பகல் நேரத்தில் போனால் போதும். எப்படியும் ஏதாவது ஒரு வீட்டில் பழையதை ஃப்ரிட்ஜில் எடுத்து வைத்தாவது போடுவார்கள்.

அன்று அவன் வேறுவழியின்றிக் கையிலிருந்த காசையே எண்ணிப் பார்த்தான். தேநீருக்கு பத்துவது மாதிரிதான் இருந்தது. மீதிச்

சில்லரைக்கு கொஞ்சம் பொரிகடலையும் வாங்கிக்கெள்ளலாம் என்றிருந்தது. தேநீரும் பொரிகடலையும் உள்ளிறங்கியபோது கொஞ்சம் கிறக்கம் தீர்ந்தது போல் இருந்தது. அப்படியே பொடி நடையாகச் சேர்மாதேவி பாலம் வரை நடந்தான். ரெண்டு பக்கமும் அடர்ந்துச் செழித்திருக்கும் மரங்களுக்குள்ளிருந்து உய்ய்.. என்று சில்வண்டுகளின் இரைச்சல் காதை அடைத்தது. ஆற்றடியில் இறங்கி அப்படியே தண்ணீரை அள்ளி எடுத்து முகத்தில் அறைந்துகொண்டான். தாமிரபரணி தண்ணிக்குக்கு முன்னத்திய துவர்ப்பு இப்போது இல்லையோ என்று நினைத்துக்கொண்டான். ஆனாலும் குறைப் பசிக்கு தேவாமிர்தம் தான். இன்னுங்கொஞ்சம் அள்ளிக் குடித்தான். உடம்புக்குள் கொஞ்சம் தெம்பு குடிவந்த மாதிரி இருந்தது. இன்னும் ஒரு நடை நடக்கலாம் என்று தோன்றியது. கைக் கம்பை ஊன்றிக்கொண்டே ஆற்றடியைவிட்டு மேலேறினான்.

பாலத்தில் நின்றுகொண்டு நடுவாற்றின் ஓட்டத்தை வேடிக்கை பார்த்தான். சோடியம் விளக்கொளி பட்டு ஆறு அங்கங்கு மின்னியதே தவிர இருட்டில் வேறெதுவும் கண்ணுக்குச் சிக்கவில்லை. உலகத்தில் எல்லாமே கறுத்துப் போய்விட்டது போலொரு பிரமை அவனைச் சூழ்ந்துகொண்டது. விருட்டென பாலத்தைக் கடந்து சென்ற காரின் கண் கூசச் செய்யும் வெளிச்சமும் அதன் பின்னான இருளும் அந்த எண்ணத்தை தீவிரமாக நம்பகத்துக்குள்ளாக்கியது. ஆற்றடி நீரில் தெவங்கி வந்த குளிர் காற்று ஒருவித ஈர வாசனையுடன் பாலத்தை வருடிக் கொடுத்து சென்றது. இனி நடக்க வேண்டியதுதான்.

சன்பேப்பர் மில் அருகில் ஒரு வேனில் வாழைத்தார் ஏற்றியபடியிருந்தார்கள். அதைச் சுற்றி ஏதாவது பழுத்த காய் சிதறிக் கிடக்குமா என்று பார்த்தான். ஒன்றுகூட விழுந்திருக்கவில்லை. ஏற்றிக் கொண்டிருந்தவரிடம் ஒரு காயாவது கேட்டுப் பார்க்கலாம் என்று அவர் முன்னால் போய் நின்றதும், அவர் உள்ளே விழுந்து கிடந்த பச்சைக் காய் ஒன்றை எடுத்துக் கொடுத்தார். போகும் வழியிலேயேக் வாழைக்காயை ஒரு கடி கடித்துப் பார்த்தான். வாய் விறுவிறு வென்றிருந்தது. பாட்டிலில் இருந்த தண்ணீரைக் குடித்துக் காலி செய்தான்.

கல்லூர் தாண்டியபோது பட்டாங்கல்லூரில் கோவில் கொடையில் வில்லுப் பாட்டுச் சத்தம் பலமாக எதிரொளித்தது. நிச்சயம் அங்கே சாப்பிட ஏதாவது மட்டுப்படும் என்று ஒவ்வொரு எட்டையும் தீவிரப்படுத்தினான். கால்கள் அவன் நினைப்புக்கு விரோதமாக தள்ளாடத் துவங்கின.

## அத்தியாயம் -04

பட்டாங்கல்லூர்

"ஆதி வெள்ளி கைலாசத்தில் அமர்ந்திருந்தார் பார்வதியும் சிவனாரும்... அய்யா அவர் அமர்ந்திருக்கும் வேளையிலே... வே... ளையிலே..." என்று வில்லுப்பாட்டுக்காரி முத்துலெட்சுமிக்குப் பின்பாட்டுப் பாடிக் கொண்டிருந்தது இன்னொரு ஆண்குரல். கொம்பு மாடசாமி கோயில் இன்னும் சில பர்லாங் தூரத்தில்தான் இருந்தது. வில்லுப்பாட்டுச் சத்தத்தின் எதிரொலியும் அப்படித்தான் நம்ப வைத்தது.
கைகாலெல்லாம் அப்படியே சீலைத்துணிபோல் ஆகி ஒரு எட்டு நடக்க இயலவில்லை. அதைவிடவும் இருதயம் படபடக்க ஆரம்பித்து, கைகால்களும் விறுவிறுவென்று மரத்துப் போய் உணர்வற்றுவிட்டது. உடம்பில் இனி ஒருசொட்டு சத்துமில்லை. இனிமேல் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது என்ற நினைப்பில் அப்படியே உட்கார்ந்தான். பிறகு பாதையிலே மெதுவாகத் தலை சாய்த்துக் கொண்டான். காதோடு சேர்ந்து நெஞ்சும் அடைத்துக் கொண்டது. மூச்சை இழுத்துவிட முயன்றான், முடியவில்லை. சொர்க்கத்தில் இருந்து ஒருதுளி பருக்கை வந்து விழாதா தன் வயிற்றுக்குள் என்ற எண்ணம் அவனுக்கு வந்துபோனது. இனி நாம் உயிர்பிழைக்கப் போவதில்லை என்ற பிரமை அவனுக்கு முதல்முறை உதிக்க ஆரம்பித்தது.
கொடையின் கொட்டு மேளச் சத்தம் அவனது மண்டைக்குள் தெறிக்க, பக்தர்கள் தங்கள் கொழுந்திமார்களுடன் கேலி பேசியபடிக் கும்மாளத்துடன் அதே பாதையில் போய்க் கொண்டிருந்தார்கள். பாதி மயக்கத்தில் சுருண்டு கிடக்கும் அவனைப் பார்த்தும் பாராததுபோல் சிலரும், கோவில் கொடைக்கு வந்து விட்டுச் சாமி கும்பிடாமல் போதையில் விழுந்து கிடக்கிறான் பாரேன் என்று பலரும் நினைத்துக் கொண்டார்கள்.
எத்தனையோ விதமானப் பசிகளைப் பார்த்தவன் அவன். கழனியைக் குடித்துவிட்டு ரெண்டுநாள் கிடந்திருக்கிறான். கஞ்சியிருந்தும் குடிக்க முடியாமல் காய்ச்சலோடு பசியோடுக் கிடந்திருக்கிறான். எதையாவது சாப்பிட்டு விட்டு அத்தனையும் வாந்தி பேதியில் வயிற்றில் ஒன்றுமில்லாமல் பசியில் அழுது இருக்கிறான். ஆனால் இதுபோன்ற நடையைத் தள்ளாடச் செய்யும் பசியை இன்றுதான் உணர்கிறான். கிடைக்கும்போது கழுகு போலச் சாப்பிடுவதும், கிடைக்காத போது பட்டினி கிடப்பதும் பிச்சையெடுப்பவனுக்குத் தேவையான குணம். அதனால்தான் எதுவும் இன்றி அவனால் வாழ முடிந்திருக்கிறது.
இன்று தக்கரையின் நிலை அப்படியில்லை. உடல் அசதியும், சோர்வும்

அவனை மீளா நித்திரைக்கு அழைப்பதைப் போல உணர்ந்தான்.
அவன் கொஞ்சம் கண்ணைத்திறந்து பார்க்க முயற்சித்தான். முடியவில்லை. அவன் பார்வைக்குள் மொத்த வானம் இருண்டு போய்விட்டது. அவனையும் அறியாமல் வாய் எதையோ உளறத் துவங்கியது. எல்லாம் உணர்வுகளும் கொஞ்சம் கொஞ்சமாக மங்குவது போலத் தோன்ற ஆரம்பித்தது. அப்படியே எவ்வளவு நேரத்துக்கு கிடந்திருப்பான் என்று தெரியவில்லை.
திடீரென தக்கரை முகத்தில் தெளிக்கப்பட்ட தண்ணீர், அவனை உணர்வு நிலைக்குள் கொன்டுவந்தது. கண்களைத் திறந்து பார்க்கும் சக்தியும் ஓர்மையும் அப்போது இல்லை. நெற்றியிலும், கண்களிலும் தாடையிலும் வழியும் நீரின் குளிர்மையை மட்டும் உணர்ந்தான். அவனைத் தோளைப் பிடித்துத் தூக்கி யாரோ எதையோ சூடாகக் குடிக்க வாயில் ஊட்டுவதுபோலத் தெரிந்தது. மலையில் சுரந்த சுனையின் ஊற்றாக வழிந்தான். நாவின் சுவையுணரிகள் செத்துப் போனபின் தான் உயிர்த்தெழுவதாக உணர்ந்தான். அரும்முலை அவிழ்த்து அன்னை ஊட்டும் பாலெனத் தவித்தான்.
தக்கரையால் இப்போது கண் திறந்துப் பார்க்க முடிந்தது. அவனை நெஞ்சோடுத் தாங்கி அவனைத் தன் தோளில் தேற்றியிருப்பது ஒரு பெண் என்பதை அப்போதும் அவனால் உணர முடியவில்லை. அவள் தனது சேலையால் அவன் முகத்தை துடைத்துவிட்டபோது ஒரு மென்மையை உணர்ந்தான். அப்படியே தலையைத் தூக்கிப் பார்த்தான். சேலைத் துணியின் வாசம் அவனை ஏதோ ஒரு நினைவுக்கு அழைத்துச் சென்றது. அதைக் கூர்மையாகச் சிந்திக்க உடலில் வலிமையில்லை. ஆனாலும் முயன்றுபார்த்தான்.
முத்தாச்சியின் வெளிறிய முகம் கபடமின்றி சிரித்தது. முழிப்புத் தட்டியவனை கோயில் திண்டில் சாய்த்து வைத்துவிட்டு, ஓடிப் போய் பட்டைச் சோறு வாங்கி வந்தாள். அதை அவனுக்குச் சாப்பிடக் கொடுத்து பசியைத் தீர்த்துக்கொள்ளச் சொன்னாள்.
அவன் கிறக்கம் தீர்ந்த பின்பு அவனைக் கைத்தாங்கலாகப் பேட்டையில் அவள் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அப்போது முத்தாச்சியின் அம்மா இருந்தாள். அவள் அவனுக்கு வெந்நீர் போட்டுக் குளிக்க வைத்தாள். முத்தாச்சி அம்மாவின் சுருக்கம் விழுந்து கோடுகள் வரைந்த முகத்தில் மகிழ்ச்சியின் ரேகையும் கலந்து கொண்டு ஓடியது.
முத்தாச்சி ரெண்டு நாளாகப் பக்கத்தில் இருந்து பச்சைப் பிள்ளையைக் கவனிப்பது போலக் கவனித்தாள். கொஞ்சம் தெம்புவந்தது தக்கரைக்கு. தெளிச்சல் வந்தவுடன் தக்கரை "பாளையங் கோட்டைக்கு போறேன்" என்றான். அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள். "அங்கே உனக்கு

முகத்தில் தண்ணீர் தெளித்து டீ கொடுக்க எவெ இருக்கா. அங்க போயி என்னச் செய்யப் போறீரு" "போவணும்" அவன் மூஞ்சியை உம்மென்று வைத்துக்கொண்டு சொன்னான். " இன்னும் ரெண்டு நாளு இரு. இன்னும் ஒம் உடம்புல தெம்பு வரல்ல... அதுக்கு பொறவு பாக்கலாம்" என்றாள் முத்தாச்சி.
"அதுல்லாம் வேணாம்.. நா போவணும்" என்றவனின் இரு கன்னத்தைச் சிக்கென அழுத்தி வாயை நெறித்தாள். அவன் அதற்கும் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல், 'போகவேண்டும்' என்றபடி முகத்தை வைத்திருந்தான்.
"இந்தாபாருய்யா இன்னும் ரெண்டு நாள் இருந்து நல்லா உடம்பைத் தேத்திட்டு அம்மா காலையில் வேலைக்கு போயிரும். நாம் ரெண்டு ஒரு நாளாவது தனியாச் சிரிச்சிப் பேசி ஜாலியா இருக்கலாம். அதுக்கு பொறவு போவும்" என்றாள் முத்தாச்சி. அவள் முகத்தில் காமம் தாண்டி தாய்மையின் முகம் பூத்திருந்தது.
முத்தாச்சியின் அடர்ந்த சுருண்டக் கேசம் தக்கரைக்கு மிகவும் பிடிக்கும். அவள் காலையில் எழுந்து முடியைச் சிக்கெடுத்துக் கையினால் ஜடை பின்னிப் போட்டால் போதும். ரிப்பனோ எதுவுமோ தேவையில்லை. சுருண்டமுடியே ஒன்றுக்கொண்று கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும்.
இரண்டுக் காதோரத்திலும் கறுப்புச் சுருள்போல சுருள்முடித் தொங்கி ஆடிக்கொண்டேஇருக்கும். அந்த சுருள்முடிகளுக்கு ஏற்றாற்போல் அவளுக்கு ஒரு அழகான மூன்றடுக்குக் கல்வைத்த ஜிமிக்கிப் போட்டிருந்தால். எவ்வளவு அழகாய் இருக்கும் என்று எண்ணிக் கொள்வான். காற்றில் அவள் அவன் சொல்வதை ஒப்புக்கொள்வது போல் காதோர முடி ஆடிக்கொண்டிருந்தது.
முத்தாச்சி முகத்தில் ஏற்பட்ட பளிச்சென ஒரு மாற்றத்தில், நாணமும் கலந்திருந்தது. வெளிச்சமானாள். அவள் இன்னும் அவன் அருகில் நகர்ந்தாள். அவனுக்கு அந்த நெருக்கம் அவசியமற்று இருந்தது. கொஞ்சம் பின்னால் நகர்ந்தான்.
"வெக்கத்த பாரு மாப்பிள்ளைக்கு" அவள் கிண்டலடித்துக் கையைப்பிடித்தாள். முதலில் கையை உதறியவன், சிறிது நேரத்தில் அவளின் மெல்லிய இறுக்கத்தை உணர்ந்து அமைதியாக இருந்தான். அந்தத் தொடுதல் அவனை அவளுக்குள் ஈர்த்தது. அவளது தீண்டல் உடலுக்கு மனதுக்கும் ஒரு சுகத்தைக் கொடுப்பதை உணரந்தான். அந்த வீட்டில் அவளோடு இருக்க ஆசையாகத்தான் இருந்தது. ஆசைக்கு மயங்கிவிடக் கூடாது என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.
அடுத்த நாள் முத்தாச்சியின் அம்மா வேலைக்குப் போக, முத்தாச்சி, "வெளில ஒரு வேலையிருக்கு.. சாய்ந்திரம் நேரத்தோட வந்திடுவேன்"

என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். அவளுக்கு ஏதோ ஒரு வேலை அன்றைய நாளில் கிடைத்திருந்தது. அதை முடித்து கொஞ்சம் கூலியோடு வந்தால் நன்றாக இருக்கும் என்பதால் புறப்பட்டுப்போனாள்.

அவனுக்கு அவளை விட்டு அந்த வீட்டைவிட்டுத் தப்பித்துச் செல்லச் சரியான நேரம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சி உடனடியாக அவன் யாரிடமும் எதுவும் சொல்லாமல் வீட்டைவிட்டு வந்துவிட்டான். ரெண்டு நாள் கழித்துதான் அவனுக்குள் ஏதோ சலிப்பது போல உணர்ந்தான். தன்னை கைசேர்த்துக் காப்பாற்றியவளை விட்டுவிட்டு ஓடி வந்தது நெஞ்சை அழுத்திக் கொண்டேயிருந்தது. அவளிடம் அப்படி நடந்து கொண்டது சரியில்லைதான். அவன் அங்கிருக்க விரும்பாமல் சந்திப்பு வந்து பேருந்து ஏறி இருந்தான்.

பேருந்து கங்கைகொண்டான் பிளவர் மில்லில் நின்றது. அவன் உட்பட மூன்றுபேர் இறங்கினார்கள்.

நன்றாக இருட்டிவிட்டிருந்தது, அப்படியே தர்கா வரைக்கும் நடந்து போகவேண்டும். முன்னைப் போலில்லாமல் பெரிய பெரிய விளக்குகள் எரிகின்றன. அதனால் பெரும் பயமில்லை. அவன் இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான்.

தூரத்தில் அடர்ந்த மரங்களுக்குள் ஒளிந்திருந்த இரவை யாரும் கண்டு கொள்ளவில்லை. மானூர்ப் பொத்தையிலிருந்து சுழன்றுச் சுழன்று வந்த காற்று பேயடி அடித்தது. அவன் கண்களை இடுக்கிக் கொண்டுப் பார்த்தான். தர்கா எப்போதும் போலில்லாமல், ஒளி வெள்ளத்தில் மிதந்தது. மரங்களின் கிளைகளிலும், மினராவிலும் சீரியல் பல்புகள் ஒளிர்ந்தபடி இருந்தன. தொப்பி வைத்த ஆண்களும் பர்தாப் பெண்களும் வேகமாக அலைந்தபடி இருந்தார்கள்.

வெங்காயம் உரித்த வாசனை வந்து கொண்டிருந்தது. 'யாரோ கெடா அறுத்து நேர்ச்சைச் சோறுக் கொடுக்கப் போறாங்க போலிருக்கு' என்று எண்ணிக் கொண்டான்.

இன்னும் கொஞ்சம் துக்கம் அதிகமாயிற்று. எப்போதும் எதுகுறித்தும் எந்த மனக்கஷ்டமும் தோன்றாத அவனுக்கு, சிலசமயம் மட்டும் ஏதாவது நடக்கும்னு தோணும். அதுக்கு தகுந்தாற்போல எல்லாக்காரியங்களும் நடந்துவிடும். இன்று முத்தாச்சியை அழைத்து வந்திருந்தால் எவ்வளவு விஷேசமாய் இருந்திருக்கும். இந்த வளர்பிறையின் குளுமையில் அவள் கரங்கள் எவ்வளவு சில்லிட்டு இருக்கும். தீனமான சல்லிக்குரலில் அவள் என்னவெல்லாம் என்னோடுப் பேசிக்கொண்டு இருப்பாள் என்று எண்ணினான். சடக்கென நடைதளர நின்றான்.

சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வர, அவள் என்ன கஷ்டம் கொடுத்தாள்.

எதற்கு அப்படி ஓடி வரணும். முத்தாச்சியின் அம்மாவும் அவன் மீது எவ்வளவுப் பாசமாக இருந்தது. தன் மகளுக்கு ஒரு துணையாக இருந்துவிட்டுப் போகட்டும் என்று எவ்வளவு ஏங்கினாள்.

மீண்டும் முத்தாச்சியையும் அவள் அம்மாவையும் எந்த முகம் கொண்டுப் பார்ப்பது அப்படிப் பார்க்கச் சென்றால் அவர்கள் அவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்? பலவிதமாக யோசனைகள் தோன்றி அவனை அலைக்கழித்தன.

முள் மரங்கள் கறுத்த பூதம் போல நின்றுப் கொண்டிருந்தன. அவைகளுக்குள்ளிலிருந்து ஒரு குட்டிநாய் சன்னக்குரலில் கத்திக் கொண்டிருந்தது. அநேகமாக தாயைத் தேடும் நேசக்குரலாக இருக்கலாம் அவன் சட்டென இறுகியவன் போல ஆனான். "எது மேலயும் பிரியமில்லாம, நேசமில்லாம, எதுக்கு முத்தாச்சியை விட்டு ஓடிவரணும். பொட்டப்பயலப் போல" தனக்குள்ளிருந்து ஒரு கசப்புணர்வுப் பெருகி வழிந்தது.

மெதுவாகத் தர்காவைப் பார்த்து நடந்தான். கைக்கம்பினைத் தரையில் ஊன்றிக் கொள்ள வேண்டும் போல இருந்தது. தரையைக் கைக்கம்பால் தட்டியபடியே நடந்தான்.

"வந்துட்டியாப்பா வா.... நீ வராம கந்தூரிச் சோறு பரிமாற முடியுமாப்பா... தக்கரை வாப்பா வா..." எப்போதும் தர்காவின் சில்லறை வேலைகளை செய்து கொடுக்கும் வெறகு வெட்டி கருத்தப்பாண்டி சொன்னான். தக்கரை பேசாமல் தலையை குனிந்துகொண்டான்.

"நீ எங்க பதில் சொல்லப்போறே. சோத்த திங்கமட்டும்தான் லாயக்கு" என்று சொல்லியபடியே வேகமாக எதையோ எடுக்கப் பாண்டி ஓடினான். எப்போதும் அமர்ந்திருக்கும் ஓட்டுப்பிறையை நோக்கி கொஞ்ச நேரம் தலைச் சாய்த்து படுக்க எண்ணினான் தக்கரை.

அங்கே முத்தாச்சியும் அவளது மகன் துரைக்குட்டியும் ஓட்டுப்பிறைக் கட்டிடத்தில் அவன் ஆச்சரியப்படும்படி அமர்ந்திருந்தார்கள்.

## அத்தியாயம் -05

நிறைகுளத்தான்

அய்யாக்கண்ணு வக்கீல் எல்லா வழக்கறிஞர்களையும் விட முற்றிலும் மாறுபட்டவர், காலையிலேயே குளித்து, திருநீறு பூசிக்கொண்டு கதர் சட்டை வேஷ்டியில் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருப்பார்.
கம்பிப் பந்தலில் படர்ந்து கிடக்கும் முல்லைப் பந்தலிலிருந்து உதிர்ந்து கிடக்கும் முல்லைப் பூக்களைப் பார்த்துக் கொண்டே இருப்பார்.
காலையிலேயே கம்பராமாயணத்தையும், விவேக சிந்தாமணியையும் பற்றிப் பேச ஒரு ஆள் கிடைத்துவிட்டால் போதும் அவருக்கு. பேசிக் கொண்டே இருப்பார். அதுதான் எவ்விதத்திலும் பொருத்தமில்லாத வக்கீலையும், ஒரு பிச்சைக்காரனையும் இன்று வரை பிணைத்து வைத்திருக்கிறது. சோத்துப்பெட்டிக்கு திவ்ய பிரபந்தமும், தேவராமும் சித்தர் பாடல்களும் மனப்பாடம். பிறகென்ன, அவன் வந்து விட்டால் போதும். அவனைப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டேயிருப்பார். பிச்சக்காரப் பயல் என்று பார்க்கமாட்டார்.
அவன் முதன்முதலில் வக்கீலைச் சந்தித்தப்போது, அவன் குடும்பத்தைப் பற்றிச் சொன்னான். அய்யாகண்ணு வக்கீலுக்கு அவர்களைத் தெரிந்திருந்தது. அதிலிருந்து பக்கத்து ஊரான்தான் என்ற பாசமும் கொஞ்சம் சேர்ந்து கொண்டது. ஒருநாள் அவனைப் பிடித்து உட்கார வைத்துக்கொண்டு அன்றைக்கு ராத்திரி அவர் படித்திருந்த பாடல் ஒன்றை சோத்துப்பட்டியிடம் போட்டுப் பார்த்தார்.
"எத்தைத் தின்று எங்கே கிடக்கும்... சொல்லுழா பாப்போம்." என்றார்.
"அத்தைத்தின்று அங்கே கிடக்கும்" என்று உடனடியாகப் பதில் வந்து விழுந்தது சோத்துப்பெட்டியிடமிருந்து. அவ்வளவுதான் வக்கீல் அவனுக்கு சரண்டர் ஆகிவிட்டார். எவரையும் மட்டம் தட்டிப் பேசிவிடும் குணம் ஒன்றையே தன் பலமாகவும் பலவீனமாகவும் கொண்ட அய்யா கண்ணு வக்கீல் அப்படி ஆனது ஆச்சர்யம் தான்.
காலையிலேயே வக்கீல் வீட்டு வாசலில் பையை வைத்துக் கொண்டு, அவர் பக்கத்தில் நின்றுகொண்டே இருப்பான் சோத்துப்பெட்டி. இவன் மண்வெட்டி எடுத்துப் சம்சாரி வேலைகள் எல்லாம் செய்யமாட்டான் என்பது அவருக்குத் தெரியும். ஆனாலும் அவர் சொல்லும் எடுபிடி வேலைகளைப் பம்பரமாகச் சுழன்று முடிப்பான். இடையிடையே தத்துவமாகப் பொழிந்துகொண்டே பகவத் கீதையிலிருந்து சுலோகங்களையும், விவேக சிந்தாமணி பாடல்களையும் பாராயணமாய் எடுத்து விடுவான். அவ்வளவுதான் அவர் மனம் இளகிவிடும்.
”ஏயப்பா...ஏயப்பா... அந்தப் பாட்டத் திருப்பிச் சொல்லு... திருப்பிச்

சொல்லு" என்று லயித்து விடுவார். சமயங்களில் "ஏலே... அந்தா இருக்குப் பாரு அந்த நோட்டை எடுத்துட்டு வா" என்பார். ஓடிப்போய் எடுத்துக் கொண்டுவந்துக் கொடுக்க வேண்டும். ஏதோ ஒரு நோட்டுப் புத்தகத்தில் சிலபாடல்கள் எழுதிவைத்திருப்பார்.

"ஏலே... அந்தப் புஸ்தகத்தையும் சேத்து எடுத்துட்டு வாலே மடச்சாம்புராணி" என்றவுடன் அதையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுப்பான்.

"ஏலேய்... மாங்கா மண்டையா, இந்த புஸ்தகத்த யாரு தந்தானு தெரியுமாலே? இப்போ புதுக்கோட்டையில சப்ஜட்ஜா இருக்கானே காந்திநாதன்னு. அவன் கொடுத்தது. சித்தர்களைப் பத்திப் பல மேதாவிகள் எழுதுனது, என்று அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "முட்டாப் பயலெ ஏம்ல.. நிக்க. இங்கன உக்காரு" என்று சொல்லி அவனை அருகில் உட்கார வைத்து வேளா வேளைக்கு டீயும் சாப்பாடும் கொடுத்து பேசிக் கொண்டோயிருப்பார்.

யாராவது எதிர்த்தாற்போல் போனால் போதும். அவர்களை அழைத்து இவனைப் பற்றி பேச ஆரம்பித்து விடுவார்.

"வாங்க கனகு சார். நீங்கள்ளாம் வக்கீலுக்குப் படிச்சி சின்ன வக்கீலுன்னு ஆயிட்டீங்க. ஒரு தமிழ்செய்யுள் தெரியுமா ஒனக்கு. இவன்ட்ட கேட்டுப்பாரு டாண் டாண்னு அடிப்பான். என்னமோ அவென் தலையெழுத்து எச்சிக்கஞ்சி குடிக்கணும்னு இருக்கு" என்பார்.

சோத்துப்பெட்டி, அவனைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம் சற்று நெளிந்து கொள்வான். ஆனாலும் அவனது குறிமட்டும் அடுத்த வேளை அவர் வீட்டு உணவைப் பற்றியதாக இருக்கும்.

கடைசியாக அவனை அனுப்பும் போது அந்தக் கேள்வியைக் கேட்காமல் விடமாட்டார்.

"ஏலே.. இப்பமும் ஒம்பொஞ்சாதியை ஓன் அப்பகாரன்தான் வச்சிக்கிட்டு இருக்கானா?"

"போங்க மாமா.. நாஞ் சொல்லமாட்டேன்னா மாட்டேன்"

சோத்துப்பெட்டி அவருக்குத் தூரத்து உறவினன்தான். அந்தச் சலுகையும் சேர்த்துத்தான் அவன் அங்கு வரமுடிகிறது. இல்லாவிட்டால் எப்பவோ விரட்டப்பட்டிருப்பான். அவன் அப்பாவும், வக்கீலும் ரொம்ப நெருக்கம். "வக்கீலுன்னா ஏடாகூடாமப் பேசத்தான் செய்வாங்க. நாம கேட்டுக்கிடணும்பா" என்று அவனிடம் அப்பா சொல்லியிருக்கிறார்.

"ஏலேய்... உங்கப்பனுக்கு எத்தன கேஸ் நடத்தியிருப்பேன் தெரியுமா, கடைசியா அவனுக்கு ஒரு திரீநாட்செவன்(307) கேஸ்" நடத்தினேன். எல்லாத்திலயும் விடுதலதான்... உங்கப்பன் ஏங்கிட்டே எவ்ளோ மரியாதையா இருப்பான் தெரியுமா.. சரிடே... நா கேட்டதுக்கு பதில்

சொல்லு"
"போங்க மாமா அதையே எதத‌ன தடவ சொல்றது நா சொல்ல மாட்டேன்". அவன் அதற்கு மேல் அங்கு நிற்க மாட்டான் என்பது வழக்கறிஞருக்கும் தெரியும். அவன் எதுவும் பதில் சொல்லாமல் வெளியே வந்து தன் நீண்டபையைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு வேகமாக நடந்து போனான்.
சோத்துப்பெட்டியிடம், " ஏம்டே... உம்பேரு சோத்துப் பெட்டினு எப்படிடே வந்ததுன்னு", யராவது கேட்டா அவன் சொல்ற பதிலே புதுமையா இருக்கும். சோத்துப் பெட்டிக்குச் சொந்த ஊர் பணகுடி பக்கம் வடலிவிளை. வீரன் ஜெம்புலிங்கம் பிறந்த ஊர். அவனிடம் ஊரைக் கேட்டா போதும் தமிழகத்தின் ராபின் ஹீட், தென்னகத்தின் வால்மீகி, ஏழைக்கு இரங்குபவன் என்று ஏழெட்டு அடைமொழிகளை எடுத்துவிட்டு ஜெம்புலிங்கத்தின் பெருமைகளை விலாவரியாகப் பேசுவான். அவுங்க அம்மா தலைக்கு மேல வளந்து கெடந்த எள்ளுக்கு களைப் பறிச்சிக்கிட்டு இருக்கும்போது, யாரோ செம்புலிங்கத்தப் பத்திப்பேச அவன் படுத்துக்கிட்டே கேட்டுக்கிட்டு இருந்தானாம். பிறகு அங்கேயே எழுந்து "இந்தாப்பாரு நீயும் நகை போட்டிருக்கே. யார்ட்டயோ நகை அத்துக்கிட்டு போனேன்னு பேசுதே. இப்ப நகையை அக்கட்டா.. பொம்பளைட்ட நகை அக்கிறவன் பேடி. நான் ஒரு நாளும் பேடியாக இருக்கமாட்டேன்", சொல்லிட்டு, அவளையும் வேறு பொம்பளைகளையும் வீடுவரை கொண்டு விட்டுவிட்டுப் போனதை கதையாகச் சொல்வாள். செம்புலிங்கத்தப் பற்றியும் அந்தப் பக்கத்துல பாடப்பெறும் நாட்டுப் புறப்பாடல்கள் பற்றிப் பேசினால் போதும், அவனுக்குக் கரைபுரண்ட வெள்ளமென வந்து கொண்டே இருக்கும். அநேகமாக அவன் குடும்பத்தில் யாரோ ஒருவர் தீவிரமான வில்லுப்பாட்டுக் கலைஞரா இருந்திருக்கணும். செண்பகராமன் கோவில் வில்லுப்பாட்ட அப்படியேப் பாடுவாராம். அவனிடம் வில்லுப்பாட்டு கலைஞர் அப்பாவு நாடார் பத்திக் கேட்டால் தெரியாது எனக் கண்ணைப் பிதுக்குவான்.
ஊரைவிட்டு வெளியேறி, அவன் அப்பா வள்ளியூருக்குக் குடும்பத்தை அழைத்து வந்து, இருபத்தைந்து வருடத்திற்கு மேலிருக்கும். அப்போதுதான் அவனுக்குக் கலியாணமாகி அஞ்சாறு வருசம் இருக்கும். அப்போது நடந்த சம்பவம்தான் அவனுக்கு இந்தப் பரதேசி வாழ்க்கையும், சோத்துப்பெட்டி என்கிற பெயரையும் வாங்கிக் கொடுத்தது. அன்று வீட்டை விட்டு வெளியேறியவன்தான். அவன் செங்கல் கம்பெனி அக்கவுண்டன்ட் வேலையும் விட்டுவிட்டு இப்படிக் காடோடிக் கம்போடியாய் அலைகிறான். அவனைச் சீண்ட

வேண்டுமென்றால் ஒரே ஒரு செய்தியைக் கூறினால் போதும். கோபம் பொத்துக்கிட்டுத் தலைக்கேறிவிடும். கண்ணா பின்னாவென்று திட்ட ஆரம்பித்து விடுவான்.
"ஏலேய்.. சோத்துப்பெட்டி, உனக்கு உடன்குடியில பொண்ணு பாத்திருக்கோம்ல எப்போ போயி கட்டிட்டு வருவோம்" கேட்டால் போதும்.
"ஏலேய்... துப்புக் கெட்டப் பயலே. என்ன யாருன்னு நினைச்சல. சும்மா. மாடு மேச்சு கஞ்சி குடிக்கும் சாதின்னு நெனைச்சுக்கிட்டியோ. ஏலேய்.. எங்க தாத்தா அப்பவே புலிக்குட்டீ வளத்தவர்ல அவரு மீசையைப் பாத்தீன்னா அங்கினியே எருவிருவலே. பாத்துக்கோ" மேல் மூச்சு கீழ்மூச்சி வாங்க நிதானம் தப்பிப் பேசியபடி இருப்பான்.
உண்மையில் அவன் குடும்பம் வள்ளியூரில் பிரபலமான குடும்பம்தான்.. "அன்னமயில் நகைக்கடைன்னு" பேரு வச்சுப் பஜாரில் கடை நடத்தி வாழ்ந்துக் கெட்ட குடும்பம். ஒரு சொல் நகைக்கடைன்னு ஊர்ல பேரு, ஒரே விலைதான். மாற்றிப்பேசுகிற வழக்கம் அவரிடம் கிடையாது.
யாரோ அவனை, "ஏலேய்.. சோத்துப்பெட்டி இங்க வால" என்று கூப்பிட்டார்கள். அவன் எப்போதும் போல பதில் சொல்லாமல் கிளம்பினான். தோளில் இருந்த நீண்ட பையைக் கையில் இறக்கி வைத்துக்கொண்டு நடந்தான். தொண்டைக் கரகரத்தது போலிருந்தது. காறிக்கனைத்துத் துப்பினான் ரோட்டில். சளி வெள்ளைப் பந்துபோல உருண்டுத் தார்சாலையில் உருண்டது.
வேப்பமரத்தின் மூட்டில் கிடந்தக் காலி பாட்டிலின் அடியில் கொஞ்சமாய் பிராந்தி மீந்திருந்தது. சுற்றிலும் திரும்பிப் பார்த்தான். யாரும் அவனைப் பார்ப்பதாகத் தெரியவில்லை.
சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவன் அரையும் குறையுமா மூடப்பட்டிருந்தப் பாட்டில் மூடியைத் திறந்து வாயில் ஊற்றினான். நாக்கு விறுவிறுவென்றிருந்தது. அவனுக்குத் தேவையான உணவு எப்படியும் கிடைக்காமலாப் போய்விடும்.
கூம்புக் குழாயிலிருந்து வரும் சினிமாப் பாட்டுக்குத்தான் எத்தனைக் கவர்ச்சி இருக்கிறது. பெருஞ் சத்தத்தில் அது கடத்தும் பாடல்கள் அவர்கள் கேட்காதிருக்கும் போது மனதில் பதிந்துக் கொள்கிறது. சிலர் அதனோடுப் பாடிக் கொண்டு செல்பவர்களும் உண்டு. சோத்துப்பெட்டியின் கதை வேறு. அந்தச் சத்தம், வரும் திசையை தேடிக் கண்டுபிடித்த பின்பு அவனது சொர்க்கத்தின் கனவுகள் திறந்து விடும்.
அவன் எண்ணியதைப்போலவே எங்கிருந்தோ பாடல் காற்றில் வந்துகொண்டிருந்தது. வந்தப் பாடலின் குரல் வழியாக நடந்தபடிப் பாடலைக் கேட்டான். கடைசியில் கூம்புக்குழாயின் இசை திருமண

வீட்டில் அவனைக் கொண்டு போய் சேர்த்தது.
இப்பொழுதெல்லாம் கலியாணத்திற்கு வந்தவர்களே திருமணம் முடியுமுன்னே சாப்பாட்டு அறைக்குள் நுழைந்து விடுகிறார்கள். அங்கேயும் தள்ளுமுள்ளு ஏற்பட்டுவிடுகிறது. அதில் இவன் நின்றால் அவன் பாடு அம்பேல்தான். எல்லோரும் அவனை மட்டும் விரட்டியபடியும் அவர்கள் உள்ளே நுழைந்தபடியும் இருப்பார்கள். தனது துணிப்பையைக் கலியாண மண்டபம் அல்லது வீட்டின் முகப்பில் ஒரு ஒதுக்குப்புறம் பார்த்து வைத்துவிடுவான். அதன்பிறகு சாப்பாட்டுப் பந்திக்குள் நுழைவான்.
திருமண வீட்டுக்காரர்கள் சில பேர் துவார பாலகர்கள் போல முன்வாசலில் நின்றுகொண்டு சாப்பாட்டு அறைக்குள் பிச்சைக்காரர்களையும், தெருவில் அலைபவர்களையும் அனுமதிப்பதில்லை. அதையும் மீறி அவர்கள் கண் அசரும் வேளையில் உள்ளே புகுந்துவிட ஒரு சாமர்த்தியம் வேண்டும். சிலசமயம் இடம்பிடித்து உட்கார்ந்த பின்னும் எழுந்திருக்கச் சொல்லி விரட்டுவார்கள். அப்போது "குறச்சாதனை" போட்டபடி இருந்துக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட சாமர்த்தியத்தோடு கடேசிப் பந்தியிலாவது சாப்பிட்டுவிட்டுதான் வருவான்.
போனவாரம் மேலப்பாளையத்தில் அத்தியடித் தெருவில் இரண்டுத் தடைவை எழுப்பிவிடப்பட்டு மூன்றாவது தடவைதான் அவனால் சாப்பிட முடிந்தது. முடிஞ்சால் இரவுக்கும் மீந்த சாப்பாடு கிடைக்குமா என்று அலைமோத நிற்பார்கள். கிடைத்துவிட்டால் அதைவிடப் பெரிய சந்தோஷம் எதுவுமில்லை. அவனும் அப்படித்தான். அப்படி கிடைக்கும் சாப்பாட்டை பையில் கட்டிக்கொண்டு ராத்திரி கொஞ்சம், கொஞ்சமாக விரும்பும்போதெல்லாம், அதன் அருமையான மணமும், உப்பும் உரைப்பும் சேர்ந்த சுவையை ரசித்து ரசித்துச் சாப்பிடுவான்.
அதற்காகச் சோத்துப்பெட்டியின் பையில் எப்போதும் இரண்டு மூன்று பிளாஸ்டிக் கவர்களும் வைத்திருப்பான். அதில் ஒன்றை எடுத்து லாவகமாக வாங்கிக் கொள்வான். கொஞ்சதூரம் நடந்துபோய்விட்டு மீண்டும் ஒரு பை வாங்கியிருக்கலாமே என்று எண்ணிக் கொள்வான்.
சிலசமயம் இரண்டு மூன்று பைகளுக்குக் கிடைத்துவிடுதலும் உண்டு. பிரியாணி என்றால் யாருக்கும் கொடுக்கமாட்டான். சாதாரணச் சோறு என்றால் அப்படியே யாருக்கும் கொடுத்து விடுவான். எவ்வளவு பெரிய மனிதனுக்கும் ஏதாவது ஒன்றில் அளவற்ற தீராத ஆசை இருந்து கொண்டேயிருக்கிறது. சோத்துப் பெட்டிக்கு பிரியாணியும் நெய்ச்சோறும் அப்படிப் பட்டவை.
திருமண வீட்டு ஆட்கள் தேனீக்களைப் போலப் பலவாறு வந்து

மொய்த்தபடி இருந்தார்கள். பெரிய கார்களும், பைக்குகளும் அடைந்தபடி நின்றன. அவனுக்குள் இன்றைய தினத்திற்கான இடம் இதுதான் என்று முடிவானது. எப்போதும் சில கலியாண வீடுகளில்தான் அவனுக்கு அப்படித் தோன்றுகிறது. அதை அங்கு உள்ள பந்தல் அமைப்பு மனிதர்கள், ஜோடனை, சாப்பாடு வாசம் என எல்லாம் சேர்ந்துத் தீர்மானித்து விடுகிறது.
தோளிலிருந்தப் பையைக் கைக்கு இறக்கி வைத்துக் கொண்டு அதை வைப்பதற்கு இடம் தேடினான். அடர்ந்த மரமல்லிச் செடியின் மூடு தெரிந்தது. நாய் எதுவும் உள்ளே வர முடியாது. பின்புறம்தான் எச்சிலைப் போடும் பகுதி அவனது பைக்குச் சேதாரம் ஏதும் ஏற்பட வழியில்லை.
இன்னும் மணமகன் வந்தபாடில்லை. கலியாண வீட்டுக்காரர்கள் மிகுந்த பரபரப்பில் இருந்தார்கள். ஒரு ஓட்டமும், பரபரப்பும். அந்தத் தினத்தின் விசையாக இருக்கிறது. அதன் முடுக்குதல்களில் கலியாண வீட்டுக்காரர்களுக்குப் படபடப்பு வந்துவிடுகிறது.
அவன் மரமல்லி நிழலில் மிகுந்த அமைதியோடு தனது துணிப்பையை சேர்த்து அணைத்தபடி அமைதியாக இருந்தான். எப்படியும் எல்லோருக்கும் பந்தி பரிமாறும் நேரம் வரும்தானே. அவனது இருக்கையைத் தீர்மானித்த பின்பு. எங்கோ பார்த்தபடி அமைதியாக இருப்பான்.
அன்றைய தினத்திலும் சீக்கிரமாகவே பந்தியில் இடம் பிடிக்க எப்படிப் போவது என்று எண்ணியபடி இருந்தான்.

## அத்தியாயம் -06

திருச்செந்தூர்

சோத்துப்பெட்டி தோள்கள், அவனது நீண்டப் பையையும் அதன் கனத்தையும் மட்டுமே அறிந்திருக்கும். வலது தோளுக்கும், இடது தோளுக்கும் மாற்றி மாற்றிப் பயணிக்கும், அவனது ஒரே உடைமைப் பொருள் அது.

அவனது இரவுகள் அவன் கால்களாலேயே கடக்கப்பட்டிருக்கும். சுமையேறிய தோள்களோடு அவனது கால்கள் பல ஊர்களை நடந்தே கடந்திருப்பவை. பாளையங்கோட்டையிலிருந்து மதுரைக்கு நடந்தே போயிருக்கிறான்.

மற்றவர்களைப் போல பேருலகக் கற்பனைகளோ, மாயா உலகத்தில் வாழும் கனவுகளோ, அதற்கானப் பிராயாசைகளோ, பரிபாசைகளோ பிச்சைக்காரர்களுக்கு என்றுமிருப்பதில்லை. அவர்கள் மனம் ஒரு கட்டுக்குள் இருக்கிறது. அல்லது குறைந்த தேவைகளுக்கான எண்ணங்களுக்கு மேலாக எதுவும் இருப்பதில்லை.

அவர்கள் எப்போதும் அன்றுள்ள அப்பத்தை நோக்கியே வாழ்கிறார்கள். அதற்காக ஒரு பிச்சைக்காரன் பலகிலோ மீட்டர் தூரம் நடக்கிறான். மற்றவன் அதே இடத்திலேயே இருந்து பெற்றும்விடுகிறான்.

எந்த ஊருக்கு பயணம் போகிறோம் என்று தெரியாமல் பயணம் செய்பவர்களாக இருக்கிறார்கள். எந்தஊரிலும்தான் அவர்களுக்கான உணவும் தேவையும் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு யாசகர்கள் பயணப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

சோத்துப்பெட்டிக்கு போகிற வழியில் இருக்கும் ஓட்டல்கள் பற்றித் தெரியாது. ஆனால் கலியாண மண்டபங்களும், அன்னதானச் சத்திரங்களும் எங்கே இருக்கிறது என்று நன்றாகத் தெரியும்.

போன ஜென்மத்தில் அவன் வள்ளலாரைப் போல வாழ்ந்தவன் என்பான் இப்போதைய அவனது ஜென்மம் 133 எனச் சொல்லுவான். கைகளை மணிக்கட்டிற்கு மேலே தேய்த்துக் கொண்டே இருப்பான்.

தேய்க்கத் தேய்க்க அவன் முகம் பிரகாசமடையும். அவன் கையிலிருந்து ஒரு பேரொளிச் தோன்றி வானம் நோக்கிப் போகும். அதிலிருந்து அவன் அப்பன் தோன்றுவான். முழுமையான கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்த அவனுக்கு அப்பன் முருகனும் அவன் வணங்கும் சாமிதான். சர்ச்சுகளின் முன்னால் நின்று கையேந்தி நிற்கும் போது ஏதோ ஒன்றை இழந்ததைப் போல் நினைக்கிறான். அவனுக்குள் கிறிஸ்தவமும், இந்து மதமும் விரவிக்கிடந்தது. ரெண்டு மாதத்திற்கு ஒரு முறைத் திருச்செந்தூர் போய்விட்டு வருவான். பெரிதாக சாமி கும்பிடுவதற்கல்லை. ஆனாலும்

போய் வரவேண்டும். அதில் அவனுக்கு ஒரு நிம்மதி இருந்தது. "சாமி கும்பிடப் போறதில்லே. பொறவு எதுக்காகப் போறே"ன்னு யாராவது கேட்டால் அது முருகனின் கனிந்த மனம் தன்னை அழைக்கிறது. அதனால் அவனை தேடிப்போகிறது என்பான்.
முன்ஜென்மம் எதுவிலும் கிறிஸ்தவனாக அவன் பிறக்கவில்லை. ஆனால் இந்தத் தலைமுறையில் கிறிஸ்தவக் குடும்பத்தில் ஏன் பிறந்தான் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அதற்கான விடையை அவன் முன்ஜென்ம எண்ணங்களில் தேடினாலும் அவனுக்குத் தென்படவில்லை. கிறிஸ்துவின் சொல்லும் செயலும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். அவரும் அப்பன் வழியில் வந்தவர்தான் என்று நம்பினான். சாய்புமார்களைக் குறித்து அவனுக்கு ஒரு வெறுப்பு எப்போதுமே இருந்து வருகிறது. அவன் ஊரில் மருந்துக்குக்கூட முஸ்லிம் கிடையாது. எல்லோரும் சாய்புமார்களைப் பத்தி அசிங்கமாகவேப் பேசினார்கள். கட்டியப் பெண்ணை தலாக் சொல்லித் தெருவில் விட்டு விடுவார்கள். சுத்தபத்தமா இருக்கமாட்டார்கள் மாட்டுக்கறி, மனுசன்கறி எதையும் தின்பார்கள் என்று. அவர்கள் இந்த நாட்டிற்கு லாயக்கில்லாதவர்கள். அவர்கள் விரட்டப்பட வேண்டியவர்கள் என்று மூர்க்கமாகப் பேசியதைக் கேட்டிருக்கிறான்.
ஆனால் பாளையங்கோட்டை வந்த பிறகும், மேலப்பாளையம் கலியாண வீடுகளுக்குப் போனபிறகும் அந்த எண்ணங்கள் எல்லாம் பொல்லாத கற்பனைகள் என்றும் தெரிந்து கொண்டான். ஆனாலும் அவர்கள் இந்திய மதத்திற்கு எதிரிகள் என்பது மட்டும் இன்னும் அவனை விட்டுப் போகவில்லை. பள்ளிவாசலுக்கு முன்னாலும் தர்காவிலும் அவனுக்கு கணிசமாகவே தொகை கிடைத்துவிடுகிறது. "வாப்பா.. உதவி செய்யுங்க வாப்பா" என்பது அவனையொத்தக் கையேந்துபவர்களின் ஒற்றை கோரிக்கைச் சொல் என்பது தெரியும் பொதுவான இடங்களிலும் எல்லாப் பிச்சைக்காரர்களும் "வாப்பா" என்ற அதே சொல்லைத்தான் பயன்படுத்துகிறார்கள். அவனுக்கு முதலில் சொல்ல எரிச்சலாகத்தான் இருந்தது ஆனாலும் அதுதான் அவன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சொல் என்பதும் அதுதான் அவனை அதிகமாக இதுவரை நடமாட வைத்திருக்கிறது என்பதையும் உணர்ந்திருந்தான்.
மேலப்பாளையத்தில் எவ்வளவு ஏழையானாலும் ஏதாவது காசுக் கொடுக்காமல் அனுப்புவதில்லை. வெள்ளிக்கிழமை காலையில் வரிசையாக பிச்சைக் கேட்டு வருபவர்களுக்காக அவர்கள் சில்லறை மாற்றி வைத்து எல்லோருக்கும் கொடுப்பதைக் கண்டு அதிசயித்துப் போயிருக்கிறான். எந்த முஸ்லிம் திருமண வீட்டிலும் சாப்பாடு

கிடைக்கும் என்ற கேரண்டி உண்டு, தக்கரையிடம் இது குறித்து பேசியிருக்கிறான். அவன் அதற்குப் பதிலாகச் சொன்னதுதான் அவனுக்கு மிகவும் வியப்பாகவும் அதிசயமாகவும் இப்போதும் இருக்கிறது. அவன் சொன்ன சொற்கள் இன்னும் ஞாபகத்தில் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

"ஏண்டா உம்மனசு இப்படியெல்லாம் யோசிச்சிக்கிட்டு இருக்குது. பிச்சைக்காரனுக்கு ஏதுடா ஜாதியும் மதமும். நாம வீட்டை விட்டு, சொத்து சுகத்த விட்டு, சொந்த பந்தங்களை வுட்டுட்டு இங்கே தனிக்கட்டை ராஜாவா இருக்கோம். நமக்கு சாதியும் வேணாம் மதமும் வேணாம்டா. எப்பமும் நாம வேறு எதையும் பத்தி எண்ணாமெ இருக்கணும்டா. நாமதாண்டா உலகத்துலேயே சுதந்திரமான ஆம்புளை. அதை வுட்டுட்டு இல்லாததையும் பொல்லாததையும் எண்ணி ஆசைப்பட்டு எல்லாத்தையும் இழந்துட்டு தெருவுல நிக்காதே. பாத்துக்கோ" தக்கரை சொன்னது எல்லாமே இன்று நிஜம்தான் என்று அவனுக்குத் தோன்றியது.

மூன்று நாளாகத் திருச்செந்தூர் வேலவனின் சந்நிதானத்தில் வந்து தங்கியிருந்து விட்டு அவன் ஊருக்குப் புறப்படும் நோக்கத்தில் ரயில் ஏறி நடைபாதையில் குந்தி அமர்ந்தபடி எதுவெல்லாமோ எண்ணிக் கொண்டேயிருந்தான்.

பயணிகள் ஒவ்வொருவராக ஏறத்துவங்கினார்கள். ஒரு வாரம் முருகனின் சந்நிதியில் தங்க வேண்டுமென்ற உத்தேசத்துடன்தான் வந்தான். வந்த நாளில் கோயில் பிரகார மண்டபத்தில் மௌனமாக அமாந்திருந்தான். நாகர்கோவில் பறக்கை ஊர்க்காரர்கள் 18 அடி, 20அடி வேல்களை இரண்டு கன்னங்களிலும் சொருகி காவடி ஆட்டம் போட்டபடி போனார்கள். யாரோ ஒருவன் அவன் கையில் சாப்பாட்டுப் பொட்டலத்தைத் திணித்துவிட்டு போனான். கொட்டு மேளச் சத்தமும், காவடி ஆட்டமும் கூட்டம் கூட்டமாக நடை மண்டபத்தில் போய்க் கொண்டேயிருந்தது.

அவன் மௌனமாக அங்கே இருந்து பார்த்துக் கொண்டிருந்தான். எதிர்த்த பிரகாரத்தில் ஒரு வயதான தம்பதியர் வேலூர் மாவட்டத்தில் இருந்து வந்திருந்தார்கள். அவர்களாக வந்து இவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள். இவனது பேச்சிலும், ஆன்மீகத்திலும் மயங்கி மறுநாள் போகும்போது நூறு ரூபாய் தாளைக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

அடுத்த நாள் வாழ்க்கை தலைகீழாகப் போனது. அங்கு இங்கும் ஓடிப் பார்த்தும் எதுவும் கிடைக்கவில்லை. முழுப்பட்டினி. கையில் இருந்த பணமும் டீ குடித்து, டீ குடித்துக் கரைந்துபோனது. ஊருக்கு கிளம்புவதைத்தவிர வேறு வழியில்லை. ஓசிப்பயணத்தில் ஊருக்குப்

போக ஏறி உட்கார்ந்துவிட்டான்.
பாளையங்கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கினால் எதிர்த்தாற்போல இருக்கும் இலங்காமணி வீட்டில் பசிக்குதுன்னு சொல்லி எதையாவது வாங்கிச் சாப்புடலாம். அப்படியே பாளை பேருந்து நிலையம் பக்கம் பாண்டி வீட்டுக்குப் போனாலும் ஏதாவது கிடைக்கும். பிறகு ஏதாவது கலியாண மண்டபத்து சாப்பாடு என்று தீர்மானித்துக் கொண்டான்.
சோத்துப்பெட்டி எப்போது ஆன்மீக வாதியாவான். எப்போது லௌகீகவாதியாக மாறுவான் என்று அவனுக்கே தெரியாது. அய்யாக்கண்ணு வக்கீலுக்கு அவனது இரண்டு பக்கமும் பிடிக்கும். ஆன்மீகத்தில் ஆரம்பித்து அவனது சோகத்தைச் சொல்லி அவனது இல்லறத்தில் கேள்விகளை நிறுத்துவார் அவர். மறுபிறவி குறித்து எல்லோருக்கும் குறி சொல்லுவான் பன்னீரண்டு ராசியும் பன்னிரண்டு மிருகங்கள், உயிரினங்கள் அதில் அடங்கியிருக்கிறது. உங்கள் அடுத்த பிறவியின் ரகசியம் என்பான். அதில் யாருக்கும் தயவு தாட்சண்யம் பார்க்கமாட்டான். அய்யாக்கண்ணு அடுத்த பிறவியில் காதில்லா மீனாய்ப் பிறப்பார் என்று அவரிடமே சொன்னான்.
"காதில்லா மீனா, அது என்னதுடே" என்றார்.
"திமிங்கலம்" என்றான் பட்டென்று.
அவர் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. இப்படி சட்டென்று சொல்வானென்று. அவர் முகம் சூம்பிப்போனது. "ஆமா சார் நான் உங்களைக் கஷ்டப்படுத்தச் சொல்லல. என் ஞானக்கண்ணுல தெரியுதுசார்." என்றான்.
அவர் அதற்குமேல் அவனிடம் அன்று பேசவில்லை. பேசாமல் அவனுக்கு அன்றைக்கான சாப்பாட்டைக் கொடுத்து அனுப்பிவிட்டார். அதன்பிறகு பலநாட்களுக்கு பிறகுதான் அவர் பேசவே ஆரம்பித்தார். அய்யாக்கண்ணு வக்கீலைத் திணற அடித்துவிட்டதாக அவன் எண்ணிக்கொள்ளவில்லை. அவர் அப்படித்தான் பிறப்பார் என்று உறுதியாக நம்பினான்.
ரயில் புறப்பட ஆரம்பித்தது மொட்டை அடித்துச் சந்தனத்தலைகளாக நிறையத் தெரிந்தனர். ரயிலில் கூட்டம் அதிகமில்லை. எந்த டிக்கெட் பரிசோதகரும் அவனைப் பார்க்கவில்லை. ஆனாலும் அவன் நடைபாதையை விட்டு எங்கும் செல்லவும் விருப்பமுமில்லை.
ரயிலில் முறுக்கு, சீடை, பனங்கிழங்கு விற்பவர்கள் கூவிக்கூவிக் விற்றபடிப் போனார்கள் அவர்கள் விற்றுச் செல்லும் பனங்கிழங்கு தேரிக்காட்டு பனங்கிழங்கு. அவன் ஊர்க் கிழங்குபோல மாவாக இருக்காது. நீர்சத்துதான் அதிகமிருக்கும் ருசியும் கம்மிதான் நார்ச்சத்தும்

இருக்காது. ஆனாலும் ரெண்டு வாங்கிச் சாப்பிட்டால் முழுப்பசியும் அடங்கிவிடும். பையிலும், அவன் சட்டையிலும் தடவிப் பார்த்தான். எதுவும் அகப்படவில்லை.

அடுத்தாற்போல் வருபவனிடம் ஒட்டிக் கிடக்கும் வயிறை காட்டி ஒரு பனங்கிழங்கு கேட்டுவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்திருந்தான். அப்படி பனங்கிழங்கு வியாபாரி நாசரேத்து தாண்டி விட்டால் வரமாட்டான் போல. பனங்கிழங்கு வியாபாரிகள் எப்படிக் காணாமல் போய்விடுகிறார்கள்.

மெதுவாகக் கையில் ஏந்திய சப்ளாக் கட்டையை தட்டிய சத்தமும், அதையொட்டிய பாட்டும் ரயில் பெட்டியின் மேற்பகுதியில் இருந்து கேட்டது.

"எங்கே என் காலமெல்லாம் கழிந்துவிட்டாலும்,
ஓர் இரவினிலே முதுமையை நான் அடைந்துவிட்டாலும்,
மங்கை உன்னைத் தொட்டவுடன் மறைந்துவிட்டாலும்
நான் மறுபடியும் பிறந்துவந்து மாலை சூட்டுவேன்",

யாரோ பாடியச் சத்தம் கேட்டது. ஒரு காதலின் மெல்லிய சோகத்தை அவன் குரல் பற்றியிருக்கவில்லை. யார் என்று பார்த்தபோது கண்தெரியாத ஒரு மாற்றுத்திறனாளி பாடியபடி வந்தான். எந்தவிதமான அலுங்கலுமின்றி பாடிக்கொண்டு வந்தான்.

அவன் பாடிக்கொண்டுவர அவன் பின்னால் அவனது மனைவி தாளம்போட்டுக் கொண்டு வந்தாள். அவள் பயணிகளிடம் கை நீட்டி யாசகம் கேட்டுக் கொண்டிருந்தாள். அவர்கள் அடுத்த நிலையத்தில் வேறு பெட்டிக்கு மாறிவிடக்கூடும். பெட்டியின் கடைசிக்குப் போனவுடன் பாட்டு படிப்பதை நிறுத்திக் கொண்டான்.

அவன் மனைவி படிக்கட்டில் அமர்ந்து ஊரை வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள். பல காலம் இந்த ரயிலில் பயணிக்கும் அவளுக்குப் படிக்கட்டு சலிப்பதேயில்லைபோல. உட்கார்ந்து இருந்தாள். அவனுக்கு, அவள் கண் தெரியாதகணவனுக்குப் பக்கத்தில் நின்றிருக்கலாமே என்று தோன்றியது.

சோத்துப்பெட்டி அவன் மனைவியை உற்றுப் பார்த்தான்.

மஞ்சள் கயிறு ஆடிக்கொண்டிருக்க அவள் ஏதோ சொல்லச் சிரித்தாள் கணவனிடம். இப்படி சின்னபுள்ளயாட்டம் இருப்பவள் இவனுக்கு மட்டும் எப்புடி கட்டுப்பட்டு இருப்பாள். நல்ல புள்ளதானா இல்லையா என எண்ணங்கள் சோத்துப்பெட்டிக்குத் தோன்றின. அவளையும் தாண்டி, அவளைப் போல இருந்த ஆறுவிரல் கருப்பன் மனைவி ஓடிப்போனது நினைவுக்கு வந்தது. கருப்பன் மனைவியும் அவன் மனைவியைப்போல அழகானவள்தான். ஆனால் அவன் மனைவிபோல

திமிர் பிடித்தவள் அல்ல. அவன் நினைவுகள் சுழன்று கடைசியில் அவன் மனைவி மீது போய் நின்று கொண்டது.

அன்று செங்கல் சூளை வேலையை மளமளவென்று முடித்துவிட்டு வீட்டுக்கு வேகமாகத் திரும்பினான். கதவைத் தட்டுவதற்காகச் செருப்பை உதறியபோது, வீட்டுக்குள் அவன் மனைவியோடு யாரோர் சிரித்துப் பேசுவது தெரிந்தது. அப்படியே கதவைத் தட்டாமல் பின்வாசலுக்குப் போய் வீட்டுக்சுவரில் ஏறிக்குதித்து, மெதுவாகப் பூனை பதுங்கியது போல பதுங்கி விரிந்துகிடந்த படுக்கையறை ஜன்னலை மெதுவாக நீவிக் கொஞ்சம் திறந்து எட்டிப் பார்த்தான். அவனுக்கு இதயத்தை பிசைந்து விட்டது போல வலி உடலெங்கும் பரவியது. வேறு யாராக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு வந்தவன் அவன் அப்பாவே இருப்பார் என்று கனவிலும் எண்ணவில்லை. சிறுவயதிலேயே அம்மா இறந்து போனதுக்கு அப்புறமாய் தன்னையே பார்த்துப் பார்த்து வளர்த்த அப்பாவா இப்படி... கண்களில் கண்ணீர் வழிய முன் வாசலில் வந்து நின்று எப்போதும் போலக் கதவைத் தட்டியதும், அவளும் சிரித்துக் கொண்டே திறந்ததும், அவன் அவளைத் தூங்கச் சொல்லிவிட்டு, தானே அடுப்படி சென்றுச் சாப்பிட்டு விட்டு வீட்டை விட்டு வெளியேறிய காட்சிகளாய் கண்ணில் விரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டான். அவளை விடுவதற்காய் அப்பாவை விட்டுவிட்டு வந்துவிட்டோமோ என்று இப்போதும் அடித்துக் கொள்கிறது. போகப் போக அதுவும் அவனுக்குத் தோன்றவில்லை. அவன் வீட்டை விட்டு வெளியேறியதை அவன் அப்பா அவருக்கு சாதகமாக எடுத்துக் கொண்டார். அவன் வள்ளியூரில் அலைந்து திரிந்தபோதும் கூட, அவனைப் பார்த்து வீட்டுக்கு வாவென்று அழைக்கவில்லை. அதனால் அப்பாவும் அவன் நினைவுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோய் விட்டார். இப்போது அதுவும் சரிதான் என்று தோன்றுகிறது. சோத்துப்பெட்டிக்கு குருடனாய் பிறந்து இருக்கலாமோ என்று தோன்றியது. முதலில் அந்தக் கண்றாவிக் காட்சியைப் பார்த்திருக்க வேண்டாம். ரெண்டாவது, ஏதாவது பாட்டுப்பாடி எப்படியாவதுப் பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணினான். வயிற்றுப்பசி எங்கே போனது என்று தெரியவில்லை.

மீண்டும் கண்களைப் பொத்திக்கொண்டு யோசிக்க ஆரம்பித்தான். எந்தப் பிறவியிலாவது குருடனாகப் பிறந்திருக்கிறோமா என்று.?

## அத்தியாயம் -07

லெப்பர் விடுதி

சூசை மாணிக்கம் தான் சூசையின் முழுப் பெயர். ஊர் விஜயநாராயணம் பக்கம். அவன் குடும்பத்தைச் சார்ந்த எல்லாரும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்தவர்கள். இவன் அதுக்காக சர்ச்சுக்கு போயி முட்டுக்கால் போட்டு ஜெபிப்பவன் என்றெல்லாம் எண்ணிவிடக் கூடாது. அநேகமாகப் பிச்சைக்காரர்கள் அனைவரும் சொல்லி வைத்தார்போல ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். சாதி, மதம், சமூகக் கட்டுப்பாடுகள் என எல்லாவற்றையும் தின்றுச் செரித்துவிட்டுத்தான் இருக்கிறார்கள்.
பெரிய கடவுள் பயமோ, கொள்கையோ அதற்காகக் கோவிலுக்குச் சர்ச்சுக்கு, மசூதிக்கு போவதோ கிடையாது. பிச்சைக்காரர்கள் எல்லோரும் சர்ச்சுக்கு, கோவிலுக்கு, தர்க்காவுக்கு முன்தான் இருப்பார்கள். ஆனால் சாமி கும்பிடுவது மட்டும் பெரியதாய் இருக்காது. அப்படியே கும்பிட்டாலும் அது பெயரளவிற்கு அன்று யாசகம் அதிகமாகக் கிடைப்பதற்காகக் கூட இருக்காது. ஏதோ எல்லோரும் சாமி கும்பிடுகிறார்களா, நாமும் கும்பிட்டு வைப்போம் என்பதாகத்தான் இருக்கும். அவர்களுக்குப் பெரிதாகக் கடவுள் என்ன கொடுக்க வேண்டியதிருக்கிறது. இதுபற்றி சூசையிடம் கேட்டால் சிரித்துக்கொண்டே பதில் சொல்வான்.
"எங்களுக்கு என்னய்யா இருக்கு. புள்ளையா குட்டியா. எதுக்குப் போயி நாங்க யார்ட்ட நிக்கணும். அல்லேலூயால்லாம் உங்களுக்குத்தான். எங்களுக்கு கடவுள்ட்ட கேக்குற அளவுக்கு பெரிய எந்த வேண்டுதலும் கிடையாது. கடவுளு எங்களுக்கு வேண்டியதைக் கொடுக்காரு. எந்த வேலையும் செய்யவிடாம, எங்கள் சாப்பாட்டுக்கும், செல்லும் செலவுக்கும் தாராரு. உங்களவிட எங்களுக்கு எல்லாம் கெடைக்குது. இன்னிக்கு பிரியாணி, நாளைக்கு சொதி அதுக்கு அடுத்த நாளைக்கு நெய்ச்சோறு. வந்துக்கிட்டே இருக்கும். அது மட்டுமல்ல எங்களுக்கு எல்லாச் சாமியும் வரம்கொடுக்கும். பொதன் கெழம ராமசாமிகோவிலு, வெள்ளிக்கிழமெ பள்ளிவாசலு, நாயத்திக்கிழமன்னா சர்ச்சு எங்கயும் அவரு வந்து நிக்கிறாரு. எங்களுக்கு எந்தக் கடவுள்ட்டயும் விரோதம் கிடையாது. எல்லாக் கடவுளும் எங்களுக்கு ஒண்ணுதாய்யா... எங்களுக்குக் கொடுக்குற எல்லா மனுசரும் எங்களுக்கு கடவுள்தான்... என்னா நா சொல்றது சரிதானே.."
"சூசை என்னப்பா சொல்ற.. எல்லாருமே இப்படித்தான் இருப்பாங்களா. ஒருத்தரும் தெய்வத்தக் கும்புட மாட்டாங்களா..."

"அய்யா நான் பிச்சை எடுக்க வந்த புதுசுல ஒருத்தன் சர்ச்சிலேயே உக்கார்ந்துகிட்டு, சட்டைக்கு முன்னும் பின்னும் சிலுவைக்குறி வச்சி தச்சுக்கிட்டு பைபிளும் கையுமா அலைவான். எப்பவும் எங்கேயும் உக்காந்து பைபிள படிச்சிக்கிட்டே இருப்பான். யார்ட்டயும் பிச்சைனு கேக்கமாட்டான். ஆனா அவனுக்கு மட்டும் போறவங்க வாறவங்கள்ளாம் ரூவா போட்டுட்டு போவாங்க, என்ன கேக்கியளாய்யா என்னமோ ரோசனையில இருக்க மாறி இருக்கே"

" கேக்கேன்ப்பா சொல்லு..."

"அவன் சேக்கணும்னு நெனைச்சிருந்தா கோடி ரூவா சேத்திருக்கலாம். அவன் என்ன செஞ்சான் தெரியுமா. அவனுக்கு மூணு தொடுக்கு. அவளுவளுக்கு கொடுத்தே அழிஞ்சுப் போனான். மூணு முண்டையும் சாவுற நேரத்தில் தண்ணி கூட கொடுக்காம வுட்டுட்டாளுவொ. அனாதையா செத்துப் போனான். முனிசிபாலிட்டியில் இருந்துதான் பொதைச்சாங்க எங்கய்யா போச்சு அவன் பைபிள் வாசிச்சது..."

"கேளுங்கையா அவன் அப்புடி நடிச்சதுனால அவன் எதிர்பார்த்ததைவிட ரொம்ப பணம் கிடைச்சது. வேஷம் போட்டு யாசகன் கேட்கிறது பொழைப்புக்குத்தான். அதுக்காகத்தான் அவுங்க வேஷம் போட்டுக்கிட்டு காவி உடுத்தி, மஞ்ச பொட்டு வச்சிக்கிட்டு திரியுறாங்க. அவுங்க போடுற வேஷமெல்லாம் காசுக்காக தான். ஆனா கண்ணு தெரியாதவங்களையும், கைகால் இல்லாதவங்களையும் சொல்லுங்க, அவுங்க பயபக்தியா சாமி கும்புடுவாங்க. அவுங்க வேற வழியில்லாம பிச்சை எடுக்குறாங்க. பலபேர் கை கால் இல்லாட்டியும் உழைச்சி சாப்பிடத்தான் பிரியப்படுவாங்க. ஆனால் பிச்சையெடுக்கவுங்க கோயிலுக்கு பயபக்தியா சாமி கும்புடுவர்றன்ட்ட பிச்சை கேட்டு வாங்குறாங்க அவங்களும் சாமிய நெனச்சிக்கிட்டு குடுக்குறாங்க. மத்தபடி எந்த பிச்சைக்காரன் என்னைக்கு சாமி கும்பிட்டான்."

கேட்டவருக்கு ஆச்சரியமாக இருந்தது. கோயில்லயும், தர்காவிலும், சர்ச்சிலும் காத்துக் கிடக்கும் இவர்களுக்கு கடவுள் குறித்துப் பெரிய பயமில்லையா என்பதுப் புதுச் செய்தியாக இருந்தது. எப்படியெல்லாம் யாசகம் அவர்களை மாற்றியிருக்கிறது என்று ஆச்சரியப்பட்டார்.

"இங்க எங்களோட இருக்க எந்தப் பயலும் யோக்கியம் கிடையாது. ராத்திரியானா எந்தக் கிழவியையும் கட்டிப்புடுச்சி படுத்துக்குவான். கிழவியளும் யோக்கியமாக்கும். அவளுவளும் அப்படித்தான்" எல்லாப் பயலுவளும், பொட்டச்சியும் அப்படி இருக்குறது ஒரு தேவையாவும் இருக்குய்யா" சூசை கொச்சையாகப் பேசிக்கொண்டேபோனான்.

"ஏலே... சூசை... என்னல பேசுற. கோட்டிக்காரத்தனமா. பேச்ச

நிறுத்துல" என்றார். நீண்ட சிலுவை பாசிச் செயினை அணிந்து, சர்ச் சுவரில் சாய்ந்தபடி இருந்த பெரிய தாடி ஞானப்பிரகாசம். ஞானப்பிரகாசம் கை நீட்டி யாசகம் கேக்காத டீசண்டான பிச்சைக்காரர். பாம்பேயில குடும்பம் இருக்கு. ஏதோ கொஞ்சம் பென்சன் வருது. மேல்படி வருமானத்துக்கு பிச்சை எடுக்கிறார்.

"ஆமா.. இவுரு பெரிய யோக்கியரு..." வாயில் முணங்கிக்கொண்டான் சூசை. அவனுக்கு எப்போதும் வாயில் சனியன் குடியிருந்தான். அதனால்தான். அவனை லெப்பர்கள் கூட யாரும் கூட்டுப்பிச்சைக்கு அழைப்பது கிடையாது. அவன் கூடப் போனா ஒழுங்கா தலைக்குத் தகுந்தால்ல பிரிச்சுக் கொடுக்கணும். பெரியவருக்கு ஒரு தொகை. மத்த எல்லாத்துக்கும் மீதியுள்ளதுல பங்கு என்பதை ஒத்துக்கிடமாட்டான்.

அப்படி ஒரு தடைவை, பங்குவைக்கும்போது ஏற்பட்ட சண்டைப் பெரிதாகிக் கைகலப்பில் முடிந்தது வாய்ச்சண்டைக் கைச்சண்டையாகி ஆடிக்கிட்டிருந்த முன்பல் தெறித்து விழும் அளவுக்கு ஆகிவிட்டது. அதற்குப் பிறகு சூசை அவர்களோடுப் பிச்சைக்குப் போறதேயில்லை. சிலவருடங்களாக லெப்பர் பொம்பளைகளும் அவுங்களோட சேர்ந்துப் பிச்சைக்கு போறதில்லை. ஒரு நாய்க்கு எப்படி மத்த தெரு நாயெப் புடிக்காதோ, அதெப்போலவே ஒரு லெப்பருக்கு இன்னொரு லெப்பரப் புடிக்காது. காசு வச்சிருக்கவனும். தோல் சொறி இல்லாதவனும் அவுங்கள்ள உயர்ந்த சாதி. மத்தவங்களெல்லாம் தாழ்ந்த வங்கதான். சரிக்கு சமமாக நின்னுப் பேசக்கூடாது. "தூறப்போல சொறிப்பயலே... சொறிநாயோ"ன்னு கண்டமானிக்குத் திட்டுவார்கள்.

சண்டையும், கூக்குரலும் நிற்கவே நிற்காது. ஏச்சும் பேச்சும் கூடிக்கொண்டே போகும் ஏதாவது ஒருத்தனுக்கு தொண்டைக் கட்டிவிட்டால் தான் ஏசுவதும் வசவும் நிற்கும்.

சண்டையென்று வந்துவிட்டால், யாராவது ஒருவர் ஒதுங்கிப் போகணும். ஆனால் அது மட்டும் இங்கு நிகழவே வாய்ப்பில்லை. விடுதிக்குள் ஆரம்பித்துத் தெருவுக்கு வந்துவிடும்.

அதையும் மீறி நடந்துகொண்டால் அவ்வளவுதான். மூர்க்கமான அல்லது கெட்ட வார்த்தைகளால் எல்லோர் முன்னிலையிலும் கொடுமையாகத்திட்ட ஆரம்பித்துவிடுவார்கள். யாரும் நிறுத்த முடியாது. எல்லாம் ஆண்-பெண் உறவுகளைப் பற்றியும் அதோடு அவர்களது குடும்பத்தை இணைத்தும் படம்படமாய் ஓடிக்கொண்டிருக்கும். சூசைக்கு அது பிடிக்காது. எனவே அவர்களோடு அதிகமாக உறவோ நட்போ வைத்துக் கொள்ளமாட்டான்.

கடற்கரையொட்டிய வசதியானக் குடும்பத்தில் பிறந்தவன் அவன். குடும்பத்தினர் இரண்டு தலைமுறைக்கு முன்னால் போட் வாங்கி

விட்டவர்கள். அவன் வீட்டில் வில்வண்டி, ரெண்டு ஜோடி மாடெல்லாம் இருந்தது. இவனுக்கு மட்டும் படிப்பு வரவில்லை. அப்படியே தெருவச்சுத்திக்கிட்டு மைனர் ஜோக்குப் பண்ணிக்கிட்டு அலைஞ்சான். அவனுக்கு கலியாணம் பண்ணி வைக்கணும்னு அவங்க அப்பா அம்மா முயற்சியெடுத்தப்போது அவன் கீழத்தெரு முனியம்மாளை வச்சிருந்தான். அவளும் வேறொருக் கலியாணத்துக்கு ஒத்துக்கிடவே இல்லை.

"நீ கலியாணம் பண்ணிக்கிட்டா நான் நாண்டுக்கிட்டு நின்னு, செத்துப் போவேன்னு" மிரட்டினாள். அவளை அப்படிச் சாகவிட அவனுக்கு மனது இல்லை. அப்படி அவளிடம் ஒரு நேசம் பொதிந்துக் கிடந்தது. அவனும் அவளிடம் கரைந்து போயிருந்தான். அதுனாலயே அவன் அப்பா, அம்மா பார்த்தப் பொண்ணுகளையெல்லாம் கழித்து விட்டான். சில சமயம் சின்ன காரணங்களைச் சொல்லி மறுத்துவிட்டான். ஒரு கட்டத்துக்கு மேலே அவனுக்குப் பொண்ணு அமையாமலேப் போச்சு. பிறகு, அவன் முகமும் கைவிரல்களும் சுருங்கி வளைய ஆரம்பித்தன. முனியம்மாளும் அவனக் கைவிட்ட மாதிரி நடந்து கொண்டாள். அவனுக்கு ஒண்ணும் ஓடலே. கையும் உதடும் அடிக்கடி மரத்துப் போன மாதிரி இருந்தது.

"நாசரேத்து ஊர்ல லூகாஸ் ஆஸ்பத்திரின்னு ஒன்னு இருக்கு. உன் நோய்க்கு கூட்டு மருந்து கொடுப்பாங்க" அனுப்பி வச்சார், ஒரு டாக்டர். அதுக்கப்புறம்தான் தெரிஞ்சுது அவனுக்கு வந்திருப்பது பெருநோயென்று. அவன் வாழ்க்கைச் சரிந்த மரம் போல ஆகிவிட்டது. எல்லா நம்பிக்கைகளும் தகர்ந்து போக, நாசரேத்து ஓடிப் போனான் சூசை. அவர்கள் மருந்து கொடுத்தார்கள். அதில் அவன் கைகளில் நீர்வடிவதும், கைவிரல்கள் அழுகுவதும் நின்றது. ஆனாலும் நோய் முற்றிலும் தீரவில்லை. பத்துநாளைக்கு, புண்ணெல்லாம் சுக்காகக் காய்ந்து உணர்ந்தது போல இருக்கும். அடுத்த பத்தாவது நாள் மீண்டும் புண்ணாகிச் சலம் வைத்து நீர் ஒழுக ஆரம்பித்துவிடும். ஒழுங்கா மருந்துச் சாப்பிட்டு வருவதால் கொஞ்சம் பாக்கிறதுக்கு தெளிவா இருந்தான். ஆனால் அவனை விட்டு உறவினர்கள் உட்பட மனிதர்கள் விலக ஆரம்பித்தார்கள். முனியம்மாள் வேறு ஊருக்கு ஓடிப்போய்விட்டாள். அதுக்குப் பிறகு, தேவைகளுக்காக அவன் நாசரேத்திலிருந்து சாத்தான்குளம், திருவைகுண்டம், என நகர்ந்து இப்போது பாளையங்கோட்டையில் லெப்பர் விடுதியில் நிரந்தர உறுப்பினராகிவிட்டான். இதற்குள் அவன் கடந்த கஷ்டங்களும், அவமானங்களும் தெருநாய்க்கும் கூட வந்திருக்காது. என்ன செய்ய அதுதான் இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையாக இருக்கிறது. இப்பவும்

அவனுக்கு நல்லா டிரஸ் பண்ணிக்கிட்டு திரிய ஆசைதான். ஆனால் அதுக்கு வழி எங்கேயிருக்கு. இந்தப் பழைய கட்டம் போட்ட முண்டும், அந்த பழையச் சாரமும் இப்போது அவனது கையிருப்புச் சொத்துக்கள். ரெண்டுப் பாத்திரங்களும் தான்.

சூசை தனது வருமானத்தைப் பெருக்க தனது ஆட்சி எல்லையை விரித்துத்தான் பார்க்கிறான். எங்கு ஆடினாலும் ஓடினாலும் கைக்கும் வாய்க்குமாகத்தான் கழிகிறது. அவன் தொண்டைக் குழிக்குள் கிடக்கும் ஆசைகளும் அப்படியே இருக்கிறது. அவனது பழைய துணி மூட்டையைப் போலவே சுவர் ஓரமாகத்தான் கிடக்கிறது. கொஞ்சம் சேர்ந்தால் போதும் மேட்டுத்திடல் வங்கியில் யாருக்கும் தெரியாமல் போட்டு வைத்திடுவான்.

முனியம்மாவும் எங்கெல்லாமோ வழி தப்பிய ஆடுபோல அலைஞ்சுத் திரிஞ்சி கடைசியா பாளையங்கோட்டையில் ஒருத்தனுக்கு வாக்கப்பட்டு ரெண்டுப் புள்ளையும் பிறந்து நல்லபடியாக இருக்கிறாள். அவளுக்கும் சூசை அங்குதான் இருக்கிறான் என்று தெரியும். இப்போதெல்லாம் தற்செயலாக முனியம்மா அவனை எங்கேயாவது பார்த்தால் ஒதுங்கித்தான் போய்விடுகிறாள். அவள் கடைக்குச் சாமான் வாங்கவோ ரேஷன் கடைக்குப் போகும் வழியில் பார்த்தால் பார்க்காததுபோல வேறு எங்கோ பார்த்தபடி போய்விடுவாள். அதுதான் அவளது வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் சரியானது என்று எண்ணிக் கொள்வான். அவனோடுப் பேசி, அதனால் எதுக்கு அவளுக்கும் பிரச்சினை என்று ஒதுங்கிப் போய்விடுவான். அவளைக் கள்ளத் தனமாகப் பார்த்து மனதுக்குள் பழைய நினைவுகளை அசைபோட்டுச் சிரித்துக் கொள்வான.

கீழத்தெருப் பண்ணையார் வீட்டுக்கு அவள் வேலைக்குப் போகும்போது பார்ப்பான். அவனை அவள் பார்க்கிறாளா என்றுப் பார்த்தபடியே நிற்பான். அவள் கண்கள் அருகில் வரும்போதுப் பார்த்து விடுதல் நிகழும் என்று எண்ணிக் கொண்டேதான் நிற்பான். ஆனால் அவன் நிற்கும் பக்கம் திரும்ப மாட்டாள். எதிர்த்திசையிலும் நின்றாலும், அவள் தலைவேறு திசைக்குத் திரும்பிக் கொள்கிறது.

ஏன் இப்படி அவனைத் தவிர்க்கிறாள் என்று எண்ணிக் கொண்டே நடப்பான். ஒருவேளை அவனைப் பார்த்தால் ஜாடையில் பேச வேண்டியதோ, சிரிக்க வேண்டியதோ ஏற்பட்டுவிடும் என்று எண்ணுகிறாள். அப்படியானால் அவன் மீதான கருணை இன்னும் இருக்கிறதாகத்தானே அர்த்தம் என்று எண்ணிக்கொள்கிறான்.

முனியம்மாளுக்கு ஒரு நல்ல சேலை எடுக்கப் பணம் கொடுக்கலாம் என்றும் எண்ணுவான். அவனது பழைய துணிப்பையில் கொஞ்சம்

பணம் இருக்கிறதுதான். அதை எண்ணிப் பார்க்க வேண்டும், என்று தினமும் எண்ணுவான். ஆனால் அதை எடுத்து எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று பார்க்க அவனுக்கு தேவையுமில்லை. தைரியமும் வரவில்லை, அதில் கூடுதலாகவோ, குறைவாகவோ இருந்தால் என்ன செய்ய என்று மனது அடித்துக் கொள்ளும் என்று பயமாகவும் இருக்கிறது. எப்போது சூசை முனியம்மாளுக்கு சேலை எடுத்துக் கொடுக்கப்போகிறான் என்று அவனுக்குத் தெரியாது.

இப்போதெல்லாம் முனியம்மாள் அவனது ஈர்ப்பில் இல்லை. அவன் வாழ்க்கை தக்கரை, முத்தாச்சி என்று வேறு ஒரு கரைக்கு ஒதுங்கிவிட்டது. அவர்களே அவன் நினைவுகளை ஆக்ரமித்துக் கொண்டார்கள்.

முத்தாச்சி கடைசி வெள்ளிக்கிழமை வந்தபோது தக்கரைக்காக புளியோதரை கட்டிக் கொண்டு வந்தாள். தன் மகனுக்கு ஒரு பொட்டலத்தைப் பிரித்து சாப்பிடச் சொல்லிவிட்டு சூசைக்கும் ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தாள்.

புளியோதரை வாசனை அந்த மரத்தின் நிழலைச் சுற்றிக் கொண்டு மணத்தது. அவனைச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சினாள். ஆனால் தக்கரை அண்ணன் சாப்பிடவே இல்லை வாங்கி தன் ஜோல்னாப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

"ஏய்யா... நீ இப்ப எங்கண்ணு முன்னாடி சாப்புடுய்யா" அவன் கெஞ்சலைப் பொருட்படுத்தியதாகவே இல்லை.

"வவுறு பசிக்கல புள்ளே. பசிக்கும் போது சாப்பிடறேன்" தொடர்ந்து அவன் சாப்பிடாமல் மறுத்து விட்டதால் அவள் முகம் தொங்கிப்போனது. அதையும் அவன் சட்டை செய்வதில்லை.

"ஏய்யா.. என்னப் புடிக்கலையா... சொல்லுய்யா"

"போ.. முத்தாச்சி. அப்புடில்லாம் இல்லே உன்னெப் புடிக்காம வேறு எவளப் புடிக்கும்" அவள் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னான் தக்கரை அண்ணன்.

தக்கரை பிடித்தக் கைகளை இழுத்துக் கொள்ள விரும்பாமல் அவன் அருகிலே சென்று தன் கைகளை அவனிடம் கொடுத்து வைத்திருப்பதுப் போல இருந்தாள். சூசையின் கைகளும் மனதும் விறுவிறுவென ஏதோ உணர்ந்தன.

"ஏ புள்ளே.. சத்தியமா வயிறு பசியில்ல பசிச்சா கண்டிப்பா சாப்பிடுவேன்" என்று சொன்னதையும் அவள் நம்பவில்லை "போற வழியில்ல யாருக்கும் கொடுத்திட மாட்டியே" அவள் கேட்டாள்.

"கொடுக்க மாட்டேன் முத்தாச்சி" என்று சொல்லிவிட்டு அவளிடமே சூசையிடமோ ஏதும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிப் போனதுதான்

சூசைக்கு வேதனையாக இருந்தது. எப்போதும் தக்கரை அண்ணன் இப்படித்தான். "ஒரு பொம்பிளைப் புள்ள இப்பிடி ஆசையோடு வந்து ஒட்டிக் கொள்கிறது. இவுரு எண்னான்னா இந்த சீமைக்கே நாந்தான் ராஜாங்கிறது போல போறாரே"இ அவன் புலம்பித் தீர்த்தான். முத்தாச்சியின் மீது இரக்கமும் கருணையும் வழிய அங்கேயே நின்றபடி இருந்தான்.
அவள் தொங்கிய முகத்தோடு தலைகீழாகக் கவிழ்ந்து இருந்ததைப் பார்த்த சூசைக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது. அவன் மகன் சாப்பிட்டு முடித்துக் கைவிரல்களைச் சூப்பிக் கொண்டிருந்தான். அவள் மகனுக்குத் தெரியும் தக்கரை எதுவும் சொல்லாமல் போகக்கூடியவர்தான் என்று. அன்று தக்கரை போனதையும் உணர்ந்த பின்பும் அமைதியாக இருந்தான் துரைக்குட்டி. அவள் கைகளைக் கூடக் கழுவாமல், தக்கரை அண்ணன் போவதையேப் பார்த்துக்கொண்டிருந்தாள். எதுவும் பேசாமல் அவள் முந்தானையால் முகத்தைத் துடைத்தபோது சூசை அழுது விட்டான்.
”ஏய்.. நீ எதுக்கு அழுவுறே. அவுரு போக்கே அப்படித்தான்டே. அதுதான் எனக்கும் புடிச்சிருக்கு. நீ அழுவாதே நான் வாரேன்" அவள் சொல்லிவிட்டு மகனை அழைத்துக் கொண்டு போனாள்.
"தக்கரை அண்ணன் ஏன் இப்படி இருக்காரு அவர் தக்கரையின் குணம் மாறி விடாதா" என்பது அவனது ஆசையாகவே இருக்கிறது. யோசித்துக் கொண்டே கிடப்பான் சூசை. தக்கரையின் எடுத்தெறிந்து நடக்கும் செய்கை, விளங்காத புதிர் போலவே இருக்கிறது.

## அத்தியாயம் -08

பத்ரகிரியார்

அய்யாக்கண்ணு வக்கீல் மிகவும் குழம்பிப் போயிருந்தார் 'இந்த சோத்துப் பெட்டிப் பய நம்மளப் பத்தி இவ்வளவு லேசா சொல்லிட்டுப் போயிட்டானே' என்று மாய்ந்தார்.

யாரையும் மாடமடங்க பேசி வந்த அவரது பேச்சில் சற்று அயர்ச்சி ஏற்பட்டிருந்தது. காதற்ற திமிங்கலமாகப் பிறப்பது என்றால் என்ன காரணமாக இருக்கும். எல்லோரும் கேட்க இயலாத வார்த்தைகளைப் பேசியதாலா?

காது கேட்காது என்றால் பேசும் வாயும் அடைபடும்தானே. யாரையும் எடுத்தெறிந்துப் பேசியதால் கொடுக்கப்படும் தண்டனையோ? குமைந்து கொண்டே இருந்தார். சோத்துப்பெட்டியின் ஒற்றைச்சொல் இத்தனை பெரிய வழக்கறிஞரை எப்படிப் புரட்டிப் போடுகிறது? இனிச் சோத்துப் பெட்டியின் வாயிலிருந்து ஏதும் சுடுசொல் வந்து விடக் கூடாது என அஞ்சினார். முதன்முதலாக அவர் வாழ்க்கையில் ஒரு ஒண்ணுமத்த பிச்சைக்காரனுக்குப் பயப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

தினமும் வக்கீல்சார் காலையில் குளித்து, உடை உடுத்தி சாப்பிட்டு விட்டு வந்து முற்றத்தில் கிடக்கும் தனது நாற்காலியில் அமர்ந்தபடி பேசுவார். "குளித்து, திருநீறு இட்டு, வெளுத்த துணியுடன், நன்றாக சவரம் செய்துவிட்டு ஜம்முன்னு உக்காந்துஅவென் வருவ வருவான்னு காத்துக்கிட்டு இருக்கேன் ஆனா அந்தப் பய வந்தபாடில்ல" என்று சிரித்தபடியே சொல்லுவார்.

அவருக்கு எதிரே அமர்ந்திருக்கும் நபர் வக்கீல் சார் சொல்லுவது என்னவென்று விளங்காமல் யாரைச் சொல்லுகிறிர்கள் எனக் கேட்டால், சிரித்துக் கொண்டே பதில் சொல்வார், "அவனா எல்லாத்தையும் புடிச்சிட்டுப்போக கடைசி காலத்துல வருவானே அந்த எமப் பயலத்தான் எதிர்ப்பாத்து காத்திருக்கேன் அவனுக்கு ரொம்ப கஷ்டம் வேண்டாமுன்னுதான் குளிச்சி முடிச்சி ரெடியா இருக்கேன். அந்தப்பய வராம எங்கயோ ஒளிஞ்சிக்கிட்டு இருக்கான்டே" என்று எமனையே எதிர்த்து பேசுபவர், சோத்துப்பெட்டியின் சொல்லுக்கு பயந்தது அதிசயமானதுதான்.

எதிர்காலம் எப்படி அமையும் என்றக் கவலையும், இறந்தபின்பு எப்படி வாழப்போகிறோம் என்னும் கவலையும்தான் மனிதனை மதங்களின்பால் நிலைத்திருக்க வைத்திருக்கிறது. ஒவ்வொரு மதமும் மரணத்திற்குப்பின் ஒரு பெரிய வாழ்வை அளிப்போம் என்ற கியாரண்டியைக் கொடுக்கின்றன. அதற்காகவே வாழ்க்கை

முழுவதையும் அர்ப்பணிக்கிறார்கள்.
மனிதர்கள் கோடானுகோடி வருடம் வாழும் வாழ்க்கை ஒன்றுமில்லை என்று சொல்லும் வக்கீல் அய்யாக்கண்ணு, அப்படி ஒன்று இருந்து கிடைத்துவிட்டால் நல்லதுதானே என்பவராயும் இருப்பவர்.
அய்யாக்கண்ணு வக்கீலுக்கு வயது அதிகமாக அதிகமாக வாழ்க்கை குறித்தும், மரணம் குறித்தும் வருகிறவர்கள் எல்லோரிடமும் தன் கருத்தை முன் வைப்பார். அவர் கருத்தை நிலை நிறுத்துவதில் அவருக்கு ஒரு அபாரமான மன நிறைவு ஏற்படும்.
மனிதன் மரணத்திற்குப் பின்னாலான வாழ்விற்காகத் தனது சொத்து, சுகம், படிப்பு, அனுபவம், வாழ்க்கை ஆகியவற்றின் அடிப்படையில் சிந்திக்கிறான். தனக்கு சரிசமம் இல்லாத நபருடன் பேசக் கூடவிரும்பாதவன் எப்படி மேலுலகத்தில் ஏழை எளிய, நல்லமக்களோடு சேர்ந்திருப்பான் என்று தெரியவில்லை.
மேலுலகில் நீடித்த வாழ்வு என்பது எந்தவிதமான சுவாரஸ்யமும், புதுமையும் இல்லாதது அதில் எப்படி வாழப்போகிறார்கள் என்பதும் அவருடைய கேள்வி. எல்லோரிடமும் அவர் முன் வைக்கும் கேள்வியும் அதுவே. ஒரு காலத்தில் பொதுவுடைமை இயக்கத்தில் இருந்த விளைவாகக்கூட இருக்கலாம்.
அய்யாக்கண்ணு வக்கீல் அவனைக் கண்டு பயந்து கிடக்க, அவனோ அவரைப் பார்க்கத் தயங்கியபடி இரும்புக் கேட்டின் ஓரத்தில் உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தான்.
அவனுக்குத் தெரியும். அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை வக்கீல் அப்படியே ஒரு லாத்தல் போடுவார். அவர் கண்ணில் படாமல் காக்கை கூடப் பறந்து ஓடிவிடும். எல்லாரும் அவரைக் கண்டு விழுந்தடிச்சி ஓடுவதிலும் அவருக்கு ஒரு பெருமிதம்தான்.
சோத்துப்பெட்டி ரொம்பத் தெளிவானவன். அவரைப் பார்க்காமல் எதிர்வசத்தில் உடகார்ந்திருந்தான். அவன் முதுகைக் காட்டியபடிப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். மீண்டும் சோத்துப்பெட்டிதானா என்று உற்றுப் பார்த்தார். சோத்துப்பெட்டியேதான்.
"என்னல இங்கன உக்காந்துட்டு இருக்கே. உள்ளே வர வேண்டியதுதானே" என்றார் வக்கில். அந்த வார்த்தைக்குள் நீ வராமப் போனாலும் சரிதான் என்பதும் ஒளிந்திருந்தது. அவனுக்கு இன்று அவரைப் பார்த்து எப்படியாவது அவர் வீட்டில் சாப்பாட்டுக் கடமையை முடித்துவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.
"இல்லய்யா, நீங்க என்ன வேலையில இருக்கீங்களோ தெரியாது. நா பாட்டுக்கு வந்து உங்க வேலைக்கு இடைஞ்சல் செய்யக்

கூடாதுல்ல" என்றான். "ஒண்ணுமில்லடே நீ வா" என்றார் உரிமையுடன் அவன் எழுந்துக் பிட்டத்தில் இருந்த மண்ணைத் துடைத்துவிட்டு தொடர்ந்து நடந்தான்.

"என்ன புஸ்தொகம்டே படிக்கே"

"அது வந்து சித்தர் வாக்கு, பற்றிய பொஸ்தகம் அய்யா. உங்களுக்கு ரொம்ப பிடிக்கும்" அவர் வாங்கிக்கூடப் பார்க்கவில்லை. " சரி... சரி... உள்ளே வாடா" என்று கூப்பிட்டு அழைத்துக்கொண்டுப் போனார். வக்கீலய்யா தலை உயர்த்தி சத்தம் போட்டுச் சிரித்தார். அவர் கையில் பிடித்திருந்த இரும்புகேட் ஆட அதுவும் கிறீச்சிட்டது சிரித்து முடித்துவிட்டு சிறிதுநேரம் மூச்சை உள்வாங்கியபடி சொன்னார்.

"பிச்சைக்காரானுக்கு சித்தர்களைப் பத்தித் தெரிய வேண்டியது தான் பாக்கி"

"என்னய்யா தப்பு. சித்தர்கள் எல்லாருமே பிச்சை எடுத்துதானே வாழ்ந்திருக்காங்க. பிச்சையெடுத்தாதான்யா சித்தன் ஆகமுடியும்?" என்றான் சோத்துப் பெட்டி.

முன்னால் போய்க்கொண்டிருந்த வக்கீல் நின்று திரும்பினார். அவன் இடுப்பில் துண்டைக் கட்டியபடி நடந்து வருவது கண்டு தனக்குள் மகிழந்து கொண்டார்.

"எந்த சித்தன்டா பிச்சை எடுத்திருக்கான்?"

"அய்யா பட்டினத்தார், பத்திரிகிரியார் கதையைப் படிச்சது இல்லியா அவுங்க பெரிய வியாபாரியா, மன்னரா இருந்தாலும் சித்தனான பிறகு பிச்சை எடுத்துத்தானே வாழ்ந்தாங்க."

அய்யாக்கண்ணு சார் மௌனமானார். சோத்துப்பெட்டி கொஞ்சம் இடைவெளிவிட்டு மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"அய்யா பிச்சை எடுத்தா மட்டும் போறாது எப்புடி பிச்சை எடுக்கணும் சொல்றவரே பட்டினத்தார்தான். எச்சி சோத்தை திங்கிறோம்னு கேவலமாய் பேசாதே. எச்சில் என்னவென்று உற்றுப் பார். நீ பொறந்தது புரியும்னு ஒரு பாட்டுல சொல்றாரு சார்" என்னப்பா சொல்லுதே..? என்றார் வக்கீல்.

"எச்சிலை உற்றுப் பார்த்தால் அது மனிதன் பிறக்கும் காரணமாக இருக்கும் விந்துவைப் போலானது. அந்த எச்சிலை அனுப்பி அதன் மூலம்தான் மனிதனே பிறக்கிறான். ஆண் எச்சிலை பெண் வாங்காமல் பிள்ளை எப்படிய்யா பிறக்கும்." என்றான்.

"சரிதானே" என்று தலையாட்டினார் வழக்கறிஞர்.

பத்திரகிரியார் அரண்மனை, நாடு நகரம் எல்லாத்தையும் விட்டுவிட்டு வந்து பட்டினத்தாரைப் போய்ப் பார்த்தார். அவுரு பிச்சை எடுத்தாத்தான் சித்தனாக முடியும்னார். ஒரு திருவோட்டுல பிச்சை

எடுத்து சாப்புட்டார். அவரோட மீதி சாப்பாட்டை நாய் ஒண்ணு சாப்பிட்டு அவரோடு ரொம்ப ஐக்கியமாயிருந்தது. பத்திரிகிரயார் போயி பட்டினத்தாரைப் பாத்தார். பட்டினத்தார் என்ன சொன்னார் தெரியுமா. திருவோடும், சேர்ந்திருக்கும் நாயும் உன்னோடு இருப்பதால் நீ சித்தன் இல்லை. சம்சாரின்னார்.

உடனே பத்ரகிரியார் என்ன பண்ணுனார் தெரியுமா. திருவோட்டை வீசினார். அது நாயோட தலையில் பட்டு நாய் செத்துப் போச்சு. அதுக்கு பொறவு பத்திரிகிரியார் தெருவில் கையால பிச்சை வாங்கி சாப்பிட்டார் அதன்பிறகுதான் பட்டினத்தார், அவரை சீடராக ஏத்துக்கிட்டார்.

அதன் பிறகு பத்ரகிரியார் பட்டணத்தாரின் சீடராக இருந்து உயர்ந்த ஞானம் பெற்றார். பத்ரகிரியார் புலம்பல்னு அருமையான ஞானக்கண்ணிகள் எழுதினாரு அவருடைய கடைசி காலத்துல பத்ரகிரியாருக்கு மோட்ச வாசல் திறந்துச்சி. அந்த நாய்தான் மன்னன் காசிராஜனின் மகளான இளவரசி. வானத்திலிருந்து இறங்கிவந்து அவர அழைச்சிக்கிட்டு விண்ணகம் ஏகினாள் என்று சொல்றாங்க"

"அந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியும். பத்ரகிரியார் புலம்பல் படிச்சிருக்கியா. ஐம்புலன சுட்டெரிக்கணும், ஆறு ஆதாரம் நடக்கணும், மும்மலத்த நீக்கணும், ஆசைவலை அறுக்கணும், சதுர்மறை பொய்யாக்கணும், ஆறும் ஆறும் அகன்று அதாவது முப்பத்தாறு தத்துவங்களும் அகன்று ஆணவமலத்தை நீக்கி வாழணும்பார், பத்திரகிரியார் படிச்சிருக்கியா சோத்துப் பெட்டி"

"ஆமாய்யா? அவருக்கும் எப்படி பிச்சை எடுக்கணும்னு சொல்லிக் கொடுத்தவர் பட்டினத்தார். சித்தர்னா, பேய்போல் திரியணும், பிணம் போல் கிடக்கணும், நாய் போல பிச்சையை திங்கணும், தாயாகப் பெண்களைக் கருதணும். சேய் போல இருக்கணும்பார். நாய் போல் இட்டபிச்சையை திங்கணும்கிறார். இதையே தனி புலம்பல்னும் பாடுகிறார் பத்திரகிரியார். வக்கிலய்யா பிச்சை எடுக்குறதுக்கு உள்ள விளக்கத்தையே பட்டினத்தார்தான் சொல்றாரய்யா"

"என்னலே அப்படி சொல்றாரு. பிச்சைக்கும் டெபனிசனா..?"

"பிச்சை யெடுக்கிறவன் கையிலதான எடுக்கணும், அப்படியே சாப்பிடணும், தையல் இல்லாத துணிதான் உடுத்தணும்கிறார். ஒரு பாட்டுல.. கையால் ஏற்று, அங்ஙணமே தின்று, கரித்துணியைத் தையாது உடுத்தி...ன்னு பாடுகிறார்." என்றான் நிறைகுளத்தான் என்ற சோத்துப்பெட்டி.

"எப்படிடா.. இதையெல்லாம் ஞாபகம் வச்சிருக்கே..! சரி. ஏண்டா மொட்டையடிச்சிருக்கியே எந்தக் கோவிலுக்குடாபோயி வந்தே..."

"அதெச் சொல்லத்தான்யா வந்தேன். நீங்கதான் சித்தர் அது இதுன்னு

பேச ஆரம்பிச்சிட்டீங்க... அப்பா இறந்து போய்ட்டார்யா.. அன்னிக்கி பாத்து பஸ்ஸ்டாண்டுல படுத்துக்கெடந்தேன். சொந்தக்காரங்க வந்து கார் போட்டு கூட்டிட்டு போனாங்க. அப்பாவுக்கு நான்தான். கொடம் உடைச்சி கொள்ளி வச்சேன். அதைத்தான் சொல்லிட்டு போகலாம்னு வந்தேன்ய்யா"

"ஏண்டா.. உடம்பு சரியில்லாம இருந்தாரா.." "இல்லைய்யா நல்லாதான் இருந்தாராம் திடீர்னு எறந்து போயிருக்கார் சடன் அட்டாக் வந்திருக்கு. அப்படியே நெஞ்ச பிடிச்சிட்டு இறந்து போய்ட்டாராம். நல்ல உசிரு டக்குன்னு போயிட்டுது. கருமாதி காரியங்கள் எல்லாம் முடிச்சிட்டுதான் வந்தேன்.

"அது சரிடா. சொத்துபத்தெல்லாம் அவருக்கு உண்டேடா.."

"இல்லய்யா எல்லாத்தையும் வித்து தின்னுபோட்டாராம். பெரிய பண்ணை வீடு மட்டும் இருக்கு. ஊர்ல இருக்கிற பெரிய மனுசரெல்லாம் வந்து என்ன பண்ணப் போறேன்னு கேட்டாங்க. எம் பொஞ்சாதி கால்ல உளுந்து கதறுனா. சே. அவெ என் பொஞ்சாதியா இல்லே... எங்கப்பா பொஞ்சாதி... சின்னம்மாவே அந்த பண்ண ஊட்டுல இருக்கட்டும்னு சொல்லிட்டு வந்துட்டேன். இனி எதுக்குய்யா எனக்கு ஊடு அவளாவது வாழ்ந்துட்டு போவட்டும்"

வக்கீலய்யா அவனை மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் பட்டினத்தாரா போறேனா, பாம்பாட்டிச்சித்தர போறேனா யாரு கண்டா?"

அய்யாக்கண்ணு வக்கீல் கண்களில் முதன்முறையா நீர்திரண்டதை அவன் பார்த்தான்.

"ஒண்ணுமில்லய்யா அதெ வுடுங்க"

"சரிடா.. சொல்லு"?

"எனக்கொரு ஒரு சந்தேகம் பத்திரிக்கிரியார் பத்தி கேக்கட்டா,"

"உனக்கே சந்தேகமால கேளுடே" என்றார்.

"இல்லய்யா, அரண்மனை, அந்தஸ்து, ஆள் அம்பு சேனை எல்லாத்தையும் வுட்டுட்டு சித்தராகி மும்மலம் அடக்கி, ஐம்புலனை சுட்டெரித்து ஞான நிலையடைந்த பத்திரதிரியார், மோட்சம் பெறும்போது, ஏன்யா மன்னன் மகளோடு சேர்ந்து மோட்சம் போனார்.. அப்போம் அவுரு இங்கே சித்தனா, துறவியா எல்லாத்தையும் விட்டுவிட்டு இருக்கணும் மேல்லோகத்துல பொம்பளை ஆள் அம்பு சேனையோடு வாழ்றதுக்குதானே. இங்கே ஆசை வெறுத்திட்ட சித்தன் அங்கே எப்படி பெண்ணோடும் பொன்னோடும் வாழமுடியும்யா... எனக்கு புரியலைய்யா... நா சொல்றது சரியாய்யா..? பெண்ணாசை அவரையும் விடலயா.?"

இப்படி ஒரு கேள்வியை சோத்துப்பெட்டி கேப்பானென்று அய்யாக்கண்ணு வக்கீல் எதிர்பாக்கவில்லை.
அவர் எதுவும் பதில் சொல்லாமல் யோசனையில் இருந்தார்.
"எனக்கொண்ணு தோணுதையா.. பத்திரகிரியார் அரசனா இருந்து அதெ வுட்டுட்டு, துறவியாகி, சித்தனானதால் இப்படி கதெ எழுதி வச்சிருப்பாங்களோ?"
"சே.. சே... அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. பெரியவங்க சரியாத்தான் எழுதி வச்சிருப்பாங்க. நாம அதெ தெளிவா படிச்சி புரிஞ்சிக்கிடணும். எங்க சீனியர் முதல்தகவல் அறிக்கையை முப்பது தடவ என்னா முன்னூறு தடவெ படிக்கணும்னு சொல்வாரு. அது மாதிரி திரும்பத் திரும்பப் படிச்சா உண்மையான விளக்கம் என்னன்னு தெரியும்"
"ஒருவேளை மோட்சத்துல எல்லாரும் எல்லா வகையிலும் இன்பமா இருப்பாங்களோ சிலப்பதிகாரத்துலயும் கண்ணகியும் கோவலனும் வானூர்தி ஏறிப் போனாங்கன்னுதான் சொல்லப்பட்டிருக்கு. யாரு கண்டா...”
வக்கீல்சார் அவன் பேசுவதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு சட்டைபையிலிருந்து அய்ம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார். "அம்மா ஊருக்கு போயிருக்கு நீ ஏதாவது கடையில் நல்லா சாப்புடு" என்றார்.
"சரிய்யா.. நா கேட்டதுக்கு பதில் சொல்லலியே?" என்றான்.
"போடா.. நீ போய்ட்டு வா. எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல. யோசிச்சி சொல்றேன்" என்றவர் மீண்டும் அமைதியாக அமர்ந்து தனக்கு முன்னால் ஆடிக்கொண்டிருந்த மயிற்கொன்றை செடிகளில் காய்ந்துக் கிடந்த மஞ்சள் பழங்களைப் பார்த்தபடி இருந்தார்.
அவன் தனது நீண்ட பையை தூக்கிக் கொண்டு எப்போதும் போல தார்ச்சாலையில் இலக்கற்று நடந்து போனான் எங்காவது ஒரு கலியாண மண்டபத்தின் பாட்டொலி கேட்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

## அத்தியாயம் -09

நெல்லை நகரம்

முத்தாச்சி மனம் காலையிலேயே கூம்பிப் போய்விட்டது. எதைக்குறித்தும் வெறுப்புத் தட்டியதுபோல இருந்தது. எழுந்து பாயைச் சுருட்டக்கூட மனமில்லை. அந்தக் கிழிந்த பாயின் முனைகளில் கையை ஊன்றியிருந்தாள். அது முள்போலக் குத்திக் கொண்டிருந்தது. கையைத் தூக்கிப் பார்த்தாள். உள்ளங்கையில் வரை போலப் பள்ளம் பதிந்திருந்தது. அப்படியே உள்ளே சிவந்திருந்தது.
இன்று எங்கே செல்லவேண்டும் என்று தோன்றவேயில்லை. ஒரு நாளைக்கு உடலை முறித்துப் போட்டால்தான் சரியாய் வரும் என்பது போல இருந்தது. மீண்டும் படுக்கையில் சரிந்து கண்களைப் பொத்தியபடி படுத்துக் கிடந்தாள்.
முத்தாச்சியின் மகன் காலையிலேயே எழுந்து முகம் அலம்பிவிட்டு, பைப்பில் தண்ணீர் குடித்துவிட்டு நடைபயிற்சிக்குப் போவான். தினசரிக் கடமைகளில் மிகவும் தெளிவா இருப்பான் குட்டித்துரை முத்தாச்சியை எதிர்பாராமல் அவன் செய்யும் உதவியான காரியங்களால் அவளுக்கு பேரானந்தம் பிறக்கும்.
அப்படியே பிளாஸ்டிக் குடத்தை எடுத்து பைப்படியில் தண்ணீர் பிடித்து தலையில் வைத்துக்கொண்டு வந்து, சரியான இடத்தில் வைத்துவிடுவான். அண்டாவிலும் இரண்டு மூன்று குடங்கள் ஊற்றி நிறைத்து பிரம்பு மூடியைப் போட்டு மூடிவைத்துவிடுவான். சரியாக மூடிவைத்துவிட வேண்டுமென்று எப்படி மகனுக்குத் தோன்றுகிறது என்று அதிசயித்து கொள்வாள் முத்தாச்சி.
எல்லா வேலையும் செய்து முடித்துவிட்ட திருப்தியில் அம்மாவின் கையைத் தொட்டது போல அவள் கன்னத்தில் "பச்" சென்று சத்தமிட்டு முத்தமும் கொடுத்து வைப்பான். முத்தாச்சி எதிர்பாரா வேளைகளில் கிடைக்கும் அந்த குட்டித்துரையின் முத்தங்களால் அன்றைய நாள் முழுவதும் பிரகாசமாகி விடுவாள். வேறு எதற்காகவும், வாழ்வதைவிட தன் மகன் குட்டித்துரைக்காக வாழ்வது ஒன்றே போதுமென்றிருக்கும் அந்தக் கணங்களில். அதன்பின்பு தன்மகனைக் கட்டி அணைத்துக் கொண்டு கொடுக்கும் அனைத்து முத்தங்களையும் பல்தெரியச் சிரித்தபடி ஏற்றுக்கொள்வான் குட்டித்துரை.
முத்தாச்சி மெதுவாக எழுந்து உட்கார்ந்து கண் விழித்துப் பார்த்தாள். மகனைக் காணவில்லை. எழுந்து முகம் கைகால் கழுவச் சென்றிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டாள். குட்டித்துரை

வீட்டைச்சுற்றி நடமாடுகையில் அலாரமணிக்கம்பியினை எடுத்துக் கொள்வதில்லை.
முத்தாச்சி என்றுமில்லாதபடி படுத்திருப்பதை சுருட்டப்படாத பாயின் முனைகளைத் தொட்டு அறிந்து கொண்டான். மெதுவாக "அம்மா" என்றான் அவள் ஈனஸ்வரத்தில்" என்னடா, மூஞ்சிய கழுவிட்டு வந்துட்டியா" என்றாள்.
"ஏம்மா படுத்திருக்கே" என்ற அவனது கேள்விக்கு முத்தாச்சி பதிலளிக்கவில்லை. மெதுவாக அவளருகில் நகர்ந்து அவளின் உடலில் கைவைத்துப் பார்த்தான். காய்ச்சல் என்று சொல்வதற்குரிய உஷ்ணமில்லை. எப்போதும் போலிருந்தது.
மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான். "பின்ன ஏம்மா படுத்திருக்கே" அவள் தனது எரிச்சல் குறித்து சொன்னாள். ஏதோ அடித்துப் போட்டாற் போல உடம்பெல்லாம் அசதியாக இருக்கு என்று சொன்னாள். அவன் ஒன்றும் சொல்லாமல் திரும்பி உட்கார்ந்திருந்தான். மோட்டுவளையை நோக்கியபடி அவன் கண்கள் நிலைகுத்தி நின்றன.
வீட்டுக்கு வெளியே நின்ற தங்கரளி மரத்திலிருந்துக் கொண்டைக்குருவி விட்டுவிட்டு கத்திக் கொண்டிருந்தது. ஜோடியாக இரண்டு குருவிகள் அந்த கிளைகளுக்குள் பறப்பதும் அமர்வதுமாக இருந்தன. அவைகளின் சன்னமான குரல்கள் அவளை இன்னும் ஏன் தூங்குகிறாய் என்பது போல உணர்த்தியது.
இனி படுத்திருப்பது சரியல்ல என்று எண்ணிக்கொண்டு எழுந்தாள். அவள் கன்னங்களில் கோரையின் வரிகள் இருந்தன. தடவி விட்டபடியே எதுவும் பேசாமல் இருந்தாள்.
"அம்மா.. வா.. நெல்லையப்பர் கோவிலுக்குப் போயிட்டு வருவோம்" என்றான் குட்டித்துரை. எதிர்ப்புறமாகத் திரும்பி தன்மகனைப் பார்த்தாள். அவன் காதுகளைத் தங்கரளிச் செடிக்கு நேராக வைத்துக்கொண்டு கொண்டைலாத்தியின் குரலைக் கேட்டபடி இருந்தான். அவன் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்திருந்தது. "சரி போகலாம்பா மொவனே" என்றாள் முத்தாச்சி, கொஞ்சம் உற்சாகத்துடன்.
பேசாத மகன் பேசுகிற கணத்தில் எல்லா சோகங்களும் உரிந்து எல்லா மகிழ்ச்சிகளும் இதழ்களாக விரிந்து கொள்கின்றன. அப்படியான ஒரு தருணமாக குட்டித்துரை கோவிலுக்கு அழைத்ததை உணர்ந்தாள், முத்தாச்சி. சேலையை இடுப்பில் சொறுகிக்கொண்டு, வேலைகளைச் செய்தாள். குட்டித்துரையும் வேகமாகக் கிளம்பியபடி இருந்தான். அவனாகக் குளித்து, உடைமாற்றிப் புறப்படும் அனைத்துச் செயல்களையும் செய்து முடித்துத் தயாரானான்.

இருவரும் நெல்லையப்பர் கோவிலுக்கு வரும்போது பத்து மணி ஆகியிருந்தது. பேருந்தை விட்டு இறங்கி முகப்பு மண்டபத்தின் குளுமையை உணர்ந்தபடி நெல்லையப்பர் கோவிலை ஏறிட்டாள் முத்தாச்சி.

நெல்லையப்பர் கோவில் முன்முகப்பு மிகவும் அழகானது. அதன் மரத்திலானான வேலைப்பாடுகள் அமைந்த மரவிதானம் வலைப்பின்னல் வடிவத்தில் அரக்கு நிறத்தில் அழகாக இருக்கும். அதன் ஒவ்வொரு தூணிலும் ஒரு அழகானசிலை கும்பிட்டுக் கொண்டே, ஆடிக்கொண்டே., காலை உயர்த்தியபடியோ, முத்துமாலைகளைச் சூடியபடியோ இருக்கும்.

முத்தாச்சியும் அவள்மகனும் நெல்லையப்பர் முன் முகப்பிற்கு வரும்போது கோவிலுக்குள் ஏதோ வைபவம் நடந்தபடி இருந்தது. நாதஸ்வரம் தவிலும் மருதமலை ஆண்டவனைப் பாடிப் பரவசப்படுத்தியது. ஒவ்வொரு தூணிலும், வராந்தாவிலும் தூணிற்கு கீழ் ஒருவர் அமர்ந்திருந்தார். நீண்ட ஜடாமுடியும், உத்திராட்சை மாலைகளும், சடையான தாடியும, தொங்கி வழியும் மீசையுமாய் அமர்ந்திருந்தார். அவரருகில் இருந்த திருவோட்டில் பவழங்களும், பலவகையான சாமிக்காசுகளும், குங்குமச் சிமிழும், காசுகளுமாக இறைந்துகிடந்தன.

மொட்டையடித்து ரெண்டு மாதமாகி குத்திக் கொண்டு நிற்கும் முடியோடு அமர்ந்திருந்த பெண்மணி வாயில் எதையோ மென்றபடி தலையில் விரல்விட்டுச் சொறிந்து நீவியபடி இருந்தாள். அவளது முன்னால் ஒரு துண்டை விரித்திருந்தாள். காசுகளோடு ரெண்டு பூக்களும் கிடந்தன.

பிச்சையெடுக்க முதல்தகுதி அழுக்காகவும் கறுப்பாகவும் மாறிவிடுவதுதான். சில மனநோயாளிகள் கறுப்பு கிரீஸை உடல் உடை முழுவதும் தடவிக் கொள்கிறார்கள்.

அப்படித்தான் காலைத்தூக்கி வைத்தபடி, கறுப்பு வேஷ்டியை தொடைவரை திறந்து வைத்துக் கொண்டு சடைகளோடு பரட்டைதலையோடு சிலை போல அமர்ந்திருக்கிறான் பிச்சைக்காரன். பிச்சையெடுக்க ஆரம்பித்துவிட்டவுடன்

கொஞ்சம் கொஞ்சமாகப் பேச்சற்று ஊமையாகிவிடுகிறான். சிலைபோல அமர்வதால் அவனுக்கு அதிகம் பசியெடுப்பதில்லை. கிடைத்த உணவை வைத்துக் கொண்டு நாளை கடத்திவிட முடியும். குளிப்பு என்பது சிலைகளுக்குத் தேவையில்லைதானே. அதைப்போல அவனும் எந்தத் தேவையுமின்றி, செலவுமின்றி வாழமுடிகிறது.

முத்தாச்சி வடக்கோரத் தூணுக்கருகில் உட்காரலாம் என முடிவு

செய்தாள். போகிறவர்களைவிட, சாமிகும்பிட்டுவிட்டு வருபவர்களை ஈர்க்கும் இடம். மனம் கசிய சாமிக் கும்பிட்டுவிட்டு திரும்பும் பக்தர்கள் மனதில் பிச்சைக்காரர்களுக்குக் கொடுப்பது என்பது இயல்பாகவே ஏற்படும் குணம். அதிலும் கண்தெரியாத குட்டித்துரையைப் பார்ப்பவர்கள் அவனுக்கு ஏதாவது கொடுக்காமல் தாண்டிச் செல்ல விரும்பமாட்டார்கள். முத்தாச்சி மிகத் தெளிவாகத் தேர்ந்தெடுத்த இடமாக அந்த இடம் இருந்தது.

கண்களை மேலே உயர்த்தியபடி அமர்ந்திருக்கும் அவனது பூவிழுந்த கண்கள் யாரையும் இரக்கப்பட செய்து கிராமத்து விவசாயிகளைக் கூட பச்சைப் பெல்ட்டுகளைத் திறக்க வைத்து விடும். கோவிலிலும்தான் கூட்டம் அதிகமாக இருந்தது. எல்லோரும் குட்டித்துரை மீது இரக்கப்பட்டுப் பிச்சைபோட்டபடி போய்க்
கொண்டிருந்தார்கள். காசுப்பையும் நிரம்பி முத்தாச்சியின் சுருக்குப்பையும் நிரம்பியது.

மகனின் சொல் முத்தாச்சிக்குத் தீர்க்கதரிசனமாகப் பட்டது. முத்தாச்சியின் மனம் குட்டித்துரைக்கு மிகச் சிறந்த எதிர்காலம் இருக்கும் எனும் நம்பிக்கையைக் கொடுத்தது. எப்போதும் அவனைப் புகழ்ந்துப் பேசியபடி இருக்கும் அவளுக்கு, இன்றைய வசூல் பல வாரங்களுக்குப் போதும் எனும் போது எல்லோரிடமும் குட்டித்துரையின் தீர்க்கத் தரிசனத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கக்கூடும். சாமி கும்பிட்டுவிட்டு நெற்றிநிறைய திருநீறுடன் வந்தவன் கைகளுக்குள் மடக்கி வைத்திருந்த திருநீற்றை கல்தூணில் இருக்கும் பெண் சிலையின் கைகளுக்குள் தட்டினான். அப்படியே திருநீற்று வாசம் எழுந்து பரவியதுபோல இருந்தது. மெதுவாக தவில்மட்டும் கேட்டது.

மதியம் கோவிலின் தென்புற மண்டபத்தில் அன்னதானம் டோக்கன் பெற்றவர்களுக்கு வழங்கப்படுகிறது. சோத்துப் பெட்டியின் கால்கள் காலையில் சரியாக உணவு கிடைக்காவிட்டால் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்துவிடும். மதியம் வழங்கப்படும் டோக்கன் சாப்பாட்டை முழுவதும் தின்றுத் தீர்க்கிறவர்களில் சோத்துப் பெட்டி மிகவும் முக்கியமானவன். சாப்பாடு மட்டும் கிடைத்துவிட்டால் போதும், அன்றைய தினத்தில் அனைத்து கும்மாளங்களும் அவனிடம் வந்து சேர்ந்துவிடும்.

முத்தாச்சி சரியான நேரத்திற்கு கோயில் அதிகாரி அறையில் தனது மகனுக்கும் சேர்த்து இரண்டு டோக்கன்கள் பெற்று வந்தாள்.

சரியான நேரத்தில் அவளுக்குச் சோற்று உருண்டையும், கூட்டும் கிடைத்துவிட்டன. தானும், மகனும் சாப்பிட்ட பின்னும் ஒரு உருண்டை மீதம் இருந்தது. சுற்றி முற்றும் பார்த்துவிட்டுச் சிலைபோல்

சமைந்திருக்கும் அந்தக் கறுத்த மனநோயாளியிடம் கொண்டுபோய் கொடுத்தாள்.
அவன் முத்தாச்சியைச் சிறிது நேரம் ஏற இறங்கப் பார்த்தான். முத்தாச்சிக்குப் பயம் பிடித்துக் கொண்டது. கண்களால் உறுத்துப் பார்த்த அந்தத் தீவிரப் பார்வைச் சட்டென மாறி ஈறுகள் தெரிய பல்லைக் காட்டி இளித்தான். அந்த வெள்ளைப் பற்களில் எந்தக் கறையுமில்லை. மெதுவாகக் கையை நீட்டி பொட்டலத்தை வாங்கி தன்னருகில் வைத்துக் கொண்டான்.
முத்தாச்சிக்கு அவன் சாப்பாட்டிற்காகச் சாப்பிடுபவன் அல்ல என்று தோன்றியது. கலியாண மண்டபங்களிலும். மற்ற சாப்பாட்டு இடங்களிலும் பந்திக்கு அலைமோதி அலையும் மக்களிடமிருந்து ஏன் இவன் வாழ்க்கை சிலை போல இருக்கிறது?
அந்த கேள்விகளுக்கு முத்தாச்சிக்கு மட்டுமல்ல யாருக்குத்தான் விடை தெரியப் போகிறது. கேள்விகளால் உலகத்தை மனிதன் யூகிக்க முயல்கிறான். அது பதிலற்ற பிம்பங்களாய் அங்கேயே நின்று கொண்டேயிருக்கிறது.
நேரியல் வேஷ்டியும் துண்டுமாய் மணமகன் நெற்றியில் அப்பிய திருநீற்றுடன் வர அவனருகில் கன்னங்களில் சந்தனத்திட்டும், நெற்றி நெறைய திருநீறுமாய் பட்டுப்புடவை சரசரக்க, சரம்சரமாக நீண்டுதொங்கிய பூச்சரத்துடன் மணமகள் அருகில் வரவும், உற்றார் உறவினர்கள் சீதனப்பொருட்களை ஏந்தியபடியும் குளிரும் கல்படியில் நடந்து வந்தார்கள்.
அன்றைய முகூர்த்தம் பல மணமக்களையும் அவரது உறவினர்களையும் அழைத்து வந்து. அன்றைய வசூலில் குட்டித்துரைக்கு கணிசமான தொகை கிடைத்தது. ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் நோட்டுகளும் விழுந்தன. அவற்றைத்தொட்டு அறியும் சூட்சுமம் துரைக்குட்டிக்கு தெரியும்தான் கொஞ்ச நேரம் முத்தாச்சி அவனை ஒட்டிப் படுத்திருந்தாள்.
நடைதிறக்கும் நேரத்திற்கு முன்பாகவே எழுப்பிவிட்டான் குட்டித்துரை, மாலையும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அதுவும் அவனது பாக்கெட்டை நிரப்பியது.
போகும் போது சொன்னான். "ஏம்மா உனக்கு ஒரு சேலையும், வாப்பாக்கு ஒரு சாரமும் புதுசா எடுத்துட்டு போவோமே" ஜவுளிக் கடையில் துணி எடுத்துவிட்டு, அவன் ரூபாய் நோட்டுக்களை தனித்தனியாக அதன்மதிப்பினை அறிந்து பில் தொகையை சரியாக எண்ணிக் கொடுப்பதை அதிசயமாகப் பார்த்தார் கடை உரிமையாளர் பாவநாசம் பிள்ளை.

## அத்தியாயம் -10

திருநெல்வேலி சந்திப்பு

ரயில்வே நிலையம். தொடர் பயணங்களால் பயணிகளின் புத்துணர்ச்சியோடும், புதியதான விரித்த அனுபவங்களோடும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டேயிருக்கும் பகுதி. அதன் பகல் முகம், இரவில் முற்றிலுமாக மாறிவிடுகிறது. அங்குமிங்குமாய் அலைந்தபடி இருக்கும் பயணிகள், ஓடிச் சென்று டிக்கெட் எடுப்பவர்கள் ரயில்களின் வருகைக்காகக் காத்து இருப்பவர்கள், புதிய சுமையைக் காசாக்க காத்திருக்கும் சுமைகூலிகள், வழியனுப்ப வருகிறவர்கள், பிச்சைக்காரர்கள் என எல்லோராலும் நிரம்பி வழிகிறது. பரபரப்பான அதன் முகம் மின்விளக்குகளால் மினுங்கத் தொடங்குகிறது.

ரயிலைப் பிடிக்க வேகத்தோடு ஓடிவரும் மக்களில் சிலர் அந்த அவசரத்திலும் யாராவது ஒரு பிச்சைக்காரனுக்கோ, உடல் ஊனமுள்ளவனுக்கோ ஏதாவது பிச்சை போட்டு போவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். கோவிலின் நடைபாதைகளில் அமைதியோடு வரும் பக்தர்களின் மனதிற்கும் பயணிகளின் மனதிற்கும் பெரிய வேறுபாடு உள்ளதுதான். ஆனாலும் ஏதாவது உதவி செய்யணும் என்று எண்ணுபவர்களால் ரயில் நிலையமும் பேருந்து நிலையங்களும் பிச்சைக்காரர்களின் புகலிடமாகிவிடுகிறது. ஏதோ ஒரு வேலைக்கு, காரியத்திற்காக செல்பவர்கள். இவர்களுக்கு உதவி செய்வதால் அந்தக் காரியம் நடக்கக்கூடும் என நம்புகிறார்கள்.

சூசை திருச்செந்தூருக்கு ரயிலில் போய்விட்டு வருவோம் என்று தக்கரையை அழைத்திருந்தான். ஒன்பதரை ரயிலுக்கு போய்விட்டுச் மாலை அல்லது இரவு ரயிலில் திரும்பிவிடலாம் என்றான்.

தக்கரை சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கு வந்து ரயில் நிலையத்திற்கு வந்துவிட்டான் சூசை வருகையை எதிர்பார்த்தபடி இருந்தான். அவனுக்கு ரயில் நிலையத்தில் பரிச்சயமான பழைய சிநேகித யாசகர்களைத் தேடினான். யாரும் கண்ணில் அகப்படவில்லை.

தக்கரை சந்திப்பு ரயில் நிலையத்திற்கு தொடர்ந்து வரும் காலங்களில் நாதன் புகழ்பெற்ற பிச்சைக்காரனாக இருந்தான். ஒற்றைக்கால் வளைந்திருக்கும் நாதன் ஊன்று கோலுடன் யாரிடம் கை நீட்டினாலும் இல்லையென்று சொல்லமாட்டார்கள். அவன் எல்லோரிடமும் பிச்சை எடுத்து ரெண்டு மூணு புள்ளைகளைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தான். தினமும் அறுநூறு ரூபாய் வரை கிடைக்கும் வரும்படியில் தனக்கு தேவையான ரூ.100ல் ஒரு நாளை ஓட்டிவிட்டு

மீதிப் பணத்தை நல்லவிதமாக உதவி செய்வான். எல்லாப் பிச்சைக்காரர்களுக்கும் மருந்து மாத்திரை, சாப்பிடவில்லையென்றால் சாப்பாடு என எல்லாமும் வாங்கிக் கொடுப்பான். இப்போது நாதன் குறித்து யாரிடமும் கேட்கலாம் என்று பார்த்தால் ஒன்றிரண்டு பேரைத் தவிர யாரும் தெரிந்தவர்களில்லை. என்ன ஆயிருப்பான் என்று என்னவெல்லாமோ அவனைப் பற்றி மனதில் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

தலையில் துணியைக் கட்டிக் கொண்டு உருண்ட முதுகோடு கம்பை ஊன்றியபடி நிற்கும் பொன்னம்மாளை கன்னக் கிழவி என்றால்தான் பிச்சைக்காரர்கள் அனைவருக்கும் தெரியும். நல்ல சிகப்பு கலரில் இருக்கும் பொன்னம்மாக் கிழவி சிறுவயதில் மிக அழகாக இருந்திருப்பாள். வட்டமுகத்தில் அவள் அழகி என்பதற்கான அத்தனை சாயலும் இந்த 55 வயதிலும் அவளிடம் பார்க்கமுடியும். உருண்டைமுகமும், திரண்ட மார்பகங்களும், பருத்த கன்னங்களும் கொண்டவளாய் தான் இருக்கிறாள்.

யாசகத்திற்காக கொஞ்சம் கூன்போட்டு, தலையைக் குனிந்தபடி நிற்கும், அவளது தூக்குச் சட்டிக்குள் காசுகளும், ரூபாய் தாள்களும் எப்போதும் கிடக்கும். இப்போது ரயில்நிலையத்திலும், பேருந்து நிலையம், சாலைக் குமாரசாமி கோவிலில்  இருக்கும் அனைத்துப் பிச்சைக்காரர்களும் அவளோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு வைத்திருப்பார்கள். உதவி செய்வதிலிருந்து ஒன்றாகத் தண்ணீ அடிப்பது வரை அது நீண்டிருக்கும். கலியாண வீட்டுச் சாப்பாடு மிஞ்சிவிட்டாலே, வேறு எங்கும் ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் மொத்தமாகக் கொடுத்தாலோ அவளின் மேற்பார்வையில் எல்லோருக்கும் கொடுப்பாள். அதைவிடவும் அத்தனை பேருடனுமான அவளது தொடர்புக்கு முக்கிய காரணம் அவளது கன்னங்களும், மார்புகளும்தான். பகலில் ஏதாவது காசு போட்டுவிட்டு கன்னத்தைக் கிள்ளிவிட்டுப் போகும் வாடிக்கையாளர்களும், பிச்சைக்காரர்களும் உண்டு. யாராவது அவள் வாழ்க்கையைக் கேட்டால் நீண்ட கதை சொல்வாள். இரவில் எப்போதாவது கட்டிங் போட்டால்  பிள்ளையில்லையென்று அவளே கட்டிவைத்த சக்களத்தி தேவிடியாளைக் கூட்டிக்கிட்டு ஓடிப்போனப் புருஷனை அறுத்துக் கிழிப்பாள்.

கதை சொல்லிக் கொண்டிருக்கும்போது உச்சக் கட்டத்தில் தன் முந்தானையைத் தூக்கி "இதைவிட சூப்பரா எந்தக் கூதிக்கு இருக்கும் நீயே சொல்லு" என்று மார்பகங்களைக் காட்டிப் பேசுவாள். 'இம்புட்டுச் சைஸிருந்தும் விட்டுவிட்டு ஓடிப் போய்ட்டான், என் ஆமக்கன், அதுதான் மண்ணுத் திங்கிறத மனுசன் தின்னுட்டுப் போறான்னு

விட்டுட்டேன்.' எல்லோரும் அவளைக் கன்னக் கிழவி என்றே அழைக்கிறார்கள். அது பொன்னம்மாவைப் பொறுத்து மகிழ்ச்சியான விசயம்தான். அவளிடம் கை மாத்தும், கஞ்சாப் பொட்டல மாற்றும் நடக்கும். ஆனால் ஒரு நாளும் அவள் அதை வைத்துப் பிழைத்தது இல்லை. புதிதாக வந்தப் பிச்சைக்காரர்களை அவள் அடைக்கலம் கொடுத்து இடம் ஒதுக்கிக்கொடுப்பாள். அவள் சொல்லை ஏற்றுக் கொள்ளாதவன் யாரும் இருக்கமாட்டான்.

எதுவும்தெரியாதவள் போல் அவள் கூன்விழுந்து வாங்கும் பிச்சை அவளுக்குப் போதுமானது ஆக இருக்கிறது. அவள் போகும் பிள்ளைகளிடம் பாசமாகக் கேட்பாள். பெற்றோர்கள் காசு கொடுத்துப் பிள்ளைகள் மூலம் அவள் தூக்குச் சட்டிக்கு வந்துவிடும் காசு. இன்னும் கன்னக் கிழவிக்கு இறுமாப்புக் குறையவே இல்லை. அவளைப் போலவே உதவுவாரும் கிடையாது.

மூன்று நாட்களாக எங்கிருந்தோ வந்து வேகவேகமாக த.மு. ரோட்டையும் எல்லா மனிதர்களையும் கடந்துச் சென்றபடியும், எதையோ முணங்கியபடி ஒற்றைக் காலைத்தூக்கி கல்லில் வைத்தபடி ஜெபிக்கும் வின்சி பாக்கியத்தாய்க்கு இவள்தான் சோறு வாங்கிக் கொடுக்கிறாள். ஒரு நேரச் சோறு வின்சியை உளறிக்கொண்டே ஊரையெல்லாம் சுற்ற வைத்துவிடுகிறது. அவளும் ஓடி ஓடி நடந்துவிட்டு கல்லில் கால்வைத்தபடியே ஜெபித்துக் கொண்டிருப்பாள்.

தக்கரைக்கு மிகவும் பிடித்தவன் மாவேல்ராஜ்தான் "மாவேல் எப்படிப்பா இருக்கே," என்றால் சிரித்துக் கொண்டே சொல்வான், "நல்லசாப்பாடு, அனிதா கடை டீ, காலையிலும் சாய்ந்திரமும் மூணு அவுன்ஸ் என நல்லா போய்ட்டு இருக்குண்ணே"இ என்பான்.

மாவேல் மிஞ்சிப்போனால் இரண்டு அடி இரண்டரை அடி உயரம்தான் இருப்பான். கால் இரண்டும் போலியோ வந்து குச்சிபோல இருக்கும். பிள்ளையார் கோவில் வேப்பமர நிழலில் இருப்பவன் அப்படியே தவழ்ந்து போய் தன் கழுத்தில் ரெண்டுக் குச்சிக் கால்களையும் போட்டபடிக் குப்புறப்படுத்துக் கிடப்பான்.

கையில் வைத்திருக்கும் உடுக்கையைத் தட்டியபடி தன் இருப்பைக் காட்டுவான். வயிற்றுக்குள் இருக்கும் தோள் பைக்குள் விழும் காசுகளை லாவகமாக எடுத்துப் போட்டுக்கொள்வான். கூட்டம் அதிகமானால் நடு ரோட்டுக்கு வந்துவிடுவான்.

அவன் படுத்துக்கிடப்பது, இரண்டு இல்லாவிட்டால் மூன்று மணி நேரம். அதற்குள் அவன் தேவைக்கு அதிகமாகச் சேர்ந்துவிடும். பிறகு கால்மேல் கால் போட்டுக் கொண்டுக் கம்பீரமாக மற்றவர்களை வேலை ஏவுவான்.

பெருமா அண்ணன் கூட அவன் கொடுக்கும் காசைக் குனிந்து வாங்குவதாகப் பெருமை பேசுவான். அவன் இருபது வருஷத்திற்கு மேல் இங்கிருக்கிறான். அவன்தான் பிச்கைக்காரர்களில் சீனியர். அவனைப் பார்த்தால் இருபது வயது பையனைப் போல் இருப்பான் அவனது பெருமை பீத்தலும், பீலாக்களும் சந்திப்பு ரயில்நிலையமே கதைகளாகப் பேசும்.

பெருமா அண்ணன் ஒருத்தரே போதும். அவன் வீரப்பிரதாபங்களைச் சொல்வதற்கு பெருமா அண்ணன் பிச்சைக்காரர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவர்தான். அவர்களுக்கு மேஸ்திரி சரக்கு, சாப்பாடு, கை செலவுக்குப் பணம், வட்டிக்குப் பணம் என எல்லாத்துக்குமாக இருப்பவர்.

இரண்டு மணிக்கட்டுகளும் இல்லாத பெருவியாதிக்காரன் யோவான், காலையிலேயே வந்து பெருமாவுக்காகக் காத்திருப்பான். அவனிடம் காசு வாங்கிக் கொண்டு குருவாயூர் வண்டியில் ஏறி எதிராக வரும் அதே குருவாயூர் வண்டியில் சரியாக சண்டிங் அடித்து நான்கு மணிக்கெல்லாம் சந்திப்புக்கு வந்துவிடுவான். எப்படியும் அறுநூறிலிருந்து ஆயிரம் வரைக்கும் தேத்திக்கொள்வான்.

எந்த விரலும், மணிக்கட்டுமில்லாததால், கொடுக்கிறபணத்தை அவன் தனது தோளில் கிடக்கும் தூக்குச் சட்டியில் போடச் சொல்லுவான். நிரம்ப வழியும்போது பணம் அவன் தோள்பைக்கு மாறும் வித்தை மிகவும் நயமாக இருக்கும். இரண்டு முட்டிகளையும் தலைக்கு மேல உயர்த்தி அவன் கேட்கும் பிச்சையைப் பார்த்தாலே எல்லோருக்கும் மனம் கலங்கிவிடும். கலங்க வைத்து காசுப் பார்ப்பதில் பிச்சைக்காரர்கள் எப்போதும் கெட்டிக்காரர்கள்தான். அதிலும் யோவான் ரொம்பவும் கெட்டிக்காரன். இரவில் பெருமாவுடன் சேர்ந்து வீட்டுக்குப் போவான்.

பெருமா அண்ணனுக்கு ரூபாய் கொடுக்கல் வாங்கலில் தினமும் ஐநூறு, ஆயிரம் தேறிடும். அதுபோக எல்லோரிடமும் சேர்த்து ஒரு குவாட்டரை முழுங்கிவிடுவான். பிச்சைக்காரர்களில் உலகத்தில் பெருமா அண்ணன் தன்னை ஹீரோவாக எண்ணிக்கொள்வான்.

சந்திப்பு நிலையக் கோபுரத்திலிருந்து ரெண்டு புறாக்கள் வால்சிறகு வட்டமாக விரிய இறக்கைகளை ஒரே மாதிரி அடித்து அதே வளையத்தில் சென்று திரும்பி தரை இறங்கின.

"ஏ. தக்கரை பேசாம, மனுஜோதி ஆசிரமப் போர்டுக்கு கீழே இருந்துக்கோ. நிழலுக்கு நிழலுமாச்சு. காசுக்குக் காசுமாச்சு. வா.. கூச்சப்படாதே" என்று தக்கரை பிழைத்துக் கொள்ள வழிவகை சொல்வார் பெருமா அண்ணன். தக்கரையால்தான் அங்கு நடக்கும்

கூத்துக்களைத் தாங்க முடியாது. திடீரென்று போலீஸ் வந்துவிரட்டும். ரயில்வேநிலைய வளாகப் பாதையில் படுத்துக் கிடப்பவர்களையும் சுரீரென லத்தியால் அடித்துவிரட்டும். அவனால் தாங்க முடியாது.
வயிற்றிலும், இடுப்பிலும், கையிலுமாகப் பிள்ளைகளை எப்படியோப் பெத்து அதுகளோட திரியும் வெள்ளச்சியும், யாரோடவாவாது ரெண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டுப் படுக்கும் கனகாவும் அடக்கம். எப்போதும் பெருந்தாடிக்குள் பீடியின் கங்கு எரிந்தபடி இருக்கும் காத்தப்பன் காசுகேட்டு இரவில் பிச்சைக்காரர்களை அடித்துத் துவைத்துவிடுவான். பகலில் பெருமாவிடம் அடி வாங்க முடியாது என்று ரயில்வே நிலைய வளாகத்திற்குள் ஒளிந்து கிடக்கும் காத்தப்பன், அந்த வெப்பாளத்தையும் சேர்த்து வைத்து யாரையாவது பின்னி எடுத்து விடுவான். இதையும் சகித்துக் கொண்டுதான் அங்கே வாழ முடியும்.
தக்கரையும், சூசையும் சொகுசுப் பேர்வழிகள். மூர்க்கமாய்ப் பணம் சேர்க்க ஓடுபவர்கள் அல்ல. மூன்று நாள் வசூலில் அந்த வாரத்தை ஓட்டி விடுபவர்கள். செவ்வாய்கிழமை பேராச்சி அம்மன் கோவில், புதன்கிழமை நெல்லையப்பர் கோவில் வெள்ளிக்கிழமை சிந்தாமதார் தர்ஹா இல்லாட்டி முகம்மது அப்பா பள்ளிவாசல் ஏதாவது ஒன்றில் ஞாயிறு அந்தோணியார்கோவில் என வரும் பக்தர்களிடம் பெறுவதைப் பெரும் பாக்கியமாகக் கருதினான் தக்கரை. அது போதும் என்று எண்ணுகிறவன் தக்கரை. அப்படித்தான் இதுவரை ஓடிக் கொண்டிருக்கிறது அமைதியான தக்கரையின் வாழ்க்கை.
இதமான சூழ்நிலையில் வாழ்ந்து பழகியவன் அவன். அதனால் ரயில்வே மற்றும் பேருந்து நிலையங்களிலிருந்து யாரிடமும் எந்தப் பிச்சையும் எடுக்க விடாமல் அவனை நகர்த்திவிடுகிறது.
அவனுக்குத்தெரியாமல் அவனருகில் வந்து அமர்ந்த சூசை, "எண்ணன்னே. ரொம்ப பலத்த யோசனை போல இருக்கு" என்றான். சிரித்துக் கொண்டேப் பதில் சொன்னான் தக்கரை.
"ஆமடே.. ஒரு புதுப் பொண்டாட்டி கட்டலாமான்னுதான்"
"கட்டுங்கண்ணே. உங்களுக் கென்ன குறைச்சல்" என்று உண்மையிலேயே சொன்னான். தென்காசி அரிப்புக்காரத்தெருவில் ஒரு பொண்ணு இருப்பதாகச் சொன்னான்.
"ஏம்லே... எங்க பொண்ணு இருக்கு. எவ வாயெப் பொளப்பான்னு அலையுதே. வாயையும் சூத்தையும் பொத்திக்கிட்டு ஏதோக் கிடைச்சுச்சா.. இன்னைக்கு பொழுது ஓடுச்சான்னு இரி அதெ வுட்டுட்டு சேலை கண்டவுடனே சிலுப்பிக்கிட்டு அலையாதே."
"இல்லண்ணே. சும்மா தமாசுக்குத்தான்"
"ஆமால்லே தமாசு வேண்டிக்கிடக்குல்லே. பழனில்ல நான் இருக்கும்

போது பெரிய தாடி வச்ச குஞ்சான் கிழவர்னு ஒருத்தர் இருந்தார். அவுருக்கு எம்பது வயசுக்கு மேல இருக்கும். எப்பப் பாத்தாலும் வாயில சொலவடையாத்தான் வரும். அவுரு சொல்ற மாரி நரிக்கு நாட்டாமை கொடுத்தால் கெடைக்கு ரெண்டு ஆடு கேக்கும்பார் அது மாதிரி உன்னெப் பேசவுட்டா, கலியாணமும் முடிச்சிவச்சி புள்ளயும் பெத்துக் கொடுத்துருவே போல இருக்கே"

சூசை தலையைச் சொரிந்துக் கொண்டு அமைதியாக இருந்தான். நேரமாக ஆக மூத்திர நெடியின் காரம் கூடிக்கொண்டேயிருந்தது. தக்கரை ரெண்டு தும்மல் போட்டான். அவன் கிளம்பலாம் என்று சைகையில் சொன்னதை சரி என்றான் சூசை. போகும் போது பொன்னம்மாக்கிழவி "எய்யா... நாளைக்கு வாங்க. முகூர்த்த நாள். போடாமப் போவ மாட்டாங்க" என்றாள். அவள் இடது கன்னம் சிவந்திருந்தது. யாரோ கொஞ்ச நேரத்திற்கு முன்பு திருகியிருக்கக் கூடும். பொலிவான முகத்தில் கவலைரேகைகள் படராது என்பதைக் கிழவியின் முகத்தின் மூலம் உணரமுடிகிறது.

இருவரும் சந்திப்புப் பேருந்து நிலையம் நோக்கிப் போனார்கள். இறக்கத்தில் நடப்பது சுகமாக இருக்கிறது. தன் உடலையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போவது போல இருக்கிறது. பேரூந்து நிலைய உள்பாதை முடிந்து திண்டில் ரெண்டுபேர உட்கார்ந்து இருப்பது வரை தெரிகிறது. இன்றுதான் இப்படி தெரிவது போல் இருக்கிறது.

அவனுக்கு, பிச்சைக்காரர்கள் எப்போதும் இறக்கத்திலேயே நடைவண்டியைப் போல எந்தவித உந்து சக்தி இல்லாமல் சொகுசாக நடப்பவர்கள் மூச்சிரைக்க மலையேற வேண்டியது அவசியம் அவர்களுக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. பிறகு எதற்கு வேலை செய்து கஷ்டப்பட வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். கைக்கம்பைத் தார்சாலையில் அடித்தான் அதுவும் அவன் சொல்லை ஒப்புக்கொள்வது போல "டொக்" என்றது. பள்ளத்தை நோக்கி ஓடுகிற மழைத் தண்ணீர் போல வாழ்வதுதான் அவர்கள் பிறப்பும் இறப்புமாக இருக்கிறது.

சந்திப்பு ரயில் நிலையம் பிச்சைக்கு உகந்தது அல்ல என்று இருவருக்கும் தோன்றுகிறது ஆயினும் இருவரும் அது குறித்துப் பேசிக் கொள்ளவில்லை. தனித்தனித் தீவாக வாழவே விரும்புகிறார்கள் பிச்சைக்காரர்கள். தக்கரையும் சூசையும் கூட எவ்வளவு நண்பர்கள் என்றாலும் தனித்து வாழ்வதில் இருக்கும் சுகத்தை அவர்கள் ஒருநாளும் கைவிட்டதில்லை.

அவர்கள் பறவைகள் போலத் தங்கள் உணவை தாங்களே அடைந்து வாழந்து கொள்கிறார்கள். அதைப் பொறுத்து வேறு எந்த நாயிக்கும்

எவ்வித உரிமையும் கிடையாது. தக்கரை தர்காவிற்கும், சூசை லெப்பர் விடுதி செல்வதற்கும் பேருந்து ஏறுவதற்காகப் பிரிந்து சென்றார்கள்.

## அத்தியாயம் -11

பாளையங்கோட்டை

வட்ட வடிவ எவர்சில்வர் அச்சில் பதிக்கப்பட்டிருந்த தேவாலயத்தின் பெயர் வளைவின் திருப்பத்திலேயே தெரிந்தது. நிறைய வயதான பெண்களும், ஒரு சில ஆண்களும் கேட்டின் இருபுறமும் அமர்ந்தி ருந்தார்கள். மெதுவாக எப்போதும் போலக் கெந்தி நடந்தான் சூசை. வட்டவடிவமாக இருக்கும் குளோரிந்தா ஆலயத்திற்கு பல்வேறு ஊர்களிலிருந்தும் ஜெபம் செய்ய பலதரப்பினரும் காரிலும், இருசக்கர வாகனத்திலும் நூற்றுக்கணக்கில் வருகிறார்கள். இரும்புகேட்டை தாண்டி நடைபாதையில் நடந்துபோய் வட்டவடிவமாக இருக்கும் குளோரிந்தா ஆலயத்துக்குப் போய் உட்கார்ந்திருந்தால் போதும். தினமும் 300லிருந்து 500வரை கிடைக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறான்.

சூசைக்கு ஆலயத்தின் வரலாறு தெரியாவிட்டாலும், அங்கு கிடைக்கும் வருமானம் பற்றி கேள்விப்பட்டிருந்தான். 1750 வாக்கில் தஞ்சாவூர் சரபோஜி மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பெண் கோகிலாவை, அவள் கணவன் இறந்தவுடன் சதித்தீயில் போட எத்தனித்தபோது ஆங்கிலேயப் படைத்தளபதி மிடில்டன் குதிரையில் ஏற்றி பாளையங்கோட்டைக்கு அழைத்து வந்ததாகவும், அதன் பிறகு அவள் "குளோரிந்தா" எனக் கிறிஸ்தவத்திற்கு மாறி பல தொண்டுகள் செய்தாள் என்பதும், முதல் பொதுக்கிணறான "பாப்பாத்திக்கிணறு", பள்ளி முதல் சர்ச் கட்டினாள் என்பதும் வரலாறு. அவள் அடங்கியிருக்கும் இந்த ஆலயம் அவள் பெயரால் அமைந்தது. பல பழம் பெரும் கல்லறைகள் அமைந்த ஆலயமும் கூட. அதனாலும் சீர்திருத்தக் கிறிஸ்தவர்களுக்கு இந்த ஆலயத்தின் மேல் வாஞ்சை இருக்கலாம். ஜெபிக்கும் காரியம் நடக்குமென்றும் நம்புகிறார்கள்.

"எப்படியாவது ஒருநாள் போயி அதையும் என்னான்னுப் பாத்திரவேண்டியதுதான்," என்று எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு இன்றுதான் அந்த சமயம் வாய்த்தது.

சூசை ஆலயத்தின் அருகில் சென்றுப் பார்த்தான். ஆலயத்தைச் சுற்றி மரங்களும் கல்லறைகளுமாக இருந்தன. அழகாக குத்துச் செடிகள் வளர்த்து சிமிண்டுகற்களால் அழகாகப் பாதை போட்டிருந்தார்கள். காற்றின் சலசலப்பில் மரங்கள் வளைந்து வளைந்து ஆடியபடி நின்றன.

"தண்ணீ புடிக்கப் போறியா. உள்ள போயி புடிச்சிட்டு வா" உட்கார்ந்திருந்த ஒரு கிழவி சொன்னது. அவன் கையில் காலி

பாட்டிலை வைத்திருந்தது. நல்லதாகப் போயிற்று மெதுவாகக் கேட்டைத் திறந்து உள்ளே போனான். நாலைந்துப் பேர் ஆங்காங்கே கிடந்த இரும்பு சேர்களில் உட்கார்ந்திருந்தார்கள். நெட்டிலிங்க மரத்தின் சருகுகளும் வேப்பமர இலைகளும் தவிர்த்து நடைபாதை சுத்தமாய் இருந்தது. அப்போதைக்கப்போது பெருக்கிச் சுத்தமாக வைத்திருக்கிறார்கள் ஆலயத்தை.

"தண்ணீ எங்க புடிக்கணும்" என்று படித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணிடம் கேட்டான். அந்தப் பெண் எழுந்து நின்று மேற்காகக் கையைக் காட்டினாள். அங்கு தண்ணீர் பைப் இருப்பது தெரிந்தது. உயர்ந்த கோபுரமாய், வட்டவடிவ கூம்பாய், தரையில் பதித்திருக்கும் இரும்புக் கல்லறைப்பாளங்களாய் எங்கும் இருக்கின்றன. அவைகளுக்குள் நுழைந்து தண்ணீர் குழாயில் பிடித்தான்.

அவன் கெந்தி நடந்து கொண்டே எல்லாவற்றையும் பார்த்தபடி சென்றான். அந்த ஆலயத்தை ஒட்டி வட்டமாக ஓலைக்கூரை போட்ட ஷெட்டில் இருந்து, நாலைந்து பேர் வட்டமாய் இருந்தபடி பைபிள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவர் ஒரு வசனத்தை வாசித்து முடித்தவுடன் அடுத்தவர் அடுத்த வசனத்தைப் படித்தார். தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நேர்முழங்காலில் ஒருவர் கர்த்தரிடம் கெஞ்சிக்கொண்டிருக்கிறார். இரண்டு மூன்று பேர்கள் எதிரே அமர்ந்து பெரிய எழுத்து பைபிளில் அமைதியாக வசனம் வாசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருவாலிபப்பெண் நீண்டப் பெரிய கல்லறையில் சாய்ந்தபடிப் பக்கத்தில் புத்தகங்கள் கிடக்க, செல்லில் எதையோப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருப்பதுப் போல தெரிந்தது.

தண்ணீர் பிடித்து விட்டுத் திரும்புகையில் ஆலயத்தின் எதிர்புறமாக முக்காட்டிட்ட பெண்மணி மெழுகுவர்த்தியைக் கொளுத்திக் கொண்டிருந்தாள். ஏற்கனவே நாலைந்து மெழுகு வர்த்திகள் பெரிதும் சிறிதுமாய் எரிந்து கொண்டிருந்தன. எரிந்த வாடையின் மணம் கொஞ்சம் காரமாகவே நாசியை நெருடியபடி இருக்கிறது.

அந்தப் பெண் அமைதியாக மெழுகுத்திரியைப் பத்தவைத்து விட்டு மனதுக்குள் ஜெபித்தபடி நின்றாள். அவள் மன உருக்கத்துடன் முக்காடு இட்டபடி ஜெபித்துக் கொண்டிருந்தாள். அவளது வட்ட முகத்தில் அவள் மன உருக்கத்துடன் பொலிவு ஏறிக்கொண்டேயிருந்தது.

எங்கும் அமைதியாக இருந்தது. ஆலயத்திற்குள் முழங்காலிட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். மௌனமாக சிலுவை முனை கொண்ட இரண்டு குத்து விளக்குகளில் தீபம் எரிந்து கொண்டிருந்தன. வெண்கல

சிலுவை நடுவில் இருக்க பூவேலைப்பாடுகள் கொண்ட பட்டுத்துணிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எல்லோரும் முழங்காலிட்டு ஜெபிக்க வசதியாகச் செவ்வக மெத்தை நீளமாகப் போடப்பட்டிருந்தது. அதில் முழங்காலை ஊன்றி கைப்பிடியில் தலைவைத்து ஜெபித்தபடி இருந்தாள் ஒரு வாலிபப் பெண்.

சிலர் பைபிள் படித்தபடி இருந்தார்கள். மின் விசிறி ஓடும் மெதுவாக சப்தத்துடன் ஒரே இசைவாகக் கேட்டபடி இருந்தது. சூசைக்கு எல்லாமே புதுமையாக அதேநேரத்தில் தங்கள் வணக்க வழிபாட்டைப் போலப் பழைய முறையாகவும் தோன்றியது. அவன் ரோமன் கத்தோலிக்கப் பிரிவைச் சார்ந்தவன். குளோரிந்தா ஆலயம் சீர்திருத்தக் கிறிஸ்தவம் சார்ந்தது. அதில் இப்படி எல்லாம் நடக்குமா என்பது போல திகைத்துக் கொண்டான். அவனும் ஆலயத்தின் முன்னால் நின்றபடி சிலுவைக்குறியிட்டு கண்மூடி ஜெபித்தான்.

ஆலயத்திற்குள் பிரவேசித்துவிடக் கூடாதே என்ற அச்சத்துடன் அமர்ந்திருந்த ஆலயக்காப்பாளர் சூசை ஜெபித்துவிட்டு திரும்பிப் போனதில் மகிழ்ந்து கொண்டார். பெரிய வீட்டு பெண்மணிகளும் தொழில் அதிபர்களும் வரும் இடத்தில் அவன் வந்து விட்டால் நல்லதாகப்படாது என்று எண்ணுவது சகஜம்தான். அதையும் அவன் ஏற்றுக் கொண்டு அந்தப் பொருத்துத்துடன் தான் எங்கும் நடந்து வருகிறான்.

"சீ.... போ... என்று விரட்டுவதற்கு முன்னமேயே, நாம ஒதுங்கிக்கிறது ரொம்ப நல்லது" என்பது அவனின் கொள்கை. இதையும் அவனிடம் ஒரு லெப்பர்தான் சொல்லிக் கொடுத்தார். அவருக்கு நாசரேத் பெருநோய் டாக்டரை நன்றாகத் தெரியும். எத்தனையோ பேரை அவர் காப்பகத்தில் கொண்டு போய் சேர்த்திருக்கிறார். அவருக்கு இந்த வட்டாரத்துல தெரியாத ஆளே கிடையாது ஆனாலும் தன் உடல் நிலை அனுசரித்துதான் நடந்து கொள்வார்.

சூசைக்கும் அதே குணம்தான் யாருக்கும் எந்த உபத்திரவமும் கொடுக்கக் கூடாது என்பதுதான். ஆனாலும் பெருவியாதிக்காரன் எவனும் பல கசப்பான அவமானங்களும், துயரங்களையும் சந்தித்துதான் ஆக வேண்டும். ஒவ்வொருப் பெருவியாதிக்காரனையும் மனிதக் கழிவு போலப் பார்க்கும் துயரம் இன்னும் தீரவில்லை. பொதுவிடங்களில் அவர்கள் சமத்துவம் கோரவில்லைதான். ஆனால் அவர்களுக்கென்று தனியிடம் ஒதுக்கப்படவேயில்லை. அந்தத்துயரமே அவர்களைக் குடும்பத்தினின்றும் அடித்துத் துரத்தி விடுகிறது. பெற்ற மகனே, பெற்ற மகளே அவர்களைக் கல்லால் எறிந்து அடித்து விரட்டியதால் அவள் மருத்துவமனைக்கு வந்தக்கதையை அவர் சொல்லிக் கேட்டிருக்கிறான்.

வேடன் அம்புபாய இரத்தம் வெளியேறி, இறகுகள் நனைந்து குற்றுயிராக சித்தார்த்தனின் அரண்மணையில் வந்து வீழ்ந்த புறாவைப் போல அவள் இருந்தாளாம், பெருந்தேவதைப் போல அழகாக இருந்தாலும் அப்போதுதான் கைவிரல்கள் மடங்கி காது மடல் வீங்கியிருந்தனவாம். நன்றாக மருத்துவம் பார்த்தால் குணமாகிவிடும்தான். ஆனால் அவர்கள் குடும்பப் பெருமைக்கு அது சரியில்லையாம் யாரென்றும் சொல்லாமல் லெப்பர் விடுதியில் வீசியெறிந்துவிட்டு போய்விட்ட அவலம் அவளைப் போல லெப்பர்களுக்கு எப்போதும் ஏற்படுகிற ஒன்றுதான். அதன்பிறகு விரல்கள் அழுக, உதடுகள் வெடிக்கத் தெருவில் வீசப்பட்ட குப்பையைப் போல ஆகிவிடுகிறார்கள்.

சூசை அத்தனைக் கொடுமைகளைக் கண்டவனல்ல. அவனுக்கு சிறுவயதில் சொரசொரப்பானச் சோரியாஸிஸ் எனும் தோல்நோய் இருந்தது. அதனால் அவன் திருமணம் செய்து கொள்ள விருப்பப்படவில்லை. பின்னால் கைவிரல்கள் மடங்கி, சிறுத்துப் புண்ணாகி நீர் வழியத் துவங்குகையில் அவன் மருத்துவமனைக்கு வந்தவன்தான். எப்போதாவது வீட்டுக்குப்போய் அம்மாவைப் பார்த்து வருவான். அம்மா மட்டும் அவன் வீட்டுக்கு வருவதை விரும்பினாள். அப்பா அண்ணன் தம்பி உட்பட யாரும் விரும்பவில்லை. அம்மா காலத்திற்கு அப்புறம் போவதேயில்லை. சிறுவயதில் கடற்கரை மணலில் காலைப் புதைத்துக் கொண்டு அப்படியே நிற்பான். சிறுவனாய் ஓடியாடிய இடங்களில் எல்லாம் ஓடியாடணும் போல இருக்கும். அப்படியே அலைகள் ஓடி ஓடி வருவதைப் பார்த்துக் கொண்டே இருப்பான். அப்படியே ஒரு அலை வேகமாக வந்து அவனைக் கவ்விக் கொண்டு ஓடிவிடாதா என்று ஏங்குவான். அலைகளில் துள்ளிவிடும் மீனைப் பிடிக்கும் ஆலாப் பறவையைப் போல சத்தமிட்டுத் தரித்த ஞாபகங்கள் ஓடிவரும். இமெல்டா சிரித்துக்கொண்டே ஊட்டிய பிறந்தநாள் கேக், இன்னும் அந்த ஊரின் மேட்டுத் தெருவில் விழுந்த மீதம் கிடப்பதாகவே தோன்றுகிறது. அவன் உதட்டில் ஒட்டியிருந்தகிரீமை ஆள்காட்டி விரலால் வழித்து எடுத்த, இமல்டாவின் சிரித்தமுகம் இன்னும் கண் முன்னே நிற்கிறது.

மேலூர், கீழுர் என சண்டை வந்து நாட்டு வெடிகுண்டுகள் வீசியதில் தவறுதலாகப் பட்டு இறந்து போன யாக்கோபு இப்போது இருந்தால் அவனோடு அப்படிப் பேசித் திரியலாம். அவனோடுச் சண்டை போட்டு விட்டு, கடற்கரை மணல் அப்ப வீட்டுக்குப் போய் அடிவாங்கியதெல்லாம் ஞாபகத்திற்கு வருகிறது.

இமெல்டாவை எங்கு கட்டிக் கொடுத்திருப்பார்கள்? எப்படி இருப்பாள்?

வளர்ந்து ஒல்லியாக இருப்பாளா? இல்லை சுருட்டுப் பிடிக்கும் அவள் பாட்டி எல்லேனாவைப் போல குண்டுகுண்டென இருப்பாளா? எண்ணி எண்ணிப் பார்ப்பதில்தான் எத்தனை சுகமிருக்கிறது.

அத்தனையையும் அலைந்து, திரிந்து, நின்றுப் பார்த்துவிட்டு யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் திரும்பி விடுவான். இப்போதெல்லாம் ஊருக்குச் செல்வதே இல்லை. ஊரில் சொல்லிக் கொள்ளும் படியாக யாரும் இல்லை என்றே உணர்கிறான். அவன் நண்பர்கள் எல்லோரும் இப்போது வசதியாக இருக்கிறார்கள். அவர்கள் ஒதுங்கி ஓடுவதைப் பார்க்கையில் ஏதோ இனம் புரியாத வெறுப்பு அவர்கள் மீது கவ்வுகிறது. பின் எதற்கு ஊருக்குப் போக வேண்டும். மனதிற்கு ஆறுதல்தர எந்தத்தடயங்களும் ஊரில் இல்லை. மணல் கம்பெனி கடலையே விலைக்கு வாங்கிவிட்டார்கள் போலத் தெரிகிறது. எல்லாம் காங்கிரீட் கட்டிடங்கள். 'ஒரு குலை நொங்குக்கோ, ஒரு பட்டைப் பயினிக்கோ எட்டு ஊடு தாண்டிப் போகணும்.' எங்கும் மணல் தெருக்கள் காணாமல் கான்கிரீட் தெருக்களாகி விட்டன. எல்லாமே மாறிய பின்பு அவன் எப்படி பழைய மாதிரியே எண்ணிக் கொண்டு இருக்கமுடியும்.

சூசைக்கு ஊரே மறந்துபோய் வெகுநாளாகிவிட்டது. பாளையங்கோட்டையில் அவன் வசிக்கும் தெருவிற்குப் பக்கத்தில் வசிக்கும் பீர்பாத்தும், சலோமி அக்காவும், மாணிக்க நாடார் அவரது பையன்களும் அவனுக்குரிய உறவுகளாய் நேசிக்கிறான். அதையும் தாண்டி தக்கரையும், முத்தாச்சியும் தான் அவனுக்கு பிரியமானவர்கள். அவர்களையும் ஒரு நாளைக்கு குளோரிந்தா சர்ச்சுக்கு அழைச்சிட்டு வரணும் போல ஆசையாக இருந்தது.

தண்ணீர் பாட்டிலோடு வெளியே வந்தவனை சினிமா போஸ்டர் மீது அமர்ந்திருந்த பெண் எதிரே கையைக்காட்டி ரோட்டுக்கு அப்பால் இருக்கும் பள்ளிக்கூட சுவர் அருகே உட்காரச் சொன்னாள். அவனுக்கு சடக்கென்று மூக்கில் ஏறியது கோபம். அப்படியே அவளை முறைத்தபோது, எதிர்திசையில் இருந்த ஒருவர் அவனருகில் வந்து பேசினார் " இல்லப்பா நாங்க இங்க பத்து வருசம், பதினைஞ்சு வருஷம்னு இருக்கோம். பத்து ரூவாக் கிடைச்சாலும் நூறு ரூவாக் கிடைச்சாலும் இங்கதான் கதின்னு கெடக்கோம். நீங்க அப்படியல்ல இன்னிக்கி இங்க இருப்பீங்க. நாளைக்கு காயல்பட்டிணத்தில் இருப்பீங்க. இன்னொரு நாள் திருச்சியில் இருப்பீங்க அதுதான் நீங்க தனியா உங்களுக்கு கிடைக்கிறத பாத்துக்கோங்க. அதுல ஒண்ணும் கேக்க மாட்டோம். என்ன சரியாப்பா" என்று தர்ம நியாயத்தை விளக்குவது போல யாசகம் பெறுவது குறித்து விளக்கினார்.

சூசைக்கும் அது சரிதானே என்று தோன்றியது. அப்படியே

எல்லோருக்கும் எதிர்த்தாற்போல் இருக்கும் பள்ளிகாம்பவுண்டுச் சுவரை ஒட்டிப் போய் இருந்தான். அவன் பக்கத்தில் ஒரு கிழவி காலை நீட்டியபடி தனக்குள் ஏதோ பேசிக் கொண்டேயிருந்தது. அதன் முன்னால் கிடந்த அலுமினியத்தட்டில் நாலைந்து துட்டுக்கள் கிடந்தன. அது எதையும் கவனிக்காமல் பேசியபடியே இருந்தது. அதன் கறுத்தத் தேகமும், அழுக்குச் சேலையும் குளித்துப் பலமாதங்கள் ஆகியிருக்கும் என்பதைச் சொன்னது. இருபக்கமும் அமர்ந்திருந்தப் பெண்கள் எதையோ பேசிக்கொண்டும், ஒன்றிரண்டு பேர் மஞ்சள் சோத்தைத் தின்றபடியும் இருந்தார்கள். குளோரிந்தா ஆலயத்தின் கேட்டுக்கு முன்பாக கொஞ்சம் தள்ளி ரோட்டில் ஒரு எண்கோணத் தகர பிஸ்கட் டப்பா வைக்கப்பட்டிருந்தது. அதில் பல நாணயங்களும் ரூபாய் நோட்டுக்களும் கிடந்தன.

சற்று நேரத்திற்கு முன்பாகப் போட்ட ஒரு இருபது ரூபாய் நோட்டு காற்றில் படபடத்து ஆடிக்கொண்டிருந்தது. இருமருங்கும் நிற்கும் கார்களும் பைக்குகளும் வேப்பமரத்து நிழலில் நின்றன. அவர்களும் அந்த மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார்கள். ஒருசிலர் பெரிய அட்டைகளின் மீது அமர்ந்தபடியும் படுத்தபடியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மணிநேரம் கடந்திருக்கும். காரில் வருபவர்களும், இருசக்கர வாகனத்தில் வருவோரும் அந்த டப்பாவில் ரூபாய் நோட்டுகளை போட்டுவிட்டுப் போனார்கள் டப்பா நிறைந்திருந்தது.

"என்ன எடுக்கட்டுமாடா?" என்று கூவினார் வடக்கே இருந்த திடகாத்திரமான ஒருபிச்சைக்காரர் அவர் டப்பாவை எடுத்து பணத்தை அள்ளி எடுத்து எண்ணிப் பார்த்தார். எழுநூற்றி பன்னீரண்டு ரூபாய். காலையில் ஒரு பதினெட்டு ரூபாய். இரண்டாவதா ஒரு இருபது. இப்பம் பன்னீரண்டு ஆக மொத்தம் ஆளாளுக்கு நாற்பது ரூபாய் ஆனது. எல்லாத்துக்கும் பிரித்து எல்லோரும் சரியென்று தலையாட்ட அவர் மொத்த ரூபாயையும் நாற்பது, நாற்பது ரூபாயாப் பிரித்துக் கொடுத்தார்.

"மூக்கா, வண்டி மலைச்சி இப்பதானே வந்தா. அவளுக்கும் நாற்பது ரூபாயா?" என்றாள் மூக்குத்தி போட்டிருந்த கிழவி.

"கிழவி இந்தா பாரு. நாளைக்கு லேட்டா வந்தா உனக்கும் இந்தக்கதிதான் பாத்துக்கோ. தெனமும் வர்ற ஆளுக்குத்தான் நாம கொடுக்கிறோம். மத்தபடி நீ இப்படி வெட்டி முறிச்சி பேசினா எல்லோமே சீரழிச்சி போயிரும் பாத்துக்கோ.."

அதுக்குள்ளே தெற்கே உக்கர்ந்திருக்கிற எல்லாரும் சேர்ந்து கொண்டு "ஏய் வண்டிமலைச்சி.. நாளைக்கி லேட்டா வந்தா உனக்கு பங்கு கிடையாது, பாத்துக்கோ" என்று கூக்குரலிடடார்கள். ஒருமாதிரி

எல்லோரையும் சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. பிச்சைக்காரர்களைப் பொறுத்தவரை ரொம்ப பொறுமைசாலிகள் மற்றபடி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதோ, இரக்கத்தோடு நடந்துகொள்வதோ கிடையாது. அதேபோல் அவர்களுக்கு மன்னிக்கும் குணமும் குறைவுதான். அவர்கள் சண்டையிடும் போது மூர்க்கமான செந்நாயாக மாறிவிடுகிறார்கள். ஒருவருக்கொருவர் கெட்ட வார்த்தைகளால், வசனங்களால் குதறிக் கிழித்து எறிந்துவிடுவார்கள். சண்டையும் சச்சரவும், கீழ்த்தரமாகப் பேசுவதும்தான் அவர்களை எப்போதும் சேர்த்து வைத்திருக்கிறது. அதுவும் அவர்களுக்கு தேவைப்படும் சக்தியாகத்தான் இருக்கிறது. அதன் ருசியில் லயித்துப் போய் விடுவார்கள் போல.

சூசையின் அருகில் அமர்ந்திருந்த ஊனமுற்றவன் தனது அக்குளுக்குள் அலுமினியக் காலிபரைச் செலுத்தியபடி நடந்து போனான்.

"பேயா.. சீக்கிரம் வந்துரு. இன்னிக்கு நெறையப் பேரு வருவாங்களாம். ஏதோ விஷேஷமாம்" என்றாள் பக்கத்திலிருந்த மூக்குத்திக்காரி.

"ஆமா போறவனையும் போவ உடமாட்டியே. தூக்கி முந்தாணையில் சொருகிக்கோ.." என்றாள் ஒருத்தி.

"ஆமாண்டி.. நாந்தான்டி நேத்தைக்கு ராத்திரி கறுப்பன அப்பிக்கிட்டு கெடந்தேன். என் ஆமக்கன் பாரு கூப்பிடுதேன்" பேச்சுதாண்டிக் கூக்குரலாகி மூக்குத்திக்காரியின் முகமும் கிழிந்தது. எதிர்த்தாற்போல் இருந்த பெரியவர். "ஏய்... பொம்பளையளா.. வாயையும் சூத்தையும் பொத்திக்கிட்டு சும்மா இரிங்க. இல்லே ஒண்ணுமில்லாமத்தான் போவணும் தெரிஞ்சுக்கோ.. முண்டையோ வாயை வச்சிக்கிட்டு சும்மா இருக்கமாட்டாளுவொ. அதுதான் தெருவுல கெடக்காளுவொ" என்றார்.

அந்தக்குரலின் எதிரொலியாக ஒரு செயற்கை மௌனம் நிலவியது அவ்வப்போது ஜெபம் செய்துவிட்டு வெளிவரும் பக்தர்கள் அவர்கள் பிஸ்கட் டப்பாவில் தாராளமாகப் போட்டு விட்டுப் போகிறார்கள். ஒருவர் தலைக்கு பத்துரூபாய் என்று ரெண்டு நூறு ரூபாய் நோட்டுகளைக் கொடுத்துவிட்டுப் போனார்.

மூக்குத்திக்காரி சண்டை போட்ட பெண்மணியிடம் சாப்பாடு என்ன வச்சிருக்கே என்று கேட்டுப் பழைய சோறை வாங்கித் தின்றுக் கொண்டிருந்தாள். அவள் பக்கத்திலிருந்தவன் "இவுளவ ரெண்டு பேரையும் நம்ப முடியாதுடி. கட்டிப்புடிச்சு சண்ட போடுறமாதி இருக்கும் ஆனா நெசத்துக்குமே சண்டை போடுறாள்களாண்டு படைச்சவனுக்குக் கூடதெரியாதுடீ.." என்றாள் பக்கத்து பெண்ணின் குணம் சூசைக்கு பிடித்திருந்தது. அவன் விரித்திருந்த துண்டிலும் ஐம்பது ரூபாய்க்கு மேலே சேர்ந்திருந்தது. தக்கரை இப்போ பாளையங்கோட்டை

கோபாலசாமி கோவிலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கக்கூடும் அவனைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. ஆனாலும் இன்றைக்கு இருந்தால் நூத்தம்பது ரூபாய்க்கு மேல் சேருமே என்று தோன்றியது.

சிலபெண்கள் விரித்துப் படுக்கும் அட்டைகளுடன் வந்து, அதை விரித்துப் படுத்துக் கிடந்தார்கள். அவனும் நல்ல பேப்பரை நிழலில் விரித்துப் படுத்தான். மதியம் சாப்பாட்டிற்கு வண்ணாரப்பேட்டைச் சாலைத்தெருவில் பங்களா ஊட்டுக்காரிக் கொடுக்கும் சாப்பாட்டை வாங்கப் போகலாமா என்று எண்ணியவாறு கண்ணை மூடிப் படுத்திருந்தான்.

திடீரென அவனை எழுப்பி, இந்தாப்பா சோத்து பொட்டலம் என்று ஒருவர் சாப்பாடு கொடுத்துவிட்டுக் காரில் ஏறிப் போனார். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அடுத்த விநாடியே இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது என்றும் தோன்றியது. கேட்டது எல்லாமே கிடைத்து கொண்டேதானே இருக்கிறது.

சூசை மற்றவர்களைப் போல, பிச்சைப் போட்ட காசை எடுத்து, மதிய உணவைப் பார்சலாக வாங்கிச் சாப்பிடும் வழக்கம் கொண்டவனல்ல. எப்படித்தான் அறுவது ரூபாய் கொடுத்துச் சாப்பாட்டை வாங்கிச் சாப்பிடுகிறார்களோ என்று இருக்கும். இரவில் அவன் எங்கும் போய்க் கேட்பதில்லை. அங்கிருக்கும் கடைகளில் இட்லியோ, புரோட்டாவோ, தோசையோ வாங்கிச் சாப்பிடுக்கொள்வான்.

"முத்தாச்சி மாறி ஒரு பொம்பள சாப்பாடு தயார் செய்து கொடுத்து அதைச் சாப்பிட்டால் எப்படியிருக்கும், ஏன்தான் இந்த தக்கரை அண்ணன் முத்தாச்சியெ வெரட்டு வெரட்டுன்னு வெரட்டுதாரோ தெரியல. அவருக்கு முத்தாச்சியை புடிச்சிருக்குதானே. பின்ன என்னா இந்த ஸ்டீபன் லெப்பர பாரு. ஆறு மாசத்துக்கு முன்னாடி எங்கேயோ இருந்து வந்த மரியதாச்சிய எப்படி வச்சிருக்காரு. அவதான் அவருக்கு எல்லாம் நல்லா அழகா சிவப்பா வேற இருக்காளா. அவெதான் அவரு குடும்பி கையில் வச்சிக்கிட்டு ஆட்டிப் படைக்கா சரி. அப்படி ஒருத்தி கிடைச்சாப் போதாதா வாழ்க்கையில வேற என்ன வேண்டிக்கிடக்கு அவள லெப்பருன்னு சொல்லமுடியாது. கையில கொஞ்சம் விரல் பிஞ்சியிருக்கும். மத்தபடி ஆளு செவப்புரெட்டு போலத்தானே இருக்காள். எப்படித்தான் அவளை ஸ்டீபன் லெப்பர் புடிச்சாரே தெரியலை. யோகக்காரரு தாண்டா அவுரு" அவன் சோத்துப்பொட்டலத்தைப் பார்த்தபடியே தனக்குள் பேசிக் கொண்டான்.

எல்லா மனிதர்களைச் சுற்றிலும் கனவுகள் இருந்து

கொண்டேயிருக்கின்றன. அதைப்போலவே பிச்சைக்காரர்கள் என்ன ஊமைகளுக்கும், குருடர்களுக்கும் கனவுகள் இருக்கின்றன. பிச்சைக்காரர்களின் கனவுகள்' மனிதர்களின் கனவுகளிலிருந்து வித்தியாசமானவை. அதைவிடவும் ஆச்சரியமானவை லெப்பர்களின் கனவுகள். சில லெப்பர்களும், பிச்சைக்காரர்களும் அலைந்து கொண்டே இருப்பதற்குக் காரணமும் அவர்களது கனவுகளாகவே இருக்கலாம். தூங்கும் போது மட்டுமல்ல, விழித்திருக்கும்போது கூட அவர்களைக் கனவுகள் ஆக்ரமித்துக் கொள்ளும் பல பிச்சைக்காரர்கள் அந்தக்கனவுகளையும் அதன் நீட்சியாக எதைஎதையோ பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சூசையும் அதற்கு விதிவிலக்கல்ல. நீண்ட நாளாகவே அவன் காணும் கனவுகளுக்கு விளக்கம் தேடித்தான் அலைகிறான். தக்கரை அண்ணன் ஏதாவது சரியாச் சொல்லலாம் ஆனா அவரும் கேலியாப் பேசி சிரித்துக்கிட்டே சரியாப் பதில் சொல்லாமல் போய்விடுவார் சூசைக்குச் சாப்பாடு பொட்டலம் கையில் இருப்பதே மறந்து போனது.

ஸ்டீபன் லெப்பருக்கு மரியதாச்சி செய்து கொடுத்த சப்பாத்திதான் ஞாபகத்திற்கு வந்தது. மாம்பழச் சங்கம் நடந்த மறுநாளில் அவள் அவருக்கு எதிரிலேயே அடுப்புமூட்டிச் சப்பாத்திப் போட்டுக் கொடுத்தது எப்படி என்று தோன்றியது. அடுப்பும் இரும்புக்கல்லும், சட்டாப்பையும் எங்கோ வைத்திருந்தாள். என்றெல்லாம் எண்ணம் வளர்ந்தது. கண்ணைச் சொக்கிக்கொண்டு வந்தது. சட்டென்றுத் தூங்கிய குட்டித் தூக்கத்தில் லெப்பர்கள் எல்லோரும் எங்கேயோ கூடி இருக்க, அவர்களை போலீஸ் வந்து அடித்து விரட்டுவது போலவும், அவனுக்கு பிடரியில் அடி விழுந்தது நொண்டிக்கொண்டு ஓடுவதாகவும் தெரிந்தது. சடக்கென கடைவாயில் நீர்க் கோர்த்துச் சொட்டியதால் திடுக்கென் எழுந்தான். கையிலிருந்த பொட்டலம் மடியில் கிடந்தது.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் தண்ணீரில் முகம்கழுவி வாய்க் கொப்பளித்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தான்.

குஸ்காச் சோறு நன்றாகத்தான் இருந்தது. சாப்பிடும்போதுத் தக்கரைக்கு முத்தாச்சி கொடுத்தப் புளியோதரை ஏனோ நினைவில் வந்து போனது.

## அத்தியாயம் -12

கல்வெட்டாங்குழி

தக்கரைக்கான கைகம்பு எப்போதும் கைக்கம்பாக மட்டும் இருந்ததில்லை.. அவன் கம்பு ஊன்றி நடக்க வேண்டிய அவசியமும் கிடையாது. அவன் கையில் இருக்கும் கம்பு அவனுக்கு நாயை விரட்டுவதற்கு என்றுதான் தெருவாசிகள் நினைத்திருந்தார்கள். ஆனால் அது அவனுடைய உற்சாக நண்பன் போலத்தான் கூட இருந்தது. அவன் சந்தோசமாக இருக்கும்போது அதனைக் காற்றில் சுழற்றிக் கொண்டே நடப்பான். அதன் "விர்விர்" ரென்ற சப்தம் அதன் சிரிப்பாக அவனுக்குத் தெரியும். பலவிதங்களில் அதனை அவன் தரையில் தட்டிக் கொண்டு போகையில் ஒவ்வொரு குணவிசேசத்துடன் அது மாறிவிடுகிறது. தரையின் தன்மை, மேடுபள்ளம் அறிவதோடு நீண்ட அலைச்சலின்போது மேற்கொள்ளும் சீரான தட்டலில் விளையும் இசையை அவன் ரசித்துக் கொண்டே செல்வான். இருட்டில் நண்பனாகவும், இரவில் தன்னருகில் படுத்துக் கொள்ளும் தோழியாகவும் இருக்கிறது. எத்தனைக் கம்புகள் கைமாறினாலும் அத்தனையும் அப்படித்தான். நடந்து கொள்கிறது. இப்போது சேக்கத்தா ஒடித்துச் சீவிக் கொடுத்தச் சீமைக் கருவை கம்பு அத்தனை பளபளப்பாகவும் மென்மையாகவும் அவனோடு நடக்கிறது.
தூரத்தில் ஸ்பீக்கர் பெட்டியிலிருந்து, "தீன்கொடி நாட்டிய தேவா.." என்று பாடிய பாட்டு காற்றில் மிதந்து வந்தது. தர்கா மணலில் பச்சைச் சீரியல் பல்புகளின் வெளிச்சம். யாரோ ஒரு வெளியூர் பணக்காரர் தர்காவில் கந்தூரிச் சோறு ஆக்கிப்போட வந்திருக்கிறார் என்பதைச் சொன்னது. ஒரு டெம்போ டிராவலர் வேனும், மூன்று பெரிய கார்களும் நின்று கொண்டிருந்தன. எல்லாமே சென்னைப் பதிவு வாகனங்கள். பெருந் தனக்காரருக்குப் பூர்வீகம் இந்தப் பக்கமாகத்தான் இருக்கணும். இல்லாவிட்டால் இந்தத் தர்காவிற்கு நேர்ச்சை நேர்ந்து வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அவருக்கு ஏதோ ஒரு நல்ல காரியம் நடந்திருக்கவேண்டும். ஏழை எளியதுகளுக்குச் சாப்பாடுப் போடுகிறேன் என்று நேர்ந்து இருப்பார். அதற்காக உற்றார் சுற்றார் புடைசூழ வந்திருக்கிறார்.
கைக்கம்பை ஊன்றியபடி மெதுவாகவே நடந்தான் தக்கரை. தொப்பி அணிந்த பையன்கள் ஒருவரை ஒருவர் துரத்தியபடி விளையடிக் கொண்டிருந்தார்கள். வண்ண உடைகளில் மிளிர்ந்த சிறுமிகள் சிரித்தபடி நின்றிருந்தார்கள். இரண்டு மூன்று பெண் ஏதோ பேசிச் சிரித்தபடி நின்றிருந்தார்கள். பெரிய ஆட்கள் தர்காவிற்குள்

அரக்கப்பறக்க நடந்தபடி இருந்தார்கள். வந்திருப்பவர் எல்லாரும் நன்றாக வசதியாய் உள்ளார்கள் என்பது அவர்கள் உடைகளில் தெரிந்தது. போன வாரம் இருட்டிக் கிடந்த தர்கா, இன்றைக்கு உயிர்பெற்றது போல இருந்தது. வெளிச்சமும் சப்தமும் மானிட உயிர்களைத் தழைக்கச் செய்து இன்பம் பயப்பன போலும்.

எதையும் கம்மென்று இருந்து உள்வாங்கிக் கொள்ளும் அவனுக்கும் கூட இது பிடித்திருக்கிறது. ஒவ்வொரு கந்தூரி, கொடைவிழா, சப்பரப் பவனி என எல்லா மதப் பண்டிகைகளும் அவனை ஈர்க்கவே செய்கிறது.

தோளில் இருந்து ஒதுக்கிக்கிடந்த ஜோல்னாப் பையைத் தூக்கி சரி செய்து கொண்டான். பை கனத்தது. பையின் மேல்பகுதியில் கைவைத்துப் பார்த்தான். மெத்தென்றிருந்தது. முத்தாச்சி கொடுத்தச் சாப்பாட்டு பொட்டலம் அது.

கொடித்திண்டில் நாலைந்து பேர் அடைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். ஏதாவது ஒரு ஓட்டுப்பிறையில் அமரலாமெனச் சுற்றிலும் தேடிப் பார்த்தான். எல்லாவற்றிலும் ஆட்கள் இருப்பது தெரிந்தது. இன்னும் அதீதக் கூர்மையோடு சுற்றிலும் திரும்பி அமர இடம் பார்த்தான்.

அவன் வருவதைத் தூரத்தில் இருந்து பார்த்த முத்தாச்சி கொஞ்சம் தலையை மட்டும் வேண்டுமென்றே கவிழ்ந்தபடி அமர்ந்திருந்தாள். அவனாகப் பார்த்துத் தன்னைத் தேடி வரட்டுமே என்று எண்ணிக் கொண்டாள். அதில் கொஞ்சம் அவளுக்கு தற்பெருமையும் மகிழ்ச்சியும் இருந்தது.

தக்கரை கம்பைத் தரையில் ஊன்றி ஒற்றைக்காலைச் சரித்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் அவளையோ, அவள் மகனையோ பார்க்க இயலாது என்பதை உணர்ந்தாள். ஆனாலும் கொஞ்சநேரம் அவன் பார்க்கமாட்டானா என மனம் தவித்தது. அவன் கால் வலித்திருக்கும் போல அப்படியே பூவரச மரத்துக் கீழே மணலில் அமர்ந்து விட்டான். அவன் அமர்ந்ததைப் பார்த்தவுடன், இனி அவனை அழைத்து வருவதைத்தவிர வேறு வழியில்லை என்றே தோன்றியது.

முத்தாச்சி மகனைக் கையமர்த்தி இருக்கச் சொல்லிவிட்டுக் கீழிறங்கினாள். அவளுக்குள் ஒரு மென்மையான நாணம் பூத்திருந்தது. ஓட்டுப் பிறையை விட்டு படியிலிருந்து தரையில் கால் வைத்தபொது மண் மெத்தென்று இருந்தது. அது அவள் சிறுவயதில் தாமிரபரணி ஆற்றங்கரை மணலில் குதிரைகள் போட்டி போட்டு ஓடியது ஞாபகத்திற்கு வந்தது.

அவள் ஒவ்வொரு வருட கோடை விடுமுறையிலும் ஆற்றங்கரையில் குளிக்கப் போவதும் அங்குப் பிள்ளைகளோடுச் சேர்ந்து கும்மாளம்

அடித்ததும் நினைவில் வந்தது. அதோடு முதன் முதலில் ஊரில் டூவீலர் வாங்கிக் கொண்டு ஊரைச் சுற்றி வந்த கனியப்பாவும் வந்து நின்றான். கனியப்பாவின் திருகு மீசையும், பெரிய செயின் டாலரும், நெஞ்சில் கரடி முடியும் ஞாபகத்தில் வந்தன. புல்லட்டின் "டப்டப்" பென்ற ஓசை அவளுக்கு முத்தங்களின் ஓசை போலவே கேட்கும்.

கனியப்பாவிற்கு முத்தாச்சியின் மீது எப்போதும் ஒரு கண்தான். அவனுக்கு மூன்று வகுப்புக் குறையப்படித்த போதிலும் அவளிடம் வலியப் பேசிவிட்டுத்தான் நகர்வான். படிப்பு முடிந்த பின்பும் அவளைத் தொடர்வதை நிறுத்தவேயில்லை.

அவள் எங்காவது நிற்பதைப் பார்த்தால், இரு சக்கர வாகனத்தை அருகில் நிறுத்தியபடி ரெண்டு வார்த்தையாவது பேசிவிட்டுத்தான் நகர்வான். அவள் அவனிடம் பேச மாய்ச்சல்பட்டு திரும்பி நின்றாலும் "முத்தாச்சி... முத்தாச்சி" என்று இழுத்தபடி கனிவோடு அழைப்பான் எப்படியும் தவிர்க்க முடியாது. அவன் திடீரென கல்வெட்டாங்குழியில் விழுந்து இறந்து கிடந்தபோது சிறிது வருத்தமும் சிறிது மகிழ்ச்சியும் கலந்துதான் இருந்தது. எல்லோரும் கல்வெட்டாங்குழியை உற்றுப்பார்த்து அவன் சடலத்தை மிதப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது. இவளால் கல்வெட்டான் குழியை மட்டுமே பார்க்கமுடிந்தது.

போன வருடம் மார்ச் மாதக் கடைசி தேதியில் அவள் சுத்தமல்லியில் ஒரு ஹோட்டலில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள். மெல்லியதான இருள் வெளிச்சத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. ஒரு வெண்குதிரை மீது ஒரு கருங்குதிரை ஏறுவதைப் போல இருந்தது. அவளின் கால்கள் வேகமாக இயங்கின. சடக்கென அருகில் வந்து நின்றது கனியப்பாவின் இருசக்கர வாகனம்.

"வீட்டுக்குத்தான் போறேன் பைக்கில் ஏறு" என்றான்.

"இல்லங்க நான் நடந்தே போறேன்.."

"இல்லடி.. ஏறு பைக்கில்" அத்தனைப் பற்களும் கொடூரமாய்த் தெரிய இளித்தான்.

"ஏங்க... யாராவதுப் பாத்தா உங்களை தப்பா நெனைக்கப் போறாங்க"

"அதுல்லாம் ஒண்ணும் தெரியாது. நீ ஏறு"

அவள் வேண்டா வெறுப்பாய் ஏறி அமர்ந்தாள். ஊசிமரங்கள் விலகியோட வாகனத்தை வேகமாக விரட்டினான். காற்று ஜிவ்வென்று முகத்தில் அறைந்து அவள் தலை முடியை பறக்கச் செய்தது.

மெல்ல இருட்டில் போகையில், "முத்தாச்சி என் இடுப்ப புடிச்சிக்கோ" என்றான்.

"இல்லைங்க... வேண்டாம் பயமாயிருக்கு" என்றபோது அவன்

வற்புறுத்தினான். மீண்டும் அவள் மறுத்தாள்.
"சீ... பிச்சைக்கார நாயே.. ஏதோ உம்மேல உள்ள ஆசையில என்ன புடிக்கச் சொன்னா புடிக்க மாட்டியா.." என்று சொல்லிக் கொண்டுத் தலையைத் திருப்பி அவள் கன்னத்தோடு ஒட்டினான். அவளுக்கு இருக்கப் பிடிக்கவில்லை. அவள் ஒதுங்கியபோது மீண்டும் உடலைப் பின்தள்ளி அவள் உடலோடு ஒட்டினான். அவன் சில்மிஷங்களையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. ரயில்வே கேட் தாண்டியவுடன் இருட்டில் நிறுத்தச் சொன்னாள். அவன் மனத்தின் சபலங்கள் எல்லாம் புல்லட் வாகனம் சரிந்தும், நிமிர்ந்தும் வளைந்தும் பயணிக்கையில் புரிய முடிந்தது. வண்டி நின்றவுடன் அவன் கழுத்தில் கையைப் போட்டு இரண்டு கன்னத்திலும் முத்தமிட்டாள்.
"இப்போ சந்தோஷந்தானா..." கனி மேலும் பெரிதாக இளித்தான்.
"ஒண்ணு கேட்டுக்குங்க. இப்ப நான் கொடுத்தது எச்சி முத்தம். இனி என்ன தவம் கெடந்தாலும் தரமாட்டேன். நீ நெனைக்கமாரி எவ்வளவு வக்கத்தவளானாலும், யேன்.. பிச்சக்காரியானாலும் கூதியத் தெறந்து போட்டுக்கிட்டு அலையமாட்டா.. இனியொரு தடவ என்னப் பாத்து பல்ல இளிச்ச என்ன நடக்கும்னு எனக்கே தெரியாது பாத்துக்கோ" சொல்லிவிட்டு அவள் வீட்டைப் பார்த்து வேகமாக நடந்தாள். அவன் வண்டியைத் திருப்பி சுத்தமல்லிக்கே திரும்பிப் போவது பைக்கின் ஓசையில் தெரிந்தது. அவள் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்கு நடந்தாள்.
கனியப்பாவின் உயரமும் பருமனும் முத்தாச்சியின் மனதிற்குள் விரிந்தது. அவனைப் போல கட்டுமஸ்தானவன் அல்ல தக்கரை பீருமுகம்மது. ஆனாலும் அவன்தான் அவளுக்கு ஆதர்சமாய் எப்படி ஆனான் என்பதை எண்ணிப் பார்த்துத் தனக்குள் சிரித்துக்கொள்வாள். தக்கரை இன்னும் அவளையோ, அவளது மகனையோப் பார்க்க வரவில்லை. அவனாக வரமாட்டான் என்பதும் தெரியும். அவன் தன் ஆசைகளையும் கூட செயல்படுத்துவது இல்லை. அவனது சோம்பேறி மனம் அவனை அப்படியே வைத்திருக்கிறது.
பூவரச மரக்கிளையில் ஓடிப்பிடித்து விளையாடிய அணில் அவனருகில் விழுந்து ஓடியது. திடுக்கிட்டு பார்த்தான். விழுந்த வேகத்தில் எழுந்து ஓடியது. அவனுக்கு குரங்கு சடைச்சி சொன்னது தான் ஞாபகத்திற்கு வந்தது. நினைவுகள் சிலநேரம் தனக்குப் பிடித்தவற்றை, தேவையானவற்றை மட்டுமே பொறுக்கி எடுத்துக் கொடுக்கிறது. குரங்கு சடைச்சி அப்படித்தான் அவன் நினைவில் வந்தாள்.
அணில் விழுந்தா ஓடனே எந்திரிச்சி ஓடுமாம். ஆனால் ஓந்தான் விழுந்தா கொஞ்சநேரம் மயங்கிக்கிடந்துதான் எந்திரிச்சி ஓடுமாம். அணிலு ராமருக்கு செஞ்ச ஒதவிக்கு அவர் கொடுத்த வரம்தான் "அதுக்கு

காரணமாம்" குரங்கு சடைச்சி கற்பாறையில்அமர்ந்தபடி சொன்னாள்.
அணிலைக் கண்ணிபோட்டு பிடிச்சி, அதன் தோலை உரித்துச் சுட்டுக் கொண்டே வண்ணான்பாறையில் சொன்னாள். அவன் திங்க மறுத்தபோது, அவள் சதையைப் பிய்த்து ஊட்டிவிட்டதும்., அவன் தின்றுவிட்டு அந்தருசியில் மயங்கி அவளைப் பார்த்து சிரித்ததும், அதற்கு அவள், "அணில் என்னய்யா அணில் உடும்புக்கறி வச்சித் தாரேன்னு சொன்னதும், அவளை ஓடிச் சென்று கட்டிப்பிடித்துக்கொண்டதும். துல்லியமாகச் சடைச்சியோடு அவன் அலைகிற போது அவன் ரொம்ப திடகாத்திரமா இருந்தான். அதனால் நடந்தது எல்லாம் அழியாமல் அப்படியே படம்போல், நினைக்கும் போதெல்லாம் விரிந்து விடுகிறது. மீண்டும் அணிலைத் தேடிப் பார்த்தான். இருட்டில் எதுவும் தெரியவில்லை. சில்வண்டுகளின் இரைச்சல் மட்டும் கேட்டபடி இருந்தது. உய்" என்று காற்றடிக்கும் அடிக்கும் போது காணாமல் போவதும், அமைதியான நேரத்தில் இரைவதுமாக இருக்கிறது.
அவனுக்கு தர்காவைத் தாண்டி கொஞ்ச தூரத்தில் இருக்கும் ஓடைக்கு அருகே சென்று ஒண்ணுக்கு இருந்துவிட்டு வரவேண்டும் போல் இருந்தது.
மெதுவாகக் கைக்கம்பை ஊன்றி மெதுவாக எழுந்து உடலை நெளித்துவிட்டு நின்றான். தோள்பைத் தரையில் இருந்தது. ஜோல்னாப் பையை எடுப்பதற்காகக் குனிகையில் யாரோ ஒரு பெண் அதை எடுப்பதைப் பார்த்தான்.
பதறித் தலையை ஒரு உதறு உதறிப் பார்த்தான். முத்தாச்சிதான் ஜோல்னாப் பையை எடுத்து தன் தோளில் போட்டவாறு நின்று கொண்டிருந்தாள்.
"ஏய்.. நீ எப்படி இங்கு வந்தே" இரு கண்களை இடுக்கிக்கொண்டுக் கேட்டான். அவன் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. முத்தாச்சி பதில் ஏதும் சொல்லாமல் பற்கள் தெரியக் கள்ளமாய்ச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கள்ளம் தாண்டியும் உண்மையான நேசம் இருந்தது.
"என்ன முத்தாச்சி எனக்கு முன்னாடியே வந்துட்டியா?"
"ஆமாய்யா ஒங்கிட்ட முக்கியமான வெசயம் பேசனுன்னுதான்"
"சரி. ஒண்ணுக்கு முடுக்குது. தெக்க ஓடைபக்கம் போய்ட்டு வாரேன்"
அவன் நடக்க அவளும் பின்னால் நடந்தாள். தர்கா எடம் தாண்டி வெட்டைக்குப் போனான் அந்த மையிருட்டில் அவனுடன் நடந்து போவது ராமனுக்குப் பின்னாடி சீதை நடந்துப் போனது போல இருந்தது. தனக்குள் தோன்றியச் சிரிப்பை மௌனமாக அடக்கினாலும் அதன் சப்தம் மெதுவாக வெளிவந்து விழுந்தது.

"என்னடி சிரிக்கிறே"
"இல்ல ராமாயணத்துல ராமனுக்குப் பின்னாடி சீதை நடந்த மாரி தோணுச்சி"
"போடி. போக்கத்தவளே. இன்னிக்கோ, நாளைக்கோன்னு இருக்கோம். சிறுக்கிக்கு நினைப்புக்கு மட்டும் குறைச்சலில்லே" அவன் உட்காந்து ஒண்ணுக்கிருந்து திரும்பி வரும் வரைக்கும் திட்டிக் கொண்டே வந்தான். அவள் கேட்டுக்கொண்டே வந்தாள். அவன் ஏச ஏச அவளுக்கு ஒரு இனம் புரியாத சந்தோஷம் பெருகியபடியே இருந்தது. அந்த ஏசலுக்குள் அவன் அன்பைப் பொதிந்து வைத்திருக்கிறான் என்பதை அவள் அறியாமலா இருக்கிறாள்.
"ஏட்டி முத்தாச்சி பஸ்ஸ{ல வரும்போது ஒன்னைத்தான் நெனைச்சிக்கிட்டே வந்தேன். கூட்டிட்டு வந்திருக்கலாமோன்னு தோணிக்கிட்டே இருந்துச்சி. எதுக்கு அப்படி தோணுச்சின்னும் தெரியல. நாளைக்கு தர்கா கந்தூரியில பொங்கிப் போடுற சோத்துல நாலு வாய் திம்பியேன்னு நெனைச்சேன். இப்ப என்னடான்னா கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த கதையா வந்து நிக்கே" அவன் பல்லை இடுக்கிக்கொண்டு முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் மலரச் சொன்னான்.
"ஆமாய்யா... எனக்கும் தோணுச்சி"
"சரி ஏதோ பேசணும்னு சொன்னியே... என்னா பேச வேண்டிக்கிடக்கு பிச்சக்கார நாய்களுக்கு"
"சும்மா இரிய்யா. சொல்றேன். முதல்ல பட்டியலுக்குள்ளே வந்து இரி" அவனை அழைத்துக் கொண்டுப் போனான். அவர்கள் இருவரும் வருவதை உணர்ந்த முத்தாச்சி மகன் "வாங்கப்பா ஸலாம் வாப்பா" என்றான் அவனுக்குத்தான் முத்தாச்சி தன் அன்பை எப்படி கொட்டிக்கொடுத்திருக்கிறாள்.
"ஸலாம் தங்கோம்" என்றான் பதிலுக்குத் தக்கரை. மெதுவாக திண்ணையில் ஏறி அமர்ந்தான். முத்தாச்சி ஜோல்னாப்பையை எடுத்து தூண் ஓரத்தில் சரித்து வைத்தாள். "முத்து போணி வச்சிருந்தா தண்ணீ புடிச்சிட்டு வா"
"எதுக்குய்யா" அவன் பதில் சொல்லாமல் ஜோல்னாப் பையை தன் பக்கம் இழுத்துத் தட்டிப் பார்த்தான். மெத்தென இருந்தது. உள்ளே கைவிட்டு புளியோதரைப் பொட்டலத்தை எடுத்தான். மெதுவாக பொட்டலத்தின் முனைகளிலிருந்து புளியோதரை வாசனை கரைந்து வெளியே பரவியது. பேப்பரின் மேல் புளியோதரையில் இருந்த எண்ணை படர்ந்திருந்தது.
"வாப்பா சாப்பிடா தீங்கோ.. இப்பம் நெய்சோறு கொடுப்பாங்களாம்.

அந்தப் பொண்ணு ரகிமா சொன்னிச்சி"
முத்தாச்சிப் போணியில் பிடித்துக் கொண்டுவந்தவள் பொட்டலத்தை அவிழ்த்தாள் நேரமானாலும் புளியோதரை என்பதால் கெட்டுப் போகாமல் சாப்பிடும் பக்குவத்தில் இருந்தது. அதன் வாசனை பக்கத்து ஓட்டுப் பிறைகளுக்கு பரவ எல்லாரும் சோறு கொடுக்கிறார்களோ என்று பார்த்தார்கள்.
"இன்னிக்குப் பிரியாணி என்னா.. தேவாமிர்தமே கொடுத்தாலும் எனக்கு இந்த புளியோதரைதான் புடிக்கும். உன்னெ நெனைச்சிக்கிட்டே சாப்புடணும்னுதாம்மா வேறயாருக்கும் கொடுக்கல. இல்லாட்டி சூசை எச்சி வடிச்சிக்கிட்டு நின்னுக்கிட்டு இருந்தான். அவன்ட்ட கொடுத்திருக்க மாட்டேன்.. இப்ப என்ன சொல்றே. சாப்பிடவா வோணாமா?"
"ம் ..ம்... சாப்பிடுங்க"
அவன் மெதுவாக எடுத்து ரசித்தும் ருசித்தும் சாப்பிட்டான். அவன் பக்கத்தில் இருந்து பார்த்தபடியே இருந்தாள்.
"ஏய்யா. இப்ப சொல்லட்டா?"
"ம்.. சொல்லு"
"துரைகுட்டியைக் குருட்டு பள்ளிக்கூடத்துல சேக்கலாம்னு பாக்கேன். போய் பெரிய வாத்தியார்ட்ட கேட்டேன் சேத்துக்கிறேன்னு சொல்லிட்டாரு. என்னய்யா நீ சொல்றே"
"இதுக்கு எதுக்குடி கேள்வி அவனை சேத்துர வேண்டியதுதானே. நாலெழுத்து படிச்சாத்தான் நல்லது. இதெ ஒரு கேள்வின்னு கேக்க வந்துட்டியாக்கும் போக்கத்த சிறுக்கி"
"இல்லய்யா நா ஒண்ணு கேப்பேன் கோவப்படக்கூடாது.." அவள் மீண்டும் பீடிகை போட்டது அவனுக்கு பிடிக்கவில்லை உர்ரென்று கோபம் தலைக்கேறியது.
" சொல்லுணும்னு வந்துட்டல்ல. சொல்லு நாயி."
"அதாவது வந்து... அவனெச் சேத்துப்பிட்டா அதுக்கப்புறம் எனக்கு யாருய்யா இருக்கா. அதுதான் கேக்கலாம்னு வந்தேன்"
" என்னடி வந்து போயின்னுட்டு. என்ன சொல்ல வந்தியோ சொல்லித் தொலை"
"இல்லய்யா.. அதுக்கப்புறம் நா ஒத்தக்கட்டதானே. ஓங்கூடவே வரலாம்னு நெனைச்சேன்."
முத்தாச்சி கெஞ்சிச் சொல்வதைக் கேட்டவன். அவன் முகம் சடக்கென்று சீரியஸாக மாறியது. கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் இருந்தான். தர்காவில் திக்ரு ஓதிக் கொண்டிருந்தது மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மீண்டும் மீண்டும் ஒரு சொல்லை ஒப்புவித்தபடி

இருந்தார்கள்.
''முத்தாச்சி.. நா சொல்றேன்னு கோவிச்சுக்காதே. இந்த நெனைப்பெ இப்பவே விட்டு ஒழி என்னெப்பாரு ஒருத்திய கையப்புடிச்சி அணைச்சிக்கிட்டு போற மாதிரியா இருக்கேன். நான் இப்ப எங்க இருக்கேன் எங்க இருப்பேன்னு எனக்கேத் தெரியாது. என்ன நம்பி எம் பின்னாடி வந்தேன்னு வச்சுக்கோ ஒனக்கு குடிக்கக்கூட தண்ணி கெடைக்காது. பேசாம ஒம் வழி சனத்தப் பாத்து நீ போய்க்கிட்டே இரு, நா என் வழியிலே போய்க்கிட்டே இருக்கேன். தொந்தரவு பண்ணாதே''
''என்னய்யா சொல்றீரு. நா எங்க போயிய்யா நிப்பேன் வாழ்வோ சாவோ உங்கூடயே போவட்டுமய்யா'' அவள் குரல் கம்மக் கண்ணை கசக்கினாள்.
''இந்தா பாரு முத்து எங்கொணம் தெரியுமில்லே பேசிக்கிட்டே இருப்பேன் சொல்லாம கொள்ளாமப் போயிடுவேன். பின்ன எப்படி உன்னை கூட்டிக்கிட்டு அலைவேன். தயவுசெஞ்சு என்னெ நம்பாதேம்மா''
அவள் கெஞ்சிப் பார்த்தும் அவன் மசியவில்லை. '' இந்தாப்பாரு போன மாசம் அண்ணன் மொவன் வந்து ஊர்ல ஒட்டுச்சாய்ப்பு இருக்கு. இப்படி ஊர் ஊராப் போயிப் பிச்சை எடுக்காதே. வந்து இரி. செல்லும் செலவுக்கும் ரூவா தாரோம்னு சொன்னான். நான் கேட்டேனா. கேக்கல. அதுதான் ஒனக்கும் பதிலு புள்ளெ''
அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை. அவன் அருகில் படுத்துக்கிடந்தாள் அவனைச் சேர்ந்து அணைத்துக் கொண்டு ஒடுங்கிக் கிடக்கணும் போல இருந்தது. அவளுக்கு ஆனால் அவன் அவள் பக்கம் திரும்பாமல் தள்ளிப் படுத்திருந்தான். தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள். அவனும் அதைப் படுத்தபடியே கவனித்துக் கொண்டேதான் இருந்தான். அவள் பக்கத்தில் வரவேண்டும் என்று அவனுக்குத் தோன்றவேயில்லை. வராதத் தூக்கத்தை இழுத்துப்புடிக்க எண்ணி அதோடுப் போய்க்கொண்டிருந்தான். நடுச்சாமத்தில் சிறுநீர் கழிக்க எழுப்பினான் மெதுவாக அவனை அழைத்துக் கொண்டுப் போனாள். புளியமரத்து மூட்டில் ஒண்ணுக்கு இருந்தான். மெதுவாக எழுந்து அவளை அழைத்தான்.
அப்படியே அவளை அள்ளி நெஞ்சோடு சேர்த்து இறுக்கிய அவள் கன்னத்தைத் திருப்பி மாறி மாறி முத்தமிட்டான். கொஞ்ச நேரம் அவள் கண் சொருக அவன் நெஞ்சுக்குள் மிதந்தாள்.
அவளை மெதுவாகப் பிரித்து கண்ணருகே முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்.
''இப்போம் என்மேல கோவமில்லையே''

"அவள் மலர்ச்சியுடன் சொன்னாள், வாய்யா கொஞ்சநேரம் கண் அசந்து தூங்குவோம்".

## அத்தியாயம் -13

கங்கைகொண்டான்

காயல் சேக் முகம்மதுவின் கனத்தக் குரலில் "ஈச்சை மரத்து இன்பச் சோலையில்" பாடல் கங்கைகொண்டான் தர்காவைச் சுற்றியுள்ள ஜனங்களை அதிகாலையிலே விழித்தெழச் செய்தது. முதல் தொழுகையை முடித்துக்கொண்டு அந்த வெள்ளை ஜிப்பாக்காரர் போனபின்பு அவர் விட்டுப்போன நறுமணம் அங்கேயே குமைந்து நின்றுகொண்டிருந்தது. தர்காவைச் சுற்றிஅந்த மங்கிய காலைப் பொழுதிலும் சீரியல் பல்புகள் தங்களுக்குள் மினுக்கிக்கொண்டு எரிந்தன. மரக்கிளைகளில் ஓடும் பச்சை நாளங்கள் போலத் தெரிந்தன. இரவுச் சாப்பாட்டைத் தின்ற அசதியில் தர்காவில் தங்கியிருக்கும் மிஸ்கீன்கள் (வறியவர்கள்) குப்புறப்படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பச்சைப் பெயிண்ட் அடித்த தண்ணீர் லாரி டிரம்களில் தண்ணீரை பீச்சிஅடித்துக் கொண்டிருந்தது. நிறைந்த டிரம்களில் பழைய வேஷ்டி நனைந்து தண்ணீரின் மேல் அப்பியபடி கிடந்தது. கந்தூரி சோறுக்கான களைக் கட்டுதலோடு மக்களும் இயங்கினர்.

அவன் படுத்தபடியே முத்தாச்சியைப் பார்த்தான் அவளையும் அவள் மகனையும் காணவில்லை. சுற்றி முற்றிப் பார்த்தான். எங்கும் காணவில்லை. அவள் ஏதும் கொண்டு வந்த துணிமணிப் பைகள் எதுவும் உள்ளதாவெனத் தேடினான் எதுவும் இல்லை.

'இரவோடு இரவாகக் கோபப்பட்டு வீட்டிற்குப் போயிருப்பாளோ. அப்படி என்ன அவசரம் கந்தூரி சோறு தின்பதற்கு முன்பே ஏன் இப்படிப் போய்விட்டாள்?'

"அவனுக்குள் என்னவெல்லாமோ எண்ணங்கள் தோன்றின. எப்படிப் போகலாம் என்றும் அவளுக்கு அப்படி என்னத் திமிர் என்று எண்ணிக்கொண்டான். இனிமேல் எப்படி மூஞ்சியில் முழிப்பாள் பார்க்கலாம்... நாமதான் அவ மேலே அவ்வளவு அன்பு வச்சிருக்கோமோ, அவளுக்கு அப்படி அன்பு இருக்காதுதான். அவளுக்கென்ன அழகாத்தான் இருக்கா. அவெ இருக்கிற எடத்துல கேக்கவா வேணும். யாரு வேணுன்னாலும் கிடைப்பான்தானே. சூசை சொல்றது சரிதான். அவளுக்கு அங்க ஒரு வைப்பாளான் இருப்பான்தான் போல. அவன் கூப்பிட்டு இருப்பான். அதுதான் சொல்லாமக் கொள்ளாமெ அவன் மகனையும் அழைச்சிக்கிட்டு ஓடிட்டா..." அவன் மூளை அதிவேகமாக எண்ணிக் கொண்டே போனது. ஆனாலும் இன்னும் கொஞ்சநேரம் தூங்கணும் போல இருந்துச்சி.

அதுனால உடனடியா எழுந்திரிச்சிப் போய், பேருந்து நிறுத்தத்திற்குப் போகலாம் என்ற ஆசையும் கூட முறிந்துபோனது.
தக்கரையும் முத்தாச்சியின் மீது மிகுந்த நேசம்தான் வைத்திருக்கிறான். ஆனாலும் அவளைக் கூட்டிக் கொண்டு திரியுற வயசில்லை. அவள் வாழ்க்கைக்கு உதவி செய்வான் தன்னிடம் ஏதும் மிச்சம் மீதி இருந்தால் அவனிடம்தான் இப்போது கொடுத்து வைப்பாள். அவளிடம்தான் கொடுப்பதற்கு எதும் இல்லையே? பின்னே எப்படி அவளுக்கு அவன் ஒத்தாசை பண்ணமுடியும். ஓண்ணுமில்லேன்னுதானே சொல்லமுடியும். வேறு என்ன செய்ய?. அதுதான் போயிருப்பா. ஆனாலும் முத்தாச்சி சொல்லிட்டுப் போயிருந்தா இப்படி மனசு கெடந்து அடிக்காது.
அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே முத்தாச்சியும் அவள் மகனும் குளித்து முடித்துவிட்டு வந்துக் கொண்டிருந்தார்கள். "அதானே.. எங்கிட்ட சொல்லாம போவாளாக்கும்". மனம் சடக்கென சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் மாறிக்கொள்ளும்தானே. "எப்போதுமே என் புத்தி இப்படித்தான்" ஒண்ணுமே நடந்திருக்காது. அதுக்குப் போட்டு மண்டைய ஒடச்சிக்கிடுவேன். கடேசிலப் பாத்தா காத்து மாரி ஒண்ணுமில்லாம போயிரும் அந்தப் பிரச்சினை". எண்ணிக் கொண்டே அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.
"என்ன அதுக்குள்ளயே அம்மைக்கும் மொவனுக்கு முடுக்கிக்கிடுச்சோ. காலையிலேயே குளிச்சிட்டு வர்றதப் பாத்தா இப்பவே சாப்பாடு போடுவாங்க போல" என்றான் தக்கரை. அவள் தனக்குள் சிரித்துவிட்டு, அவனைப் பார்த்துச் சொன்னாள் "இப்ப போங்க டேப்புல தண்ணீ வருது. அதுனால போயி குளிச்சிட்டு வாங்க. கூட்டமில்ல" என்றாள்.
அவனாவது ஆறுமணிக்கே போயி குளிச்சிட்டு வர்றதாவது. அவள் இருக்காள்னு தெரிஞ்சவுடனே தலையைச் சொளுக்குன்னு போட்டுக் கொண்டுத் தூங்க ஆரம்பித்தான்.
முத்தாச்சி தன் மகனைப் பட்டியக்கல்லில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு ஏதாவது காலை பசியாரம் உண்டா (உணவு) என்று கேட்கப் போனாள்.
அவனுக்குப் பக்கத்தில் அவள் இருந்தால்போதும், அவன் எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவ்வளவு வேலையையும் அவளே இழுத்துப்போட்டுப் பார்த்துக்கொள்வாள் எதையும் செய்யவிடமாட்டாள்.
ஆண்களைவிடப் பெண்களுக்கு நேசம் அல்லது காதல் அதிகம்தான். யாரை நேசிக்கிறாளோ அவன் அருகிலேயே இருக்கவேண்டும், அவனுக்குரிய எல்லாத் தேவைகளையும் அவளே செய்து கொடுக்கவேண்டும். அவன் இவளை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டும். அதுபோதும். பெண்களுக்கு.

அப்படிப்பட்டவள்தான் முத்தாச்சியும் அவள் கையில் ஏதாவது பணம் இருந்தால் அவ்வளவுதான். ஆறுமாதத்திற்கு முன்பு தக்கரை ஒரு பழைய சாரத்தை உடுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் தன் கையில் கிடந்த மோதிரத்தை அடகு வைத்து புதுச்சாரம் வாங்கிக் கொடுத்தாள். எதையும் யோசிக்காமல் அவள் நடந்து கொள்வதைப் பற்றி அவன் கவலைப்பட்டான்.

காலையில் சாப்பாடு கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். யாராவது டீ விற்க வரலாம் அல்லது இட்லி விற்கக் கொண்டுவரலாம் என்று அதற்காக அவள் காத்திருந்தாள். மணி எட்டாகியும் யாரும் வரவில்லை. தக்கரையும் படுக்கையை விட்டு எழுந்தப் பாடில்லை.

அவள் அவனை எழுப்பி, காலை டிபன் ஏதாவது வாங்கி வரவா எனக்கேட்டாள். "ஒண்ணும் வேண்டாம் நேற்றிரவு சாப்பிட்டதே கம்முன்னு இருக்கு. சரியா ஜீரணம் ஆன மாதிரி தெரியல. டீ வேண்னா குடிக்கலாம்" என்று சொல்லிவிட்டு எழுந்துப் போனான்.

மெதுவாக எழுந்து ஓடைப்பக்கம் போய் மூத்திரம் பெய்துவிட்டு வந்தான். தூரத்தில் எப்போதும் மூன்றாவது ஓட்டுப்பிறையில் தங்கியிருக்கும் சுலைகா நின்று கொண்டிருந்தாள். அவனுக்குத் தெரியும் சுலைகா அக்காவுக்கு ஏதாவது அவனது வாயைக்கிளறிக் கொண்டேயிருக்கவேண்டும்.

அவன் தர்காவுக்கு வரும் போது நேமிசச்சோறு மிச்சங்கிடந்தால் அவனுக்குச் சாப்பிடக் கொடுப்பாள். சாப்பிட்டு தட்டையை கழுவிக் கொடுத்திடணும். சுலைகாவுக்கு முத்தாச்சியை ஏற்கனவே நன்றாகத் தெரியும். இன்றைக்கு முத்தாச்சி வந்திருப்பதைப் பார்த்துவிட்டாள். அவளைப் பற்றி அவனிடம் கேட்டாகணும். அதற்காக நின்று கொண்டிருந்தாள். தக்கரைக்கு அவள் எதற்காக நிற்கிறாள் என்பது தெரிந்தது. அப்படியே அவளைப் பார்க்காததுபோல ஓடையைத் தாண்டிக் கொல்லைக்குப் போகிறமாதிரிப் போய்விடலாம் என்று நினைத்தான். முத்தாச்சி தேடிக் கொண்டிருக்கக்கூடும். ஓரக்கண்ணால் மீண்டும் அவளைப் பார்த்தான். அவள் முகத்தைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

பைப்பிலிருந்து தண்ணீர் விழுந்துச் சிதறிக்கொண்டிருந்தது. அவனும் முகத்தைக் கழுவவேண்டும்தான். அவள் கழுவிவிட்டுப் போகட்டுமே என்று அங்கேயே நின்றான். சூரியன் ஒரு பனை உசரத்துக்கு மேல் நின்றுக் கடுகடுத்துக் கொண்டிருந்தான். இரண்டு வெள்ளை கொக்குகள் ஜோடியாய் மேற்கே மலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தன.

சுலைகாவை நோக்கி கால் மேல் கால் தூக்கி வைத்து ஒய்யாரமாக நடந்து வருவதை அவள் ரசித்துச் சிரித்தபடிப் பார்த்துக் கொண்டே

இருந்தாள். யார் அதற்கு பீரு என்று பெயர் வைத்தார்கள் என்று தெரியவில்லை. சுலைகாவும் அது யாரோடது, யார் பேரு வச்சது என்று எல்லோரிடமும் கேட்டுப் பார்த்துவிட்டாள். எதற்கும் விடை கிடைக்கவில்லை. உயரமான கொண்டையும் செந்தாடியையும் உற்றுப் பார்த்துவிட்டு "இது சாதாரண சேவலேயில்ல. நாதாக்கதான். தைக்காவிலெ அடங்கியிருக்கிற பீரு முகம்மது நாதாக்கதான்" என்றாள், பீரு சேவலும் அப்படித்தான் நடந்து வருகிறது. "அது தாடியும் கொண்டையையும் பாக்கும் போது அக்குபர் மன்னர் மாரில்லா இருக்கு" என்பாள். "அவுஹ வர்ற தோரணையை பாருங்களேன்" என்று எல்லோரிடமும் சொல்லிக்காட்டிச் சிரிப்பாள்.

சுலைகாவின் வாய்முகூர்த்தம் பீருவைப் பற்றி எல்லோரையும் பேச வைத்தது. பூவரசு மரத்தின் வேருக்கு நடுவில் மணலைப் பறித்து பள்ளமாக்கி சில சமயம் படுத்திருக்கும். அந்த வழியாக போவோர் வருவோர் எல்லாம் அதைப் பார்த்து ஸலாம் வைத்துவிட்டுத்தான் போவார்கள். வந்த கொஞ்சம் நாளிலேயே எல்லோருக்கும் மரியாதைக்குரிய செல்லம் போல ஆகிப் போனது. அதுக்கே கூட தெரிஞ்சுவிட்டது போல எங்கும் ஒரு ராஜமரியாதையோடுதான் போய்விட்டு வரும்.

கோவில்காளை மாதிரி, எல்லோருக்கும் தர்கா சேவல் என்றாகி விட்டான் பீரு. சுலைகா தங்கும் ஓட்டுப்பட்டியலுக்கு வரும். அவள் மிகுந்த மரியாதையோடு அதைக் குளிப்பாட்டி விடுவாள். அப்படி ஒரு ஆன்மீகப் பிறவியாகிக் கொண்டிருந்தது பீரு. குளிப்பாட்டும்போது அவளுக்கு புல்லரிக்கும்.

கொடி மரத் திண்டில் நின்று கொண்டு மேற்கு பார்த்து கூவினால் போதும். இன்று தர்காவில் கந்தூரிச் சோறுதான் என்று எண்ணிக் கொள்வார்கள். சேக்கான் மவன் விரட்டிக்கொண்டு ஓடியபோது அவனை ஏசி, "அவுகளெ விரட்டாதே" என்று சத்தம் போடுவாள்.

தக்கரைக்கு சேவலை ரொம்பப் பிடிக்கும். அது மேற்கும் கிழக்குமாக நடந்து போவதைப் பார்த்தபடியே இருப்பான். சேவல் ஒரு உற்சாகப் பறவை என்று சொல்வான். நாலைந்து நீளமான வண்ண வால் இறகுகள் ஆட ஆட அது நடந்து செல்லும். எப்போதாவது இரையைத் தின்று மீதி நேரங்களில் எல்லாம் அது கம்பீரமாகத்தான் அலைகிறது. எல்லோரும் வரவேற்று அதைத் திண்ணு. இதைத் திண்ணு என்று கொடுத்தால் கேட்கவா செய்யவேண்டும். அது கொழுத்து மெருகோடு திரிகிறது.

சுலைகா வருஷத்தில் பாதிநாள் தர்காவிலேயே கழிப்பவள். அவள் புருஷனுக்கு கால்வீக்கம் ஏற்பட்டு நடக்கமுடியாமல் இருக்கிறது. இங்கே வந்து இருந்து தச்சநல்லூர் வைத்தியரிடம் மருந்து வாங்கிச்

சாப்பிட்டுவிட்டு தர்காப் பட்டியலிலேயே இருக்கிறார்கள். மாதத்தில் பாதி நாள் அவர் கால் வீக்கம் வற்றுவது போல இருக்கும். மீதிநாட்கள் வீங்கிவிடும். வெளிநாட்டில் இருக்கும் மகன் அனுப்பும் பணத்தை வைத்து சாப்பிட்டுக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவள் சும்மா இருப்பதில்லை. தங்கியிருக்க எல்லாரிடமும் போய், அவுங்க குல மென்ன கோத்திரமென்ன, எதுக்கு வந்திருக்கீஹ, என்னா பண்ணுதுன்னு கேக்காம இருக்க மாட்டாள். இப்போது முத்தாச்சி வந்திருப்பது போதாதா. அவள் வாய்க்கு அரைப்படி அவலைப் போட்டமாதிரிதான். மெதுவாக அவளைத் தாண்டி முகம் கழுவி விட்டுப் போவதைப் பார்த்தாள். சுலைகா. "என்னாண்ணே... பாத்து பாக்காதது மாரி போறிகே. முத்தாச்சி மவனோட வந்திருக்காளே... போன மாசம் அவ ஏன் வரக்காணோம் கேட்டதுக்கு அவளோட பேச்சு வார்த்தை இல்லென்னு சொன்னியளே. இப்பம் வந்திருக்காஹ சமாதானம் ஆயிட்டிங்களா..." அவள் கேள்விகளைப் போட்டுக் கொண்டே போனாள்.

"என்னமோ சுலைகா அவதான் வீஞ்சிக்கிட்டு முகத்த சுழிச்சிக்கிட்டு போனா இன்னைக்கு கந்தூரிசோறுன்னு கேள்விபட்டிருப்பாளோ என்னமோ, வந்திருக்கா பாக்க வந்தவள அடிச்சா விரட்ட முடியும் நா சொல்றது சரிதானே என்ன சொல்லுதே. நீயே சொல்லேன்."

"அதுசரிப்பா அந்த குருட்டு பையன் யாரு புள்ளப்பா? எல்லாரும் உனக்குப் பொறந்தவன்னு சொல்றாங்கப்பா?

சுலைகாவின் கீச்சுகுரலில் ஒரு கேலி படர்ந்த நக்கல் இருந்தது. அவன் சிரித்துக் கொண்டே சொன்னான். "யாருக்கு யாரு பொறந்தான்னு யாரு சொல்ல முடியும். நாமெ என்னமோ நெனைச்சிட்டிருப்போம். யாருக்கா அதைக்காண முடியும். பொம்பளையம் ஆம்பளையும் சேறுரதுதான், புள்ள பொறக்குறதுதான். இதுல ஊர் பஞ்சாயத்து வச்சி பேசி தீக்கிற விசயமா சொல்லுப்பாப்போம்" அவன் பதிலுக்குள் அவளும் அடக்கம் என்பது சுரீரென தெறித்தது. சுலைகாவின் சிரித்த முகம் மறைந்து பின்வாங்கினாள்.

"அக்கா.. நா மூஞ்சிய கழிவிட்டு போறேன். அதுக்கப்புறம் நீங்க தண்ணி புடியுங்கோ" அவன் தெறித்து விழுந்து நல்லியிலிருந்து இருகைகளாலும் தண்ணீரைப்பிடித்து முகத்தைக் கழுவிவிட்டு, வேஷ்டி கீழ் முனையால் துடைத்தபடியே போனான்.

முத்தாச்சி டீயைப் போனியிலிருந்து டம்ளரில் ஆற்றிக்கொண்டிருந்தாள். அநேகமாக லஷ்மி பிளவர் மில் டீக்கடையில் வாங்கி வந்திருக்கக்கூடும். எதற்கும் ஓட்டமும் சாட்டமுமாய்த்தான் அலைபவளாய் இருக்கிறாள். அவன் கூடத்தில் உட்கார்ந்தான். மென்சூட்டில் தேநீர் தொண்டைக்குள்

இறங்குவது சுகமாக இருந்தது. கறி தாளித்தலின் வாசனை பூவரசங்கிளைகளைத் தாண்டிப் பறந்து வந்தது. காற்றுக் கொண்டு வந்தவாசமல்ல. அதுவாக வாசனையைக் கிளப்பிக்கிட்டு வருது.

பக்கத்துத் திண்ணையில் படுத்திருந்த சுலைகாவின் வீட்டுக்காரர் தாளிச மணத்தை மூக்கினால் உறிஞ்சியவராக சரியான பக்குவத்துல தாளிசா இருக்கு என்று மதியம் சாப்பாட்டின் ருசிக்கு ஆதரவு வைத்தார். முத்தாச்சி அவரைப் பார்த்து " டீ குடிக்கிறீங்களா" என்று கேட்டதற்கு " இல்ல பத்திய மருந்து சாப்புடணும். நீங்க சாப்பிடுங்க" என்று சொல்லிவிட்டு நீட்டியிருந்த கால் விரல்களை இழுத்துவிட்டுக் கொண்டிருந்தார்.

எங்கிருந்தோ காரில் ரெண்டு பக்கீர்க்களை அழைத்து வந்தார்கள். கந்தூரி ஆக்குபவர்கள். அவர்கள் கொடிமேடைக்கு அருகில் சென்றுப் பார்த்துவிட்டு, தப்சு கொட்டை தேக்சா அடுப்பில் காட்டி சூடேற்றினார்கள்.

"தக்கரை மச்சான் நேத்தைக்கு கேட்டேனே... என்னங்கய்யா சொல்றீக" என்றாள் முத்தாச்சி மெதுவாக.

அதற்கு அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவள் கெஞ்சும் பாவனையில் அவனையே பார்த்தாள். "முதல்ல புள்ளய கொண்டு போயி குருட்டு பள்ளிக்கூடத்துல சேரு. அதுக்குப் பின்னாடி பாக்கலாம்" என்று சத்தமாகச் சொன்னவன், அதற்குமேல் அவளை பார்ப்பதைத் தவிர்த்துவிட்டு மௌனமாக இருந்தான்.

பக்கீர்மார்கள் தப்சு கொட்டை தட்டிப் பார்த்துவிட்டு பாட ஆரம்பித்தார்கள். நபிகள் நாயகம் பற்றி போற்றிப்பாடல் பாடினார்கள்.

இரண்டு, மூன்று பாடல் பாடினார்கள். ஒவ்வொன்றும் தப்சுக் கொட்டின் மேளத்திற்கு தக்கபடி நீண்டு போய்க் கொண்டேயிருந்தது. கடைசியாக "மேரா நாம் அப்துர்ரஹ்மான்" பாடலை இழுத்து இழுத்துப் பாடலை பாதிப் பாடிக் கொண்டிருக்கையில் தொழுகைக்கான அழைப்பிற்கு நேரமாகிவிட்டது என்று நிறுத்தச் சொன்னார்கள்.

தொழுகை முடிந்தவுடன் நேர்ச்சையை தர்கா சமாதிக்குள் வைத்து பாத்திஹா ஓதுவார்கள். அதன்பிறகு எல்லோருக்கும் நேர்ச்சை விளம்பப்படும். இன்று எதிர்பார்த்ததைவிட கூட்டம் கம்மிதான். அநேகமாக இனிமேல் ஒரு கூட்டம் தாழையூத்து தென்கலம் பகுதியிலிருந்து வரக்கூடும்.

தேக்சாப் பானைகளை தம்போட்டு மூடி அதன்மேல் கங்குகளை அள்ளிப் போட்டு வைத்துவிட்டார்கள். பெருமணம் இன்னும் வெளியாகவில்லை. மட்டனும், இஞ்சி பூண்டும், பட்டக்கிராம்பு வாசனையும் சேர்ந்து ஒரு ரம்மியமானப் பிரியாணி வாசனையைத் தந்துவிடும். முத்தாச்சிக்கு

சப்பாட்டைவிட அவன் ஒப்புதலைப் பெறுவதில்தான் குறியாக இருந்தாள். இதுக்கெல்லாம் மசியமாட்டான். அவன் எதுக்கும் ஒப்புதல் கொடுத்தால் வானம் இடிந்து விழுந்துவிடும் என்றுதான் எண்ணினாள். பேட்டையில் பாழடைந்துக் கிடக்கும் அம்மாவின் ஓட்டுப் பிறை வீட்டுக்குக் குடியேறிவிடலாம் என்ற நப்பாசையில்தான் இருக்கிறாள். எங்கே போய்விடப் போகிறார் தக்கரை, நம்மை விட்டு என்ற நம்பிக்கையும் அவளுக்குள் இருந்தது.

அன்றையச் சாப்பாடு மிகவும் ருசியாக இருந்தது. அதேபோல் எல்லோருக்கும் தாராளமாகவும் கிடைத்தது. கிடாய்கறி நல்லா வெந்து அப்படியே மிட்டாய் போல கரைந்து அநேகமாக மேலப்பாளையம் பண்டாரியாகத்தான் (சமையல்காரர்) இருக்கணும்.

தூக்குச் சட்டியிலும் நெய்சோற்றை அடைத்துக் கொண்டாள். போகும் போது பேட்டை வீட்டைச் சரி பண்ணவா என்று கேட்டதற்கு அவன் "உம்" மென்று பதில் சொன்னான். அதில் அவளுக்கு தாளமுடியாத சந்தோஷம்தான். மேலும் அவன் ஒப்புக்கொள்வான் என்று எதிர்பார்க்கவில்லை ஆனால் அவன் பேசினான்.

"இந்தாப்பாரு முத்தாச்சி ஏதாவது நெனைச்சு பொழப்ப கெடுத்துக்காத மவனை போன வுடனேயே கொண்டு போயி குருட்டு பள்ளிக்கூடத்துலச் சேத்துரு. நான் ராத்திரி ராத்திரி இங்கதான் தங்க வந்திடுவேன். நீ புள்ளய சேத்துப்புட்டு வா பேசிக்கலாம் என்ன நா சொல்றது விளங்குதா,?" என்றான்.

"பக்கத்துத் திண்ணையிலிருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த சுலைகா, "ஆமாண்டி கண்ணு தெரியாத புள்ளய தேரத்தோடு அழைச்சிட்டு போ ஊட்டுக்கு சீக்கிரமா ஸ்கூல்ல சேர்த்திரு. நம்ம கங்கைகொண்டான் நாதாக்கள் நல்ல மாரியா படிக்க வைப்பாஹ..." என்று தலையில் முக்காடுப் போட்டுக் கொண்டுச் சொன்னாள். எப்போதும் ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் இரக்கமும் கருணையும் ஜாஸ்திதான்.

அவள் புருஷன் வயிற்றை எக்கிப் பிடித்தவாறு இருமிக்கொண்டிருந்தார். அவர் வயிறு மேலும்கீழுமா ஏறி இறங்கியது. வயிறு முட்ட இரையெடுத்துவிட்டுத் தாங்கமுடியாமல் இருமிக் கொண்டிருக்கிறார்.

"சொன்னா கேக்கியளா. கொஞ்சமா சாப்புடுங்க வேல செய்யாம படுத்துக் கிடக்குற ஆளுக்கு தகுந்தாப்ல சாப்புடணும். மலைப்பாம்பு மாரி முழுங்குனா இப்படித்தான் இருக்கும்" எல்லோரையும் பார்த்து நியாயம் கேட்பதுபோல் சத்தமாகப் பேசினாள்.

"ஆமா சும்மா நிறுத்துளா. என்ன அப்புடி சாப்புட்டு போட்டேன். பிராயத்துல சாப்புட்டதல காவாசிகூட சாப்புடுல.." அவருக்கு சாப்பாடு

ஆசை குறையவில்லை இன்னும். அதிகமாக சாப்பிட வேண்டுமென்ற விருப்பம் இருப்பது அவரது பேச்சிலும் சைகையிலும் தெரிந்தது.
சுலைகா அவரது காலை விட்டு விலகிக்கிடந்த சாரத்தைச் சரி செய்தவளாக அவரை முறைத்துப் பார்த்தாள். மேற்கொண்டுப் பேசாமல் நெஞ்சில் கையை வைத்தபடி வேறு எங்கோ பார்ப்பதுபோல முகத்தை வைத்துக் கொண்டார்.
முத்தாச்சி தன் மகனைக் கையில் பிடித்துக்கொண்டு ரெண்டு தோளிலும் பைகளைத் தொங்கப் போட்டபடி தக்கரையைப் பார்த்துப் போய் வருவதாகச் சொன்னாள்.
"வாப்பா போய்ட்டு வாரேன்னு சொல்லுல" மகனிடம் கேட்டுக்கொண்டாள். அவனும் அன்பாக போய்ட்டு "வாரேன் வாப்பா" என்று சொன்னான். மகன் வாப்பா என்று தக்கரையை அழைக்கையில் அவளுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது. அவள் அவனைக் கடைசியாக பார்த்தவாறு கிளம்பினாள். தக்கரை அவளைப் பார்க்காததுப் போல தலையை கவிழப் போட்டபடிச் செங்கல் தரையை பார்த்துக் கொண்டிருந்தான். " துரைக்குட்டி, நல்லமாரியா போய்ட்டுவாப்பா" என்ற அவனது சன்னமான குரல் அவனுக்குத் கேட்டிருக்க வேண்டும். அவன் "சரி வாப்பா" என்றான்.
"எம்மவனுக்கு எலிக்காது. சின்னச் சத்தமின்னாலும் அவனுக்குத் தெளிவாக கேக்கும் சுலைகா அக்கா... சரி எல்லாரும் நல்லபடியா இருங்கோ. நாங்க போய்ட்டு வாரோம்."
இருவரும் மெதுவாக நடந்து கொஞ்சம் தூரம்போன பிறகு, தலையைத்தூக்கி அவர்கள் போவதைப் பார்த்தான் தக்கரை.

## அத்தியாயம் -14

அப்பல்லோ காலனி

காலனியின் உட்புறமாக அமைந்துள்ள பங்களாவீட்டின் கேட்டில் நின்றபடி "அம்மா... மா" என்று குரல் கொடுத்தாள் பாத்தும்மா. கரகரத்த நாராசக்குரல் பூவேலைப்பாடுகளுடன் கூடியப் பெரிய நிலைக்கதவில் மோதித்திரும்பியது. பாத்துமா மீண்டும் தன் கீச்சுக் குரலால் அழைத்தாள். கதவு திறக்கும் என்று எதிர்பார்த்தபடி நின்றார்கள். நந்தியாவட்டை மரமும், போகன்வில்லாவும் அடர்ந்து நின்றதால் அடர் நிழலின் இருளில் குளிச்சியாகவே இருந்தது வீட்டின் கார் நிற்கும் முன்முற்றம்.

பாத்தும்மாவின் மருமகள் பானு கொடூரமான குரலில் " அம்மா மாமா.." என்று நீட்டிச் சொன்னாள். நிச்சயமாக அந்தக் கூவல் வீட்டுக்காரர்களை எரிச்சலூட்டி கதவைத் திறக்க வைத்துவிடும். பானுவின் மகள் இரும்புக் கேட்டை ஆட்டினாள். முத்தாச்சியும் அவள் மகனும் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள்.

தெருவியாபாரிகள் தங்கள் சரக்கை விற்பனை செய்யும் பொருட்டு, அதன் பெயரை வேறுரூபத்தில் அழைப்பதன் மூலம், வாடிக்கையாளர்களை உன்னிப்பாகக் கவனிக்க வைப்பது போல, பிச்சை எடுப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட வீட்டில் இருப்பவர்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், தங்கள் அழைப்புக்குத் தகுந்த பதில் வேண்டுமென ஒரு வித்தியாசமான, கொடுங்குரலில்தான் அழைக்கிறார்கள். இரண்டு மூன்று குரல்களுக்குள் அந்த சத்தம் காதைத் துளைத்து அவர்களைச் சலனப்படுத்தி வீட்டுக்கு முன் வரவழைத்துவிடும்.

கதவைத் திறந்து வீட்டுக்காரர், "ஏன் இந்தா பாடு படுத்துறீங்க காலையிலே வந்து" என்றவர் அதற்கு மேல் பேசாமல் நிறுத்திக்கொண்டு எல்லோரையும் பார்த்தார்.

"சீதேவிகளே.. பெரியவங்களே.. அஸ்லாமு அலைக்கும். உங்க புள்ளகுட்டி எல்லாம் நல்லாருக்கட்டும். ரம்சான் சக்காத்து தாங்கோ," அதைக் கேட்டபடியே அவர் திரும்பும் போது "ஏழுபேர் வந்திருக்கோம். கண்ணு தெரியாத பேரனுக்கு பார்த்துச் செய்யுங்கோ" நீங்களும் உங்க குடும்பமும் பரக்கத்தா வாழணும்." அவர் மீண்டும் முத்தாச்சி மகனை உற்றுப் பார்த்துவிட்டு முத்தாச்சியையும் பார்த்தார். முத்தாச்சி விலகிகிடந்த முந்தாணையை எடுத்து முக்காடுப் போட்டபடி நின்றாள்.

நோன்பு மாதம் நடந்து கொண்டிருந்தது. முஸ்லிம் வீடுகளில்

"ஜக்காத்து" என்ற பெயரில் தாராளமாகக் கொடுப்பார்கள். இதற்காகவே ரம்சான் மாதத்தில் யாசகம் கேட்க குழுக் குழுவாகப் படையெடுத்தபடி வருவார்கள். யாரைப் பார்த்தாலும் கஷ்டப்படுபவர்கள் போலத் தெரியாது. முக்காடிட்டப் பெண்கள் ஆறு, ஏழுபேர் சேர்ந்துக் கொண்டு முஸ்லிம் வீடுகளாகப் பார்த்து போவார்கள். அதற்காக முந்தைய நாளே ஆள் சேர்த்து விடுவார்கள். காலை யாசகப் பயணம் கிளம்பிவிடும். முத்தாச்சியையும் அவள் மகனையும் நேற்று ராத்திரியே பேட்டையில் வசிக்கும் பாத்தும்மாவின் மருமகள் பார்த்துக் காலையிலேயே வரச் சொல்லிக் கூப்பிட்டாள். பாத்தும்மாவின் பின்னாலேயே போக வேண்டும். பாத்தும்மா அவ்வளவு கனத்த உடம்பை இழுத்துக் கொண்டு வேகவேகமாக நடப்பாள். எல்லா வீட்டுக்கும் அவள் அசைந்து அசைந்து நடந்துதான் தீர்க்கணும். இந்த மாதம் முழுவதும் அவளின் வருமான காலம்.
பெரிய வீட்டின் கதவைத் திறந்துகொண்டு வந்த நிறமான பெண்மணி முக்காட்டை சரி செய்தபடி கைக்குள் வைத்திருந்த நூறு ரூபாய் தாளைக் கொடுத்து. எல்லோரும் பிரித்துக் கொள்ளுங்கள் என்றாள்.
"அம்மா வருசத்துக்கு ஒருதரம் தான் வாரோம். கண்ணு தெரியாத பேரன குருட்டுப் பள்ளிக்கூடத்துல சேக்கணும். புள்ளயளுக்கு பெருநா துணி எடுக்கணும். யூனிபார்ம் எடுக்கணும். அல்லா ரஹ்மத் செய்வான் எங்களுக்கு நல்லபடியா தாங்கோ சீதேவியளே.." என்றாள்.
அந்த பெண், முத்தாச்சி மகனை உறுத்துப் பார்த்துவிட்டு வீட்டுக்குள் போனது. கதவைச் சாத்திவிட்டுப் போகவில்லை போய்க் கொண்டு வந்து கொடுக்குமென நம்பிக்கைத் தென்பட்டது நின்று கொண்டிருந்தார்கள்.
கதவு திறந்தது. மேலும் ஒரு அம்பது ரூபாய் தாளைக் கொடுத்தாள் வீட்டுக்காரி. "பெருநா அன்னிக்கி வா. அந்தப் பையனுக்கு யூனிபார்ம் துணி எடுத்து வச்சிருக்கேன்... சரியா"
பாத்தும்மா கெஞ்சி கூடுதலாய் ரூவாயும், சேலையும் வாங்கிவிடவேண்டுமென்று பார்த்தாள் வீட்டுக்காரி கதவை அடைத்துவிட்டுப் போய்விட்டாள். இனி அந்த வீட்டில் அவ்வளவுதான்.
பாத்தும்மா அதிலிருந்து ரெண்டு வீடு தள்ளி இருந்த வீட்டிற்கு முன் நின்று கேட்டைத் தட்டினாள். "அம்மா.. ஜக்காத் கேட்டு வந்திருக்கேன். பாத்தும்மா வந்திருக்கேன்" வீட்டுக்குள் கேட்கும் அளவிற்குக் கத்தினாள். யாரும் திறக்கவில்லை. அடைத்தபடியே மின்விசிறி ஆடும் சத்தம் மட்டும் கேட்டது. யாரோ தூங்கிக்கொண்டிருக்கிறாள் என்பது தெரிந்தது.
மீண்டும். பாத்திமாவின் கர்ணக் குரலை ஜன்னலின் ஓர விளிம்பு

வழியாய் உள்ளே அனுப்பினாள் சிறிதுநேரத்தில் கதவைத் திறந்த பெண்மணி, "நோம்பு நேரத்துல காலையிலே வந்தா எப்படித் தூங்குவோம்" என்றபடியே ரூபாயை எடுத்தாள்.
"ஏழுபேர் வந்திரிக்கோம்" என்றாள். எழுபது ரூபாயை எண்ணிக் கொடுத்துவிட்டுத் தூங்கப் போனாள்.
பாத்தும்மா பத்து வருடமாக நோன்பு ஜக்காத் வாங்கி வருபவள். அவளுக்கு யார் வீட்டில் என்ன கேட்க வேண்டும் என்று தெரியும். சில வீட்டில் புதுச் சேலை கேட்பாள். சில வீட்டில் அரிசி சாமான்கள். எப்படியும் ஒருமாதத்திற்குள் புதுச்சேலை பதினைந்துக்கு மேல் சேர்த்து விடுவாளாம். பத்து சேலையை விற்று விடுவாள்.
அவளின் சாமர்த்தியம் வீட்டுக்கு வீடு மாறிக்கொண்டே இருக்கும். வீட்டுக்காரர்கள் காசாகக் கொடுத்தால் அவர்களிடம் பேசுவதேயில்லை. அப்படியே அடுத்த வீட்டுக்குக் கிளம்பி விடுவாள். அவர்கள் ரூபாய் நோட்டுகளாகக் கொடுத்து விட்டால், அவ்வளவுதான், அவர்கள் தராதரத்திற்குத் தகுந்தாற்போல் குடும்பக் கஷ்டங்களை அடுக்கிக் கொண்டேப் போவாள். எப்படித்தான் அவளின் வாயிலிருந்து அடுக்கடுக்காக வார்த்தைகள் வந்து விழுமோ தெரியவில்லை மாமியார் பாத்துமாவின் லீலைகளைச் சொல்லிக் கொண்டே வந்தாள். முத்தாச்சிக்கு ஆச்சரியமாக இருந்தது.
பாத்துமா வேகமாகக் காலைக் கெந்தியபடி பாரதி நகர் எதிர்த்த வீதியிலுள்ள வீடுகளை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.
அவள் முக்காடுத் தலைக் கீழிறங்கி ஒரு பக்க மார்பு கவிழ்ந்துக் கிடந்தது, அவள் எதுவும் கண்டுகொள்ளாததைப் போலத் தெருவைக் கடந்தாள். எப்போதும் அவள் மற்றவர்களை ஈர்க்கச் செய்யும் தந்திரம் என்பது அவளோடு பழகியவர்களுக்கு மட்டும்தான் தெரியும். தனது கவைக் கண்ணால் பின்னால் திரும்பிப்பார்த்தாள்.
"ஏய் தேவடியா... என்னளா பேச்சி வேண்டிக்கிடக்கு. பானு இது தெருவா போச்சேன்னு பாக்கேன். என்ன குசுகுசுன்னு பேசிக்கிட்டே அன்னநடை நடக்கியோ. வாங்களா சீக்கிரமா.." என்றவள் பெரிய வீட்டைக் கண்டவுடன் முக்காட்டை இழுத்து முகம் மறைய போட்டுக் கொண்டாள்.
ஒரு தந்திரமான சோகம் முகம் உடனே உருவாகிவிடுகிறது. சோக முகத்தில் ஒரு வருட உழைப்பிற்கான உத்தி அப்பட்டமாய் தெரியும் ஒரு பவ்யமான, அடக்கமான பெரிய மனுசி ஆயிரம் சோகங்களோடு நிற்பதுபோல இருக்கும்.
"ஏட்டி பானு.. இதுக்குத்தான். முத்தாச்சியெ வேண்டாம்னு சொன்னே. அவளால அவெ மொவன வச்சிக்கிட்டு வேகமா வரமுடியாதுன்னா

கேக்கியா.. வாங்களா சீக்கிரமா.. இன்னும் எம்புட்டு ஊடு போவனும் தெரியுமா," என்றாள் பாத்திமா.
அந்தப் பெரிய வீட்டுக்காரர் ஆளுக்கு இருபது ரூபாய் வீதம் கொடுத்தார். பாத்துமா மற்றவர்களைப் போகச் சொல்லிவிட்டு அவரிடம் கெஞ்சினாள்.
"யத்தா.. எந்நொண்டி மொவன் நடக்கமுடியா ஊட்ல கிடக்கான்யா.. அவன் பெத்த புள்ள குருடாயக் கிடக்கு. அதெ குருட்டு பள்ளிக்கூடத்துல சேக்கணுங்க. அவுங்க கேக்க தொகையெ கொடுக்கமுடியல. எங்க ஊட்டுக்காரர் அலுமினியப் பட்டறை வேலை பார்த்து ஆஸ்த்மா வந்து இப்பவோ நாளையோன்னு கெடக்கார். அல்லா எல்லா வருசமும் போல உங்களுக்கு பரக்கத்து செய்வான். குருட்டு புள்ளைக்கு உதவுங்கய்யா நீங்க உங்க வம்சமெல்லாம் தழைக்கும் முதலாளி..." அழுது கண்ணீர் விட்டுப் புலம்பி நின்றாள்.
அவளது நடிப்பில் அவள் வெள்ளை தலைமுடிகள் விசிறிபோலப் படந்துக் கிடந்தன. சோகமே வடிவாக அவளின் கொடுமைகளைக் கேட்டவர் வீட்டுக்குள் போயி ஒரு 500 ரூபாய் நோட்டைக் கொடுத்தார் அவுங்க வீட்டுக்காரியிடம் நல்ல சேலையிருந்தா கொடுக்கச் சொன்னார். நல்லசேலைகள் நாலைந்தை மடித்து போத்தீஸ் பெரியக் கவரில் போட்டுக் கொடுத்தது பாத்துமாவின் கவலையேறிய முகம் இன்னும் சுருங்கிக் கொண்டே இருந்தது. அந்த வீட்டுக்காரர் முத்தாச்சியையும், அவள் மகனையும் பார்த்துக் கொண்டே இருந்தார்.
"இருவத்தேழாங் கிழமை அன்னிக்கி வாங்க, அந்தப் பையனுக்கு டிரஸ்சும், பள்ளிக்கூடத்துல சேக்க ரூவாயும் தாரேன்னு.." சொன்னார்.
"நீங்கோ நல்லாயிருக்கணுமய்யா.. உங்களுக்கு உங்கக் குடும்பத்துக்கும் வல்லநாயன் பரக்கத் செய்வான்யா. வருஷா வருஷம் உங்கக் கையால புது உடுப்பு வாங்கி நாங்க பெருநாளைக்கி உடுத்துணுமய்யா." அவள் கிறங்கிய முகத்தோடுச் சொன்னாள்.
பானு கிசுகிசுத்தாள். "பழையச் சேலைய வாங்கி டவுண் கடையிலப் போட்டு அதுவேற மாசத்துக்கு ரெண்டாயிரம் பாத்துப் போடுவாள்ல"
அன்றைய நாளில் பழையத் துணிமணிகளும், அரிசியும், பணமும் நிறையச் சேர்ந்துவிட்டது. எல்லோருக்கும் சாமான்களைச் சுமக்கப் பைகள் கொடுக்கப்பட்டது. முத்தாச்சி ஒரு கையில் மகனைப் பிடித்துக் கொண்டு கொடுத்தப் பையை தலையில் வைத்துக் கொண்டாள்.
"சந்திப்பு வந்ததும் பேருந்து நிறுத்தத்தில் தன் ஜாக்கெட்டுக்குள் வைத்திருந்து செல்போனை எடுத்துப் பாத்தும்மா மகனிடம் போசினாள்..." ஏலே.. நாங்க இப்பம் பஸ் ஏறிடுவோம். நீ அரைமணி நேரத்துல பஸ்ஸ்டாப்புக்கு பைக்குல வந்திரு. சாமான் ரொம்ப இருக்கு"

என்றாள்.
பேருந்து ஏறிப் பேட்டைக்கு வந்து சேர்ந்தவுடன் எல்லாப் பொருட்களையும் தனதுப் பைக்கில் ஏற்றிக் கொண்டு, பாத்திமாவின் மகன் தன் மனைவி பானுவையும் ஏற்றிக் கொண்டு மகிழ்ச்சியுடன் பைக் உறும விரைந்து போனான்.
"முத்தாச்சி இந்தாம்மா ஆளுக்கு எறநூறு ரூபா. நாளைக்கும் வாங்கோ சேலை கிடைச்சா ரெண்டு சேல உடுமாத்துக்கு தாரேன்" என்றாள். அவளின் பேச்சு 'லால்மை' எல்லாம் அப்படியே மாறிப் போனது.
பாத்தும்மா 500 ரூபாயும், சேலைகளையும் கொடுத்த முதலாளியை கிண்டல் பண்ணி அவனது கீச்சுக்குரலில் மிமிக்ரி செய்வது கேலியாப் பேசிக்காட்டினாள்.
"இன்னைக்கு மத்தியானம் நல்ல சாப்பாடுக் கிடைக்கல்லே. நாளைக்கு ரஹ்மத் நகர், சாந்தி நகர் பக்கம் போவோம். அங்க நாக்கு ருசியாக் கிடைக்கும். வாங்கித் தாரேன்.. புள்ளையப் பத்திரமாப் பாத்துக் கூட்டிட்டுப் போ" என்றாள்.
முத்தாச்சி தனது மகனைப் பிடித்துக் கொண்டு தன் வீட்டுக்கு நடந்தாள். எப்போதும் அமைதியாக எல்லாவற்றையும் அறிந்தபடி வந்தான். பாத்தும்மா பிச்சையெடுப்பதைத் தொழில் போல மாற்றியது கண்டு அதிசயித்து நின்றாள் முத்தாச்சி.
ஏழை எளியதுகளுக்குச் செய்கிறோம் என்று எண்ணிக்கொண்டு தலையை எண்ணிக் கொடுக்கும் மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்று வருந்தினான் முத்தாச்சி.
"எனக் கென்னமோ.. புடிக்கலம்மா... நாளைக்கு நா வரலம்மா" குட்டித்துரை சொன்னான். அம்மாவின் கையை இறுக்கிப் பிடித்தபடி அந்த இறுக்கத்தில் அவனின் பாசம் உணர்ந்தாள்.
"ஏம்புள்ள.. ஏம் புள்ள" என்று தலையில் அடித்துக் கொண்டாள். அந்த இருட்டுக்குள் அவள் தலையில் அடித்தது அவனுக்கு துல்லியமாக கேட்டிருக்கும்.
"ஏம்மா.. தப்பா சொல்லிட்டனா"
"இல்லப்பா.. எனக்கும் மனசுக்குப் புடிக்கலப்பா. நானும் போவக்கூடாதுன்னு நெனைச்சேன். பெரிசுக வாக்கு போல சொல்லிட்டே. இனி போக வேண்டாம்பா" என்றபடி தன் மகனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.
அவனும் அம்மாவை இறுக்கிக்கட்டிக் கொண்டான் தன் தலையை வைத்து அவள் தோளில் முத்தமிட்டு அவளைத் தடவிப்பார்த்து அம்மாவின் மகிழ்ச்சியை உணர்ந்தான். அந்த சுகிப்பில் லயித்துக் கண் மூடி நின்றாள் முத்தாச்சி.

## அத்தியாயம் -15

மானூர்

ஒவ்வொரு வருடமும் தர்கா விசேசத்திற்காக மணல் அடிப்பது உண்டு. தர்காவிற்கு வரும் பக்தர்கள் உட்கார்ந்து கொள்வதற்கும் படுப்பதற்கும் ஏதுவாகச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடு அது. இரவு முழுக்க பரம்பரமென்று வீசிய ஆடிக் காற்று மணல் தரையை மிக நேர்த்தியாகப் போர்வையைப் போல எந்த சுருக்கமுமின்றி விரித்து வைத்திருந்தது. காலைத் தொழுகை வரைக்கும் அதன் விரிப்பு குலைவதில்லை. அதன்பிறகு மனுசர்கள் நடமாட்டத்தில் கலைந்துவிடுகிறது. தனது அழகிய ஒப்பனையுடன் தனது மூன்று விரல்களை ஊன்றி ஊன்றி வந்த பீரு சடக்கென கொடிமரத் திண்டில் பறந்து ஏறியது அதன் கால்தடம் அழகாக வரிசையாக அந்த மண்ணில் பதிந்திருந்தது. தனது இறக்கைகளைப் படபடக்க விரித்துத் தலையைத்தூக்கி அலகுகளை விரித்து வானம் நோக்கி கூவியது. "கொக்கரக்கோ..." எனும் அதிகாலையில் அதன் கூவுதல் படுத்துக் கிடந்த பலரையும் எழுப்பியது.
தொழுதுவிட்டு வந்த சிலர் ஓடையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். பீரு திரும்பி கிழக்கே பார்த்தபடி நின்று மீண்டும் கூவியது. சுலைகாவிற்கு முழிப்பு வந்துவிட்டது. அவள் எழுந்து பீருவைப் பார்த்தாள். உடனடியாக தலையில் முக்காடு போட்டுக்கொண்டு ஸலாம் வைத்தாள். அது திண்டில் கிடந்த பொரிகடலைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தது மெதுவாக சுலைகா சேவலை. "பே.. பே" வென அழைத்தாள்.
சட்டென திரும்பிய சேவல் அவளை நோக்கிப் வேகமாகக் கால் வீசி நடந்து வந்தது. அவள் கிண்ணியிலிருந்து கொஞ்சம் குருணையை எடுத்துப் போட்டாள். அது கொத்தித் தின்றபடியும் தலையைத்தூக்கி அவளைப் பார்த்தபடியும் இருந்தது. அதன் பார்வையில் சொக்கிப்போனாள் சுலைகா.
பீருவின் தனிமை குறித்து சுலைகாவிற்கு பெரும் சோகம் இருந்தது சந்தையில் ரெண்டு பொட்டைகோழி பிடிச்சிட்டு வந்து கூட விட்டால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று எண்ணினாள். நாதாக்கள் (இறைநேசர்) தனிமையில் வாடுவது சரியல்ல என்று மனக்கிலேசப்பட்டாள்.
நீண்டு உயர்ந்த கொண்டையும் தாடியும் அதற்கு மிகவும் அழகாக இருந்தது. அயிரை மீன் வண்ணத்திலான சிறு சிறு இறகுகள் கழுத்தில் படர்ந்து போல தொங்கிக் கொண்டிருந்தன. நீண்ட வால் இறக்கைகள், அது நடக்கும் போது போனி டெயில் பெண்கள் முடி ஆடுவதைப் போல

ஆடிக்கொண்டிருந்தது. தலையை நீட்டி வைத்துக்கொண்டு குதிரையைப் போல நடந்து வரும்.
நேற்று அதன் அழகை தக்கரையிடம் காட்டிச் சொன்னாள். "லே தக்கரை. இதுக்கு மட்டும் ரெண்டு மூணு பெட்டைகள் வாங்கி வுட்டோம்னு வச்சிக்கோ, தெனம் முட்டைக்கு பஞ்சமே இருக்காது ரெண்டு மூணு இல்ல நாலஞ்ச கூட சமாளிக்கும் போல ஒவ்வொன்றையும் முட்டையிட வைத்து அடைகாக்கும் சரியான இடத்தைக் கொண்டு போய் காட்டும். அவ்வளவு சூட்டிப்பானது", என்று தக்கரை மரியாதையோடு சொன்னான். தக்கரை அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதைப் போல அருகில் உள்ள வாதமடக்கி மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது சேவல். பீருக்கு அதன் தேவைக்கு மேலே எல்லா ருசியாக உணவு வகைகளும் கிடைத்து வந்தது. நாளுக்கு நாள் அதன் எடை கூடி குணுக் குணுக் கென்று நடந்தபடி தன்னைக் காட்டிக் கொண்டு எங்கும் திரிந்தது.
அதன் பரபரத்து கிளறும் கால்களில், ஒரு வலிமையை உணர முடிந்தது. தக்கரை அதன் ரசிகர். அவன் திண்டில் அமர்ந்திருக்கும் போதெல்லாம் அவன் அருகில் நின்று கொண்டிருக்கும். அதன் கனத்த உடலின் அசைவுகளில் ஒரு ஆண்மை கலந்த கம்பீரத்தை ரசித்துக் கொண்டே இருக்கலாம். அதன் கால் தடங்கள் அழகான நேர்கோட்டில் போய் கொண்டே இருக்கும்.
நேர்ச்சை சோற்றைத் திண்டுவிட்டு அது நிழலில் படுத்துக் கொண்டு எல்லோரையும் பார்த்துக் கொண்டிருப்பது போல இறக்கைகளை விரித்து அமர்ந்திருக்கும். கொஞ்ச நேரத்தில் எழுந்து தார்ச்சாலை வரை சென்று யாரையோ பார்த்துவிட்டு வருவது போல திரும்பி வரும்.
தர்கா கொடிமர வட்டத் திண்டில் எப்போதும் அவன் சம்மணம் போட்டு அமர்வதைப் போல அமர்ந்திருந்தான். அவன் அமர்ந்திருந்த இடத்திலிருந்துப் பார்த்தால் தார்ச்சாலை தெரியும். அவன் தார்ச்சாலையைச் சிறிது நேரம் பார்ப்பது போலவும், சிலசமயம் கண்ணை மூடிக் கொண்டு இருப்பவனைப் போலவும் இருந்தான்.
தக்கரையைத் தெரிந்தவர்களுக்கு அவன் சம்மணமும், அமர்ந்து கொண்டு மௌனித்து இருப்பதும் தெரியும். அன்று தர்காவில் எந்த விசேமுமில்லை. கூட்டம் குறைவாகவே இருந்தது. சுலைகாவிடம் பணம் கொடுத்து டீ வாங்கி குடித்துவிட்டு வந்து அமர்ந்திருந்தான்.
அவன் இன்னும் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்குக் கூட அந்த இடத்துலேயே அப்படியே அமர்ந்திருப்பான்.
சிலசமயம் கால் வலித்தால் கொஞ்சம் காலை ஒருக்களித்து வைத்துக் கொண்டு இருப்பான். காலைக் காற்று மென்குளிரோடு

அலையலையாய் மானூர் மலையிலிருந்து வந்து ஓடியாடி வந்தபடியே இருந்தது. கிழக்கிலிருந்து வந்த வெயிலின் கதிர்கள் இன்னும் சூடேறவில்லை. பனைமரத்தில் கிடந்து கேவிய மயில்களின் குரல் அவனது நிதானமான மனதைக் குலைத்துக் கொண்டிருந்தது. பத்து பதினைந்து வருடத்திற்கு முன்னாடி நரிக்குறவன் மயிலின் கால்களையும் கழுத்தையும் சேர்த்து கயிற்றில் கட்டியபடி தூக்கிக் கொண்டுக் காட்டுக்குள் போனது ஞாபகத்தில் வந்தது. மயில்கள் பெருகுவதை விவசாயிகள் விரும்புவதே இல்லை. அவர்கள் ஊன்றி வைக்கும் வித்துக்களையும் கூடத் தின்றுவிட்டுப் போய்விடும். தக்கரைக்கு மயில்கள்மீது கோபமில்லைதான். ஆனாலும் அவை நாட்டிற்கு வருவதைவிடக் காட்டில் வாழலாமே என்று எண்ணிக்கொள்வான்.

எப்போதாவது சிற்றாத்து ஓடைக்குப் போகும் சமயத்தில் பெரிய தோகைகளுடன் ஓரத்தில் மேய்ந்துகொண்டிருக்கும் மயில்களைப் பார்த்துக் கொண்டே இருப்பான். ஆனாலும் இப்போது இந்த அமைதியான சூழ்நிலையில் அதன் கேவல்கள் அவன் காதில் நாராசமாக விழுந்திருக்கக்கூடும். அவன் மயிலின் அழகையும், அசைவுகளையும், பறத்தலையும் நேசிப்பவன். அவைகளை இறைவன் மெல்லிசை குரலோடு படைத்திருக்கலாமே என்றுகூட எண்ணியிருக்கிறான்.

மயில்கள் என்றும் அழகானவைதான். அவைகள் இன்னும் கூட இயற்கையை நேசித்து, மழையை நேசித்து ஆடிக் கொண்டேயிருக்கக்கூடும் தக்கரையின் அமைதியான அமர்வு குறித்துச் சுலைகாவுக்கும் ஒர் எண்ணமுண்டு, அவன் குடும்பத்தில் எல்லோரும் ஓடியாடி வேலைச் செய்யக்கூடியவர்கள். அந்தக் குடும்பத்தில் பிறந்தவன் எப்படிக் குத்துக் கல்லாட்டம் புடிச்சி வச்சப் புள்ளையார் போல் இருக்கமுடிகிறது என்று எண்ணிக்கொள்வாள்.

அதைவிடவும் முத்தாச்சி தக்கரை உறவு குறித்தும் பல கேள்விகள் உண்டுதான். எந்தக் கேள்விகளும் அவனை அசைத்துவிடுமா என்ன? எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு அமைதியாகவே இருந்தான். மௌனத்தாலும், தாடியாலும் அவன் தன்னை பூசிக் கொள்பவனாக இருக்கிறான்.

சுலைகாவிற்கு எப்போதும் அவன் மௌனத்தைக் கலைத்து அவனது கடந்தகாலத்தைக் கிளறிவிடும் அலாதியான ஆர்வம் உண்டு. அவளுக்கு தெரியும் அவன் எப்போது பேசுவான் என்பதும். "தக்கரை சாப்பாடு ஏதும் வாங்கணுமா?" அவள் கேட்டபோதுதான் ஏறிட்டுப் பார்த்தான். அவளும் அவனருகில் கொடிக்கம்பத்து திண்டில் உட்கார்ந்திருந்தாள்.

"பழையது ஏதாச்சும் இருக்கா... அப்படியே சாப்புட்டுட்டு வெளியே

போவணும்"
"ஓ இருக்கு. வா பட்டியலுக்கு"
அவன் பல் விளக்கிவிட்டு அவன் உட்காரும் திண்ணையில் உட்கார்ந்தான்.
" என்னாக்கா.. மச்சான் இன்னும் கொரட்டையிலே இருக்காரு போலிருக்கே".
"ஆமா. சவம் தூங்கறதும் அப்படித்தான் முழிக்கிறதும் அப்படித்தான். ராத்திரிப் பூரா கொட்டக் கொட்ட முழிச்சிக்கிட்டு மினாராவையோ பூவரசு மரத்தையோ பாத்துக்கிட்டு இருக்கும். பகல்ல அதுக்கு சமானமாக் கிடந்து தூங்கும்"
"இல்லை.. ராத்திரி ரொம்ப வேலையோன்னு கேட்டேன்", அவன் சிரித்த போது கன்னங்களில் கோடுகள் மடிந்தன.
"ஆமா அவுரு வேலப் பாத்து நான் இளிச்சிக்கிட்டு கெடக்கேன். போலே பொட்டக்கண்ணா. அவரே காலெத்தூக்கமுடியாம கிடக்காரு. நா தூக்கி வைக்கேன். இதுல உனக்கு மலைஏறும் கேள்வி வேண்டிக் கிடக்காக்கும். அதுலாம் போயிப் பொல்லாத வருஷமாச்சு" என்று சொல்லிவிட்டு தன் மாராப்புச் சேலையை இழுத்துவிட்டுக் கொண்டாள்.
"அது சரில.. நீ உங்க வீடடை வுட்டு எப்படிப்பா ஓடிப்போனே"
"அது பெரீய்ய கதையக்கா. அதெச் சொல்லல்லாம் இப்ப நேரமில்ல. அப்ப, கங்கைகொண்டான் தர்கான்னா எம்புட்டு பேமஸ் தெரியுமா. அதுலயும் கந்தூரின்னா சுத்தியிருக்க எல்லா ஊர்லயிருந்தும் வண்டி மாடு கட்டி மூணு நாள் கந்தூரி முடியவும், நாலாம் நாளுதான் ஊட்டுக்கு போவாங்க.
"எங்க ஊட்லயும் ஊரடைக்கவும் எல்லோரும் வருவோம். பொம்பளைங்க எல்லாம் வில்வண்டியிலயும், ஆம்பளைங்க எல்லாம் கூட்டு மாட்டு வண்டியிலயும் வருவோம், பீருமுகம்மது அப்பா தர்ஹா என்னா விஷேஷமா கெடக்கும் தெரியுமா? ஆளு போக்குவரத்து என்னா? மாட்டு வண்டி என்னா... மக்க மனுசரெல்லாம் அரிசி தவசி அடுப்பு வெறவு எல்லாம் கொணாந்து பொங்கி தின்னுட்டு அடிக்கிற கூத்து என்னா, அதுலாம் ஒரு காலம். இப்ப இருக்குற பசங்களுக்கு தர்ஹான்னாலே புடிக்கறதில்லே"
அவன் எதையோ சிந்தித்தவாறுப் பேச்சை நிறுத்தினான். ஊறுகாயைத் தொட்டு நாக்கில் இழுவிக்கொண்டான். போதுமென்றிருந்தது மனதுக்கு. என்னவெல்லாமோ பழைய நினைப்புகள் அவன் சாப்பாட்டைக்கூட மறக்கவைத்தது. அதெல்லாம் இப்ப எதுக்கு? அந்த வித்துதானே இன்னிக்கு வரைக்கும் இங்கே மிஸ்கீனா வச்சிருக்கு. அடுத்த விநாடிகள் அவன் மனதில் இப்போதைய நிலைமைக்கு

அதுதான் காரணம் என்பது போல தோன்றியது. மேற்கொண்டுப் பேசுவதற்கு என்ன இருக்கிறது என்பது போல அமைதியானான்.
பிச்சைகாரர்களைப் பொறுத்த வரை சாப்பாடு குறித்தப் பெரிய அக்கறை எப்போதுமே இருக்கும். அது மட்டும்தான் அவர்களை இயக்கிக்கொண்டு இருக்கிறது. அதுமட்டும் இல்லையென்றால் அவர்கள் இன்னும் சோம்பேறிகளாக ஒரு இடத்தில் அறையப்பட்ட ஆணிபோல இருந்து செத்துப் போவார்கள்.
தக்கரை பீருமுகம்மதுவுக்கு அப்படிச் சாப்பாட்டு ருசி மீது பெரிய அக்கறை ஏதும் கிடையாது. பசிக்குச் சாப்பிடவேண்டும் என்பது தாண்டி நாக்கு ருசிக்காக அவன் எங்கும் ஓடியதில்லை. அதனால்தான் அவன் செல்லும் இடங்களும், பகிரும் உணவுகளும் ஒரேமாதிரியாக இருக்கின்றன. குறிப்பிட்ட இடங்கள் பிடித்துப் போவது போல அவனும் குறிப்பிட்ட இடங்களிலேயே தன் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் எளிதில் கடந்து சென்று விட முடிந்தது.
அது போதுமா, போதாதா என்பது பற்றி எந்தக் கவலைபட்டதும் இல்லை.
சுலைகா அவன் சிந்தனையைக் கலைக்கும் விதத்தில் மீண்டும் பேசினாள். "தக்கரையப்பா... நா கேக்கேன்னு கோவப்படக்கூடாது. நீ சின்ன வயசிலேயே ஒரு குறவன் பொண்டாட்டியோட ஓடிப் போயிட்டேன்னு பேசிக்கிட்டுத் திரியுதுவொ. தர்காச் சோத்தத் திண்ணு வயிறு வளர்க்கிற மூதீயோ. அதான் உண்மையான்னு கேக்குறேன்".. என்றாள்.
"ஆமா சுலைகா.. அது நடந்தது வாஸ்தவம்தான் ஆனா நானா ஓடிப்போவல தெரிஞ்சுக்கோ. அவ எம்மேல ஆசப்பட்டு இழுத்துட்டு போன மாரி, அழைச்சிட்டு போய்ட்டா. என்னப் பன்றதுன்னு தெரியல. சின்ன வயசுல விவரம் பத்தல அவ மேல் ஆசப்பட்டு அப்படியே போய்ட்டேன்."
"அதானே.. நாற மூதியோ அவொ அழகுல கிறங்கி போயி அவளோட ஓடிட்டதாப் பேசிக்கிட்டுத் திரியுதுவொ. அவளுக்கும் உனக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா?" சுலைகா மேற்கொண்டு அவன் பேசுவான் என்று எதிர்பார்த்து கன்னத்தில் கைவைத்து மோவாயைத் தூக்கிவைத்து அவனையேப் பார்த்தபடி இருந்தாள்.
அவன் அதற்கு மேல் பேசுவதற்கு சொல்வதற்கு என்ன இருக்கிறது என்பது போல அமைதியானான். சுலைகாவிற்கு ஏமாற்றமாய் இருந்தாலும், அவனைப் பொறுத்தவரை வாயைத் தொறக்க வைப்பது எளிதானதல்ல என்பதும் தெரியும்.
சாப்பிட்டுவிட்டு கையைக் கழுவினான். "பாளையங்கோட்டை

போறேன் ஏதாவது வாங்கிட்டு வரணுமா?" என்று கேட்டதற்கு "ரெண்டு லைப்பாய் சோப் வாங்கிட்டு வா என்று ஐம்பது ரூபாயை எடுத்தக் கொடுத்தாள். அவன் வாங்கிக்கொண்டான்.
அப்படியே நடந்து போனான். சுலைகா அந்த இடத்தை விட்டு நகர்ந்துபோய் அவள் கணவனுக்குப் பல்தேய்க்க பல்பொடி எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.
"சுலைகா எதற்கு இந்த கேள்வியைக் கேட்கிறாள் என்று மனதை வறுத்து எடுத்தது. யார் அவளிடம் என்ன சொல்லியிருப்பார்கள். ஒரு வேளை மோதினார் காசிம் அவளிடம் ஏதும் சொல்லிக் கொடுத்திருப்பானோ? சுலைகா கில்லாடியாச்சே காசிம் வாயிலேர்ந்து அம்புட்டையும் பிடுங்கியிருக்கமாட்டா... எல்லா தெரிஞ்சிக்கிட்டுத்தான் பேசுறாளோ.." என்றெல்லாம் எண்ணிக்கொண்டு நின்றான்.
எதிர்த்தாற் போல் பைக்கில் வந்தவர்கள் சீவலப்பேரி எப்படிப் போக வேண்டுமென்று கேட்டார்கள் அவன் பாதையைச் காட்டச் சீறிக்கொண்டு பைக் மீண்டும் பறந்தது. மேக்காத்து அடிக்கத் துவங்கிவிட்டது ஏற்கனவேப் பொதிகைமலைக் காற்று காதை கிழிக்கிறமாதிரி அடிக்கிற பூமி. இதுல மேக்காத்தும் சேர்ந்துவிட்டால் ஆளையேத் தூக்கிவிட்டு போய்விடும்.
வந்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தான். பஸ்ஸில் அதிகக் கூட்டமில்லை பின் இருக்கைக்கு முந்தைய சீட்டில் உட்கார்ந்தான். அவனுக்கு உட்கார சீட்டுக் கிடைச்சவுடன் ஏதோ இந்திரலோகத்தில் இருப்பது போலத் தோன்றியது முன்னால் ஒரு நடுத்தர வயதுப் பெண் பிள்ளையை வைத்துக்கொண்டு தூண் கம்பியைப் பிடித்தவாறு நின்று கொண்டிருந்தாள்.
அவளை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. ஆமா. அச்சு அசலா வள்ளி கணக்காகவே இருந்தாள். வள்ளிக்கு அய்ந்து வயது குறைச்சிருந்தா எப்படியிருக்குமோ அப்படி இருந்தாள். நீளமான முடி பிட்டத்துக்கு கீழ்வரை தொங்கியது. உயரமும் அப்படியே அஞ்சு அடிதான் இருப்பாள். பின்னாலும், ஒரு புறமாய் சரிந்து அவள் நிற்கையிலும் வள்ளியே ஞாபகத்திற்கு வந்தாள்.
வள்ளிதான் அவன் வாழ்வையே வேறோடுப் பிடுங்கி வேறு திசைக்கு அனுப்பி வைத்தவள். அவளது குண்டு மார்புகளும் கனத்தப் பிட்டிகளும் அவனை எங்கெல்லாம் அழைத்துச் சென்று இங்கு இந்த நிலைமையில் நிறுத்தியிருந்தது. வள்ளியின் சூடான மூச்சு வெப்பமும், வெள்ளரிப் பழ நாற்றமும் மனதுக்குள் வந்தன. மூச்சை இழுத்து விட்டுக் கொண்டான்.
அவளது இறுகிய மார்புக்குள் முகம் புதைத்திருக்கும் போது, அவள் இறுக்கிய இறுக்கத்தில் பலதடவை மூச்சுத் திணறிக் கிடந்தது நினைவில்

வருகிறது. மீண்டும் ஒரு தடவை மூச்சை இழுத்து விட்டான்.
அவள் முழுப் பெயர் சமுத்திர வள்ளிதான். ஆமாம் சமுத்திரம் தான். அவனை விட அவளுக்கு பதினைந்து வயது அதிகம். அவளது அனுபவமும் வயதும் பத்துக் கரங்களைப் போல அவனை ஈர்த்தன. அவளின் அந்தரங்கங்களையும் அதரங்களையும் அவனுக்குக் கொடுத்துவிட வந்தாள். எல்லாவற்றையும் எங்கிருந்தோ வந்துக் கொடுத்துவிடடு, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, அவனை அந்தரத்தில் விட்டுவிட்டு எங்கோ போய்விட்டாள்.
ஆமாம் அவள் போயிருக்கவில்லையென்றால் அவனும் எங்கோ போக வேண்டியவனாக ஆகியிருப்பான். அவனுக்கு திடீரென மூச்சு, வாங்கித் தொண்டை வரண்டது. அவளின் மீதான ஆசை இன்றைக்கும் அவனைத் திண்டாட வைத்துவிடும். ஜோல்னாப்பையைத் தொட்டுப் பார்த்தான். தண்ணீர் பாட்டில் காலியாக இருப்பது தெரிந்தது எங்குத் தண்ணீர் பிடிக்கலாம் என்று எண்ணினான். சித்தாற்றில் ஓடும் தண்ணீரை அவன் அவளோடு கையால் அள்ளிக் குடித்ததுதான் ஞாபகத்திற்கு வருகிறது. இப்போது பஸ்ஸில் இருக்கிறபோது அவள் முகத்தில மூடிய அவள் முந்தானையின் வாசம் அவனைத் துரத்துகிறது. பேருந்து ஆத்துப்பாலம் தாண்டி கேலக்ஸி மருத்துவமனைத் திருப்பத்தில் திரும்பியது. அவனுக்கு வண்டியை விடடு இறங்கணும். கிறுகிறுத்தபடி மனது சொல்லியது.

## அத்தியாயம் -16

கோபாலன் கோயில்

தக்கரைக்கோ, சூசைக்கோ, சோத்துப் பெட்டிக்கோ அல்லது அவர்களைப் போன்ற பிச்சைக்காரர்களுக்கோ செலவு என்பது எப்போதும் கிடையாது. அவர்கள் செலவழிக்க ஆரம்பித்துவிட்டால் அவர்கள் பிச்சைக்காரர்களாக இருக்க மாட்டார்கள். அந்த செலவே அவர்களை செயல்பட வைத்துவிடும். பெரும்பாலும் பிச்சைக்காரர்கள் நடப்பதை விரும்புவதும் அதற்குத்தான். கையில் எவ்வளவு தொகை இருந்தாலும் லேசில் செலவழித்துவிடமாட்டார்கள் அதுதான் அவர்களை அப்படியேப் பிச்சைக்காரர்களாக வைத்திருக்கிறது. அவர்களுக்கு இருக்கும் ஒரே செலவுப் பேருந்துக் கட்டணங்கள் மட்டும்தான். ரயிலுக்கு கட்டணம் தேவையில்லை. ஓசிப்பயணத்திற்காகப் பிடித்தாலும் அடுத்த நிலையத்தில் விட்டுவிடுவார்கள். அதுவும். ஓசிப் பயணிகளைப் டிக்கெட் பரிசோதகர் ரயில் காவல் நிலையத்தில் ஒப்படைப்பது இல்லை. அவரும் வேலை மெனக்கெட்டு காவல் நிலையத்தில் காத்துக் கிடக்க வேண்டுமல்லவா?
மற்றபடி பெரிய பெரிய உணவகங்கள் பல்பொருள் அங்காடிகள், சினிமா அரங்குகள் என எங்கு நின்றாலும் அவர்கள் அங்கு எதுவும் வாங்குவதில்லை. ஆலயத்திற்கு முன் இருந்தாலும் வணங்குவதற்கு என்றும் அவர்கள் காசை செலவழிப்பதில்லை.
பலபேர் குளிப்பதே இல்லை. குளித்தாலும் துணியை நனைப்பதில்லை. நனைத்தாலும் அப்படியே வந்து விடுவார்கள் தலையைக்கூட துவட்டமாட்டார்கள். உணவிற்கான தேடுதல் மட்டும் அவர்களுக்குரிய ஒரே தேடுதல். சிலபேர் அதுவும் தேடுவதில்லை. கிடைக்கும்போது சாப்பிடுவது. மற்றநேரத்தில் பட்டினி அல்லது எதையாவதுச் சாப்பிட்டு விட்டு வயித்துப்பாட்டை கழிப்பதுதான்.
எச்சில் இலை சாப்பிடுவனின் வாழ்க்கையில் தேடல் இருபது நிமிடங்களுக்கு மேல் இருக்காது. அதன் பிறகு எந்த கவலையுமற்ற ராஜா அவன்தான்.
தக்கரை சொல்வான் "எவன்டா நம்மைப் போல இருக்க முடியும்" பாரு எல்லாரும் கார்ல, பஸ்ல, பைக்ல ஓடிக்கிட்டே இருக்கான் எப்படியாவது பணத்தை சேர்த்து ஊட்டுக்கு கொண்டு போவணும். அதுக்காவ ராத்திரியும் பகலும் கிடந்து நாயா உழைக்காங்க. அதுல கஷ்டம் வந்துச்சுன்னா, பெரியக் கஷ்டமாபோயிடும். நம்மளப் பாரு எதுக்கும் ஓடவும் வேண்டாம். எல்லாம் நம்ம எடத்துக்கு வரும். சோத்த பொங்கி வச்சி குழம்ப ஊத்தி கொடுக்க ஒரு மாராசி. கேக்க வாங்கித்தின்னுபுட்டு

மீதியைத் தாராள் இன்னொருத்தி. எட்டு பேருக்கு சாப்பாடு கொடுத்தா லாபம் வரும்னு ஒருத்தன கொடுக்க வைக்குது. எதையும் செய்யாம, எந்த உழைப்புமில்லாம எல்லாம் கிடைக்கிறது நமக்குத்தாண்டா. பொறவு என்ன மயித்துக்குடா வேற வேலைக்குப் போவணும்" கேட்டுக் கொண்டிருக்கிறவனுக்குப் பகீர் என்று இருக்கும்.

ஒருதடவைக் கேட்டுக் கொண்டிருந்த சூசை மாணிக்கம் "ஆமாண்ணே" சொல்லிவிட்டு மயக்கம் போட்டு விழாத குறையாச் சிரிச்சிக்கிட்டே இருந்தான். உழைப்பும், முதலும் இல்லாம செய்யுற ஒரே தொழில் நம்ம தொழில்தாண்டா என்று பெருமைப் பட்டுக் கொள்வார்கள்.

"அவனுக்கு ஞாபகம் வந்தது. சுலைகா ரெண்டு லைப்பாய் சோப் வாங்கச் சொல்லி பணம் கொடுத்தது. எதுக்கு ரெண்டு சோப்பு என்று கேட்கத் தோன்றியது. சின்ன புள்ளையில் அரைக்கால் கட்டி வாங்கி போட்டிருக்கோம். இப்ப எதுக்கு அவளுக்கு ரெண்டு சோப் புருஷனுக்கு ஒண்ணு, இவளுக்கு ஒண்ணா ரெண்டுபேரும் ஒரே சோப்ப போடவேண்டியதுதானே. கரைஞ்சவுடனே வாங்கிக்கிட வேண்டியது தானே... சரி நமக்கு எதுக்கு வம்பு. அவதுட்டு. வாங்கிட்டு போறதுக்கு என்ன கொழுப்பு." எந்தக் காசையும் யாருக்கும் செலவழிக்க, அல்ல மற்றவர்கள் செலவழிப்பதைக்கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. தக்கரை மட்டும் அதற்கு விதிவிலக்காகி விடுவானா... என்ன?

எப்பவும் போல பலவாறாகச் சிந்தித்தபடியே ரெண்டு சோப் வாங்கி ஜோல்னாப் பையில் போட்டுக்கொண்டான். அவனிடம் வள்ளி கதையை சொல்லாததும் ஞாபகத்துக்கு வந்தது. கோபால்சாமி கோவில் முன் முகப்பு திண்டில் வசதியாகச் சாய்ந்து கொண்டு அமர்ந்தான்."

"ஒருவேளை சூசைப் பய வந்தாலும் வருவான்" தக்கரை தனக்குள் நினைத்துக் கொண்டான். அவன் வந்தால் கொஞ்சம் மனதுக்கு நிம்மதியாக இருக்கும். சிலசமயம் அவனுக்கு அப்படித்தான் தோன்றுகிறது.. யாராவது ஒருவரிடம் மனப்பாரத்தை இறக்கி வைக்கவேண்டும். தக்கரையைப் பொறுத்தவரை அதிகம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமென்றிருக்கும்.

அவன் கொஞ்சம் கோவில் சுவற்றில் தலைசாய்த்து படுத்துக்கிடந்தான். கொஞ்சம் கண்ணயர்ந்த பின்பு திறந்து பார்த்தான். யாரோ அருகில் வந்து நிற்பது போல இருந்தது. ஒருவேளை யாரும் காசு கொடுக்க நிற்கிறார்களோ என்று பார்த்தான்.

அண்ணே... சூசை வந்திருக்கேன். நீங்கோ இப்ப இங்க இருப்பீங்கண்ணு தோணுச்சின்னேன். வந்துப் பாத்தாப் படுத்துக் கெடக்கிங்க." தலையில் செம்மாடு போல வைத்திருந்த துண்டை எடுத்து உதறி விட்டு எழுந்து உட்கார்ந்தான் தக்கரை.

"முத்தாச்சி பையன குருட்டு பள்ளிக்கூடத்துல சேத்துட்டாளாமா... ஏதும் சொல்லிச்சா"
"தெரியலேடா.. வரலியே. அதுக்குததான் ஓட்ட ஆட்டம் போட்டிருக்கிட்டு இருக்கும்னு நெனைக்கேன். அதான் வரக்காணோம். நீ ஏதும் போற வாரப்பல பாத்தியா?"
"இல்லண்ணே. அதான் உங்கள்ட்ட சேத்தாச்சான்னு கேட்டேன்"
"சரில... வேற என்னல விஷேசம்"
அவன் தரையைக் கிளறியவாறு கம்முன்னு இருந்தான். அவன் முகத்தில் ஏதோ சொல்வதற்கான விசயம் நெளிந்து கொண்டிருந்தது. கொஞ்சம் தெளிவாக இருந்தான். காதிலும் கையிலும் மருந்து தடவியிருந்தான். கொஞ்சம் புண்கள் காய்ந்து பொருக்கு ஆடி இருந்தன.
கொஞ்சநேரம் எதுவும் பேசாமல் இருந்துவிட்டு மெதுவாக சொன்னான்.
"ஒருயோசனை உங்ககிட்ட கேக்கணும் போல தோணுச்சிண்ணே... கேக்கவா..."
"பெரூசா என்னல கேக்கப்போறே புதுராஜ்ஜியம் வேணுமா, கேளு"
"இல்லண்ணே புதுசா ஒருத்தி வந்திருக்கா. ஆத்தூர்காரியாம் ரொம்ப நாள் ராமநாதபுரத்துல இருந்தாளாம். இப்பம் எங்கூட வாறியா. நாம்ரெண்டுபேரும் சேந்து யாசகம் கேக்கப் போவோம்னு சொல்றா. எனக்கும் சரின்னு படுதுண்ணே"
"ஓ.. அதுதான் புண்ணுக்கு மருந்து போட்டிருக்கீரா. புதுப்பொண்ணு மாரி தலய குனியும்போதே நெனைச்சேம்ல. சரி இருக்கட்டும்.. அவளும் வியாதிக்காரியா இல்லை இல்ல சொஸ்தமா யிருக்கவளா?"
"அவ லெப்பர் இல்லண்ணே"
"பின்ன எப்படில்ல உங்கூட வாரான்னு சொல்ற. லூசுப்பயலே. நீ கொஞ்சம் துட்டு சேத்து வச்சிருக்கது அவளுக்கு தெரியுமா? சொன்னியாலே.."
"ம்"
"அதானே பாத்தேன் நீ அவ பின்னாடியே அலைஞ்சிருப்பே. ஒரு நாள் நீ குண்டிய திருப்புணதும் அம்புட்டயும் தூக்கிட்டு ஓடிடுவா, நாம பாக்காதப் பிச்சக்கார முண்டைகளா.. பொச்சப் பொத்திக்கிட்டு கம்முன்னு கெட. பெரீய இளவரசருன்னு இவுகள கொண்டாடி தீக்க வந்திருக்கா. பேசாம ஒன் வேலயைப் பாத்துட்டுபோ. அவ தூமையை குடிக்கணும்னு அலையாதே."
"அவ உனக்கு சூத்தையும் காட்டமாட்டா குண்டியையும் காட்டமாட்டா அவ பின்னாடி போயி சீரழிஞ்சு போவாத லூசுப் பயலே" திட்டித்தீர்த்தான். தக்கரை.
"இல்லண்ணே அவளப் பாத்தா நல்லவளாத் தெரியுது."

" இப்போ எங்கல அவ இருக்கா. கூட்டிட்டு வாலே"
"சரிண்ணே" என்றுச் சொல்லிவிட்டு எழுந்துப் போனவன் இரண்டே நிமிடத்தில் அவளை அழைத்துக் கொண்டு வந்தான. கொஞ்சம் கலரா எடுப்பாத்தான் இருந்தாள். பெரிய பிராவைப் போட்டு மார்புகளைத் தூக்கிக் காட்டும்படி நின்றாள். கொஞ்சம் விலக்கிடந்த மார்புச் சதைக் கோளமாக தெரிந்தது.. தக்கரைக்கு விளங்கியது.
"இத பாத்துட்டுதான் சூசைப்பயத் தலைகால் தெரியாம ஆடுறானா.. நம்ம சொல்றத எங்கக் கேக்கப்போறான்."
தக்கரைக்கு அவளை யாரென்று தெரிந்தது. ஏரல் கோவில் திருவிழாவிலும், குரங்கணி கோவிலும் வைத்துப் பார்த்திருக்கிறான். ஒரு மாதிரி ஓடியாடித் திரிஞ்சவள்தான் அவளை அனுப்பிவிட்டு அவள் நடப்பதைப் பார்க்கும் போது, இவனிடம் ஏதோ ஒரு காரணத்திற்காக அவனை வளைக்க அடிபோடுகிறாள் என்பது தெரிகிறது.
சூசையும் ஆத்தூர்காரியும் அருகருகே நெருக்கியபடி நடந்து போனதைப் பார்த்தான். சூசையின் நடை எப்போதும் போலில்லாமல் கெந்தாமல் நேராக நடந்து போனான். அவள் கூந்தலில் தொங்கிய சரங்களின் மணம் இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தது. இப்போதுதான் வாங்கிக் கொடுத்திருக்க வேண்டும்.
இதுவரை சூசை கேட்டபோதெல்லாம் தன் கதையைச் சொல்லாமல் தவிர்த்து வந்தவன் இப்போது அவனுக்காகவாவது சொல்லும் தருணம் வந்துவிட்டதாக உணர்ந்தான்.
தக்கரை அந்திசாயும் வரை சூசை வருவான் என்று காத்திருந்தான் அன்று முழுவதும் சூசை வரவேயில்லை.

## அத்தியாயம் -17

ஓடைக்கரை

வில்வண்டியும், கூண்டு மாட்டுவண்டியும் சகலவிதமான ஆயத்தங்களோடும் பாளையங்கோட்டையிலிருந்து புறப்பட்டன. மாட்டு வண்டியில் ஒட்டங் காளைகளும், கூண்டு வண்டிக்கு ஜோடி வெள்ளைக் காளைகளும் கழுத்து வெண்கல மணி ஜல்ஜல்லென ஒலிக்க பாய்ந்தோடின. மாடுகளுக்கு வண்டிகட்டிப் போனால்தான் மகிழ்ச்சி. ஒரே சீரான ஓட்டத்தில் போய்க் கொண்டே இருக்கும். வீட்டில் அண்ணன் இருவரும், மூத்த அண்ணனின் மனைவியும், அம்மாவும், அத்தாவும், அத்தம்மாவும் வேலைக்காரர்கள் என எட்டுப்பேர் வண்டியிலிருந்தார்கள்.

இரண்டாவது அண்ணனுக்கு உடம்பு சவுகரியமில்லாத போது நேர்ந்த நேர்த்திக் கடனுக்காகக் கிடாயும் மணிச்சத்தத்துடன் வில்வண்டியோடு ஓடிவந்தது. அத்தம்மா பக்கத்து வீட்டுக்காரர்கள் ஏழெட்டு பேர் கொடுத்த நேர்ச்சைப் பணங்களையும் தனித்தனியாக மஞ்சள் துணியில் பொதிந்து வைத்திருந்தாள். கங்கைகொண்டான் தர்ஹாவுக்கு கிளம்பும்போது எல்லோரும் அவர்களிடம் வந்து பீரப்பாவுக்கு ஸலாம் சொல்லச் சொன்னார்கள். கோசுப் பெட்டியில் வைத்திருந்த முறுக்கை எடுத்து எல்லோருக்கும் சாப்பிடக் கொடுத்தான் மூத்த அண்ணன். மூன்று நாட்களுக்கான தேவைகளும், மாட்டுக்கு வைக்கோலும் புண்ணாக்கும் வண்டியில் கட்டப்படிருந்தன. பிரமாதமான திட்டத்தோடு. ஒரு வாரப் பயணத்திற்கான தேவைகள் எடுத்து வைக்கப்பட்டுருந்தன.

தக்கரை மற்றப் பிள்ளைகளைப் போல ஓடியாடித் திரிபவனல்ல. அம்மாவின் கையடக்கமான செல்லப் பையன். அவன் உண்டு. அவன் வேலை உண்டு என்று இருப்பவன். கூண்டு வண்டியின் மத்தியில் இருந்தான் அவன். அம்மாவின் அருகில் இருந்தபடி கோட்டூரிலிருந்து தாழையூத்து சிமிண்டு தொழிற்சாலை வரை கதை கேட்டுக் கொண்டே வந்தான்.

வண்டி மார்க்கெட் வழியாகத் தச்சநல்லூர் போய் தாழையூத்து வழியாகப் போய்க்கொண்டிருந்தது. தாழையூத்து தாண்டியவுடன் பேட்டை வண்டிகளும் சேர்ந்து கொண்டன. இன்னும் ஒரு மணிநேரத்தில் தர்ஹாவிற்குப் போய்விடும். பேட்டை நண்பன் மைதீனும் காலை யிலேயே வந்திருப்பான். அவர்களோடு மூன்று நாள் தர்ஹா பந்தலில் ஓடி விளையாடலாம்.

அவனும் மைதீனும் ஊத்தாம்பெட்டியும், மூங்கில் புல்லாங் குழலும்

வாங்கிக் கொண்டு ஊதிக்கொண்டு கடந்த வருடம் கந்தூரியில் அலைந்தார்கள். மறுநாள் கால்சட்டையில் கிடந்த கோலிக்காய்களை வைத்து விளையாட ஆரம்பித்தார்கள். மூன்று நாளும் யானை பார்ப்பது, கொடிக்கம்பைச் சுற்றித்தூக்கிக் கொண்டு வருவது, சிலம்பாட்டம் பார்ப்பது என எல்லாம் ஜாலியாக இருந்தது தோன்றியது. அவனையொட்டியப் பெண் பிள்ளைகள் இப்போது பெரிய மனுசியாகி பாவாடைத் தாவணியில் ஓடிக் கொண்டுத் திரிவார்கள். வண்டியின் சீரான ஓட்டத்தில் அத்தனையும் அவனது மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. கந்தூரியை பற்றிய அவனது கனவுகள் பெருகிக் கொண்டேயிருந்தன.

பண்டாரக்குளத்து மைக்செட் மாணிக்கம் எல்லா இடங்களிலும் டியுப் லைட் கட்டிக்கொண்டிருந்தான். அவனோடு வந்தவர்கள் கூம்புக் குழாய்களை மரத்தின் மீதும் தர்ஹா மினாராவின் மீதும் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

கந்தூரிக்காகப் போடப்பட்ட கடைகளில் வேலை செய்பவர்கள் ஜிலேபி மிட்டாய்களையும் காரச்சேவு, லட்டு போன்றவற்றையும் வட்டமாக அடுக்கிக் கொண்டிருந்தார்கள். மூன்று தட்டு ஆர்ச் தர்காவின் முன்னும், ரோட்டோரத்தில் ஒரு பெரிய அலங்கார வளைவும் போட்டிருந்தது. தர்ஹாவை ஒட்டிய பந்தல் அலங்காரத்துடன் இருந்தது.

இதுவரைக்கும் பத்து பதினைந்து வண்டிகள் வந்துவிட்டன. இன்று இரவுக்குள் எப்படியும் ஐம்பது அறுபது வண்டிகள் வந்துவிடும். பொதுமக்களும் பேருந்து மூலமாக வந்து குவிந்துவிடுவார்கள். விளக்குப் போடும் அன்று காயல்பட்டிணம் ஷேக்முஹம்மதுவின் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. அவர் தாழையூத்து பாடகர் எழுதிய "ஈச்சைமரத்து இன்பச் சோலை" என்ற பாடலினால் ஏகப்புகழ் அடைந்திருந்தார். எனவே அவருக்காகவும் கூட்டம் வரக்கூடும்.

அவன் தேடித்தேடிப் பார்த்தான். பேட்டை மதாரையும் மைதீனையும் காணவேயில்லை. ஒருவேளை விளக்கு நாளுக்கு வரலாம் என்று எண்ணிக் கொண்டான். பகல் முழுக்க யானையைப் பார்ப்பதும், கந்தூரி வைபவங்களையும் பார்த்துகொண்டே அலைந்தான்.

இரவு வேப்பமரத்தில் பச்சைக் கீற்றுக் கொடியை கட்டுகையில் நேரம் பன்னிரண்டு மணியைத் தாண்டியிருக்கும். எல்லா வேலைகளையும் முடித்துத் தூங்க வரும்போது ஒரு மணிக்கு மேல் ஆகியிருந்தது. தூக்கம் கண்ணைக்கட்டிக் கொண்டு வந்தது.

அவன் வீட்டின் தார்ப்பாய் விரித்து மாட்டு வண்டிக்கு இடையில் அடித்தக் கூடாரத்தில் மைனியும் அம்மாவும் படுத்திருந்தார்கள். அத்தம்மாவும் கையில் தப்ஸ் மணியை வைத்துக் கொண்டு

திக்குசெய்துகொண்டிருந்தாள். அவனுக்கு எங்கு தூங்கவென்று தெரியவில்லை. அத்தம்மாவின் முகம் வெள்ளைச் சேலையில் பட்டுக்கரை நெற்றியில் வழிந்தோடிய முக்காட்டினைத் தாண்டிப் பொலிவாக இருந்தது. தூரத்தில் காட்டுக்குள் சென்று மூத்திரம் பெய்துவிடடு வரலாம் என்று எண்ணினான்.

அவனுக்கு அந்தவழி மிகவும் உற்சாகமாக இருந்தது சிறிது தூரம் போய் விட்டுத் திரும்புகையில் ஒரு சதுரத் திண்டு இருந்தது.

சந்தனக்கூடு வைப்பதற்காகக் கட்டப்பட்ட திண்டாகும். தூக்கம் விரட்ட அதில் படுத்துக் கொண்டான். அப்படியே தூங்கிப் போனான்.

அவன் இரண்டு மணிநேரம் நன்றாகத் தூங்கிவிட்டுக் கண்ணைத் திறந்துப் பார்த்தான். பக்கத்தில் ஒரு பெண் படுத்திருந்தாள். அவனருகில் நெருங்கி வந்து, தலையைத் கோதிக் கொடுத்தாள். அந்த நடு இரவில் ஒரு பெண்ணின் ஆதரவான கரம் அவனைத் தொட்டுத் தடவியது, அவனை சுகமானக் கிறக்கததில் ஆழ்த்தியது. அவள் இன்னும் கொஞ்சம் அவனருகில் நெருங்கிப் படுத்தாள். அவள் உடலும் தனங்களும் அவன் மீது பட்டது. அவனுக்கு உடலெங்கும் சுரீரென்று மின்சாரம் பாய்ந்ததுபோல் இருந்தது. அப்படியே உடம்பு சூடாகியது.

"ஒண்ணும் பயப்படாதே. என் நெஞ்சுக்குள் ஒட்டிப் படுத்துக் கொள்" என்றவுடன் அவளை அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டான்.

அவன் முதுகிலிருந்து தொடைவரை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள். அவனுக்கு இதமாக இருந்தது. அவனது புரியாத வயதின் பாலுணர்ச்சி எங்கிருந்தோ ஓடிவரும் காட்டாறுபோல ஓடிவந்தது. அவனை ஆசுவாசப்படுத்தினாள். அவளது வருடுதலில் அவன் பனிமலை உருகுவது போல உருகிக் கிடந்தான்.

ஒரு கட்டத்தில் அவனுக்கு வேர்வைப் பெருகி வழிந்தது. அவள் தன் முந்தாணையால் நெற்றியில் துடைத்துவிட்டாள். அவளுக்கும் ஆசுவாசம் தேவைப்பட்டது போல அவனை அணைத்தபடி கண் சொருகிக் கிடந்தாள். அவன் அவளைப் பார்த்தபடி புதைந்திருந்தான். அவனை உருட்டி தன்மேல் போட்டுக் கொண்டாள். வெடித்துக் கிளம்பிய இலவம் பஞ்சுபோல் அவன் மனம் உடலுணர்ச்சி வெளியெங்கும் பறக்கத் தொடங்கியது. அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"நல்லா இருக்கா?"

"அவன் எதுவும் பேசாமல் ஆமென தலையசைத்தான். நான் தரையில் படுத்துக் கொள்கிறேன். நீ இங்கேயே படுத்துக்கொள்" என்றாள் காலையில் அவனை எழுப்பி நீ உங்க அம்மா அப்பாவைப் பார்த்துட்டு வா அவங்க தேடிக்கிட்டு இருப்பாங்க" என்றாள்.

அவளை அப்படியே உற்றுப்பார்த்தான். அவனது கூர்பார்வையினால்

நாணமுற்று சிரித்தாள். அவள் ஒருதேவதை முன்நிற்பது சிரிப்பது போல தெரிந்தது. பார்க்கவும் சங்கோஜப்பட்டான். வாரேன் என தலையாட்டியபடியே நின்று கொண்டிருந்தான். "போய்வா நான் இங்குதான் உனக்காக இருப்பேன்" என்று சொல்லிவிட்டு கைகளை அசைத்து போகச் சொன்னாள். அவன் மனம் அவளை விட்டுக் கிளம்ப விரும்பாமல் தகித்து நின்றது. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.
"சரி இன்னைக்கு ராத்திரியும் இங்கு வா ஜாலியா இருப்போம்" என்று வள்ளி சொன்னபோது அவனுக்கு மீண்டும் ஒரு அளவிலா மகிழ்ச்சி மனதுக்குள் பொங்கியது. அதை அவன் மனம் எதிர்பார்த்ததையும் உணர்ந்தான். பதில் சொல்லமுடியாமல் திகைத்தவாறே. "உம்" என்ற அவனுக்கான ஆசையின் தீச்சுடர்கள் கொழுந்துவிட்டு எரியத் துவங்கியிருந்தது.
அவன் கூடாரத்துக்குப் போகையில் அவன் அம்மா தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அண்ணன் இருவரும் ஆளுக்கு ஒரு திசைக்குப் தேடிப்போனார்கள். எல்லோர் முகமும் சோகத்தில் தொங்கிக்கிடந்தது. இரவில் தக்கரை பந்தலுக்குப் படுக்க வரவில்லை என்பது தெரியவந்ததும் பதறிவிட்டார்கள். பக்கத்து வண்டிக்காரர்கள் வரை செய்தி பரவியிருந்தது.
அவனைப் பார்த்தவுடன் அம்மா ஓடிவந்து ஆவி சேர்த்துக் கட்டிக் கொண்டு அழுதாள். அவன் இங்கு கூட்டமாக இருந்ததால் திண்டில் படுத்துத் தூங்கிவிட்டதாகச் சொன்னாள். அதற்குச் சகோதரர்கள் ஓடிவந்து அவனை வளைத்துப் பிடித்து அடித்தார்கள் "எங்கல.. போன நாயி.." அவன் தூங்கி விட்டதைச் சொல்லி அழுதான். அதைச் சொல்லிவிட்டுப் போயிருக்க வேண்டியதுதானே முட்டாப் பயலே" என்றார்கள். அவனால் இரவில் மகிழந்திருந்த நினைவுகள் சோகமாய் மாறியது போல் இருந்தது.
அழுதுகொண்டே சாப்பிட்டான். சாப்பிடுகையில் இன்று திண்டில் சென்று தூங்கலாமா, வேண்டாமா என்று தோன்றியது. "அய்யோ.. வீட்டுக்குத் தெரிஞ்சுதுன்னா நடக்குறதே வேற.. அவ மூஞ்சியிலேயே முழிக்கக்கூடாது" என்று எண்ணிக் கொண்டான். கொஞ்சநேரத்தில் அவளோடுப் படுத்துக் கிடந்தச் சுகம் இனித்தது. இன்னும் இரண்டு நாளைக்கு இருக்கப் போகிறோம் அதை ஏன் இழக்கவேண்டும் என்று தோன்றியது. அம்மாவிடம் சொல்லிவிட்டுப் போய்விடலாம்தானே என்றும் எண்ணிக் கொண்டான்.
அன்று மதியவேளையில் அவள் தூரத்தில் நின்று பார்த்தாள். அவனைப் பார்த்தபடி இருந்தாள். இவனை அருகில் அழைத்து குச்சி ஐஸ் வாங்கிக் கொடுத்தாள். அவளைப் பார்த்தபோது, அவள் முஸ்லிமில்லை என்பதை

அவள் பொட்டு வைத்திருந்தது சொல்லியது. "அம்மாவிடம் நீ தூங்கப் போகிறேன். என்று சொல்லிவிட்டு வா" என்று சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர்பார்க்காமல் வேகமாகப் போனாள். அவன் அவளைப் பார்த்தான். அவனுக்கு அக்காவைப் போல இல்லை. சித்தியைப் போலத் தெரிந்தாள். அந்த ரோஸ்கலர் குச்சி ஐஸ் போல அவளின் குளுமையில் கரைந்து கொண்டிருந்தான்.
அவன் ஐஸ்ஸை வாயில் வைத்தபடி யானையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பேட்டையிலிருந்து மதாரும், மைதீனும் அவன் பின்னால் நின்றபடி "தக்கரைப்பீரு வந்துட்டோம்" என்றுக் கத்தினார்கள். மூன்றுபேரும் கந்தூரிச் சோறு வாங்கி எல்லோருக்கும் கொடுத்தார்கள். அன்றிரவு அவன் வீட்டிலிருந்து கொண்டு வந்த நேர்த்திக்கடன் கிடாயை அறுப்பார்கள் என்று வீட்டில் சொன்னார்கள்.
அன்று தீப அலங்காரமும், சேக்முகம்மதுவின் இன்னிசைக் கச்சேரியும் நடக்கவிருக்கின்றது. கூட்டம் அலைமோதும் நேற்று போல திண்டில் படுக்கமுடியுமா என்று தெரியவில்லை. மதாரும், மைதீனும் அவனோடு ஒட்டிக்கொண்டே அலைந்தார்கள். அவர்களை விட்டு எப்படியும் போக முடியாது போலிருந்தது. அவர்களைவிட்டுத் தப்பித்துப் போவது குறித்து எண்ணிக் கொண்டே இருந்தது அவன் மனம். ஒருபுறம் வருஷத்திற்கு ஒருமுறைப் பார்க்கும் நண்பர்கள் இன்னொரு புறம் அவளின் சுகம், இரண்டுக்கும் நடுவில் அவளை நோக்கியே சரிந்திருந்தது அவன் மனம்.
மெதுவாக மேற்கேயிருந்து இரண்டு கூட்டு மாட்டு வண்டிகள் வந்து கொண்டிருந்தன. யானை விட்டையின் வாசம் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தது. அவனுக்கு அதில் ஏறி நின்று குதிக்க வேண்டும் போல் இருந்தது. எந்தக் காலத்தில் காலில் முள் குத்தியிருந்தாலும் அது வெளியேறிவிடும் என்று யாரோ சொன்னதை நினைத்துக் கொண்டான. யானை விட்டையை யாரோ மிதித்துக் கொண்டிருப்பார்கள் போல. அதன் நாற்றம் காற்றோடு திரும்பவும் வந்தது.
தூரத்தில் அந்தப் பெண் நின்றபடி அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனால் அவளைப் பார்க்க இயலவில்லை மீண்டும் அந்த இடத்தை விட்டு நகர்ந்து முன்னால் சென்றான். கொஞ்சதூரம் போய்விட்டுப் பார்த்தான். அவளைக் காணவில்லை ஒருமுழுச்சுற்று சுற்றிப் பார்த்தான். அவள் எங்கும் தென்படவில்லை. யானை ஒருகோட்டை மூத்திரம் பெய்தது. அந்த மூத்திர வாசனைச் சுற்றுவட்டாரத்தையே கலக்கியது. ஆனால் அவனுக்கு யானையை மட்டுமல்ல, எதனையும் பார்க்க விருப்பமில்லை. அவனுக்கு அவள் நிற்பதைப் பார்க்கவேண்டும் போலிருந்தது, மீண்டும் மீண்டும் அவள் நின்ற இடத்தில் கண்கள் தேடின. தீப அலங்காரம் போடுவதற்கான

மூங்கில் பாளைகளைத் தூக்கிக் கொண்டுப் போனார்கள். அவர்களோடுச் சேர்ந்து கூடமாட ஒத்தாசைக்கு அவனும் போனான். அந்த வேலையில் நேரம் போனதே தெரியவில்லை. இரவினில் அம்மா சுட்டுக் கொடுத்த கல் தோசைகளைச் சாப்பிட்டுவிட்டு விளக்கு பார்த்துவிட்டு, கச்சேரி பார்த்து விட்டு வருவதாகச் சொன்னான். "சீக்கிரம் வந்துவிடு" என்று அனுப்பிவைத்தாள் அம்மா. தீப அலங்காரம் பார்த்துவிட்டு, அப்படியே கச்சேரி மேடைக்கு போனான். கச்சேரிக்கான தயாரிப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்தன. காயல் ஷேக்முகம்மது தரையில் அமர்ந்து விழாக்குழுவினரோடுப் பேசிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி ஒருகூட்டம் நின்றுகொண்டிருந்தது. அவனும் அருகினில் சென்றுப் பாடகரைப் பார்த்தான். எம்.ஜி.ஆர் தொப்பி போன்ற கலர்த் தொப்பியை சரித்து தலையில் மாட்டியிருந்தார். எளிமையாயும், அமைதியாயும் அவர் இருந்தது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ஒரு மணி நேரத்திற்குப் பின் கச்சேரி ஆரம்பித்தது அவரது பிரத்யேகப் பாடலான "ஈச்சமரத்து இன்பச் சோலையில்" பாடலை சீக்கிரமாகப் பாட மாட்டாரா என்று இருந்தது. அவர் மூன்று பாடல்கள் பாடிய பின்னும் எப்போது அந்தப் பாடலைப் பாடப்போகிறாரோ என்று மனம் அடித்துக் கொண்டது. நான்காவது பாடலாகச் சினிமாவில் பாடிய "கைகொட்டிச் சிரிப்பார்கள்" என்ற பாடலைப் பாடினார். அவனுக்கு அங்கே நிற்கமுடியாத படபடப்பு ஏற்பட்டது. நேற்றுத் தூங்கிய அதே திண்டுக்கு வேறுயாரும் போய் விடக் கூடாதே என்ற பயம் தொற்றிக்கொண்டது. அதைவிடவும் அவள் அவனை விட்டுவிட்டு வேறுயாரிடமும் போய் விடக்கூடாது என்றும், அதற்குள் அந்த இடத்திற்கு சென்று வேண்டும் என்று துடிக்க ஆரம்பித்தது.

அவளது மேடான மார்பகங்களைப் பிடிக்க வேண்டுமென்று, அதோடு அவளை அவனே இறுக்கிப் பிடித்துக் கொள்ள அவள் அவன் நெஞ்சிற்குள் கிடக்க வேண்டுமென்றும், அதனை எப்படியாவது இன்று செயல்படுத்த வேண்டும் என்றும் ஆசைப்பட்டுக் கொண்டான். ஒவ்வொரு தடவையும் அர்த்தத்தை உணர்ந்துப் பாடலைக் கேட்கவேண்டும் என்றுதான் எண்ணுவான். ஆனால் அவளின் நினைப்பு அத்தனை பாடல்களின் வரிகளையும் இசையையும் ரசிக்கமுடியாமல் செய்துவிட்டது.

கச்சேரி நடந்து கொண்டிருக்கும் போதே, அவன் அங்கிருந்து மெதுவாகக் கிளம்பினான். மனது திக்கென்று அடித்துக் கொண்டது. யாராவதுப் பார்த்துவிடக்கூடாதே என்று பயந்தபடியே நடந்தான். நடக்க நடக்க உடம்பில் பதற்றம் ஏற்பட்டது. கால்கள் நடுங்கின

ஆனாலும் அவன் மனது அதே திண்டை நோக்கிச் செல்ல உந்தித் தள்ளியது.
சுற்றிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி மெதுவாக அந்தத் திண்டை அடைந்து அதில் ஏறி படுத்துக் கொண்டான். உடம்பு வெடவெட நடுங்க ஆரம்பித்தது. அய்யோ நடுக்கம் தீர வேண்டும் என்று நெஞ்சம் அடித்துக்கொண்டது. ஆனாலும் தீரவில்லை. பதட்டத்தோடுப் படுத்தபடியே பார்த்தான். ஒரு சுடுகுஞ்சு கூட அங்கு இல்லை. அவளையும் காணவில்லை அவள் வராமலே போகட்டும் என்று சொல்லிக்கொண்டான். சிறிது நேரத்தில் அவன் உடலின் நடுக்கம் குறைந்திருந்தது. யாரும் வரவில்லை. படுத்திருந்து தூக்கம் வந்துவிடக்கூடாதே என்று அச்சமேற்பட்டது அவனுக்கு. மீண்டும் கால்களை ஒடுக்கி சுருண்டுப் படுத்துக் கொண்டான். கொஞ்ச நேரம் ஆசுவாசப் படுத்திக்கொண்டான். படபடப்புடன் நடுங்கிய கால்கள் கொஞ்சம் தன்நிலைமைக்கு வந்தது. கொஞ்சம் பயம் மட்டும் மனதில் நின்றிருந்தது. அவள் ஏன் இன்னும் வரவில்லை என்று எண்ணிக்கொண்டான். அவன் நினைப்புக்கெல்லாம் ஒடுங்கி அமைதியாகினான். கால்களை நீட்டி ஒருகால்மீது மற்றொரு காலைப் போட்டபடி வானத்தைப் பார்த்தான்.
வெண்மேகக் கூட்டங்கள் நடுவே வளர்பிறை நகர்ந்து கொண்டிருந்தது. நிலாவின் வேகமான நகர்தலை உறுத்துப் பார்த்தபோது, அது மேகங்களின் ஓட்டத்தில் நிகழ்கிறது என்பதை உணர்ந்தான். நிலவு மௌனமானப் பால் பல்புபோல ஒளிர்ந்தது. சுற்றிலும் நுரைபோலப் பொங்கிக் கிடந்தது வானமெங்கிலும் வெண்பணி மேகங்கள். சட்டென அவன் மீது ஒரு கை படர்வது போல இருந்தது. அவளேதான். திண்டில் ஏறி அவனருகில் உட்கார்ந்திருந்தாள். மெதுவாக அவன் மீது அவளது சேலை முந்தாணையைப் போட்டபடி அவனிடம் பேசினாள்.
"எய்யா எந்திரி.. இங்க வேண்டாம். வா ஓடைக் கரையையைத் தாண்டிப் போய்விடுவோம். கூட்டம் அதிகமா இருக்கு படுக்க வந்து விடுவார்கள். வா" என்றாள் அவள்.
அவளை ஏறிட்டுப் பார்த்தான் பக்கத்தில் அவளைப் பார்ப்பது கிளுகிளுப்பாய் இருந்தது. அவளும் அழகாய்த் தெரிந்தாள். அவனின் முகம் நிலவைப் போல குளிர்மையுடன் இருப்பதாகத் தென்பட்டது.
அதுசரி. அவளுக்கு தன்பெயர் எப்படித் தெரிந்தது. என்பது ஆச்சரியமாகப் பார்த்தான். அவளும் அவனைப் பெருமிதத்துடன் பார்ப்பதுப் போல தெரிந்தது. யாரிடம் விசாரித்திருப்பாள். ஒருவேளை ஊருக்குப் பக்கத்து ஊர்காரியாக இருப்பாளோ என்று எண்ணிக் கொண்டான்.

"ரொம்ப மனச போட்டுக் குழப்பிக்காதே வா என்னோடு, உன் பேரு எப்படி தெரியும்னு சொல்றேன். நா முன்னாடி போறேன. நீ மெதுவாக என்னை தொயந்து வா" என்றபடி எழுந்து தெற்காக ஓடைப்பக்கமாய் போனாள். அவனும் அப்படியே கொஞ்சம் இடைவெளியில் அவள் பின்னாலேயே போனான். கீழே பார்த்து மெதுவாக நடந்தான். மீண்டும். நெஞ்சம் படபடக்கத்துவங்கியது.

ஓடையைத் தாண்டி வெட்டை வயலில் அவள் உட்கார்ந்தாள் நீள்காலி உள்ளான் பறவை கீச் கீச்சென ஒலிடியழுப்பியபடி ஓடியது. அதன் மஞ்சள்நிற நீண்டகால்கள் வேகமாக ஓடின. சில்வண்டுகளின் இரைச்சலும், மெல்லிசாக ஷேக்முகம்மதுவின் பாடலும் கலந்து கேட்டன.

அருகில் அமர்த்தித் தோளில் கையைப் போட்டபடி அமைதியாக இருந்தாள். அவன் தலைகவிழ்ந்தபடி அமைதியாக இருந்தான். கொஞ்ச நேரத்தில் செம்மண்தரை தெளிவாகத் தெரிந்தது. சேலையை அவிழ்த்துத் தரையில் விரித்து அவனைப் படுக்க வைத்தாள்.

அவள் முழு நிர்வாணமாகி அவனையும் அவிழ்த்தாள். அன்றிரவு நிலவு குளிர்ந்து கொண்டே காணாமல் போனது. சப்தங்கள் அனைத்தும் ஒடுங்கிப் போயின. அன்றிரவின் புதுப்பயணத்தில் அவன் களைக்கும் வரை நீந்த வைத்தாள்.

பின்னிரவில் உடையணிந்தபடி இருவரும் திண்டை நோக்கித் திரும்பினர். திண்டில் சிலர் படுத்திந்தனர். அவனும் அவர்களோடுப் படுத்திருக்க அவள் தர்க்காக்குள் கரைந்துப் போனாள்.

அவனுக்கு தூக்கம் வரவில்லை, இதயம் படபடக்க, நெஞ்சுக் கூடு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது. வானம் கொஞ்சம் வெறித்தபடித் தெரிந்தது. ஒரு தேவதையைப் போல அவன் மனதிற்குள் அவளின் புது நிர்வாணம் ஒளிந்திருந்ததை உணர்ந்தான்.

கண்களை மூடிக் கொண்டு அதையே எண்ணிக் கொண்டு வேண்டாவெறுப்பாகப் படுத்துக்கிடந்தான்.

## அத்தியாயம் -18

கந்தூரி

காலை தொழுகைக்கான பாங்கொலி கேட்டது. அவனது தூக்கக் கிறக்கத்தை கலைத்தது. அம்மாவும், அண்ணனும் தேடக்கூடாதே என்ற பயமும் வந்து தொலைத்தது.
எழுந்து அம்மாவைத் தேடி, படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த மனிதர்களைத் தாண்டி ஓடினான். பூவரச மரத்திலிருந்த ஒற்றைக்குயில் கூவியது. அது தன் பெட்டையை அழைப்பது போலக் கேட்டது. அவன் சுற்றும் முற்றிலும் பார்த்தான். யாரும் தென்படவில்லை தக்கரையின் மனம் சலனமுற்று யாரையோ தேடியது அவன் அம்மாவைப் பார்க்க நடந்தான் விருட்டென்று புள்ளிக்குயில் கத்தியபடியே அவனைத் தாண்டிப் பறந்து போனது. தென்னைமரத்தின் ஓலைகளுக்கு இடையிலிருந்து ஒரு அக்காக்குயில் விட்டு விட்டு கூவிக் கொண்டே இருந்தது.
தட்டுத்தடுமாறி அம்மா இருக்கும் பந்தலை அடைந்தான். அம்மாவும் அண்ணனும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். மைனி தூரத்தில் ஒருக்களித்து கால்மடக்கிப் படுத்திருந்தாள். மாட்டின் கீழ்ச் சக்கரக்காலில் தலைவைத்தபடி ஆடு படுத்திருந்தது. யாரும் கண்விழிக்கவில்லை என்பது அவனுக்கு நிம்மதியைக் கொடுத்தது. ஆட்டுக்கிடாய்க்குப் பக்கத்தில் தலைவைத்துப் படுத்துக் கொண்டான். அம்மாவோ, அண்ணணோ எழுப்பும் வரை தூங்க வேண்டும். அல்லது தூங்குவது போல நடித்துக் கொள்ளவேண்டும் கண்களை மூடிக் கொண்டான்.
கிடாயின் மீதிருந்து செடி வாசனை மூக்கில் பரவியது. அதன் கவுச்சி வாசம் அதன் கம்பீரத்தை உணர வைத்தது. மயிரடைந்த அதன் முதுகு மேல் கையை வைத்துப் பார்த்தான். கொழு கொழுவென்று இருந்தது கிடா. மயிரடைந்து வெண்பஞ்சாய் இருக்கும் கிடாய் கொழுப்பு அடர்ந்த கிடா என்று உருது மாடத்தேவர் தாத்தா சொல்லியது அவன் ஞாபகத்திற்கு வந்தது.
இன்று அவர்கள் வீட்டு கந்தூரிச்சோறு. கிடா அறுத்து அரை கோட்டை அரிசிச் சோறு பொங்கி, கந்தூரிக்கு வருகிற எல்லோருக்கும் விளம்புவார்கள். இன்றிரவு தங்கித் தர்காவில் மௌலூது ஓதி முடித்து நாளை காலையில் எல்லோரும் கிளம்பிப் போவது வழக்கம்.
சீக்கிரத்தில் எழுந்து கிடா அறுத்து கறிவெட்டணும். சமையல்காரருக்கு வேண்டிய உதவிகள் ஒத்தாசைகள் எல்லாம் செய்யணும் அதுக்காக அவனும் சில்லறை வேலைகள் செய்து கொடுக்கணும். ஆனால் இரவில்

முழித்தது கண்ணைத் திறக்கமுடியாமல் இருந்தது. அவனுக்கு அப்படியே அந்தத்தரையிலேயே படுத்துவிட்டான். வேப்பமரத்தின் நிழலில் காற்று சடேர் சடேர் என்று அடித்துக் கொண்டிருந்தது.
முழிப்பு வந்து எழுந்திருக்கும் போது மணிப் பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது. கிடாயை அறுத்து கறியை பெரிய குண்டானில் போட்டு வைத்திருந்தான். அவனருகில் ஆட்டில் தோல் கிடந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டுப் பார்த்தான். மூன்றுகல் அடுப்பை மூட்டி தேக்சாப் பானைகள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. சமையல்காரரின் உதவியாளர்கள் பெரியப் பிரம்புக்கூடையில் வைத்து அரிசியைக் களைந்து கொண்டிருந்தார்கள். அவனுக்கானச் சில்லறை வேலைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.
முகங் கழுவிவிட்டு அம்மா கொடுத்த டீயைக் குடித்தான் பிளாஸ்க்கில் இருந்து ஊற்றிக் கொடுத்தாலும் சூடு போதுமானதாக இல்லை. அம்மாவிடம் சொல்லவும் பயமாயிருந்தது. குடித்துவிட்டு ஒரு சுற்று சுற்றி விட்டு வர விரும்பினான். அவளை எங்காவது பார்த்து விட்டால் இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சியாயிருக்கும். செய்யவேண்டிய மேச்சோலிகள் எல்லாம் செய்து முடித்து அடுப்பை ஏற்ற வேண்டியதுதான் பாக்கி. அவன் ஒரு சுற்றுச் சுற்றி வரலாம் என்று நடந்தான்.
கச்சேரி நடந்த இடத்தில் ஒன்றிரண்டு சேர்கள் தரையில் கிடந்தன. எங்கும் மக்கள் தின்றுவிட்டுப் போட்டிருந்த வட்டத்தட்டுகளும், எச்சில் கழிவுகளும் கிடந்தன. நேற்றைய கொண்டாட்டத்தில் வெடி வெடித்த சருகைப் பேப்பர்கள் கலர்கலராய் எங்கும் இறைந்து கிடந்தன. ஒரு கும்மாளத்தின் அனைத்து எச்சங்களும் விரவிக்கிடந்தன. அய்யோ... கச்சேரிப் பார்க்க முடியவில்லையே, எப்படியிருந்திருக்கும். மனதில் எண்ணிக் கொண்டான். ஆனால் அதைவிடவும் அவளோடான கலப்பில் அவன் முழு மகிழ்ச்சி அடைந்தது போல் இருந்தது.
அவள் பெயர் என்னவென்றுக் கேட்டபோது அவள் சிரித்துக் கொண்டே "என்ன பெயர் எல்லாம் கேக்கியே. கலியாண காயிதம் அடிக்கவா?" என்று சொல்லிவிட்டு சிரித்தாள்.
"இல்லை... என் பேரைத் தெரிஞ்சி உனக்கு என்ன ஆவப் போவுது. ஏதாவது பலன் உண்டுனா கேளு. சோல்றேன்" என்றாள்.
"என் பேரை எதுக்கு கேட்டு தெரிஞ்சு வச்சிருக்கியோ. அதுக்குத்தான்"
"ஓ அப்படியா அப்ப சரி... என் பேரு வள்ளி என்ற சமுத்திர வள்ளி."
"வள்ளியா.. வள்ளி வள்ளி" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவள் ஊரு, கலியாணம் ஆச்சா, சாப்புட்டியா" அவனோடு இருக்கும்போது அவளிடம் எதுவும் கேட்கவில்லை. அது

இப்போதைக்குத் தேவையில்லை என்றும் அவனுக்குத் தோன்றியது. அவள் அவனோட இருப்பது ஒன்றே போதுமானதாக இருந்தது. அவளும் சுகித்துக் கிடந்தாள். அவனும் அவளிடம் அப்படியெல்லாம் கேட்கும்படிக்கு அவனுக்கு எதுவும் தோன்றவில்லை. பிறகு எப்படி அவளைப் பற்றி அவன் தெரிந்திருக்க முடியும். நாளை அவள் ஊர் பெயர் கேட்கணும். சொல்லுவாளோ, சொல்லமாட்டாளோ தெரியவில்லை. அவளின் ஊரைவிட அவளின் மார்புகள் போதும்தானே...

எதையெல்லாமோ எண்ணிக்கொண்டுத் தர்காவைச் சுற்றிச் சுற்றி வந்தாலும், அவளைக் காண இயலவில்லை. என்னவோ போலிருந்தது மனதுக்கு. எங்கு போயிருப்பாள். பக்கத்து ஊரில் ஒளிந்து இருப்பாளோ "சே... ஏன் அவளெப் பத்தியே நெனச்சிக்கிட்டு இருக்கோம்" தன்னை கடிந்துக் கொண்டான்.

ஆனாலும் மனதுக்குள் மழை பெய்து புல் முளைத்து, பூ விரிவது போல, இனம் புரியாத இன்பம் உருவாகிப் பெருகிக்கொண்டே யிருந்தது. அன்றைய நாளும் அவனுக்கு அப்படித்தான். அவன் வீட்டுக் கந்தூரி சோறும் கறியும் அவனையே எல்லோரும் பார்ப்பது போலத் தோன்றியது. கயத்தாறில் இருந்த வந்த குடும்பத்திலிருந்து "எப்போ நேர்ச்சை வழங்குவீங்க" என்று அவனிடம் கேட்டார்கள். அவனுக்கு அதற்குரிய பதில் தெரியாது என்றாலும் அவனிடம் கேட்டதில் ஒரு பெரிய மனிதரிடம் கேட்பதுப் போல இருந்தது.

தண்ணீர்க் குழாயைத் திறந்து குளித்து விட்டு, புதுச் சாரத்தை எடுத்துக் கட்டிக் கொண்டான். அவனுக்கும் இனிமேல் சாரம், வேஷ்டிதான் தேவைப்படும் என்பது போல ஒரு பெரிய மனித உணர்வு ஏற்பட்டது.

பாத்திஹா ஓதி முடித்ததும் கந்தூரிச் சோறு எல்லோருக்கும் விளம்பப்பட்டது. எல்லோரும் வரிசையில் நின்றார்கள். அவன் வரிசையை உற்றுப் பார்த்தான். எங்கேயும் வள்ளியைக் காணவில்லை. எங்கே போனாள்? என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். நேற்றிரவே அவளிடம் அவன் சொல்லியிருக்கலாம் அவன் வீட்டுக் கந்தூரி என்று. அவளுக்குத் தெரியாமலா இருக்கும் என்று விட்டுவிட்டான்.

ஒரு பெரிய தேக்குசா நெய்சோறுப் பரிமாறி முடிக்கும் வரைக்கும் அவள் வாங்க வரவில்லை. அவனுக்குள் ஒரு கிலி பிடித்தது போல இருந்தது. ஒரு வேளை இரவில் வரும் மாயப் பிசாசுன்னுச் சொல்றாங்களே அப்படி இருக்குமோ, நேற்று பகலில் வந்து பேசிவிட்டுப் போனாளே என்று தனக்குள் சிரித்துக் கொண்டான்.

மூன்று மணி ஆகிவிட்டது. அவன் நன்றாகச் சாப்பிட்டு விட்டு ஒரு திண்ணையில் போய்ப் படுத்துத் தூங்கினான். சவுண்டு சர்வீஸ்காரன் சினிமாப் பாட்டு போட்டான். எழுந்து முகம் கை கால் கழுவச்

சென்றான்.
பைப்படிக்கருகே அவள் இருந்தாள். பைப்பைத் திறந்து விட்டபடியே பேசினாள்.
"இன்னைக்கு ராத்திரி வருவயில்லை. எனக்கு உம்மேல ரொம்ப ஆசையாயிருக்கு. கண்டிப்பா வருவியா?"
அவன் மகிழச்சியோடு தலையாட்டினான் "வா நேரத்தோடு வந்துரு. இன்னிக்கு ஆள் யாரும் அதிகமா இருக்கமாட்டாங்க..
சரியா" என்றாள். அவள் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டுவதைத் தவிர வேறு எதுவும் அவனுக்குத் தோன்றவில்லை.
ஓடைக் கரையைத் தாண்டி அவள் காத்திருந்தாள். இவன் அவளருகே போனான். மூடியிருந்த சேலையைப் விருட்டென விலக்கினாள் மார்பகங்கள் திறந்திருந்தன. அவனை அப்படியே அள்ளிக் கொண்டாள். அவனை நடத்திக் கூட்டிக் கொண்டு போனாள்.
வேகமாக அடித்த காற்று அவல் சேலை தலைப்பில் அலை போல படரவிட்டது அவன் சிக்கென அவள் கைகளை பிடித்துக்கொண்டிருந்தான். அவளின் மாயக் கிரக்கத்திற்குள் சிக்கி அவளோடு ஒட்டி நடந்தான். வள்ளி அவன் வேர்வை படிந்த முகத்தை தனது முந்தானையால் துடைத்து விட்டாள். அவன் அவள் முகத்தையே பார்த்தபடி அசையாது நின்றான். வள்ளி அவனது நிலைமைக் குறித்து உணர்ந்தாள்.
"எங்கூட ஒரு நாலு நாளைக்கு வாறியா" என்றாள். அவன் எதுவும் பேசாமல் தலையாட்டினான். இருவரும் பின்னிப் பிணைந்துக் கிடந்தார்கள்.
"வா போவோம் நாலு நாள் கழித்து உன் ஊரில் கொண்டுவந்து விட்டுவிடுகிறேன்... சரியா" என்றாள். இருவரும் நடந்து போய்ப் பேருந்து நிறுத்தம் சென்றார்கள்.
அப்படியே வடக்காகப் போகிறப் பேருந்து வந்தது. அவள் அவனை ஏற்றிவிட்டு தானும் ஏறிக்கொண்டாள். அவனை அடுத்த சீட்டில் தன் கையடக்கமாக வைத்துக் கொண்டாள்.
பேருந்து இரவில் தனது முழுவேகத்தில் சென்றுக் கொண்டிருந்தது. அவனுக்கு அவள் உடம்பிலிருந்து எழுந்த வாசம் அவனைக் கிறக்கத்தில் வைத்திருந்தது.

## அத்தியாயம் -19

குற்றாலம்

ஒய்யாரமாய் புகைபோல விரிந்து பரவி விழுந்த குற்றாலம் அருவியில் சூசையும் ஆத்தூர்காரியும் அருகருகே நின்று கண்சிவக்க குளித்துக் கொண்டிருந்தார்கள். அவன் தலையில் ஷாம்பூவை விட்டு நன்றாக அரக்கித் தேய்த்தாள். நியான் விளக்குகள் மஞ்சளாய் எரிந்து கொண்டிருந்தன. அந்த மஞ்சள் ஒளியின் பின்னணியில் மலை மீது வளர்ந்திருந்த மரங்களின் இலைகள் பசுமையாய் மின்னின. காற்றில் ஆடும் இலைகளுக்கு வெளியே மஞ்சள் பனி பூத்திருந்தது. மெல்லிய சாரலின் தூத்தலில் குற்றாலமே மௌனமான போதைக்குள் மிளிர்ந்து கொண்டிருந்தது. அந்த பின்னிரவில் அருவித் தண்ணீரின் அதிகக்குளிர்ச்சி கூட ஆத்தூர்காரி அருகில் இருப்பதால் அவ்வளவாகத் தெரியவில்லை. அவளோடு குளிக்கையில் கிறக்கமாய் இருந்தான். குளித்த பின்பு அவளே தலைதுவட்டி விட்டாள். அப்படியே நடந்து பெரிய மாந்தோப்புக்குள் புகுந்தார்கள். குளிரில் நடுங்கி நடக்கும்போதே அவன் மீது அவளின் உடலும் மார்பகங்களும் தேய்ந்து சூடேற்றின.
மாமரங்களில் காசாலட்டு, ருமெனியா, நீலம் பழங்கள் மங்கலாகிப் பழுத்துத் தொங்கின. இரண்டு மூன்று பெரிய வௌவால்கள் அந்த இரவில் இருளுக்குள் வந்து அமர்வதும் பறப்பதுமாய் இருந்தன. அவனும் ஆத்தூர்காரியும் மாம்பழங்களை ஆவலோடுப் பறித்தார்கள் ஒரு மாம்பழத்தை அப்படியே கடித்துத்தின்றபோது, அதன் சாறு அவள் நெஞ்சிலே வடிந்தது. அதை அவன் துடைத்து விட்டான். அவன் இன்னொருப் பழத்தைக் கடித்துப் பார்த்துவிட்டு, அதன் ருசியில் மயங்கி. இது "எவ்ளோ ருசியா இருக்கு பாரு" என்று அவளிடம் சாப்பிடக் கொடுத்தான். அவள் ருசித்து தின்றபடியே மாமரத்துப் பழங்களைப்பறித்து தனது சேலை மடிப்பில் சேமித்துக் கொண்டிருந்தாள். சேலையெங்கும் மாம்பழங்கள் நிறைந்து தொங்கின.
"மலை ஏறுவோமா?" என்றாள் ஆத்தூர்காரி. அவன் தலையசைக்க இருவரும் மலை ஏறினார்கள் ஏறஏற மலை வளர்ந்துகொண்டே போனது. கடைசியாக மலையின் உச்சி வந்தது. கீழே பெரும்பாதாளம் அவன் கீழே விழுந்துவிடுவதுப் போல் கால் வழுக்கியது. அவள் பயங்கரமாகச் சிரிக்க ஆரம்பித்தாள். அவன் கால் வழுக்க வழுக்கப் பாதாளத்தில் விழுந்துவிடுவதுப் போல் கால் இடறியது. அது வழுக்கிக் கொண்டே கீழே இழுத்தது சடக்கென விழிப்பு வந்தது. ஆனால் பசியில் கண்ணும் காதும் அடைத்தது போலிருந்தது. "போதும்.." என்று ஏதோ முணங்கிக் கொண்டிருந்தான்.

சூசை ஆத்தூர்காரி அவனிடம் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஏமாற்றிவிட்டு ஓடிப்போனதை அவனால் சகிக்கமுடியவில்லை. பணம் பறிபோய்விட்ட பரிதாபத்தில் உண்ணாமலும், உறங்காமலும் புலம்பிக்கொண்டு திரிந்தான். வயிற்றுப் பசியும் கிரக்கமும் அவனை கொடும் காய்ச்சலுக்குள்ளாக்கிவிட்டது. எப்படியோ தன்னையும் அறியாமல் நடந்து அரசு மருத்துவமனைக்கு வந்து வெளிநோயாளி சீட்டு வாங்கி மாத்திரையும் வாங்கினான். மாத்திரையை சாப்பிட்டு விட்டு படுத்தவன் கிரக்கம் தீராமல் வேப்பமர நிழலில் படுத்துக்கிடந்தான். எங்காவது உணவு கிடைக்காதா என்று தேடி அலைந்தவன் மெதுவாக நகன்று பிள்ளையார்கோவிலில் உணவு கொடுப்பார்கள் என்று கேள்விப்பட்டு காலையிலேயே வந்தான்.
சூசை மூன்று நாளாக அவன் எங்கும் போகாமல் ஹைகிரவுண்டு அருகில் உள்ள பிள்ளையார்கோவிலில் படுத்துக்கிடந்தான் அங்கேயே எதையாவது யோசித்தபடியே உறங்கினான் யாரையும் போயிப் பார்த்துக் கேவலப்பட விரும்பவில்லை.
"அவனது சபலப் புத்திக்கு ஒரு பெரிய அடி கிடைத்துவிட்டது. ஆமாம் தக்கரையண்ணன் சொன்னதைக் கேக்காதுனால கிடைச்ச செருப்படி"
"கூதியக் கண்ணுல காட்டிட்டு என்னோட பணத்தை எல்லாம் திருடிட்டு ஓடிட்டா கண்டார ஓளி... அண்ணே மூஞ்சியில் எப்படி முளிப்பேன்"
தனக்குத் தானே புலம்பிக்கொண்டுப் படுத்துக் கிடந்தான்.
"செருக்கிமுண்டை இப்ப மட்டும் கையில கெடைச்சான்னா செருப்படிதான் அவளுக்கு," தேவி..... முண்டே.. ஏமாத்தி ஓடிப் போய்ட்டா. அய்யோ யாருக்கும் தெரியாம பத்தாயிரம் சேத்து வச்சிருந்தேன். அதுல ரெண்டாயிரம் அவன் இடுப்பு பெல்ட்டுல புது நோட்டா இருந்தது, தப்பிச்சுது. மத்த ரூபாயெ எல்லாம் எடுத்துட்டு ஓடிட்டா முண்ட."
எப்போதும் அவளை நினைத்து நினைத்துத் திட்டித் தீர்த்துக் கொண்டே இருந்தான் சூசை இனிமே தக்கரயண்ணன் மூஞ்சியில எப்படி முழிப்பேன்" நேரத்திற்கு நேரம் அவன் உளறல் கூடிக்கொண்டேயிருந்தது.
மூக்கைச் சிந்தி சுவற்றில் தேய்த்தபடி படுத்துக்கிடந்தான். முகம் எல்லாம் சிவந்து போயிச் செந்தணலாகி இருந்தது. அவன் வாழ்க்கையில் இவ்வளவு பெரிய ஏமாற்றத்தை யாரும் கொடுத்ததில்லை. மனம் உடைந்து சரிவரச் சாப்பிடாமல் படுத்தே கிடந்தான். தலைவலித்தது கால் முட்டிகளும் வலித்தன. மெதுவாக எழுந்து ஒரு டீ குடித்தால் தேவலாம் போலிருந்தது, அவன் சோகத்தைச் சொல்வதுப் போலப் புங்கைமர நிழலுக்குள் கிடந்து ஒரு அக்கக்காக்குருவிக் கேவிக்

கொண்டேயிருந்தது. எழுந்து நடக்க சீவனற்றவன் போல மெதுவாக ஹைக்கிரவுண்ட் மருத்துவமனை உள்ளிருக்கும் டீக்கடையை நோக்கிப் போனான். அவன் நடக்கமுடியாமல் நடப்பதைப் பார்த்துவிட்டு யாரோ ஒருவர் உதவ ஓடி வந்ததுப் போல இருந்தது.

ஓடிவருவது மங்கலாகத் தெரிந்தது. சிவப்பு கலர் சேலையும் அவள் தலைமுடியும் அசைய வேகமாக அவனருகில் வரவும் அவள் பெண் என்பது மங்கலாகத் தெரிந்தது.

"எண்ணன்னே.. என்னாச்சு.. டீ வேணுமா" நா வாங்கியாரேன் நீ உக்காரு இந்த திண்டுல. அவன் கையைப்பிடிச்சு திண்டில் உட்காரவைத்துவிட்டுப் பன்னும் டீயும் வாங்கி கொண்டு வந்தாள். அவனது தூக்கில் ஊற்றினாள். "பன்ன டீயில் முக்கி சாப்புடுன்னே" என்ற அவளது பாசமான பேச்சு அவனைச் சாப்பிடவைத்தது. பெண்ணின் குரல் அவனைப் பயப்பட வைத்து படபடக்கச் செய்தது. காதடைத்த நிலைமையில் அந்தக் கீச்சுக்குரலுக்கு பயந்தவன் போலச் சாப்பிட்டான். அவன் கைகள் நடுங்கியபடியே பன்னை தேநீரில் முக்கிச் சாப்பிட்டான். அவனால் வெறும் பன்னைச் சாப்பிட முடியாத அளவுக்குப் பலகீனனாக இருந்தான்.

பன்னையும், டீயையும் குடித்து முடித்தவுடன் கொஞ்சம் தெம்பாக இருந்தது. சூசைக்கு. மேற்கொண்டு ஏதாவது சாப்பிட்டால்தான் அவன் எழுந்து நடமாட முடியும் போலிருந்தது.

அவள் கேட்டாள் "சாப்பாடு வாங்கிட்டு வரவா?" அந்தக் கேள்விக்கு அவனால் பதில் சொல்லவில்லை வாய் சிக்கென அடைத்துக் கொண்டு பேச்சு வரவில்லை.

கொஞ்சநேரம் சூசை அமைதியாக இருந்தான். "இரிண்ணே.. சாப்பாடு வாங்கிட்டு வாரேன்" என்றாள் அவள் கையில் இருக்கும் காசை எண்ணிப்பார்த்தாள். பார்சல் சாப்பாடு வாங்கும் அளவுக்கு இல்லை.

வேறு வழியில்லை. மருத்துவமனைக்கு வரும் நபர்களிடம் சூசையைக் காட்டி சாப்பாட்டிற்குக் காசு கேட்டாள். கொஞ்சம் சேர்ந்தது. மேலும் கெஞ்சிக் கூத்தாடி அவர்களோடு நடந்து எல்லாப்பிரயாசைகளுக்கு அப்பால் ஒருவர், "ரூவாயா தர மாட்டேன். வா கடைக்கு சாப்பாடு வாங்கித்தாரேன்" என்று அவளை அழைத்துச் சென்றார். அவள் அழுது கொண்டே அவர்கூட போனாள்.

"போகும் வழியில் அவர் சூசையையும், அவளையும் திட்டினார். எப்போ பார்த்தாலும் பட்டினி, சாப்பாட்டுக்குப் பணம் தாங்கண்ணு கேப்பீங்க ரூவாயைக் கொடுத்தா டாஸ் மார்க்கில போயிக் குடிப்பீங்க. வயித்தப் பாத்தா எட்டு நாள் பட்டினிப் கெடந்தவன மாதிரி இருக்கும் ஆனா சினிமா தியேட்டருக்குப் போயிடுவீங்க. இதே வேலையாப் போச்சு"

ஏசிக்கொட்டிக்கொண்டே வந்தார் பெரியவர்.

"நீ சாப்பாடுன்ன உடனே கூட வந்துட்டே. பாதிப்பேர் அய்யா ரூவாயா கொடுங்கய்யா நாங்க வேங்கிக்கிறோம்பாங்க. நல்ல வாங்குனாங்களே. எனக்குத் தெரியாதா அதுதான் வா சாப்பாடு வாங்கித் தாரேன் உன்னக் கூட்டிட்டு வந்ரேன்." அவர் தனதுதரப்பு நியாய தர்மங்களையும் சாப்பாடு வாங்கிக் கொடுக்கும் வரையிலும் பேசிக்கொண்டிருந்தார். அவள் எதுவும் பேசாமல், கண்களால் நன்றி சொல்லிவிட்டு ஓடி வந்தாள்.

" நியாயதர்மங்களை பேசுவதற்கு யாருக்கும் உரிமை இருக்கிறது இந்த நாட்டில் அவுரு சொல்றது அத்தனையும் நியாயம். பின்ன எப்படி பேசமுடியும்" அவள் மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவள் வந்து சேருவதற்குள், இருக்க முடியாமல் படுத்துக்கிடந்தான். மெல்ல எழுப்பி அவன் முன்னால் சாப்பாட்டைப் பிரித்து வைத்தாள். விரல்கள் வழியே வழிந்தபடி அள்ளி அள்ளிச் சாப்பிட்டான. அவன் பசிக்கு ஏற்றாற்போல் பார்சல் சாப்பாடு அதிகமாகவே இருந்தது. சாப்பிட்டு அவன் கொடுத்த தண்ணீரைப் பாட்டிலோடு மடக்மடக் கென்று குடித்தான்.

வெயில் கொஞ்சம் நகர்ந்து அவன் தலைமீது விழுந்துகொண்டிருந்தது. அவனால் வெயிலை உணரும் அளவிற்கு உணர்வில்லை. அவளே அவன் தோள்பிடித்துத் தூக்கி நிழலுக்குள் உட்கார வைத்தாள். பாட்டிலில் மீதியிருந்த தண்ணீரை கையில் விட்டு முகத்தைக் கழுவினான். சுண்டியிருந்த முகத்தில் சிறிது தெம்பு வந்திருந்தது.

தண்ணியை அதிகமாக விட்டு முகத்தைக் கழுவாததைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள். "நல்ல கழுவுங்கண்ணே" கொஞ்சம் சத்தமாகச் சொன்னாள். அப்போதுதான் அவனுக்கு அந்தக்குரல் கேட்டக் குரல்போல தெரிந்தது.

அந்த குரலுக்கு உரிய நபர் யாரென்று கொஞ்சம் உணரமுடிந்தது. ஆனாலும் முழுமையாகத் தெரியவில்லை அவன் அமைதியாக இருந்தான். அவளும் பேசாமல் அருகிலிருந்தாள்.

அவன் கைகளைக் கொண்டு முகத்தில் இருந்த இரண்டு மூன்று சோற்றுப் பருக்கைகளைத் தள்ளிவிடுவதும, தாடியில் இருந்தத் தண்ணீரை வழித்து உதறியபடியும் இருந்தான். அவனுக்கு தெம்பு வந்தது, அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அரைமணி கழித்தவுடன் கண்களைக் கையினால் கசக்கிவிட்டு அவளைப் பார்த்தான். அவள் முகம் மங்கலாகத் தெரிந்திருக்கக்கூடும் மீண்டுமொரு முறை கண்களைத் துடைத்துப் பார்த்தப் போது அவள் உருவம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அடைத்திருந்தக்காதும் டப்பென்ற ஒலியுடன் திறந்தது போல இருந்தது.

அவன் முகம் மிகுந்த மகிழ்ச்சியோடுத் தலையை மேலும் கீழுமாக ஆட்டியபடி "யாரு முத்தாச்சியா" என்றான் அவன் தலையை மேலும் கீழும் அசைத்து "ஆம்" என்றாள். அவன் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாய் வழிந்தது.

"சூசையண்ணே அழாதே.. அழாதண்ணே"

அவன் அவளைப் பார்த்து நா தழுதழுக்க பேசமுடியாமல் கைகளைத் தூக்கி நெஞ்சில் வைத்து "என் உயிரை காப்பாத்திவிட்டாய் முத்தாச்சி" என்று வாய் குழறலோடுச் சொன்னான்.

"என்னாச்சுண்ணே உடம்புக்கு. எப்பண்ணே இங்க வந்தே" என்றாள் முத்தாச்சி அவன் கொஞ்சம் பொறு பேசுறேன் என்று எச்சிலை முழுங்கிவிட்டு நடந்த கதையைச் சொன்னான்.

"எட்டாயிரத்தைக் கொண்டு போய் ஓடிவிட்டாள். பாதகத்தி செருக்கி ரெத்த பேதியிலதான் போவாள்" என்று கருவினான்.

"யாரையும் பார்த்தாயா" என்றாள் முத்தாச்சி அதற்கு சூசை "யாரையும் பார்க்கவில்லை தக்கரை அண்ணன் அவள நம்பாதன்னு எச்சரிச்சாரு. நான் அவுரு பேச்சக் கேக்காம அவகூட போயிட்டேன். மூணாவது நாள் தூக்கத்துல எங்கிட்ட இருந்த ரூவாய எடுத்துக்கிட்டு ஓடிட்டா" என்று அழுதான்.

"சரிண்ணே, எடுப்பட்ட முண்டைய, அப்படித்தான் ஆசவார்த்த காடடுவாளுவொ. நாமதான் ரொம்ப யோசனையோட இருந்துக்கணும் இந்த பாரேன். நா இருக்கேன் எத்தனபேரு அதெத் தாரேன் இதெத் தாரேன், அங்க வா இங்க வான்னு கூப்புடுவான் போனா ஒண்ணும் தரமாட்டான் பிச்சக்காரிதானே ஓசியில நொட்டுதேம்பான். இவனுக கூடப்போவ நாம என்ன அவுத்து போட்டுக்கிட்டா கெடக்கோம் எண்ணன்னே. சொல்லிதிய"

"நா சொல்றது என்னன்னா... எந்த பொசகெட்ட பயலும் ஏங்கிட்ட வரமுடியாது. வந்தா கேவலப்பட்டுத்தான் போவான். சரிண்ணே நடந்தது நடந்துபோச்சு. வா என் ஊட்டுக்கு ரெண்டு நாளு இருந்து சாப்புட்டு போ" என்றாள்.

" நீ எதுக்கு வந்தே" என்றான் சைகையில்.

"அதாண்ணே புள்ள வேணாம்னு பைய மாத்தி போட்ட அடி வயித்துலே வலிச்சிக்கிட்டே இருக்கு. டாக்டரம்மாவ பாக்க வந்தேன் அவுங்க ஒண்ணுமில்லைன்னு மருந்து மாத்திரை தந்திருக்கு." என்று மாத்திரைகளைக் காட்டினாள்.

கொஞ்சம் படுக்கணும் போல இருக்குன்னு படுத்தான். அவன் தலைமாட்டுக்கு அருகில் இருந்தாள். ஒரு மணிநேரம் கழித்து எழுந்தான். முத்தாச்சி அவன் அருகில் இருப்பதை அவன் எதிர்பார்க்கவில்லை. அது

அவனுக்கு மிகுந்த மகிழ்வைக் கொடுத்தது.
"அது சரி உம்மொவன எங்கே? குருட்டுப் பள்ளிக்கூடத்துல சேத்துட்டியா?"
"ஆமா.. முந்தாநாளு கொண்டு போயி சேத்துட்டேன் அங்க தான் இருக்கான். பாத்துட்டுதான் இங்க வந்தேன். ரொம்ப சந்தோசமா இருக்கானாம். மொவன் சொன்னான் என்னல்லாமோ சொல்லிக்கொடுக்காங்களாம். புதுசாயிருக்காம். சரி, என்னமோ அவென் நல்லாயிருந்தா செரிதான்" அவள் சொன்னாள்.
"போவோமா" என்றவனை பேருந்து நிறுத்தத்திற்கு அழைத்து வந்தாள். அவன் பாளை பஸ்டாண்டில் இறங்கிக் கொள்வதாயும் அவளை வீட்டுக்குப் போகச் சொல்லி ரெண்டு டிக்கெட் வாங்கி அவன் கையில் கொடுத்தான்.
முத்தாச்சிக்கு அவனை அவ்வாறு விட்டுவிட்டுப் போகப் பிரியமில்லை. ஆனால் அவனைப் போன்ற யாசகர்கள் இதையெல்லாம் பெரிதாக எடுத்தக்கொள்வது கிடையாது என்று தெரியும். "பசி எந்தப் பிச்சைக்காரனையும் புசிக்காது" என்பது அவர்களதுப் பழமொழி. பிச்சைக்காரனைப் பசி கொன்றுவிடாது என்று நம்பினார்கள். தண்ணீர்கூட அவர்களது உடல்நிலையைக் காப்பாற்றிவிடும். அதைவிடவும் வானத்திலிருந்தாவது சாப்பாடு வந்துவிடும் என்றும் நம்பினார்கள்.
அவள் மெதுவாகப் பஸ்ஸ்டாண்டில் இறங்கிப் பயணிகள் இருக்கும் அமரும் திண்டை நோக்கிப் போனான். நாலு நாளைக்கு முன்னாடி ஆத்தூர்காரியின் அருகில் படுத்தபடி அவளது மார்புகளையும் உடலையும் பார்த்தபடியே தூங்கியது ஞாபகத்திற்கு வந்தது. சடக்கென தலையை உதறியபடி, "சே" என்று தனக்குள் கழிவிரக்கம் தோன்றியது.
அவனுக்குள் ஏமாற்றிவிட்டுப் போன ஆத்தூர்காரியும், அன்பான தங்கை போல் இருக்கும் முத்தாச்சியும் மாறி மாறி தோன்றிக் கொண்டேயிருந்தார்கள். எதையோ நினைத்து அழுகை வந்துகொண்டேயிருந்தது.

## அத்தியாயம் -20

மலைக்கோயில்

தக்கரை பீருமுகம்மது தன் கதையைச் சொல்லச் சொல்ல, "உச்..' கொட்டிக் கேட்டுக்கொண்டிருந்தாள், சுலைகாள். அவனை பேருந்தில் ஏற்றிக்கொண்டுப் போனதை சொன்னபோது, "அட அல்லாவே.. உங்க ஊட்ல உன்னை காணாமெ என்ன பாடுபட்டிருக்குங்கோ. அந்த தினவு எடுத்த முண்டைக்கு பச்சபுள்ள மேலயா ஆச வரும்" என்றவள் தலையில் முந்தியை எடுத்துப் போட்டுக் கொண்டு மௌனமாக இருந்தாள்.
அவளின் மௌனத்தில் வலியை உணர்ந்தபடி அவனும் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான். மௌனங்கள் நீண்டநேரம் நிலைப்பதில்லை சிலசமயம் அந்த மௌனமே உடைத்துக் கொண்டு வேறொரு இடத்தில் அமர்ந்து கொள்கிறது.
"எந்த ஊருக்குபோனியோ?" அவள் கவலையுடன் தான் அந்தக் கேள்வியை முன்வைத்தாள். தக்கரை அவளது கதை கேட்கும் ரசபாவத்தைப் பார்த்து தனக்குள் சிரித்துக்கொண்டான். அவனுக்கு எதிலிருந்து மீண்டும் கதையைத் தொடங்குவது என்று யோசித்தான்.
"சுலைகா அக்கா, இது வரைக்கும் நான் சொன்னது ஒண்ணும் அவ்வளவு சுவராஸ்யமான விஷயம் இல்லை. இனிமே அவளோடு இருந்ததுதான் ரொம்ப முக்கியமானது" என்றான்.
"என்ன அவெ புள்ள கிள்ள உண்டாயிட்டாளா?" என்றாள் சிரித்துக்கொண்டே. "இல்லக்கா ஒன் குசும்பு உன்னைவிட்டுப் போகுமா. ஆமா நீ வந்துபுள்ளப் பேறு பாக்கப்போ" என்று சொல்லிவிட்டுச் சிறிது நேரம் கழித்துச் சகஜமாக சொன்னான். "இல்லக்கா அவளோடு ஒரு வருஷம் இருக்கிற வரைக்கும் அவ என்னோட உடல் சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பவில்லை கடேசியில் நான்தான் கட்டாயப்படுத்தி வச்சிக்கிட்டேன் அதுக்கப்புறம் அவெ என்னை தன்னோட வச்சுக்க விரும்பல" என்றான் தக்கரை.
அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள் சுலைகா. "ஆமாக்கா.. சத்தியமாச் சொல்றேன்" அவள் நம்பவில்லை என்பதை அவள் முகம் சொல்வதை உணர்ந்து அவன் சொன்னான். "இந்தா பாரு...தொணதொனன்னு எதிர்கேள்வி கேட்டுக்கிட்டே இருக்கப்புடாது. அப்பதாம் நடந்ததெ முழுசா சொல்ல முடியும்" என்றான் அவன்.
"ம்.. சொல்லு தக்கரை" என்றாள் சுலைகா.
"வள்ளி என்ன செஞ்சாத் தெரியுமா? மதுரைக்குப் போரேன்னு சொல்லிட்டுப் போற வழியிலே எறங்கச் சொன்னா. எனக்கு எந்த ஊருன்னு தெரியாது. பெரிய அம்மன் கோயிலுக்கு அழைச்சிட்டுப்

போனா. அம்புட்டுதேன் அங்கப் போனவுடனே அங்கனத் துட்டுக்குக் குளிச்சிடடு மஞ்சள் சேலையும் மஞ்ச ரவிக்கையும் போட்டுக்கிட்டா. நெத்தி முழுக்கத் திருநீறு பூசி சந்தனமும் குங்குமமும் வைத்துக்கொண்டாள். கழுத்தில் பெரிய உத்திராட்சக்கொட்டை மாலை போட்டுக் கொண்டாள். அப்படியே அம்மனைப் போல் இருந்தாள்.
என்னை எதிர்த்தாற்போல் உட்கார வைத்துக் கொண்டாள். மாரியம்மன் போல அவன் உட்கார்ந்திருக்க எல்லோரும் பணமாக எடுத்துக் கொடுத்தனர். பகல் முழுக்க அவள் வேஷத்திற்குக் கொள்ளை கொள்ளையா பணம் கெடைச்சது. நான் கேட்டது, கேக்காதது எல்லாத்தையும் வாங்கிக்கொடுத்தாள். இரவில் நாங்கள் இருவரும் தனியானதொரு இடத்தில் சேர்ந்துப் படுத்துக்கொள்வோம். மூன்று நான்கு நாட்களில் அவள் எனக்கும் காவி வேட்டி, காவிச்சட்டை வாங்கிக் கொடுத்தாள். அதை உடுத்திக்கொண்டுத் தலை நிறைய திருநீறுடன் அவளுக்குப் பக்கத்தில் சிவனைப் போல இருக்கவைத்தாள். எங்களைப் பார்ப்பவர்கள் அம்மா மகன் என்றோ அக்கா, தம்பி என்றுதான் எண்ணுவார்கள். அம்மாவிற்கும் மகனுக்கும் கொடுக்க வேண்டியப் பிச்சையைத் தனித்தனியாகப் போட்டுவிட்டுப் போனார்கள். நாங்கள் தேவைக்கு அதிகமாகவேத் திருப்தியாக வாழ்ந்தோம்" அவன் மகிழ்ச்சியோடுச் சொன்னதைக் கண்கள் மேலேற ஆச்சரியமாகக் கேட்டாள் சுலைகா.
பிச்சை பாத்திரங்கள் ததும்பித் ததும்பி வழிந்தன. அதில் அவனுக்கானத் திண்பண்டங்கள் கிடைத்துக்கொண்டேயிருந்தன. போகப் போக அதுவும் குறைந்து போனது.
அவன் காலையிலிருந்து இரவு வரை அவளோடுப் பிச்சைக் காசுக்காகவே அமர்ந்திருப்பது அவனது ஓட்ட சாட்டத்தை நிறுத்திவிட்டது. மேலும் அவன் முற்றிலும் சைவமாகிப் போகவும் வேண்டியதாயிருந்தது. அவள் அவனைப் பல ஊர்களுக்கும், கோயில் குளங்களுக்கும் அழைத்துப் போனாள். பழனிக்கு நடத்தியே அழைத்துப் போனாள்.
இரவின் கணப் பொழுதுகளுக்காக எல்லாவற்றையும் அவன் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று இரவில் அவள் தன்னுடையில் மாறி அவனுடலோடு பொருதுவதை அவள் நிறுத்தவேயில்லை.
எனக்கு மதுரை மீனாட்சி அம்மன்கோவிலிருந்து பழனிக்கு நடந்து போவது மிகவும் பிடித்திருந்தது. போகிற வழியெங்கிலும் நான் அவளுக்கு முன்னாடியே ஓடிச் சென்றுக் குச்சி ஐஸ், பாப்கார்ன், அவிச்ச மக்காச் சோளம் எல்லாம் வாங்கிச் சாப்பிடுவேன். தனக்கென்று கொஞ்சம் வாங்கிச் சாப்பிடுவாள். அவன் கட்டாயப்படுத்திச் சாப்பிடச்

சொல்வதற்காகச் சாப்பிடுவாள். அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சிலசமயம் அவருக்குத் தோணும், "இவளுக்கு ஏன் என்மேல பிரியம் வந்திருக்கு. ஒருபெரிய ஆள வச்சிருக்கலாம்ல' என்று தோணும். அவளின் காமப்பசி கட்டி அணைப்பதோடு சரி என்பது பின்னால் தான் தெரியவந்தது. அதுக்கு ஒரு அழகான பையன் போதும் என்றும் பின்னால் உணர்ந்தேன் அவளுக்குள் அவனைப்பற்றி இன்னொரு எண்ணமும் இருந்துக் கொண்டேயிருந்தது. மீண்டும் அவள் வீட்டுக்கு ஓடிவிடக்கூடாதே என்று. அதனால் அவள் அவன்மீது எப்போதும் ஒருகண் வைத்திருப்பாள். அவனிடம் அதிகமாகக் காசுக் கொடுத்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தாள். மற்ற பெண்களுடன், பிச்சைகாரிகளுடன் கண்டிப்பாகப் பேசக்கூடாது என்பதுதான் அவனுக்கு அவள் கொடுத்த தண்டனை.

அவனுக்கு அப்படி ஊருக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்ற எண்ணம் தோன்றவேயில்லை. அவன் இந்துச் சிறுவனைப் போல தினமும் திருநீறு அணிவதும், அதற்கான உடையை உடுத்துவதும் குறித்தும் அவனுக்கு எந்த மனச்சங்கடமும் ஏற்படவில்லை மாறாக அது அவனை கோவிலின் எந்தப் பகுதிக்குள்ளும். எளிதாக அழைத்துச் சென்றது அவனைப் பார்த்தவுடன் எல்லோரும் ஏதாவது அவனுக்குக் கொடுத்தார்கள். பலசமயம் தங்கள் கைகளில் இருக்கும் திண்பண்டங்களையே கொடுத்து விடுவார்கள்.

அவன் யாரிடமும் உதவி கோருவதும் எளிதாகவே இருந்தது. கோவில்களில் இப்படிப்பட்டச் சிறுவர்களை அழைத்து அன்பாக நடத்துவார்கள் பக்தர்கள். கோவிலுக்குள் அவன் காசு என்று யாரிடமும் கேட்கமாட்டான். அவன் கேட்காமலேயே அவனிடம் அன்பாகப் பேசி விட்டு பணமும் கொடுத்துவிட்டு போவார்கள். அவன் கலரும் முடியும் திருநீறும் அவனை குமரனாகவே பார்க்கச் செய்தது ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவை மலைக்கு ஏறி இறங்குவான். எதையும் குறித்து எந்த எண்ணமும் இல்லாமல் காலத்தோடு அவனும் அவளும் போய்க்கொண்டேயிருந்தார்கள். நான்கு ஐந்து மாதங்களுக்குப் பிறகு அவனோடு படுப்பதைத் தவிர்க்க ஆரம்பித்தாள். சிலசமயங்களில் மொத்தமாக எல்லோர் பக்கத்திலும் படுத்திருக்க வேண்டிய காலங்களில் அதைத்தவிர்க்க வேண்டியதாயிருந்தது. பல சமயங்களில் அவள் தனியாகப் படுப்பதையும் விரும்ப ஆரம்பித்தாள்.

எல்லாவற்றிற்கும் காரணம் அவன் அவளிடம் மூர்க்கமாய் நடக்க ஆரம்பித்ததுதான். வெறும் தடவுதல்களைத் தாண்டி அவன் அடுத்தக் கட்டத்திற்காக இயங்குவதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவனே அவளைக் கட்டாயப்படுத்த வேண்டிய திருந்தது. அவள் ஏன்

அப்படி ஆகிவிட்டாள் என்று கோபமாய் இருந்தான். சாந்தப்படுத்த அவனுக்கு அவள் வாங்கிக் கொடுத்தத் தின் பண்டங்கள், உணவு எதுவும் பலிக்கவில்லை. அவன் முழு ஆணாக மாறுவதை அவள் விரும்பவேயில்லை.

ஒருவருடம் வேகமாக ஓடி இருந்தது. இரு சந்தர்ப்பங்களில் அவளைக் கட்டாயப்படுத்தி உறவு கொள்ள ஆரம்பித்தான். அது அவளுக்குப் பிடிக்கவில்லை அதனால் அவன் பேசாமல் இருந்தான். ஆனால் அவன் உணர்வுகள் மேலோங்கிக் கொண்டே இருந்தன. அவளோடு அமர்ந்து பிச்சையெடுப்பது, அவள் சொல்லும் உணவைச் சாப்பிடுவதையும் தாண்டி உணவகங்களில் சாப்பிடுவதையும் விரும்பினான்.

வள்ளி அவனை மெதுவாகத் தவிர்க்க ஆரம்பித்தாள். அவன் தனியாக அமர்ந்து இருந்து சாப்பிட ஆரம்பித்தான். இரவில் அவனின் பக்கத்தில் படுப்பதை அவள் தவிர்த்தாள். அவனுக்கு எதைப்பற்றியும் கவலையில்லை. அவளின் எதிர்ப்பையும் மிறி அவளைப் பயன்படுத்துவது குறித்து அவள் கோபப்பட்டாள். அவனுக்கும் அவள்மீது கோவம் வந்தது. ரெண்டு நாள் கோவிலுக்கு வெளியே போய் படுத்திருந்தான்.

மூன்றாவது நாள் நடுஜாமத்தில் அவளருகில் படுப்பதற்காக அவள் படுத்திருக்கும் இடத்தைத் தேடினான. அவள் காணவில்லை. அவளின் பொருட்கள் இருக்கும் பையைத் தேடினான். அதுவும் இல்லை. அவனது தூக்கம் தொலைந்து போனது. ஊரின் எல்கை வரைக்கும், பேருந்து நிலையத்திலும் ஓடிச் சென்றுபார்த்தான். அவளைக் காணவே இல்லை.

எங்கு போயிருப்பாள் என்று விளங்கவுமில்லை. எப்படியும் வந்துவிடுவாள் என்று பழனி கோவிலின் மேலும் கீழுமாய் ஏறிஇறங்கி அவளை இரண்டு நாளாய்த் தேடிக் கொண்டிருந்தான். அவள் அவனை விட்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே எங்கோ போயிருக்கக்கூடும். எப்படித்தேடுவது? அவள் அழைத்துச் சென்ற இடங்கள் அவனுக்குத் தெரியும். ஆனால் அவள் எங்கிருக்கிறாளோ என விளங்கவில்லை.

மனம் உடைந்து கோவில் நடைப்படித் திண்டில் உட்கார்ந்து யோசித்தபடியே இருந்தான். எங்கே போய்த் தேடலாம்? என்ற கேள்வி அலையலையாய் அவனுக்குள் விழுந்தபடியே இருந்தது. ஆனால் அதற்கு விடைகிடைக்கவில்லை அதற்குள் வேறொரு பிரச்சனையும் இருந்தது.

அவன் அவளைத் தேடிப் போகையில், அவளே திரும்பி வந்து விட்டால் என்ன செய்வது என்பதுதான். அவனை மறந்துவிட்டு அவள் போய் விடுவாளா என்ன? அவன் மீது எவ்வளவுப் பிரியம் அவனுக்காக எவ்வளவு செய்திருக்கிறாள்.? எப்படியும் வந்துவிடுவாள் என்று அவன்

மனது சொன்னது.
அவனால் சரியாகச் சாப்பிடவும் முடியவில்லை. மற்ற யாசர்களைப் போல இருக்கவும் முடியவில்லை. அங்குமிங்குமாய்க் கோயிலைச் சுற்றியும் வெளியில் போய்ப் பார்த்துவிட்டு வந்தான். இரண்டு மூன்று நாளாகியும் அவள் வந்தபாடில்லை அவன் எண்ணம் இனி அவள் கிடைக்கமாட்டாள் இனி எங்கே போவது, ஊருக்கு போய் யார் முகத்தில் எப்படி விழிப்பது என்றுத் தோன்றியது, அய்யோ.. இனி எப்படி வீட்டுக்குத் திரும்பிப் போவது அவர்கள் காணாமல் போன அன்று எவ்வளவுக் கலங்கிப் போய் இருப்பார்கள். எங்கெல்லாம் ஆளைவிட்டுத் தேடியிருப்பார்கள். எத்தனைக் கிணற்றை உற்றுப் பார்த்து இருப்பார்கள்? என்று யோசித்தான்.
அம்மாவுக்கு அவனென்றால் உயிராச்சே... எத்தனை நாள் வயித்திலும் மாரிலும் அடித்துக் கொண்டு அழுதிருப்பாள். அண்ணன்கள் என்னவாகி இருப்பார்கள். ஊரில் பையனைக் காணோம் என்று சொல்ல முடியுமா? அவனுக்குள் நினைவுகள் கொன்று தின்றபடி இருந்தது. இப்போது அம்மா எப்படி இருப்பார். அவனை நெனைச்சிச் சாப்புடாமக் கிடந்து எலும்பும் தோலுமா ஆகி இருப்பாளோ, இல்ல என்னமாச்சும் ஆகியிருக்குமோ..?
ஏதோ பெரிய மிருகங்களும், பெரிய பெரிய அலைகளுமாய் கறுமையான புகையும் அவன் மனத்தை இறுக்கின. அவனுக்குப் பெரும்பயம் தோன்றி மனமெங்கும் பரவியது. அவனால் நகரமுடியாத ஒருமன இறுக்கத்திற்குள் கட்டுண்டான். வெளியே வர முடியாத அளவுக்கு அது திணறடித்தது. மலைக்கு மேல் நின்று குளத்தையும், அதனருகில் மேயும் குதிரைகளையும் பார்த்துக்கொண்டேயிருப்பான். எங்காவது அவன் தெரிகிறாளா என்று பார்த்தபடி இருப்பான்.
மலைக் கோவிலின் படிகளில் "அரோஹரா.. அரோஹரா" என்று அவள் சொல்லிக் கொடுத்ததைச் சொல்லிக் கதறினான். போவோர் வருவோர் யார் யாரோவெல்லாம் அவன் நிலைகண்டு உருட்டிவிட்டு உருள விட்டிருக்கின்றனர். எத்தனை மாதங்கள் இப்படி நேர்ந்தது எனத் தெரியாது.
முகம் முழுவதும் திருநீறும் உடலெங்கும் கரியுமாக இருந்த ஒரு நாளில் அவனுக்கு ஏதோ தோன்றியது, அவன் எங்கிருந்து எங்கு வந்திருக்கிறான் என்று எண்ணத் தோன்றியது. அதிலிருந்து மெதுவாகக் குளித்துப் பிச்சையெடுத்துப் புத்தாடை வாங்கிக்கட்டினான். அமைதியாக கீழ்பகுதியில் இருக்கும் திருவானைக்கா கோவிலில் அமர்ந்து கொண்டான். மலைக்கீழ் கந்தா ஓட்டலில் படிக்கும் "உள்ளம் உருகுதையா" என்ற பாடலை ராவும் பகலுமாக முணுமுணுத்து

கொண்டேயிருந்தான்.
"வள்ளி செத்துப் போய் அடக்கமாகிவிட்டாள்" என்று எண்ணிக் கொண்டான். அதையே திரும்பச் திரும்பச் சொல்லிக் கோவிலை விட்டு வெளியே வந்தான்.
அப்படியே ஊர் ஊராக அலைந்து பாளையங்கோட்டை வந்து சேர இரண்டு வருடமாகிவிட்டது. அவன் பெரியவனாகி இருந்தான். நாடிக்குக் கீழ் அடர்கருப்பில் தாடி வளர்ந்திருந்தது. எதிலும் ஒரு பிடிப்பில்லை. எதுவும் தேவையற்ற மனிதனாக மாறியிருந்தான். வீட்டுக்குப் போயி மீண்டும் ஒரு பூகம்பத்தை நிகழ்த்த அவன் மனம் விரும்பவில்லை. தன்நிலையழித்த ஒருவனாக மாறி பிச்சைக்காரனாக வாழ்வதில் சுகம் கண்டான்.
யாராவது கோட்டூர்காரர்கள் என்று தெரிந்தால் இன்னும் கொஞ்சம் வாய்மூடியாக இருக்க விரும்புகிறான். ஆனாலும் தொலைந்து போன அவனை கங்கைகொண்டான் தர்கா இழக்க விரும்பவில்லை அவன் களையும், கட்டும், வாழ்வும் அங்கிருப்பதாகவே உணர்கிறான்.
இன்னொரு வள்ளியைத் தேடியா இங்கு வருகிறாய் என்று சிலசமயம் தோன்றும் போது தனக்குள் சிரித்துக் கொள்கிறான்.
வள்ளி சிலசமயம் ஒரு பெரும் வள்ளலைப் போலவும், சிலசமயம் கொடும் அரக்கியைப் போலவும் தெரிகிறாள். சிலகாலங்களுக்குப் பிறகு அவளைத் தேடும் மனம் மட்டும் அவனுக்கு வரவேயில்லை. அவளை எண்ணும்போதே கோபமும் பொத்துக்கொண்டு வருகிறது.
இரவினில் சிலசமயம் தர்ஹா மரங்களின் இருண்ட இலைகளுக்குள் ஒளிந்திருப்பது போலவும், ஓடையின் பள்ளத்தில் படுத்துக்கிடந்து சிரிப்பதும் போலவும் சில மனச்சித்திரங்கள் தோன்றும் போது வள்ளி அவன் வாழ்க்கையை கடத்திச் சென்றதாகவே எண்ணிக்கொள்கிறான்.
அவனது வாழ்வின் சுவையான பகுதிகளைக் கேட்டறிந்த சுலைகா கருணையோடு கேட்டாள். "வள்ளி உன்னை அழச்சிட்டு போகாதிருந்தால் நீ நல்லா குடும்பத்தோடு இருந்திருப்பேல்லே"
அவன் கடகடவென சத்தமாய்ச் சிரித்து விட்டுச் சொன்னான். அதுதான் "இல்ல இன்னும் கேவலப்பட்டுப் போயிருப்பேன். அல்லது கேவலப்படுத்தியிருப்பேன்"
" அப்படியா சொல்றே" கண் விரியக் கேட்டாள்.
" ஆமா.. எனக்கே அப்படித்தான் தோணுது. ஆனா ஏன் எதுக்குன்னு தெரியல".
சுலைகா மேற்கொண்டு எதுவும் பேசாமல் அவன் முகத்தைப் பார்த்தபடியே இருந்தாள்.

## அத்தியாயம் -21

அந்தோணியார் கெபி

தனிமை சில சமயம் இனிமையாகவும், பல சமயம் கொடுமையாகவும் இருக்கிறது. மனிதன் தானாக ஏற்றுக் கொண்ட தனிமையில் இருக்கமுடியும். திணிக்கப்பட்ட தனிமையின் ஒவ்வொரு விநாடியும் கொடுமையானதுதான். தனிமையும் பயமும் சேர்ந்துப் பிரசவித்தவைதான், பேயும், பிசாசும், பூதமும் என்று சொல்ல வேண்டும். அவை எப்போதும் தனியான வனாந்திரங்களிலும் தனித்த மரங்களிலுமே வாழ்கின்றன. அநேகமாக மனநோயுள்ளவர்கள் தனிமையிலேயே, தங்களுக்குள்ளேயே வாழ்கிறார்கள். அதுவே அவர்களின் மனநோயை பெருக்கியும் விடுகிறது.

பிச்சைக்காரர்கள் அநேகமாகத் தனிமையையே விரும்புகிறார்கள். அதிகமாகப் பேசுதலும், கேட்டலும், செயல்படுத்துதலும் அற்றுப்போகும் ஒரு மனிதன் தனிமையாகிப் போகிறான். அப்படித்தான். ஆடியும், ஓடியும், பாடியும், உழைத்தும், செழித்தவர்கள் கூட எல்லாவற்றையும் இழந்தபின்பு பேச்சற்றுச் செயலற்றுப் போகிறார்கள். அவர்களில் சிலர் யாசகர்களும், பிச்சைக்காரர்களுமாக இருக்கிறார்கள். பலவகை பிச்சைக் காரர்களில் இவர்களும் ஒன்று.

அவர்கள் ஏற்றுக்கொண்டச் செயல் அல்ல பிச்சை எடுப்பது. அவர்கள் உலகத்தையும், அதன் கொடுமையையும், அதன் மூலம் விளைந்த நஷ்டங்களாலும், வேறு வழியற்று இருக்கிறார்கள். இவர்கள் சாதாரண மனிதர்கள் போன்று சிந்தித்தாலும் கூட, பிச்சையெடுப்பை விட்டுவிட்டுப் போகவேண்டும் என்று எண்ணிக்கொண்டே பிச்சையெடுத்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

தக்கரையும், சூசையும் அருகருகே அமர்ந்திருந்தாலும் சில சமயம் மணிக் கணக்கில் கூடப் பேசாமல் இருப்பார்கள். வயிறு பசிக்கும் வேளைகளிலும் கூட அவர்கள் எதுவும் பேசாமல் இருப்பார்கள். அப்போதெல்லாம் கைகைகள் மட்டும் அவர்களுக்கு போதுமானதாக இருக்கிறது.

சூசைக்கு இதுகுறித்து எப்போதும் ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருக்கிறது. "ஏண்ணே.. நீங்க சிறு புள்ளயலயும் இப்படித்தான். பேசாம இருந்தீங்களோ..?"

தக்கரை உடனடியாக பதில் சொல்லவில்லை. தனது தாடியைத் தடவி விட்டவாரே அவளைப் பார்த்தான். "என்னடே.. என்ன கேட்ட?"

"இல்லண்ணே.. சின்ன வயசிலயும் இப்படித்தான் பேசாம கம்முன்னு இருந்தீங்களான்னு கேட்டேன்,?"

"சூசை.. டேய் நா பள்ளிக் கூடத்துல படிக்கிறப்போ துறுதுறுன்னு இருந்ததா எங்க பாட்டி நாச்சியா சொல்லும். எந்த புள்ளயையும் அடிச்சிபோட்டு வந்திருவேனாம். யாரோட குச்சியையும், பென்சிலையும் எடுத்துக்குவேனாம். அப்படி ஒரு சுட்டியாத்தான் இருந்தேன் இப்ப எந்த ஆசையுமில்லை. எந்தப் பேச்சும், குதர்க்கமும் தேவையில்லை. அதுனாலதான் இப்படி இருக்கேன்"

"டேய் பிச்சைக்காரன் எதுக்கும் ஆசைப்பட மாட்டான். அவனது தேவைகளும் கொஞ்சம்தான். சுத்தமும் அழுக்கும் அவனுக்கு ஒண்ணுதான். இந்தா பாரு வேஷம் போட்டுட்டு திரியிறப் பிச்சைக்காரனுக்கு அதிகமாப் பணம் கிடைக்கும். ஆனா அவன் பிச்சைக்காரனா இருக்கமாட்டான். சோறுகண்ட இடம் சொர்க்கம். துட்டு கண்டஇடம் திருப்பதின்னு அலைவான். அவன் பிச்சைக்காரன் கிடையாது.

"அதுபோல காலயில் குளிச்சி வேஷம் போட்டு, துண்ணீறு இட்டு, மஞ்சள் வச்சி, காவி கட்டி கையிலத் திருவோடும், வேலும் வச்சிக்கிட்டுத் திரியறவன் எவனும் பிச்சைக்காரன் ஆவ முடியாது. அவன் துட்டுக்காக அலையும் வேஷக்காரன். நான் அவனையெல்லாம் வகை வைக்கிறதே இல்லே.."

"என்னன்ணே... இப்படி சொல்லிப் புட்டீங்க.. அப்போ யாருன்ணே உண்மையான பிச்சைக்காரன் டுபாக்கூர் பிச்சைக்காரன் யாருண்ணே," என்றான் சூசை.

"டேய்.. லூசு பிச்சைக்காரன்னா யாரு தெரியுமாடா? முதல்ல உன்ன மாதிரி பிச்சையெடுத்து காசு சேத்து வச்சிக்கிட்டு எந்தப்பொம்பிள வருவான்னு அலையுறான் பாரு அவன் பிச்சைக்காரன் கிடையாது. அவன் வேலைச் செய்யாம துட்டுச் சேத்துக்கிட்டு அவன் ஆசையைப் பூர்த்திப் பண்ண ஓடுறவன்... அதேமாதிரி... பிச்சையெடுத்து பிச்சையெடுத்து, சரியாச் சாப்புடாம, தன் கையிலும் பையிலயும் வச்சிக்கிட்டுத் திரியிறவன் நம்ம பாசையில் பேராசைக்காரன். பிச்சையெடுத்துப் பேங்குலப் போட்டு வச்சிக்கிட்டு, எச்சிச் சோத்துக்கு அலையிறவன் கேவலமான கஞ்சப்பய... அவனல்லாம் இல்லடா பிச்சைக்காரன்"

"என்ன கேக்கிறியா..?" என்றான் தொடர்ந்து.

"பிச்சைக்காரன்னா யாரு தெரியுமாடா. அவன் சூபி இல்லாட்டி ஞானி மாரிடா. சூபின்னா ஒனக்கு என்ன தெரியும். பதினெட்டு சித்தர்னு சொல்றாங்க பாரு, அதுமாரி சித்தருங்க. அவுங்களுக்கு ஆசையோ, கவலையோ, வேறு எதுவுமே தேவைப்படாது. அவன் அன்னிக்கி கிடைக்கிறத சாப்புட்டுட்டு கிடைக்கலன்னா பட்டினி கெடக்கிறவன்.

அவனுக்கு வேஷம் போடத்தெரியாது. அப்படி வேஷம் போடவேண்டியத் தேவையுமில்லே. அவதான்டா உண்மையான பிச்சைக்காரன். கவலையை தங்க விடுபவன் பிச்சைக்காரனல்ல. எனக்கு ஏதாவது கவலையிருக்காடா? கிடையாது. ஏதாவது தேவைப்படுதா..? கிடையாது. எங்க ஊட்டுல பெருங்கொண்ட சொத்து உண்டு. நா கேக்க போனதில்லையே. நமக்கு எதுக்குடா சொத்தும், சுகமும். அதுதான் வேண்டாம்னு விட்டாச்சு. இனிமே யார்ட்ட போயி கேக்க."
"நான் இன்னாரு. எங்க குடும்பம் பெரீய்ய குடும்பம் நான் வாழ்ந்து கெட்டுப்போயி பிச்சையெடுக்கேன்னு சொல்லமட்டான். தன் குலம் பற்றிப் பேசுறவன் பிச்சைக்காரன் அல்ல அவன் பஞ்சத்துல பிச்சைக்காரன் ஆனவன். அப்படி அவன் சீன் போடுறான்னு அர்த்தம். சீன் போடுறவன் சீன் போட்டுக்கிட்டேதான் இருப்பான். இரக்கம் உள்ளவங்களைக் கொள்ளையடிக்கிறானு அர்த்தம்."
தக்கரையும், சூசையும் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தார்கள்.
"அப்போ இந்தத் துணிப் பொட்டலத்த இடுப்புல வச்சிக்கிட்டு ராவும் பகலும் ஏசிக்கிட்டு திரியிறாளே இவ யாருண்ணே!"
"ஏண்டா கேக்குற"
"அத ஏண்ணே கேக்குற ஒரு நாளு போஸ்ட் ஆபீசு பிள்ளையார் கோவில் திண்டுல உக்காந்திருக்கேன். இவெ வந்து பக்கத்துல உக்காந்தா... "அய்யா மாராசா.. சாப்புட்டு ரெண்டு நாளாச்சிய்யா.. பத்து ரூவா வச்சிருக்கேன். இன்னொரு பத்து ரூபா இருந்தா குஸ்கா வாங்கிச் சாப்புடுவேன்யா.. தாங்கய்யான்னு கெஞ்சினான்னு கொடுத்துப்புட்டேன். அவ சாப்பிட போவல... கொஞ்சம் நேரம் இருந்து பாத்துட்டு சாப்புட போகலியான்னு அவள்ட்ட கேட்டேன். அதுக்கு அவெ என்ன சொன்னா தெரியுமா? "சாப்புடலாம் மாட்டேன்.. சாப்புட்டா வயிறு நிறைஞ்சிடும் யாரும் தர மாட்டாங்க இப்படி நைஸா கேட்டு எல்லாத்தையும் வாங்கிடுவேன். நீயும் இந்த வயித்த பாத்துதானே தந்தேன்னு சொல்லிட்டு சிரிச்சா"
"அது சரி.. பொம்பளை கேட்டான்னு கொடுத்திட்டே.. சேல உடுத்தியிருந்தா உனக்குப் போதாதா?"
"இல்லண்ணே... அது வயித்த பாத்தேன். விலா எலும்போடு ஒட்டி கிடக்குது. நமக்குத்தான் தெரியுமே பட்டினி கெடக்கிறதோட கொடும. அதுதான் கொடுத்தேன். இதுல கொடும இல்லண்ணே. இவெ இப்படி போறவங்க வாறவங்கட்டெல்லாம் பிச்சையெடுத்து சேத்து வைக்க, அவெ மொவன் அவெ பக்கத்துல உக்காந்து பேசி அம்புட்டு ரூவாயையும் ராத்திரி எடுத்திட்டு போயிருவானாம். பிச்சையெடுக்குமாம் பெருமாளு, அதைப் புடுங்குமாம் அனுமாருங்கிறமாரி.. அவ எப்பவும்

போல பகல்ல பிச்சையும் பணமும் கேட்டபடி ரூபாயைத் தொலைத்த துக்கத்தில் அரற்றிக் கொண்டே அலைகிறாள்."
"சூசை.. இவெ பிச்சைக்காரி இல்ல. ஏதோ மனநிலை பிறண்டவ. சொத்து சொகம் உள்ள ஊட்டுல பிறந்து வாக்கப்பட்டிருப்பா. அவுங்க விரட்டி வுட்டுறுப்பாங்க. அதுதான். ஏசிக்கிட்டு திரியுறா. துட்டு மேல உள்ள ஆவீசாயால ஆவ் ஆவ்னு திரியிறா.." என்றான் தக்கரை.
இதுவரை பேசியது குறித்துப் பெருத்த விவாதம் இருவருக்குள்ளும் மனதுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. பெரும்பாலும் பிச்சைக்காரர்கள். ஒரே இடத்தில் தென்படுவதும், சில பிச்சைக்காரர்கள் இரவும் பகலும் ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதும் சூசைக்கு ஏனென்று விளங்கியது போல இருந்தது.
அந்தோணியார் கோவில் கெபிக்கு அருகில் வெயிலிலும் மழையிலும் தனது மூட்டை முடிச்சிகளுடன் குடைபிடித்துக் கொண்டு அமர்ந்திருக்கும் தொப்பி வைத்தப் பிச்சைக்காரன் ஞாபகத்துக்கு வந்தான். காலைலேயே மகனைச் சகடை வண்டியில் இழுத்துக் கொண்டே திரியும் அந்தக் கிழவியும் அந்த சகடைச் சத்தமும் காதில் கேட்டது. எத்தனை வருடமாக இழுத:துச் செல்கிறாள். தன் மகன் மீதான பாசத்தில் அவள் உடையவே யில்லை, அவள் உடல் தளர்ந்து போயிருந்தாலும்.
தக்கரை எப்போதும் போல எதுவும் பேசாமல் மௌனித்திருந்தான். சூசைக்கு அவனைப் பார்க்கும்போது எப்போதும் ஒரு ஆச்சரியம் தோன்றிகொண்டேயிருக்கும். "தக்கரையால் எப்படி எதைப் பத்தியும் யோசிக்காமல் இருக்கமுடிகிறது என்று. ஒருவேளை அவன் மனது செத்துப் போயிருக்குமோ?" தக்கரை சூசையைப் பற்றி ஏதோ எண்ணியபடி மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.
சிறிது நேரத்தில் சூசையின் மனது அவனை ஏமாற்றிய ஆத்தூர்காரியை நினைத்தது. பின்னர் இது போலவேத் தக்கரையை ஏமாற்றிவிட்டு சென்ற வள்ளியும் வந்து தோன்றினார்கள். அவனுக்குச் சடக்கென ஒரு சந்தேகம் பிறந்தது. அவன் தக்கரையை ஏறிட்டுப் பார்த்தான். அவன் அமைதியாக இருந்தான். நல்ல சூழ்நிலையில்தான் சிலவற்றை அவனிடம் கேட்க முடியும். இல்லாவிட்டால் எல்லாம் தப்பா போயிடும்.
"அது சரிண்ணே.. பழனி கோவில விட்டுப் போனப்புறம் எப்பமாவது வள்ளியைப் பாத்திருக்கீங்களா"
"பாக்கணும்னு தோணலடா.. அவளெ நான் எதுக்கு பாக்கணும். அவெ நல்லாத்தாண்ட வச்சிருந்தா. எனக்காக கிடைக்கிற பணத்தையெல்லாம் செலவு செஞ்சாடா.. ஏன் சொல்லாம கொள்ளாம வுட்டுட்டு போயிட்டானு தான் இன்னைக்கும் விளங்கலடா. ஒரு வேளை

வேறொரு சின்னப் பையனெப் புடிச்சிட்டாளோ என்னவோ. ஆனா அவளுக்கு என்னிக்காவது என்னப் பாக்கணும்னு தோணும்னு நெனைக்கேன். அப்படி அவெ எம்மேல கொஞ்சம் நாளாச்சும் உசிரையே வச்சிருந்தாடா.. அதுசரிடா. அதெல்லாம் பழசு வுட்டுத்தள்ளுடா, அதெ. ஆத்தூர்காரியப் பத்தி பேசு.."

"போங்கண்ணே.. அவெ பொல்லாதச் சிறுக்கிண்ணே. டைட்டா பாடிய போட்டு அது வெளிய தெரியறமாரி ஜாக்கெட்ட போட்டுக்கிட்டு வரும் போதே எனக்கு தெரிஞ்சிருக்கணும். ஆனால் அவ சிரிச்சிபேசினதும், அப்படி இப்படி காட்டுனதும் எல்லாத்தையும் மறக்கடிச்சிட்டுண்ணே..."

"துட்டுதானடா. போனா போயிட்டு போவுது.. அவளோட அலைஞ்சு திரிஞ்சனா நீ கிறுக்குப்புடிச்சி செத்துபோயிருப்பேடா.. எல்லாம் நல்லதுக்கு தாண்டா..."

சூசைக்கும் தக்கரை அண்ணனோட பேசிக் கொண்டே இருக்கவேண்டும் என்பதுதான் ஆசை. அவரிடம் கேட்டுப் பெறவேண்டிய கதை ஒன்றும் பாக்கி உள்ளது. பலதடவைகள் அவன் கேட்டும், பிறகு சொல்கிறேன் என்று சொல்லி நழுவிவிடுவார். அதுதான். குரங்கு சடைச்சியோட குடும்பம் நடத்திய கதை. அதுபற்றி அவர்ட்ட கேட்டா, அவருக்கு ஏனோ கோவம் வந்துவிடுகிறது. எப்படியாவது அதையும் கேட்டுவிட வேண்டும் என்று ஆவலாய் இருக்கிறது.

வானம் அடர் ஊதா நிறத்திற்கு மாரி இருளைப் போர்த்திக் கொள்ளத் துடிக்கிறது. இரவு 10 மணிக்குள் சூசைப் பேருந்தில் ஏறி விடுதிக்கு போயிடனும். இல்லாட்டாக் கதவு பூட்டப்பட்டுவிடும். அதனால் நேரத்தோடுச் செல்ல வேண்டியதிருந்தது.

தக்கரையும் பஸ் ஏறிக் கங்கைகொண்டான் போக வேண்டும். இல்லாட்டி ஜங்ஷன் ரயில்வே நிலையத்துதுல தான் படுக்கணும். அதுக்காக சீக்கிரம் போய்விடணும். அவனுக்கும் அவசரம் இருந்தது. சிறிதுநேரம் இருவரும் புறப்பட ஆயத்தமாகிய பின்பும் போக விருப்பமில்லாமல் இருந்தார்கள்.

இருவரும் குரங்கு சடைச்சியைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து இருவரும் அறியவில்லை. அதிலும் குரங்குக்காரியின் உறவு குறித்து யாரிடமாவது சொல்ல வேண்டும் போல இருந்தது. தக்கரைக்கும். குரங்குக்காரியோட உறவு அத்தனைச் சுவாரஸ்யமானது. அவனைக் கடந்து போன ஒரு இன்பக்கனா அது.

குரங்குசடைச்சி அவன் தோளைச் சுற்றிக் கிடந்தக் காலத்தில் தான் அவனிடமிருந்த காமவாசம் வெளிப்பட்டது. அதற்கு முன்பும் பின்பும் அவன் காம வாழ்வில் அதிகமாக கலந்து விட்டவனில்லை.

## அத்தியாயம் -22

பேராச்சியம்மன் படித்துறை

சோத்துப்பெட்டியிடம் நிறையக் கற்பனைக் குதிரைகள் இருக்கின்றன. அவை எப்போதும் புல்வெளிகளில் மேய்ந்துக் கொண்டிருக்கும். கறுப்பு, வெள்ளை, செவலை என பல நிறத்திலும், பல தரத்திலும் உள்ளன. எது தேவையோ அதில் ஏறிக்கொண்டு பாய்ந்து போவான் அவன் செல்ல வேண்டிய இலக்கை நோக்கி. ஒரு குதிரை அவனுக்கு வயிறு பசித்தால் ஏதாவது கலியாண மண்டபம், எப்போதும் சோறு போடும் வீடுகள், கடேசியாக வக்கீல் அய்யாக்கண்ணு வீட்டுக்கெனத் தேவையைப் பொறுத்து அழைத்துச்செல்லும். இன்னொன்று வயிறு நிறைந்த பின்னே, படுத்துத் தூங்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லும். எந்த பேருந்து நிலைய நிறுத்தத்திலும் அவன் அத்தனை குதிரைகளோடுதான் உட்கார்ந்திருப்பான்.

அத்தனை குதிரைகள் இருந்தும் அவன் உடைமைகள் இருக்கும் நீண்ட பை மட்டும் அவனது தோளிலேயே இருக்கும். அதைக் குதிரைகள் போல மேய விட்டு விடக் கூடாது என்று எண்ணுவான்.

இன்று காலையிலேயே எழுந்தவுடன் நேற்று தூக்குவாளியில் தண்ணீர் ஊற்றி வைத்திருந்த பழைய சோற்றை ஊறுகாயுடன் சாப்பிட்டு முடித்தாயிற்று. வயிறு பசிக்கும் போது சாப்பிடணும் என்ற கொள்கைக்காகவே உயிர் வாழ்வதை எப்படி விட இயலும்?.

அவனது வயிற்றுப் பெட்டி நிறைந்தவுடன் பசிக்கான குதிரைகளை அவிழ்த்து விட்டு விடுவான். அத்தனை குதிரைகள் அவனுக்காகக் காத்திருந்தபடி மேய்ந்து கொண்டிருக்கும். சோத்துப்பெட்டியின் சொர்க்கபுரி ராஜ்யம் அதுதானே. அது முடிந்தபின்னே இனி வருமானம் தேடும் குதிரைகள்தான், அவன் முன் நின்று கனைத்துக் கொண்டு நின்றன.

இப்போது எங்கு குதிரையை விரட்டுவது என்பது தான் சோத்துப் பெட்டியின் யோசனை. கடைசியாக பேராச்சியம்மன் கோவில் படித்துறை என்று முடிவாயிற்று. குதிரை கட்டவிழ்க்கப்பட்டு வேகமாய்ப் பயணம் தொடங்கியது. இனிக் கடகடவென ஓடிப் படித்துறையில் நின்றபின் திரும்பிப் பார்க்கும். சோத்துப் பெட்டி தன் நடையை எப்போதுமே குதிரையின் பாய்ச்சலுக்கு ஒப்பிட்டுக் கொள்வது வழக்கம். கால அளவைக்குத் தகுந்தாற்போல் அதன் சீரான வேகம் இருக்கும். அதுதான் அவன் நடையை எப்போதும் ஊக்கப்படுத்துகிறது. பயணங்களில் ஊடாகத்தான் அவனது சாப்பாடு, தூக்கம், படிப்பு, சித்த மனோ நிலை எல்லாம் இருக்கிறது. இப்படியான உலகத்தில் அவன்

ஏறத்தாழ இருபது வருடங்களைக் கழித்து விட்டான். அவன் கல்கியின் நாவல்கள், சாண்டில்யனின் சரித்திரக்கதைகள் எழுத, அதைப் படித்திருந்தான். இப்போது அவனது குதிரைகள் போகிற மின்கம்பங்களை எண்ணிக் கொண்டே செல்லும். எங்கேயும். நிற்காது. சொன்ன இடத்தில்தான் போய் நிற்கும் அவனது குதிரைகள் இன்று மதியமோ, மாலையிலோதான் சாப்பாட்டுக் குதிரையை கிளப்பணும். அதுவரை பேராச்சி அம்மன் படித்துறையில் அவனது ராஜ்ய சேவை தொடரும். தோளில் பையுடன் அவனது வேகமான நடை எந்த இடத்திலும் நிற்கும். குறிப்பிட்ட இலக்கை அடைந்தவுடன் சமாதானம் கொண்டு மெதுவாக நடக்கும். பேராச்சியம்மன் படித்துறை இரவு முழுக்க அடித்த சாரல் காற்றில் சுத்தமாக, பளிச் சென்றிருந்தது. எந்தப்படியில் உட்காரலாம் என்று பார்த்தான். அவனைப் போலவே பலரும் அமைதியாகவே அமர்ந்திருக்கின்றனர்.

மணிக்கட்டுவரை கைகளும், உதடுகள் முழுவதுமாக பெருநோய் தின்று விட்ட மனுசி, பெரும் விபத்தில் கால் துண்டுபட்டு, கைகளில் செருப்பு அணிந்தபடி வந்து இருக்கும். ஊனமுற்றவர், மாற்றுத் திறனாளிகள், மூன்று சக்கர வாகனங்களை ஆலமரத்தடியில் நிறுத்திவிட்டு வந்து வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் எனவரிசையாய் இருக்கிறார்கள். சூசையும், தக்கரையும் எப்போதாவது வந்து அந்த வரிசையைத் தாண்டி எதிரே சாதாரணமாய் அமர்ந்திருப்பார்கள்.

உண்மையான வாழக்கையைத் தொலைத்துவிட்ட, அல்லது இழந்து விட்ட நிழல் உருவங்கள் அவை. எங்கெங்கோ பிறந்து, அடிபட்டு, வாழ்க்கை வெள்ளத்தில் மூழ்கிப் பயணித்து ஒரு கரையில் ஒதுக்கப்பட்டவர்கள். ஆகாசத்தாமரை கரை ஒதுங்கிக் கிடப்பது போல் சாக்கடைநதிக்கருகில் அழுக்கு உடைகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

அம்மனைக் கும்பிட வருபவர்களும், அடுத்து சாமிகளை வணங்க வருபவர்களும், திதி, தர்ப்பணம் செய்ய வருபவர்களும் தாராளமாய் ஏழைகளுக்கு தானம் வழங்கி நிறைவு பெறுகிறார்கள். விசித்திரமான தாமிரபரணி நதி எல்லோரையும் ஈர்த்துத் தன்படிக்கட்டுகளில் அமர வைத்திருக்கிறது.

பேராச்சி அம்மன் நேர்மேற்கே ஆற்றுக்குள் ஒரு மணல் திண்டு உருவாகி காட்டு மரங்களும் கொடிகளும் வளர்ந்து பச்சைபசேல் என்றிருக்கிறது. அந்தக் காட்டுமரத்தில் நிறையக் கொக்குகள் வெண்பூக்களைப் போல அமர்ந்திருக்கின்றன. அதன் கொடிகள் பெரும்மரத்திலிருந்து வளைந்து தொங்குகின்றன. மேக்காத்து அவைகளை அங்குமிங்குமாய் நீரில் (கொடிகளை) விட்டுத் துளாவுகின்றன. அதைச் சுற்றிலும் ஓடும் நதியின் வேகம் அந்தமணல்திட்டை இழுத்துச் சென்றுவிடுமோ என்றிருக்கிறது

அதன் சுழித்தோடும் வேகம்.
தக்கரைக்கு வரிசையில் நீண்டநேரம் அமர்ந்திருக்கப் பிடிக்காது. சரியான நேரத்தில் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பிறகுக் கொடுப்பதைப் பெற்றுவிட்டு உடனடியாக செல்ல முடிவதைப் போல இங்கு முடியாது. மாலைவரை இருக்கவேண்டும் அவன் எதுவும் கொடுக்கவிரும்பாமல் வேகமாக அவ்விடத்தைக் கடக்க நினைக்கிறபோது, கடுமையான கோபமும், எரிச்சலும் ஏற்படும், அதையும் சகித்துக் கொள்ளவேண்டும்.
திடீரென காலில் ஷ_வோடும் மூன்று சட்டைகளோடும் வந்த அந்தக் கறுப்பன் வண்ணாரப் பேட்டை முக்கிலிருந்து ஆறுவரை அங்குமிங்குமாய் வேகமாய் நடந்து கொண்டும் உறுமிக்கொண்டும் அலைவான். எப்போதும் தோளில் மிகப் பெரிய சிமிண்டுப் பையை தோளில் சுமந்துகொண்டு வருவான். இன்று அந்தப் பை இன்றி வேகமாக நடக்கிறான்.
பற்களைக் கடித்துக் கொண்டு அவன் பேசுகிற மொழியை யாரும் புரிந்து கொள்ள முடியாதுதான். அந்தச் சொற்களுக்குள் பல கெட்டவார்த்தைகள் யாரோ ஒருவரைக் குறிவைத்து வெளிவருகின்றன என்பதை அவன் போக்கை நிதானமாகக் கவனிப்பவர்களுக்குத் தெரியவரும்.
எல்லாவற்றையும் விட அவன் மூர்க்கமாய் அலைகிற நேரங்களில் செயற்கைப்பட்டுச் சேலை அழகான பார்டருடன் மினு மினுங்க கைகளில் ஏந்தியபடியே அலைவான். உட்காருகையில் அந்தசேலைகளின் முந்தியை விரித்துப் பார்த்துவிட்டு மீண்டும் விசனத்துடன் எழுந்து அங்குமிங்குமாய் அலைவான். நல்ல கதாசிரியருக்கு வேண்டிய நீண்ட கதை அவனிடம் இருக்கக்கூடும். அவன் அதனைச் சொல்லத் தயாராய் இருந்திருந்தால் அவன் என்றைக்கோ சொல்லியிருந்தால், ஒரு சினிமாவாக மாறியிருக்கக்கூடும் தான். யாரும் அவன் மூர்க்கத்தில் நின்று கொண்டு கேட்கத் தயாரில்லை. ஏன் மடித்த சேலையைக் கைகளுக்குள் போட்டுக் கொண்டு அலைகிறான் என்று. அவனைப்பற்றி, யாதொரு சாதகமான பதிலையும், யாரிடமிருந்தும் பெற முடியவில்லை.
அந்தக் கறுப்பன் குறித்து எந்தக்கதையும் யாருக்கும் தெரியாததாகையால் அவன் சுதந்திரமான மனிதனைப் போல அலைய முடிகிறது. கதைகளற்ற மனிதன் எவனும் இல்லை. எல்லோருக்குள்ளும் கதையும் இருக்கிறது. கதைத் தேடலும் இருக்கிறது.
அவனது பயணங்கள், வேகமானச் சலனங்கள், மூர்க்கமானச் சப்தங்கள், கொலைவெறிப் பேச்சுக்கள், ஆபாச வசைகள் எல்லாவற்றிற்கும்

பிண்ணனியில் அவனே பலிகடாகவாக பலிபீடத்தில் வெட்டுப்பட்டிருக்குக்கூடும் எனத் தெரிகிறது. அதன் பின்பான வாழ்வுதான் அவனை இத்தனை பயணங்களில் அலைக்கழிக்கிறது.

யாசகர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். சூசைக்கு அந்தக் கறுப்பனின் கையில் இருக்கும் பட்டுச் சேலையின் பின்னணி வரலாறு தெரியவேண்டும் என்று மண்டை காய்ந்து கொண்டிருந்தது. சூசை அவன் கையிலிருக்கும் சேலையைக் குறித்தே சிந்தித்து கொண்டிருப்பதை அறிந்தவனாகத் தனக்குள் தக்கரை சிரித்துக்கொண்டான். மனத்திற்குள் சிரித்துக் கொண்டாலும் கண்களும் முகமும் மலர்ச்சியுருவாதைத் தடுக்க முடியாதுதான். சூசை அதைப் பார்த்துவிடுவானோ என்று தோன்றியது தக்கரைக்கு. சோத்துப் பெட்டி எதையும் கண்டு கொள்ளாமல் சித்தர்களின் நூல் ஒன்றை வாசித்தபடி இருந்தான்.

"தக்கரை அண்ணே. இந்தக் கறுப்பன். ஒரு பொம்பளைய ரொம்ப விரும்பியிருப்பான். சேலைவாங்கிட்டு வீட்டுக்கு போயிருப்பான். அப்போ அவெ எவனோடவாவது ஓடிப்போயிருப்பா..." என்று தனக்குள் உருவான கதையைச் சொன்னான். சூசை.

"பாருங்கண்ணே.. எவ்வளவு அழகா இடது கையில மடிச்சிப் போட்டிருக்கான். பார்டர் எப்படி வரிசையாக இருக்குது"

தக்கரை பதில் எதுவும் சொல்லவில்லை. கறுப்பன் தன் அத்தனைக் கதைகளையும் அந்தச் சேலைக்குள் மடித்து வைத்திருப்பதாகவே எண்ணிக் கொண்டான்.

## அத்தியாயம் -23

புளியம்பட்டி

"புதுசா.. ரொம்ப பெரீசா கெபி கட்டியிருக்காங்க.. பாக்கவே ரொம்ப அழகாயிருக்கு. திருவிழான்னு வச்சா கண்டிப்பா போயிறணும்னு தான் இருந்தேன்" என்றார் ஒருவர் டீயைக் குடித்துக் கொண்டே.
"ஊரு உலகத்திலிருந்தெல்லாம் ஆளுவ வருது. நாலெட்டுல நாம இருந்துக்கிட்டு போவமா வேண்டாமான்னுட்டு இருக்கோம்" சலிப்போடு சொன்ன மற்றவர் டீயைக் குடித்துவிட்டு பலகையில் வைத்தார். அவர் அப்படி வைத்தது அவருக்கான ஆற்றாமை போலத் தெரிந்தது.
கங்கைகொண்டான் விலக்கில் நின்றுகொண்டிருந்தபோது அவர்கள் பேசுவதைத் தானும் கேட்டுக் கொண்டிருந்தான் தக்கரை. அவனுக்கு புளியம்பட்டி அந்தோணியார் கோவில்னா ரொம்பப் பிரியம். ரெண்டு மாதத்திற்கு ஒருதடவை போய்விடுவான். போனால் சாப்பாட்டுக்குப் சாப்பாடும், பணத்திற்குப் பணமும் கிடைக்கும்தான்.
கொடிமரத்துக்கு முன்னால் இருந்த கெபியைச் சுற்றி பேய் பிசாசுப் பிடிச்ச பிள்ளைகள், பைத்தியங்கள், செய்வினைக் கோளாறு உள்ளவர்கள் தலைமுழுக்க துணியப் போட்டுக் கிட்டு ஆடி ஆடி ஓய்ந்து மயங்கிக்கிடந்தார்கள். அப்படி ஒரு பூர்வீகமான கட்டுக்களை உடைக்கிற தேவாலயம் அது.
இருபது வருசத்திற்கு முன்பு சடைச்சியை அங்கு வைத்துத்தான் பார்த்தான். எல்லோரையும் அவள் குரங்கை குட்டிக் கரணம் போடச் சொல்லுவதும், போட்ட கம்புகளை வரிசையாக அடுக்கிக் கட்டி தலையில் தூக்கி வச்சிக்கிட்டு நடக்குறதும், சட்டியைத் தலையிலே வச்சிக்கிட்டுத் துட்டுக் கேக்குறதும், கம்புல ஏறித் தலைகீழாக் குதிக்கிறதும் என அத்தனையும் செய்யும் அந்த குரங்கு, அவளுக்கு காசையும் அதிகம் சேர்த்துக் கொடுத்தது. நேரம்போகாமல் குரங்கையும் சடச்சியையும் தக்கரை பார்த்துக் கொண்டே நின்றான்.
அன்று பகல்லில் அவள் குரங்கைக் கட்டிப் போட்டுவிட்டு வெளியே போனாள். குரங்கு பல்லைக்காட்டி "கீச் கீச் சுன்னு" கத்திக்கிட்டே ரெண்டுப் பழத்தையும் தக்கரையிடம் கொடுத்து அதைப் பார்த்துக்கொள்ளச் சொன்னாள். அது கத்தும் போது பழத்தை வீசிவிட்டு நின்றான். அது கத்துவதை நிறுத்திப் பழத்தை எடுத்துக் கொண்டது. அதன் இடுப்பில் சடைச்சி வெள்ளிக் கொடி போட்டிருந்தாள். காலிலும் வெள்ளிக் கொலுசு கிடந்தது. அவ்வளவு அழகாக் குரங்கை வச்சிருந்தாள்.

அவள் வெளியே போய்ட்டு வந்தவுடனே, குரங்கு சத்தம் போடவில்லை என்று சொன்னான். அவள் சிறிதாக ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு தனது எண்ணெய் படியாதச் செம்பட்டை முடிகளை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

அன்று மாலையிலும் அவள் குரங்கு விளையாடிக் காசு சேர்த்துக் கொடுத்தது. அவளுக்கு அடுத்த நாளும் தங்கியிருக்க வேண்டும். குரங்கை வைத்து காசு பார்க்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். அதற்கு அவளுக்கு ஒருதுணையாள் வேணும். அவன் கூட்டதத்தில் நிற்கிறானா என்று பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவன் நிற்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள். அன்று மாலை முழுசும் குரங்கின் வித்தையில் அவனும் கூட இருந்தான். கொண்டுவந்து கொடுக்கும் காசை பெட்டியில் போட்டு மூடிப் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளச் சொன்னாள். தக்கரையும் அதற்காக உட்கார்ந்து கொண்டான்.

ஒதுக்குப் புறமாக அவனை அழைத்துக் கொண்டு போயி இருக்கச் சொல்லிவிட்டு குரங்கினைச் சீக்கிரம் தூங்க வைத்தாள். அவள் வெள்ளி அரைஞான் கயிற்றில் கட்டிய இரும்புச் சங்கிலியை மரத்தில் கட்டிவிட்டுப் அவனருகில் பணத்தை வைத்திருந்த அட்டைப் பெட்டியைக் கொண்டு வந்தாள். பணத்தை அவனை எண்ணச் சொன்னாள். இருவருமாய் எண்ணி வைத்தார்கள். அவள் பணத்தை பொதிந்து சுருக்குப் பையில் போட்டு இடுப்புக்குள் வைத்துக்கொண்டாள்.

இரவில் இருவரும் புரோட்டாவும் கோழிக்கறியும் சாப்பிட்டார்கள். அவள் தாராளமாக செலவழித்தாள். மறுநாள் பகல் முழுவதும் குரங்கு வித்தைக்குப் பணம் கொட்டியது. அவள் அத்தனையும் பத்திரமாக எடுத்துக் கொண்டாள்.

"ஏங்க.. என்னோட வாறீங்களா. நல்லபடியா இருக்கலாம்" என்றாள். அவனுக்கு அவளது யோசனை பிடித்திருந்தது. அவளது மூக்குத்தியும், கண்களில் சுருக்கமும், கன்னக்குழியும் அவனை இழுத்தது. அவள் மனம் விட்டு பேசினாள்.

அவளுக்குள்ளே புதைந்துக் கிடந்த ஒரு மாபெரும் கதைகள் அவனை மிகவும் வசீகரித்தது. அவளைச் சுருட்டிக் கொண்டு போய் விற்க முயன்ற கதையும், அவளிடமிருந்து சுருட்டிக் கொண்டுப் போன கதைகளும் அதிகம்.

அவள் சொல்லச் சொல்ல அவள் கழுத்துவரை வைத்துத் தைத்த நைஸ் காலர் ஜாக்கெட்டின் அழகை ரசித்துக்கொண்டேயிருந்தான். "என்ன நான் பேசுவது பிடிக்கலையா?" என்றாள். "உன்னிடம் எல்லாமே

பிடித்திருக்கிறது. ஒன்றைத் தவிர''.

குரங்கு பிடிக்கவில்லை என்றதும் அவள் அழுதுவிட்டாள். ''உங்களுக்குத் தெரியாது. குரங்கில்லையென்றால் நான் எப்போதோ செத்திருப்பேன். ஒருதடவை ரெண்டு பேர் ரெயில்வே நடைமேடை தாண்டிப் பலாத்காரம் செய்ய முயன்ற போது குரங்குதான் அவர்களை கடித்து விரட்டியது, என்றாள். இன்று வயிறாற சாப்பிடுவதற்கு காரணம் குரங்குதான் என்றும், அது என் குழந்தை என்றும் சொன்னாள். என் தகப்பனார் எனக்கு குரங்கையும் பிழைப்புக்கு வழியையும் தந்துவிட்டு போனார்.

அவன் அவளுக்காய் ஒத்துக்கொண்டான். அன்றே அவள் தங்கியிருக்கும் அந்த ஒதுக்குப்புரமான ஓட்டு வீட்டுக்குக் கூட்டிப் போனாள். பாத்திரங்களை விளக்கினாள். அவனுக்குத் தண்ணீர் பிடித்தாள். சமையல் உட்பட எல்லாம் செய்தாள்.

அவனும் அவளும் குரங்குமாய்ச் சாப்பிட்டார்கள். குரங்கு அவனை ஏறிட்டுப் பார்ப்பதும் முறைப்பதுமாய் இருந்தது. அவன் அவளிடம் சொன்னபோது குரங்கைச் செல்லமாய் திட்டினாள். அது தலையைக் குனிந்து கொண்டு குந்தி அமர்ந்தது.

அவன் குரங்கை கட்டிப் போட்டாள். ''ஏன் உன் செல்ல மகன் என்கிறாய். எதற்கு கட்டிப்போடுகிறாய்?'' என்று கேட்டான்.

''குரங்கைக் கட்டிப் போடாமல் வளர்க்கமுடியாது அது எப்போதும் சுதந்திரமானது தன்னிஷ்டப்படிதான் செயல்படும். திடீரென ஜன்னல் ஏறி, கதவு தாண்டி குதித்து மரம் ஏற ஆசைப்படும். அதுக்கு எங்கு போவணும், எங்கு திரும்பணும்னு தெரியாது. அதுபாட்டுக்குப் போய்ட்டே இருக்கும். அதனாலதான் கட்டிப் போடணும். திடீர்னு அதுக்கு வயிறு பசிச்சிதுன்னா சாப்பாடு கேக்கும். நாம தூங்கிக்கிட்டு இருந்தாக் கையக் கடிச்சிப் போடும் அப்படியான பிராணி'' அவனுக்கு மலைப்பாக இருந்தது.

அவள் குரங்கை மிகுந்த பாசத்தோடுப் பார்த்தான். அது உர்ரென்று அவனைப் பார்த்தபடி இருந்தது. எப்போதும் அவள் இருக்கவேண்டும் அதுக்கு. அவள் தனது குலதெய்வத்தின் பெயரை வைத்திருக்கிறாள் ''மாசாணி'' என்று. மாசாணின்னு பேரு வச்சாத்தான் எங்க ஊட்டுல புள்ளையோ, குரங்கோ தங்கும் என்றாள்.

அவள் அவனோடு பேசிக் கொண்டே இருந்தாள். பின்னிரவின் போதும் அவளின் இதயம் துடிப்பதைப் போல அவள் வாய் பேசிக் கொண்டிருந்தது. அவன் கையைத் தூக்கி தன் கையில் வைத்துக் கொண்டாள். அவன் அவளைத் தன்னருகே இழுத்தபோது அவள் இன்று வேண்டாம் பேசிக் கொண்டிருப்போம் என்றாள்.

அவள் வந்த கதை, அவள் அம்மா குரங்கு வைத்திருந்த கதை, அவள் குடிகாரக் கணவன் குடித்து குடித்து செத்துப்போன கதை, அவளை ஒருவன் சுவர்முட்டிக்கு அடிமையாக்கிய கதை. அதிலிருந்து அவள் மீண்ட கதை என நிறைந்த வாழ்க்கையை அவள் சுமந்துகொண்டிருப்பது தெரிய வந்தது.

இரவின் கடைசிப் பொழுதில் அவனிடம் கேட்டாள் "என்னைப் பிடித்திருக்கிறதா?" என்று "ஆம்" என்ற பதிலுக்கு மேலே எதுவும் சொல்ல வேண்டாமென அவன் வாயைப் பொத்தினாள்.

அன்றிரவில் அவள் மேற்கொண்டு எதுவும் பேசாமல் தூங்கிவிட்டாள். அவளுக்கு ஓய்வு இல்லாத வேலை. அவள் குரங்குக்கும்தான். குரங்கு மரத்தின் கிளையில் கிடப்பது போல ஒரு கம்பில் கிடந்துத் தூங்கியது. அவள் இப்படித் தூங்கிவிடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

அவன் எண்ணங்கள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தன. அந்த வீட்டு ஓட்டுக் கைகள் வழியாகக் காற்று வீட்டுக்குள் வந்து கொண்டிருந்தது. அவள் அருகில் படுத்தக் கொள்ளலாமா என்று எண்ணினான். அதுசரியில்லை என்று மனது சொன்னது. தலைசாய்ந்து கைகளை வைத்துக் கொண்டுக் கண்களைப் பொத்தித் தூங்க முயற்சித்தான். அவளின் கன்னக்குழியும், குரங்கு வித்தையின் போது அலை பாய்ந்து ஓடிய கண்களும் சித்திரங்களாக மனதில் தோன்றியபடியே இருந்தது.

அதிகாலையில் அவள் எழுந்திருக்கவேண்டும். அவன்மீது சேலையை போர்த்தி விட்டிருந்தாள். அவன் கொஞ்சநேரம் கழித்து எழுந்தான். அவனுக்கு டீ போட்டுக் கொடுத்தாள். காலையிலேயே வெளியே போய் சிக்கன் வாங்கி வந்திருந்தாள். சோறு பொங்குவதற்கான ஆயத்தங்கள் நடந்தபடி இருந்தது.

"தலையில் எண்ணெய் வைக்கட்டுமா?" என்றாள். கையில் எண்ணைக் கிண்ணத்தை வைத்துக் கொண்டு நின்றாள். தக்கரை பதில் எதுவும் சொல்லவில்லை. இன்று எல்லோரும் எண்ணெய்த் தேய்த்து குளிக்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டு அவன் தலையில் எண்ணெயை விட்டு தப்பளம் போட்டாள். "தலையெல்லாம் தூசியா இருக்கு.. நல்லா குளிச்சாத்தான். சரிவரும்" என்றாள். அவளே உடலிலும் எண்ணெயைத் தடவிவிட்டாள்.

சிறுதுண்டை உடுத்திக் கொண்டு எண்ணெய் இறங்க உட்காந்திருந்தான். காலையில் கடைப் பலகாரம் சாப்பிட்டாள். அவளே அவனைக் குளிக்க வைத்தாள். அரப்புப் பொடியும் சீயக்காயையும் கொண்டு தேய்த்து விட்டாள். அவன் கூச்சத்தில் நெளிந்தான். அவனை ஒண்ணும் தெரியாத பாப்பா என்று கிண்டலடித்தாள். அவள் கைகளினால் தலையிலும், முதுகிலும் நெஞ்சிலும் கைகளால் மஜாஜ்

செய்தாள். "இது எங்க குல வழக்கம்னு சொன்னாள். வந்த மனுசனுக்கு உடலைத் தேத்தனும். அதுக்குப்பின்னாடி அவனோட எல்லாம் வச்சிக்கணும். அதான்.." என்றாள்.
பெட்டியிலிருந்துப் புதுவேஷ்டியும் துண்டும் எடுத்துக் கொடுத்தாள். "இதுவும் எங்க வழக்கம்தான்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள். அவன் எல்லாவற்றையும் ஆச்சரியத்துடன் ஏறிட்டான். அவனை தன் நெற்றியில் குங்குமப் பொட்டிடக் குங்குமச் சிமிழை நீட்டினாள் அவன் பொட்டிட்டான். துண்டைப் போட்டுக் கொள்ளச் செய்து எழுந்திருக்கச் சொன்னாள். அவன் துண்டைத் தோளில் போட்டபடி எழுந்து நின்றபோது அவன் கால்களில் விழுந்து வணங்கினாள். தன் தலையில் கைவைத்து ஆசி வழங்கச் சொன்னாள்.
"ஒண்ணும் பயப்படாதய்யா. நீ இன்னைக்கு எங்க ஊட்டு மவராசான். உன்ன சாமி கும்புடுறமோ இல்லயோ உன் சாமான இன்னிக்கு தொட்டு கும்பிடனும்ய்யா" அவள் சொன்னபோது இன்னும் கொஞ்சம் கூச்சப்பட்டான் தக்கரை.
இப்படியெல்லாம் பழக்க வழக்கமா, என்று யோசித்தான். தக்கரை "என்னய்யா யோசிக்கிறே. பழங்காலத்துல எங்கள்ல ஒரு வாரக் கட்டும் உண்டுமையா அதெல்லாம் முடிச்சாத்தான் பொஞ்சாதி புருஷனாவே ஆக முடியும். இப்பல்லாம் அந்தக் கட்டெல்லாம் இல்லாம போச்சு" என்றுச் சொல்லியபடியே அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்..
அன்றிலிருந்து மூன்று நாட்கள் அவனை அவளே முழுமையாக ஆக்ரமித்தாள். அவள் கடைக்குப் போய்விட்டு வந்து குரங்குக்கு உணவு கொடுத்துவிட்டு அவனோடு படுத்துக் கொண்டாள். குரங்கு அவர்களையேப் பார்த்துக் கொண்டிருந்தது. மூன்றாவது நாள் குரங்கு மதம் பிடித்தது போல் ஆக்ரோஷமாகவிட்டது. அவள் அதை அழைத்துக் கொண்டு கடை வரைக்கும் சூடாக அதற்கு தேவையானதை வாங்கிக் கொடுத்து வந்தாள். ஆனாலும் அது ஆக்ரோஷமாகவே இருந்தது.
அன்றைய இரவில் அவளும் அவனுமாய்ப் பின்னிக்கிடந்தார்கள். அவள் அவனை ஆட்டிப்படைத்தாள் அவனுக்குப் பிடித்திருந்தது. காலையில் அவனைக் குளிக்க வைத்து சடங்கினை முழுமைப்படுத்தினாள். இனி அவளோடு அவன் எங்ஙணும் செல்லலாம்.
அவள் இருவரையும் அழைத்துக் கொண்டு நடையில் புறப்பட்டவள், காரில், ரயிலில், வண்டியில் என எல்லாவற்றிலும் பயணம் செய்தார்கள். மூன்று மாத்தில் அவன் அவளோடு தமிழ்நாட்டில் பல ஊர்களுக்கும், பல திருவிழாக்களுக்கும் போய்வந்தான். அவன் அவ்வளவு வேகமாக எந்தக்காலத்திலும் ஓடியாடியதில்லை. அவளோடு இன்னும் இரண்டு வருஷம் இருந்திருந்தால் தமிழ் நாடென்ன, கேரளா, கர்நாடகம்

எங்கணும் போய் வந்திருப்பான். அப்படி ஒரு நாடோடியாக இருந்தாள் அவள். தன் வீட்டு ராஜாவுக்குப் பணிவிடை செய்வது போல செய்தாள்.
அவள் குடும்பத்தில் குடிக்காத ஒருவனை அவள் பார்த்ததே இல்லை. தக்கரையிடம் அந்தக் குணம் இல்லை என்பதே அவளுக்கு போதுமானதாக இருந்தது. அவளுக்கான உணர்ச்சியை அவன் தீர்த்து வைப்பதைக் குறித்தும் அவள் மகிழ்ந்திருந்தாள். அவனாக அவளைப் பலவந்தப்படுத்தாது நடந்து கொண்டதும் அவளைக் கொண்டாட வைத்தது.
அவள் சொன்னாள் "இனி உன் தேவைகள் அனைத்திற்கும் நான் பொறுப்பு என்னோடு நீ வரணும் அம்புட்டுதேன்." அது அவனுக்குப் போதும்தான் தமிழகத்தின் அனைத்து ரயில்களிலும் அவர்கள் பயணித்தார்கள். அவளிடம் சேர்ந்தப் பணத்தை அவளால் என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் "ஒரு இடம் வாங்கி வீடு கட்டலாம்" என்றாள். அவனுக்கு அது எதற்கு என்றுத் தோன்றியது.
"கடைசி காலத்தில் நம்மால் ஓடியாட முடியாது. ஏதாவது ஒரு இடம் இருந்தால் அங்கே படுத்துக்கலாம்தானே..."
அவன் பதிலை எதிர்பார்க்காமல் வாங்கினாள். அந்த மனவீயில் வீடுகட்ட ஆரம்பித்தாள். சும்மா ஒரு அறை மட்டும் கான்கிரீட், மற்றவை ஓட்டுச் சாய்ப்பு என்று அவள் கால்கள் நீண்டதூரம் பயணிக்க விரும்பவில்லை. அந்த வீட்டைச் சுற்றிலும் போய் வந்தார்கள். வீடுகட்டி முடித்தவுடன் மீண்டும் ஆறுமாதம் பயணித்தார்கள். தமிழகத்தின் மூலை முடுக்குள் எங்கும். அவளிடம் காசு சேர்ந்தவுடன் ஒரு கடை வைப்போம் என்றாள்.
அதற்காக இடம் தேடி உரிமையாளரிடம் முன்பணம் கொடுக்க அழைத்தாள். அவனுக்குப் பிடிக்கவில்லை. தொழில் செய்வது கஷ்டமென்றான். அவளாகவே போய் முன்பணம் கொடுத்து, மற்றக் காரியங்களையும் செய்து கடையை ஆரம்பித்தாள். மோசமில்லை பெட்டிக்கடை நன்றாய்ப் போய்க்கொண்டிருந்தது. அவனுக்குப் பிடிக்கவில்லை எங்காவது வாரத்திற்கு ஒரு நாள் குரங்கோடு வெளியே போவோமென்றான்.
"இல்லை தக்கரை என் கால்கள் அலுத்துவிட்டன. இனியும் என்னால் வெளியில் அலைய முடியாது. உனக்கும் உடல் தளர்ந்து விட்டது. கடையை கவனித்துக் கொண்டு வாழலாம்" என்றாள். குரங்கை விற்றுவிடவோ, விட்டுவிடவோ சொன்னான். அதற்கும் அவள் இசையவில்லை. அவனால் கடைக்கானச் சாமான்களை மொத்த சந்தையில் வாங்கி வரவும் விருப்பமில்லை. அவன் அப்படியே வீட்டில் முடங்கிக் கிடந்தான்.

இனிமேல் அவன் கனவுகளுக்கு அந்த வீட்டில் எந்தக் கதவும் திறக்காது என்பதை உணர்ந்தான். அவனுக்கு எதுவும் பிடிக்காமல் போனது, வேலைபார்த்து பிழைக்கும் வாழ்க்கையும் என்றான். அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள். "என்னை மட்டும் பிடிக்கிறதல்லவா அது போதும்தான்" உன்னை பிடிப்பதற்காக நான் இப்படியே கிடக்க முடியாது என்றான். தான் ஊருக்கு போவப் போவதாகச் சொன்னான். அவளும் அழுதுகொண்டே சரியென்றாள்.

ரயில் நிலையம் வந்து டிக்கெட் எடுத்துக் கொடுத்து, பணமும் கொடுத்து கண்ணீர் வழிய அனுப்பிவைத்தாள். ரயில் விரைய விரைய அவனும் அழுதுகொண்டே பயணித்தான். அழுகையின் ஊடே தனக்குரிய சுதந்திர வாழ்வு கைவரப் பெற்றதாகவும் எண்ணிக்கொண்டான்.

## அத்தியாயம் -24

ஆர்.சி.சர்ச்

யாசகனின் மனம் எப்போதும் ஒரு அலையற்றக் குளத்தைப் போல அமைதியானது. பசியும், பட்டினியும் உடலியல் சார்ந்தவை. அதுவும் எப்போதாவது நிகழ்கிற ஒன்றுதான். நல்ல கோடையில் நூற்றுக்கண்க்கில் உயிர் வாழும் நீர்ப் பறவைகளுக்கு, முழுத்தீவனம் கிடைக்காதுதான். அரை வயிற்றுக்குச் சாப்பிட்டவுடன் கரையேறிவிடும். மற்றப் பறவைகளுக்கு வழிவிட்டு கொடுக்கும். நாளாக நாளாக அரை வயிறும் கால் வயிறாகும். ஆனால் அவை வருந்துவதில்லை. புணர்ச்சி கிடையாது. குஞ்சுகள் உற்பத்தி கிடையாது. வாழவும் பறப்பதற்குமான சக்திக்கு மட்டுமே உணவு சாப்பிடும். அதுபோல்தான் யாசகம் கேட்பவனின் வயிறு பசியையும் உடலியல் துன்பத்தையும் தாங்கும் சக்தி கொண்டது. அதற்காகவும் கவலைப்படாதது, யாசகனுக்கு மண்ணோ, மனையோ, பொருளோ, அருளோ, புகழோ தேவைப்படுவதில்லை. பிறகு ஏன் அவன் எதையாவது எண்ணி எண்ணி ஏமாந்து போக வேண்டும்..?
தக்கரை அலைபாயா மனத்தைக் கொண்டவன். அவன் சடைச்சியோடு நிம்மதியா, வயிறாற உண்டு வாழ்ந்திருக்கலாம். சடைச்சி அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள். அவனால் சாதாரண மனிதனையும் போல உலகப் பிரகாரம் வாழமுடியாது அதைத்தேடி ஓடியாடவும் விரும்பாதவன். சடைச்சி இப்போது அந்தக் கடையை பெரிதாக்கியிருக்கலாம். வீட்டையும் பங்களா போல் மாற்றியிருக்கலாம். அவளின் வளர்ச்சியைப் பார்த்துவிட்டு வரலாம் என்று அவனுக்கு ஆசைதான். ஆனால் அதற்காக இங்கிருந்து காசு செலவழித்துப் போகவேண்டிய அவசியம் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவள் நன்றாக இருந்தால், என்மீது பிரியம் இருந்தால், என்னைப் பார்க்க வேண்டுமென்ற நினைப்பிருந்தால் அவளே தேடி வந்திருக்கலாமே. ஏன் வரவில்லை? என்பதும் அவனின் பிரதான கேள்வி. அவளே வரவில்லை எனும்போது அவன் எதற்கு மெனக்கெட்டு போய் பார்க்கணும்? அவனுக்கு எந்தத் தேவையுமில்லையே.
பின்பும், சடைச்சியின் அன்பும், அழகும், அவனைக் கொண்டாடும் குணமும் அவனை ஈர்த்தபடியே இருக்கிறது. அப்படியே இருக்கட்டும் என்று விட்டு விடுதலும் அழகாய்த்தான் படுகிறது.
ஏன் இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டே இருக்கிறேன் என்று அவன் பலமுறை எண்ணில் பார்ப்பதுண்டு. அமைதியாக இருக்கும் மனமும் சும்மா இருப்பதில்லை. அது தங்க வேண்டுமானால், அதற்குச்

சிந்திப்பதையே உணவாக்க வேண்டியதிருக்கிறது. உடலைப் போலவே மனதிற்கும் சில ஆசைகளும், பசிகளும் இருக்கத்தான் செய்கின்றன.

சில சமயம் அவனுக்குத் தோன்றுகிறது சடைச்சியோடு வாழ்ந்திருக்கலாம் என்று. சடைச்சியோடு அல்ல, சடைச்சிக்குள்ளாக. ஆமாம்தான். அவளுக்குள் வாழ்தல் என்பதில் அவனுக்கு என்ன இருக்கிறது. அதற்குமேல் அவனுக்கென்று எதுவும் தேவைப்படாதே என்று. எதுவும் கடந்த போகிற போது, அதன் நிழல்கள் மட்டும் எப்படி தங்கிவிட முடியும். அவன் கடந்து போனது போனதுதான் என்று தான் எண்ணிக் கொள்கிறான்.

கொஞ்சம் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள வேண்டும் போல இருக்கிறது. யாரோடாவது பேசிக் கொண்டிருக்கணும். யாரோடு என்று எண்ணுகிறபோது, முதலில் சூசையும் ரெண்டாவதாக முத்தாச்சியும் இருக்கவேண்டும் என்று விரும்பினான். அப்படி அவர்கள் வந்தாலும் அவர்களோடு ஒன்றும் பேசிவிடப் போவதில்லை அவர்கள் பக்கத்தில் இருப்பதும் பேசுவதும் ஒன்றுதான் என்று தோன்றியிருக்கலாம்.

அப்படியே தன்னந்தனியனாகக் கோவில் வாசல் அருகில் உட்கார்ந்தது அவனுக்கு எரிச்சலாயிருந்தது. எப்போதும், எங்கேயும் அலைந்து திரிந்த கால்களைக் கட்டிப் போட்டது போல் இருந்தது. காசில்லாவிட்டால் கங்கைகொண்டானுக்கு, நாலு இடத்தில் உட்கார்ந்திருந்தாவது நடந்து போய் விடுவான்.

எழுந்து மனம் போன போக்கில் நடந்தான். அப்படியே ஆர்.சி. கோவில் பக்கம் போனான். கட்டம் போட்ட பேண்டிலும், பூக்கள் நிறைந்த சட்டையும் அணிந்து கொண்டுப் படுத்திருந்தான் ஒரு யாசகன். அவன் தலைமாட்டிலும் கால் மாட்டிலும் ஏழெட்டு பைகள் ஒன்றில் மேல் ஒன்றாய் இருந்தன. அப்படியே ஆறு மாத அழுக்கு எல்லாவற்றிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அவனுக்கு ஒன்று தெரிந்தது. அவன் கடற்கரையை ஒட்டிய ஊர்க்காரனைப் போல பெரிய சிலுவை மாலை அணிந்திருந்தான். அருகில் போய்ப் பார்த்தால். மீனோ, கருவாடடு வாடையோக் கூடுதலாக அடிக்கக்கூடும் என்று மனது சொல்லியதும் அவன் எந்த ஊர்க்காரனாக இருந்தால் என்ன? ஆர்.சி. கிறிஸ்துவனாகத்தான் இருக்க வேண்டும்.

பல பிச்சைக்காரர்களுக்கு மதம் அவர்களின் உடலோடும் உடையோடும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அவர்களும் அந்த மதச் சம்பிரதாயங்களுகளோடும். அடையாளங்களோடும். வாழ விரும்புகிறார்கள். அதுவே அவர்களைக் கோவிலும், சர்ச்சுகளிலும், தர்காக்களிலும் தங்க வைத்து விடுகிறது. சில யாசகர்களின் மத நம்பிக்கை அபாரமானதாகவே இருக்கிறது.

அவர் தனது பெயர் மிகாயீல் ராயப்பன் என்று அவனிடம் சொன்னார்.
ஞாயிற்றுக்கிழமை பாளையங்கோட்டை அந்தோணியார் கோவிலில் யாசகத்திற்காகப் போனபோது புதிதாக ரெண்டு மூன்று வாரமாக அவரைப் பார்த்தான். அவரும் அவனையேப் பார்த்தபடி இருந்தார். எப்போதும் தூரத்தில் அமர்ந்தபடி இருக்கும் ஒருநாள் அவனருகில் வந்தார். அவரது அலைபாயும் கண்கள் குழந்தையோடு தம்பதிகளாக வருபவர்களைப் பார்த்தபடியே இருக்கும். அவர்கள் அவர் கண்ணில் இருந்து மறையும் வரை அலசிக் கொண்டேயிருக்கும். அவனுக்குத் தெரிந்தது. அவர் யாசகம் கேட்கும் சூழ்நிலையில் இருந்து வந்தவரல்ல என்பது. அவரது பார்வை, யாரிடமாவது தனது கதையைச் சொல்ல வேண்டுமென்பதும் அவரது முகத்தில் தெரிந்தது.
அழுக்கான, அல்லது அதிக கந்தல் உடையில் இருப்பவரையோ, வயதானவரையோ அவர் கண்கள் ஏற்கவில்லை ஒரு சுத்தமான, சீரான யாசகனிடம் தான் சொல்லவேண்டும் என்று எண்ணி யிருக்கிறார். அவரது எண்ணத்திற்கு அவன்தான் கொஞ்சம் சரியாகத் தெரிந்தான்.
மூக்கை உறிஞ்சிக் கொண்டே அவனருகில் வந்து அமர்ந்தார். அவனுக்குத் தெரிந்தது, அவருக்குப் பேசத் துணையில்லை என்று. அதுவும் பலநபர்களுடன் பேசிப் பழகி வாழ்ந்துவிட்டவர்கள் யாசகர்களாகத் தொடர்ந்து நீடிக்க மாட்டார்கள். பேச்சற்று கடந்து போகும் காலங்கள்தான் அதிகம். யாசகன் அதற்காக வருந்துவதில்லை.
மிகாயீல் ராயப்பன் அப்படியான யாசகர் அல்ல. அவரின் அலைபாயும் கண்ணும், தொணதொணக்கும் உதடுகளும் பேசுவதற்கு ஆள் தேடுவதை உணர்ந்தான்.
பரஸ்பரமாக அவனைப் பற்றி அறிமுகம் கேட்டபின் தன்னைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.
"அண்ணே கேளுங்க எனக்கு ஆறு புள்ளயொ. ரெண்டு பொட்ட புள்ள. மத்த நாலும் ஆம்பளைங்க, நல்லமொறையில் படிக்க வச்சி ஆளாக்கி ஒவ்வொருத்தரையும் மனுசன் ஆக்கினேன். எனக்கு ரெண்டு போட்டு இருந்துச்சி. அதுகளையும் இப்ப ஆம்பளப் புள்ளயளெ பாத்துட்டு வாராணுவொ. ஏன் பொஞ்சாதிக்கு கேன்சர்
வந்து லட்சக்கணக்கில் செலவழிச்சும் பலனில்லாமச் செத்துப் போச்சி. அதெ கல்லறைத் தோட்டத்துல அடக்கிட்டு ஊட்டுக்குத்தான் வந்திருக்கேன்.
"ஆம்பளையளோடு சேத்துக்கிட்டு பொம்பளைகளும் எங்களுக்கு பாகத்த பிரிச்சுத்தாங்கோன்னு நிக்காளுவொ, நான் எம்புட்டோ சொல்லிப்பாத்தேன். யாரும் கேக்குற மாரி இல்லை. அப்படியே நீங்களே பிரிச்சுக்குங்கன்னு சொல்லிட்டு நான் ஒதுங்கிக்கிட்டேன்

எல்லாத்துக்கும் பத்திரம் போட்டு எழுதிக் கேட்டானுவொ. கையெழுத்து போட்டு கொடுத்துட்டேன். அதுக்கு பொறவுதான். மருமகக்காரிய திட்டம் போட்டமாரி என்ன கிள்ளுக்கீரையா நெனைச்சி பேச ஆரம்பிச்சிட்டாளுவொ சாப்பாடு மட்டும் தந்தாளுவொ. சாப்பாடு மட்டும் எதுக்கு. அதுதான். நாய்கூட திங்குமே. பாத்தேன். இனி சீக்கிரமா அவெ போன வழிக்கோ போய் சேந்திரணும்னு சொல்லாமெ கொள்ளாமெ வந்துட்டேன்".

அதுவரை உச்சிக்கொட்டிக் கேட்டுக்கொண்டிருந்தவன், "ஏய்யா.. அதுக்கு புன்னக்காயல்லெ இருந்து இம்புட்டு தூரம் வந்திட்டிங்க"

"அப்படி கேளுய்யா மவராசா சரியா கேட்டே. சீக்கிரமா போயச் சேரணும் முடிவு பண்ணிட்டேன். எங்கினியாவது காட்டுல மேட்டுலன்னு செத்துக் கெடந்தா, நம்மள அனாதப் பொணம்னு எரிச்சிப் போடுவான். நாம கத்தோலிக்கம். அதுலயும் எனக்கு அந்தோணியார்னா ரொம்பப் பிடிக்கும். எந்தக் காத்துப் புசல் அடிச்சாலும், எந்தக் கடல்ல நின்னாலும், அந்தோணியாரே நீருதான் காப்பாத்தணும்னு ரெண்டு சத்தம்
கொடுப்பேன். அம்புட்டுத்தான். ரெண்டு நாள் கழிச்சினாலும் கரையில கொண்டு சேத்திடுவாருல்ல.. அவரு மெய்யான தெய்வம். என்ன நா சொல்றது. சரிதானே..."

"ம்..."

"நா மொதோமுதல்ல அம்மாப் பட்டிணத்துல போயிப் போட்டு வாங்கணும்னு நினைச்சி அந்தோணியாரைக் கும்பிட்டுட்டுப் போனேன். அங்கப் போனவுடனே நா நெனைச்சமாரி. அதே வானக் கலர்ல அப்பத்தான் செஞ்சுமுடிச்சு விக்கிறதுக்கு வுட்டுறுக்கான். அப்படியே அவன்ட்ட ரேட்டப் பேசி, அந்தோணியார் பேர எழுதச் சொல்லி கொண்டு வந்துட்டேன். அப்டி ஒவ்வொன்னையும் எங்கூட ஒருத்தர் நின்று செஞ்ச மாரி அந்தோணியார் எனக்கு எல்லாத்தையும் கொடுத்து வழியும் காட்டுனாரு. இப்பவும் அவுருதான் என் எடத்துக்கு போன்னு இங்கெ அனுப்பி வச்சிருக்காரு" என்று சொல்லி நிறுத்திவிட்டுப் பின்னால் இருக்கும் புல் தரையில் காறித்துப்பி விட்டுத் தொடர்ந்தார். இங்கே வந்து பாத்தா, புதுசான அந்தோணியார் கோவிலு, புது கெபின்னு கல்லறைத் தோட்டம், மேக்கொண்டு வெளிநாட்டுல வைக்கிறமாதிரி அடுக்கடுக்கான கல்லறை அலமாரி. இதுதான் நாம் மரிக்க வேண்டிய பூமி. அந்தோணியார் அப்படியே வந்து என்ன அவரோடப் பரலோக ராஜ்ஜியம் அழைச்சிட்டு போயிருவாரு. என் ரெத்தமும் சதையும் சாட்சியா என் சரீரம் இந்த கோவில்லதான் செரிக்கணும்.. எப்பப் போகப் போவுதோன்னுதான். ஏங்கிகிட்டு

இருக்கேன்" என்றார் ராயப்பன்.
கொஞ்சநேரம் அப்படியே அமைதியா இருந்தவர் கண்களில் நீருப் பூத்து, துளியாக கன்னத்தில் சொட்டியது. முகம் சுழித்துச் சுருங்கிச் சோகமாய் மாறிவிட்டது.
"ஏய்யா.. வருத்தப்படாதிங்க.. எல்லாம் நல்லபடியா நடக்குமய்யா"
"இனிமே இந்தக் கட்டைக்கு என்ன... நல்லபடியா நடக்கணும். ஒண்ணும் வேண்டாம். தாரை தப்பட்டை, பேண்ட்வாத்தியம் முழங்க பூமாலைகளைப் போட்டு எடுத்துட்டுப் போனாலும் போவத்தான் போறோம் ஒருத்தருக்குத் தெரியாமக் குழிக்குள்ள எறக்குனாலும் போவத்தான் போறோம். என்னா நா சொல்றது? என்று எப்போதும் போலப் பேச்சைக் கேள்வியில் நிறுத்தினார்.
"ஆமாய்யா" என்பதைப் போலத் தலையை ஆட்டினான்.
அவர் சுரத்தில்லாமல் தலையைத் தொங்கப் போட்டபடி கீழே பார்த்து அமர்ந்திருந்தார். தனக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டார். "அவெ மட்டும் போவாம இருந்திருந்தா இந்தக்கெதி வந்திருக்குமா ரெண்டு போட்டையும், வீட்டையும் எழுதிக் கொடுக்கச் சம்மதிப்பாளா. அவெ போனா என்புத்தியையும் கடன் கொடுத்திட்டேன். . அவுங்களெ குத்தம் சொல்லி என்ன பிரயோஜனம். நம்மள்ட இருந்தாத்தான் அது நெஜம். இல்லாட்டி எந்த மனுசனும் தெருவும் திண்ணையுந்தான்.."
"மருமகள்களெ நம்பினாலும் மகன்களெ நம்பக் கூடாது. அவனுவொ எதுக்கு இப்படி அவளுவெ முந்தாணியெப் புடிச்சிக்கிட்டு அலையுதானுவலோ தெரியல." தனக்குள் புலம்பிக் கொண்டார்.
அவன் மெதுவாக எழுந்திரிச்சி, "வாரேன்.. உடம்பெ நல்லாப் பாத்துக்கோங்கய்யா" எனச் சொல்லிவிட்டு நகர்ந்தான். அவர் ஒரு ஏக்கப்பார்வையுடன் கழுத்து நரம்பு தெரிய அவனைப் பார்த்தபடியே இருந்தார். நாக்கை நீட்டி உதட்டை நனைத்து ஈரமாக்கி விட்டுச் சொன்னார்.
"இத்தினி நாளாச்சு.. எம் பையனாவது, பொண்ணாவது நா எங்க இருக்கேன். இருக்கேனா.. செத்துப்போய்ட்டனான்னு பாக்க வரலியே, இனிமே என்ன புள்ளே குட்டியொ. எல்லாத்துக்கும் அந்த அந்தோணியார் இருக்கார்... பாத்துக்கிடுவார்.. போய்ட்டு வாங்க..." என்றார்.
அவர் சாவதற்காக வரவில்லை. தன் பிள்ளைகள் தாங்கித் தடுக்கி அழைத்துப் போகவேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பதற்காகவே வந்திருக்கிறார் என்று அவனுக்குப் பட்டது. அதுவரை அவர் எங்காவது அந்தோணியார் கோவிலில்தான் இருப்பார் என்று அவர் பிள்ளைகளுக்கு உணர்த்துகிற அடையாளமும் அதற்குள் இருக்கிறது.

தலையைக் கவுட்டுக்குள் நுழைத்து அசையாமல் இருந்தார் ராயப்பன்.
தூரத்தில் புகையை விட்டபடி சூசை நின்று கொண்டிருந்தான்.

## அத்தியாயம் -25

கொடிமரம்

அலைதலும், அடைதலும் என இரண்டு குணங்களும் யாசகர்களுக்கு தேவையாய் ஆகிவிடுகின்றன. எங்கிருந்தோ வரும் பிச்சைக்காரர்களும், எங்கேயோ போகப் போகிற பிச்சைக்காரர்களும் ஒவ்வொரு பெரிய ஊரிலும் உணவிற்காகவே தங்கிவிடுகிறார்கள். அந்த ஊரையும், ஊர் மக்களையும் அலசித் தீர்ப்பது போல எல்லாத் தெருக்களிலும் அலைந்து திரிந்து விட்டுக் காணாமல் போய்விடுவார்கள். அவர்கள் தன்மையைப் பொறுத்து ஒரு வாரம், பதினைந்து நாள், ஒரு மாதம், ஒரு வருடம் நீடிக்கிறது அந்த ஊரில் அவர்களின் இளைப்பாறுதல். பிறகு என்ன, வேறொரு ஊரில் அவர்களின் வாசம், வாசனையாய் மாறிவிடும்.

சுலைகா எல்லாபக்கமும் தேடிக் களைப்படைந்துவிட்டாள். பகல் பதினொரு மணிக்கு பீருவைக் காணவில்லை என்ற பரபரப்பு தர்கா எங்கும் உலகச் செய்திபோலத் தீயாய் பரவியது. சுலைகாவிற்கு தாங்க முடியவில்லை. பீரு நாதாக்களை யாரும் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களோ என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

ஓடையைத் தாண்டிப் போயும், வடக்கே துறையூர் வரைக்கும் போயி தேடிப்பார்த்துவிட்டாள். எங்கும் காணமுடியவில்லை. ரெண்டு நாளாக வந்து அடையவில்லை என்று சொன்னார்கள். யாரும் பிடித்துக் கொண்டு போயி அறுத்து தின்றிருப்பார்களோ என்று பயந்தாள். அப்படிச் செய்தால் இந்த தர்கா நாதாக்கள் கண்ணெ அவித்துப் போடட்டும் மென்று சாபம் கொடுத்தாள்.

சுலைகாவும், கடைசி பட்டியலில் இருந்த சுப்பக்காவும் எப்படியும் திரும்பி வந்துவிடும் என்று நம்பினார்கள் சுலைகா திடீர் திடீரென பீரு வாகைமரத்தடியில் நின்று இரைக்காகக் காலால் கிளறிக் கொண்டிருப்பது போல பிரமை கொண்டாள். அதை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு திரிந்தாள்.

நாலைந்து நாள் கழிந்திருக்கும் பக்கத்து ஊரிலிருந்து ஒரு பெட்டையோடு வந்தது. பீரு அதற்கு இரை காட்டிக் கொண்டே அழைத்து வந்தது. தக்கரைக்கு அதன் கம்பீரத்தைக் குறித்து மகிழ்ச்சியோடு அன்று முழுவதும் பேசிக் கொண்டிருந்தான். பகல் முழுக்க தன் பெட்டையை எல்லோரிடமும் காட்டி விட்டு இரவில் காணாமல் போயிருந்தான் பீரு.

"பீரு நாதாக்களை எவென் களவாண்டுட்டு போவமுடியும்னு கேக்கேன் அப்படியே களவாண்டா கண் அவிஞ்சி போயிர மாட்டான்." என்று பீரு வந்ததினால் பெருமை பிடிபடாமல் பேசினாள். இனி பீருவை

காணமுடியாமப் போனாலும் கவலைப்பட வேண்டியதில்லை என்று தக்கரையிடம் சொன்னாள் சுலைகா. அவனுக்கும் அதே எண்ணம் தோன்றியது. அதை சுலைகாவிடம் சொல்ல எண்ணிய போது அவன் முந்திக் கொண்டது சொன்னது ஆச்சரியமாக இருந்தது.

அநேகமாக பக்கத்து ஊரில் பெட்டைகளோடு மரத்திலோ, வேறு மோட்டு வளையிலோ தங்கிக் கொண்டிருக்கக் கூடும். எப்படியும் பீரு ஒரு நாள் தர்காவில் வந்து தஞ்சமடையும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. ராத்திரி ராத்திரி பீருவைத் தேடியபடி தன் கணவனிடம் எதையாவது சொல்லிக் கொண்டுவிட்டுதான் தூங்குவாள் சுலைகா.

தக்கரைக்கு எப்போதும் ஒரு ஆச்சரியம். சிலசமயம் வடநாட்டுக் காரர்கள் தவறி சிலர் வந்து விடுகிறார்கள். அப்படி ஒருநாள், எங்கோ இறக்கிவிடப்பட்ட சிவந்த நிறமாக இருந்த ஒருத்தன் அப்படியே நெடுஞ்சாலைகளின் வழியே வந்து சேர்ந்துவிட்டான். கங்கைகொண்டான். தர்காவின் பட்டைச்சோறு வாசனை அவனது வேகமான நடையை நிறுத்தி, தர்காக்குள் அழைத்துவந்தது.

கொடிமரத்தில் வந்து அமாந்தவன் எல்லோரையும் பார்த்துக்கொண்டே நகராமல் இருந்தான். காவி வேஷ்டியும், குர்தாவும், அதன்மேலான கோட்டும் மட்டும் ஆடையாக இருந்தது. எல்லோரும் நேர்ச்சை உணவு வாங்க ஓடுகையில் அவன் அங்கேயே இருந்தான். யாரோ கடைசியில் அவனுக்கு ஒரு பிளாஸ்டிக் இலையில் போட்டு அவனருகில் வைத்தார்கள். அவன் சாப்பிட்டுவிட்டு, கையை சட்டையில் துடைத்துவிட்டு, தண்ணீர் குழாயில் கைநீட்டி குடித்தபின்பு ஏதோ ஒரு பாடலை சிறிது நேரம் இசைத்துவிட்டு கிளம்பினான். அவன் கைவிரல்கள் அசைந்து கொண்டே யிருந்தன. மீராவின் காதலன் போல ஏதோ ஒரு பஜன் அவன் உதடுகளில் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

அவன் இரண்டு நாள் தாழையூத்து பக்கம், சிலநாட்கள் நாற்கரசாலைப் பக்கத்தில் திரிந்தான். அதன்பிறகு பாளையங்கோட்டையிலேயே தங்கி விட்டான். தங்கிய சில நாட்களில் அவனிடம் ஒரு மாயசக்தி இருப்பதாக சுற்றியிருப்பவர்கள் உணர்ந்தார்கள். அவனிடம் மணிகேட்டால், எந்தக் கணிப்புமின்றி வானம் பார்த்துவிட்டுச் சரியாகச் சொல்வான். அந்த ஒரு செயலில் அவன் மாயமானவனாக மாறிப்போனான். பல வீடுகளில் இருந்து அவனுக்கு உணவும் உடையும் வந்து சேர்ந்தது.

யாரோ அவனுக்கு தேக்சிங் என்று பெயரும் வைத்துவிட்டார்கள். அவன் தன் பெயர் என்ன என்பதைக் கேட்டால் யாரிடமும் சொன்னதில்லை. எப்படி தேக்சிங் என்று கூப்பிடுகிறார்கள் என்று யாருக்கும் விளங்கவே யில்லை. ஒரு பெரும் பணக்காரர் அவனை ஹிந்தியில் அரைகுறையாகப்

பேசி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சாப்பாடு கொடுக்க ஆரம்பித்தார். அவன் அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டு வருவதை எல்லோரும் பார்த்தார்கள். அவ்வளவுதான் நம் மக்களுக்கு போதுமே. எல்லோரும் அவனை வீட்டிற்கு அழைத்து சாப்பாடு கொடுக்க ஆரம்பித்தார்கள். அதுவும் வடநாட்டு சப்பாத்தி, நான், பருப்பு, உருளைக்கிளங்கு கூட்டு என வடக்கத்திய உணவுகள் பரிமாறப்பட்டன. எல்லா வீட்டுக்கும் அவன் செல்வதில்லை. அவன் போன வீடு, குபேர வீடாகிவிடும் என்ற பேச்சும் தேக்சிங்கைச் சுற்றி காற்றில் அலைந்தது.

தேக்சிங் எப்போதும் போல அதே மாதிரி இருந்தான். சில நாட்கள் எங்கேயோ நெடுஞ்சாலைகளில் வேகமாய் நடந்து போகிறவனாய் இருப்பான். அவனது கும்மாளமும், பாட்டும் கூடவே போகும். அதில் அவனுக்கு நினைவு வருமோ என்னமோ, இரவில் அதே ஊருக்குத் திரும்பிவிடுவான். அவனுக்கு உணவும் உடையும் கொடுக்கப் பலரும் போட்டிபோடும் காலத்தில் அவன் காணாமல் போயிருந்தான். இரவோடு இரவாக எங்கேயோ போய்விட்டான். அவனுக்கு தினமும் சாப்பாடு கொடுத்து வந்த தொலைதொடர்பு அதிகாரி தன் மகனை இருசக்கர வாகனத்தில் நெஞ்சாலையின் இருபுறமும் தேடி வரச் சொன்னார். இருளுக்குள் இருளாகி எப்போதே கலந்து காணாமல் போய் இருந்தான் தேக்சிங். அவனை காணவில்லை என்பது, இரண்டு மூன்று நாட்களுக்குப் பெரும் பேச்சாய் கிடந்தது. நம்ம ஊருக்கு நல்ல காலம் போய்விட்டதாகக் கூட சிலர் பேசிக் கொண்டார்கள்.

மக்களால் கொண்டாடப்பட்ட தேக்சிங் போன்றவர்கள் எப்போதாவது ஒரு புது அவதாரம்போல வந்து விடுகிறார்கள். இப்போது ஒரு வடநாட்டுக்காரி இவ்வளவு வெயிலிலும் கையில்லாத சுவெட்டரைப் போட்டபடி வீதிகளில் அலைந்தபடி இருக்கிறாள். அவள் எந்த வீட்டிலும் எதுவும் கேட்டதாய்த் தெரியவில்லை. வேகமாய் நடந்தபடியும், தனக்குள் சிரித்தபடியும், பேசியபடியும் அலைகிறாள். மிகுந்த மகிழ்ச்சியானவள் போலவே அலைகிறாள். காளையர்களை இழுக்கும் வனப்பும், அதற்கேற்ற உயரமும் வடக்கத்தி அழகோடும் அலைகிறாள். அவளது பெரிய மூக்குத்தியும், சரிகையிடப்பட்ட பெரிய பாவாடையும் அவளுக்கு ஆட்டமும் தெரியும் என்பது போலவே தெரிகிறது.

அவள் என்ன மொழி பேசுகிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை. மொழியற்றப் பெருங்குரல் பாளை வீதிகளில் இனிமையாகக் கலந்து விடுகிறது. அதன் பொருளை அறிய முற்பட்டவர்களுக்கு அதன் பொருள் மகிழ்ச்சி என விளங்குகிறது.

அவளும் ஆர்.சி.தேவாலயத்தின் கீழே வந்து அமர்ந்திருந்தாள். தனதுப்

பைக்குள் கைவிட்டு வேறொரு சுவெட்டரை எடுத்துப் பார்த்தபடி இருக்கிறாள். அதன் பலவண்ணக் கலர் பிடிக்கிறதோ என்னமோ அதையே மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிப் பார்த்தபடி இருக்கிறாள். அவளின் மகிழ்ச்சியான முகத்தில் தூக்கச் சடைவோ, சோர்வோ இல்லை. சிரித்தது போலவே தெளிவாக இருக்கிறது முகம். அவளைக் குறித்த ஒரு கிலேசம் தீராதிருக்கிறது. எந்தக் கழிசடைப் பயலாவது அவளை ஏதாவது பலாத்காரம் செய்ய முற்பட்டு அவளை, அவள் மகிழ்ச்சியைப் பாழாக்கிவிடக் கூடாது என்பதுதான். பராமரிப்பற்றுத் தெருவில் கிடக்கும் மாணிக்கம் போல் தெரிந்தாள் அவனுக்கு.

ஆனால் அவளது கைகள் ஸ்வெட்டர் பின்னுவதிலும், அதோடு எதையோப் பாடிக் கொண்டு இருப்பதுமாய் காலத்தோடு வாழ்கிறாள். யாரோடும் ஒட்டாத அவள் அநேகமாக காலத்தோடு ஒட்டிக் கொண்டு வாழ்வது போல இருக்கிறாள். அவளிடம் ஸ்வெட்டர் வாங்குவதற்கென்று யாரோ இருக்கிறார்கள். இத்தனை நாளும் அவள் பின்னிய ஸ்வெட்டர்களை அவள் விற்பனை செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதுவே ஒரு பெரிய லாரிச் சுமையை தூக்கிச் சுமக்க வேண்டியது இருக்கும். கவலையற்ற அவளின் வாழ்வு அதன்படிதான் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

"தக்கரையண்ணே அந்த வடக்கத்திக் காரி எப்போதும் சிரிச்சிக்கிட்டே இருக்காளே. அவுளுக்கு கவலையே கெடையாதாண்ணே..."

"சூசை உன்னெ எல்லாரும் லூசுங்கிறது சரியாத்தாம்ல இருக்கு. அவளுக்கு நாம் எங்கிருக்கோம் எங்கேருந்து வந்தோம் யாருயாரெல்லாம் விட்டுட்டு வந்திருக்கோம்னு தெரிஞ்சா ஏம்ல இங்க இருக்கா. எல்லாத்தையும் இழந்துட்டு, இல்லாட்டி தவிக்க விட்டுட்டு தனியா கெடக்காளே.. அவளப் பாத்தா உனக்கு எளக்காரமா தெரியுதா. சும்மாவா சொன்னான். பூனை எளைச்சு போயிட்டுன்னா எலி மச்சான் மொறை கொண்டாடுமாம் அது மாரில்லா இருக்கு உம்பேச்சு..."

தக்கரை இப்படிக் கோவப்படுவார் என்று சூசை எண்ணவே இல்லை. அதுக்கு மேலே ஏதாவது கேட்டாக் கோபத்தில் வாய்க்கு வந்தபடித் திட்டிப்போடுவார் என்று பயந்தான்.

தக்கரை சிறிது நேர மௌனத்திற்குப் பின் பேச ஆரம்பித்தார்.

"கிறுக்குப் பயலே... நா சொல்லப் போறத நல்லா கேளு.." என்று பீடிகை போட்டுவிட்டு அவனை உற்றுப் பார்த்தான் சூசை மிகுந்த பயத்துடன் சரி என்பது போல தலையை ஆட்டினான்.

"ஏலே.. வள்ளி காணாமப் போனப் பிறகு ஒவ்வொரு ஊர்லயா பிச்சையெடுத்து ஊருக்கு வந்து சேர்ந்தேன். ரெண்டு வருஷத்துக்குப்

பொறவு, நான் போனதாலயும், பெரிய ஆளு மாதிரி சட்டையும் வேட்டியும் உடுத்திக்கிட்டு நான் எங்க ஊருக்கு வந்து பாளையங்காரர் ஊடு எதுன்னு கேட்டேன். அம்புட்டுதான் கடைத்திண்டுல இருந்த ஒருத்தன் சடசடன்னுப் பொறிய ஆரம்பிச்சுட்டான்.

"பாளையக்காரர் ஊடா எதுக்கு கேக்குறீங்க. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நெய்விளக்கு எரிச்சி தவமாப் பெத்த புள்ள கந்தூரில காணாமல் போனதிலேர்ந்து அந்த ஊட்டு அம்மா சாப்புடாம கெடந்து ரெண்டு மாசத்துக்கு முன்னாடி செத்தே போச்சு. அண்ணமார் ரெண்டு பேர்ல மூத்தவன் தலைல அடிச்சு அடிச்சு அழுதுக்கிட்டு கிடந்து, இப்பதான். ஊட்ட உட்டுட்டு சென்னைல பொழைக்கப் போயிருக்கார்ங்க.

அம்மா செத்த பிறகு விருத்தியல்லாத ஊட்டுல கிடந்து வாழ்க்கை பாட்ட தொலைக்கான் ஒருவன். கன்னிதரத்து புள்ள தொலைஞ்சு போச்சா, ஆத்துல குளத்தல உளுந்து செத்துப் போனதாக,, இல்லை கையில கிடந்த மோதிரத்துக்காக கொண்டு போயி காட்டுல கொன்னு புதைச்சிட்டானு வொன்னு பலபேரும் பல கதைய சொல்லிக்கிட்டு திரியிறானுவொ. யாரு கண்டா என்ன நடந்துச்சுன்னு. நீங்க யாருய்யா. அவுங்கள போயிக் கேட்டுக்கிட்டுன்னு இருக்கிங்க" என்று சோகம் கொப்பளிக்க அவர் சொன்னவுடன் அவன் கண்களில் நீர் கசிந்து இறங்கியது.

அந்த காணாமப் போன பையன்னு சொல்லிக்க விரும்பாம அப்படியே வந்துட்டேன். என்னோட கெட்ட செயலால், எவ்ளோ கஷ்டம் குடும்பத்துக்கு வந்துட்டு பாத்தியா அது மாதிரிதான் அவளும். எம்புட்டு பெரிய குடும்பமோ அதுக என்ன மாரி இருக்குதுவளோ யாரு கண்டா. நீ என்னடான்னா அவ சிரிச்சிக்கிட்டு அலையுதா, அப்படி இப்படிங்குறே."

"சரிண்ணே... நா நெனைச்சது தப்புத்தான்ணே"

"ஏல.. அவளுக்கு மனவியாதி ஏற்பட்டு எங்கேயோ வந்து கெடைக்கையிலும் யார்ட்டயும் கையேந்தாம ஸ்வெட்டர் பின்னி சாப்பிடுறாளே அப்படின்னா அவெ எம்புட்டு பெரிய்ய குடும்பத்த சேந்தவளா இருக்கணும். யாரையும் வாயி புளிச்சது மாங்கா புளிச்சதுன்னு பேச்க்கூடாதுல்ல..."

சூசை அதற்கு மேல் எதுவும் பேசாமல் மௌனம் காத்தான்.

அப்படியே மெல்ல நடந்து குளோரிந்தா ஆலயத்தின் முகப்பிற்குப் போனார்கள். இருள் கவியத் துவங்கிவிட்டது. ஆனாலும் கொஞ்ச நேரம் அங்கு இருக்க வேண்டுமென்று விரும்பினான் தக்கரை.

இருவரும் அமர்ந்தார்கள்.

வேப்பமரத்தடியில் இனிப் பேசுவதற்கு அவர்களுக்குள் ஒன்றுமில்லை

என்பது போல, பேசியவற்றை எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்தார்கள்.

## அத்தியாயம் -26

வண்ணார்ப்பேட்டை

முத்தாச்சியின் மென்விரல்கள் கொஞ்சம் அழுத்தியே பற்றிக் கொண்டிருந்தன தக்கரையின் விரல்களை, விரல்களுக்குள் நேசத்தைக் கடத்தும் அபூர்வசக்தி இருக்கத்தான் செய்கிறது. அவள் அழுத்திப் பிடித்தது அந்த இறக்கத்தில் இறங்கும் போது உள்ள பத்திரமான உணர்வுதான். தக்கரைக்கும் அவள் அப்படிப் பிடித்திருந்தது சுகமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் சுற்றி நிற்பவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே என்ற கூச்ச உணர்வும் மேலெழுகிறது. அதைத் தவிர்க்கவே யாரையும் பார்க்காதது போல பாவனை செய்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. அவன் உடலுக்குள் உணர்ச்சியின் இயக்கம் நடைபெறுவதை உணர்ந்தான்.

முத்தாச்சியால் தனக்குள் எழுந்த அதீத உணர்வுகளை மறைத்தவாறு முகத்தைத் தற்செயலாகப் பார்ப்பது போலப் பார்த்தான். அந்தக் கணப் பொழுதின் பார்வையிலும் அவள் முகம் பெருமிதத்தோடு மலர்ந்திருந்தது. இணைப்பில் எழுந்திருக்கும் பூரிப்பு அது.

வண்ணாரப்பேட்டை பேராச்சியம்மன் படித்துறை ஆலமரத்தின் கீழ் இருவரும் நின்ற நேரத்தில் மெதுவாக அவள் விரல்களிலிருந்து விடுவித்துக் கொண்டான். அவளுக்கும் அது தெரியும்தான். நின்று கொண்டிருக்கும் போது கைகளைப் பிடித்திருப்பது சரியில்ல என்பதை உணர்ந்து கொண்டு விடுவித்தாள். அந்த இடத்தில் அவன் அருகில் நிற்பது போதுமானதாகத் தோன்றியது.

ஆற்றைத் தாண்டி வந்த குளிர்காற்று சாம்பலைப் போன்றத் தூசியை அலையாய் கிளப்பிக் கொண்டு கிழக்காகப் பறந்து போனது. நடந்த வந்த அத்தனை களைப்பையும், வெயிலையும் ஆலநிழல் உறிஞ்சிக்கொண்டு ஒர் இதத்தைக் கொடுத்தது. குளித்து விட்டு மேலேறி வெற்றுடலுடன் வந்த நபர் கரையில் வைத்து வேஷ்டியை உதறினார். அதனிலிருந்து வெளிவந்த சிறு தூவல்கள் ஒர் இனிமையான குளிர்மையை எங்கணும் படர்த்தியது.

தாமிரபரணியின் கரையெங்கும் பெரும்பெரும் இலைகளோடும் ஊதாப் பூக்களோடும் ஆகாசத் தாமரைகள் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. இரு பெண்களும், ஒரு பையனும் சுலோசன முதலியார் பாலத்தைக் கை நீட்டியபடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். கோவிலைச் சுற்றியும், மற்ற இடங்களிலும் நெகிழிகளும் இளநீர் காய்களும், குப்பைகளுமாகக் கிடந்தன. தன்னைச் சுத்தப்படுத்தும் தீவிர உணர்வோடு ஆறு ஓடிக் கொண்டிருந்தாலும், அதற்கு எதிராக ஒரு கழிவுப் போரை மக்கள்

தொடுத்திருப்பதை யாரும் உணரத் தலைப்படவில்லை. ஒரு அழுகையின் குரலோடு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தக்குரல் மனம் வெதும்பி ஆற்றைப் பார்வையிடும் ஒவ்வொருவரின் குரலாகவும் இருக்கக்கூடும்.
வரிசையாகத் திருவோடு, தட்டுகளை முன் வைத்தபடி ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளும், யாசகர்களும் அமர்ந்திருந்தார்கள். வயதாலும், உடலாலும், மனதாலும் பலத் தரப்பட்டவர்கள் வருகிறவர்களின் முகங்களை ஏறிட்டபடி அமர்ந்திருந்தார்கள். உதடெல்லாம் காணாமல் போன பெரு வியாதிக்காரி வாயைத் துணியால் மூடியபடி ஏதோ நாக்குழறப் பேசிப் பிச்சைக்கேட்டபடி இருந்தாள்.
முத்தாச்சி அந்த வரிசை தாண்டி அடுத்த வரிசையில் அமரலாம் என்று சொன்னாள். ஆனால் அவன் கொஞ்சநேரம் அங்கு இருக்கலாம் என்பது போல அவளை ஆலமரத்தடியில் அமரச் சொன்னான்.
"என்னா.. இங்க வந்ததுல மகிழ்ச்சிதானே" என்று கண்கள் விரிந்து கருவிழிகள் மேலேற மகிழ்ச்சியோடுக் கேட்டாள் முத்தாச்சி பதிலுக்கு அவனும் ஒரு குறுஞ்சிரிப்புடன் கன்னங்கள் விரிய ஆமாம் என்று தலையாட்டினான். அது போதும் என்பது போல, குனிந்தபடி தலைசரிந்து தரையைப் பார்த்தாள்.
அவள் முகத்தில் சுருண்டு கிடந்த கேசத்தைக் கையால் பின்வழித்து விட்டாள். காதருகே சுருண்டுகிடந்த மயிர்க்கற்றைக்குப் பின்னால் புதிதாகப் போட்டிருந்த பித்தளைக் கம்மல் ஒளிர்ந்தது. தக்கரைக்கு அது ஜிமிக்கியாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றியது. எப்போது வாங்கிக் கொடுக்கப்போகிறோம் என்பது போன்ற கவலை வந்தது. காதோர சுருள்முடியை தொட்டுப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.
தூரத்தில் சுலோசன முதலியார் பாலத்தில் பேருந்துகளும், வாகனங்களும் சிறிய பொம்மைகளைப் போல வேகமாகப் பாய்ந்துச் சென்று கொண்டிருந்தன. ஆகாசத் தாமரைகளைக் காலால் மிதித்தபடி குளித்து விட்டு வரும் நபர் படித்துறையில் ஏறினார். கரையேறிவிட்டுச் சகதி இருக்கிறதா என்று பார்த்தார். முழங்காலுக்கு மேலாக வேஷ்டியைக் கட்டியபடி கால்களை உதறிவிட்டு நடந்து போனார். தினசரி குளிக்கிறவர் தவிர வேறு யாரும் அந்த ஆகாயத் தாமரைகளைத் தாண்டிப் போய் குளிக்கமாட்டார்கள். செவலைப் பசுவொன்றும், வெள்ளைப் பசுவொன்றும் கோவிலுக்கு அருகே அசையாது நின்றபடி இருந்தன. ஏழெட்டு மாடுகள் அங்குமிங்குமாக வெயிலைப் போல அலைந்தன. ஆகாசத் தாமரை இலைகள், கோவில் செவந்திப் பூ மாலைகள், இலைகள் என எதையாவதுச் சாப்பிட்டுவிட்டு அப்படியே

நிழலில் படுத்துக் கொண்டு அசை போடலாம் என்று தெரிந்து தான் அவைகள் அங்கே அலைந்துக் கொண்டிருக்கின்றன.
இலைப் பச்சைக்கலரில் மஞ்சள் பூ போட்டச் சேலையில் அழகாக இருந்தாள் முத்தாச்சி. அவளின் மகிழ்ச்சியான மனநிலையோடு அவளருகில் அமர்ந்திருப்பது அவனுக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. அதுவும் அவளோடு தனியாக இருப்பது கூடுதலாய் மன நெகிழ்ச்சியைக் கொடுத்தது அவனுக்கு. யாசகன் என்ற மனநிலை விட்டு மாறி ஒரு இன்ப அதிர்வுக்குள் அவன் இருந்தான்.
இரண்டு வெண்கொக்குகள் ஒன்றுக்கு அப்பால் ஒன்றென, சிறிய இடைவெளியில் ஆற்றின் அக்கரை நோக்கிப் பறந்து சென்றன. அவற்றின் நிழல்கள் சலசலத்தோடும் நீரில் கசங்கிய தாள் போலத் தெரிந்தன.
தர்கா ஓட்டு சாய்ப்பில் படுக்கச் செல்லும் போதும் நாளைக்குக் காலையில் முத்தாச்சியை பார்க்கச் சென்றுவிடவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியபடி, அந்த நினைவுகளோடு படுத்தவனுக்கு என்னவெல்லாமோ மனதில் தோன்றிக் கொண்டிருந்தது. சடைச்சி உடலெங்கும் எண்ணெய் தேய்த்துவிட்டதும், பிறகு அரைப்புப் போட்டுக் கழுவிவிட்டதும் ஞாபகத்துளிகளாக முன் வந்தன. அதையெல்லாம் தாண்டி முத்துக்கள் போன்று வியர்வை கோர்த்த முத்தாச்சியின் விரிந்த நெற்றி முகம் கண் முன்னே பிம்பம் போல நின்றது. நீண்டநேரம் உருண்டு புரண்டுப் படுத்தும் தூக்கம் வரவில்லை. எழுந்து தண்ணீர் பைப்பில் முகம் கழுவிச் சிறிது நடந்துவிட்டு வந்து படுத்தான். அப்போதும் அவளின் முகம் அவன் முன் நின்று கொண்டிருந்தது. பின்னிரவில் எப்படித் தூங்கினான் என்றறியாது தூங்கினான். காலையில் சீக்கிரம் எழுந்து புறப்பட்டுப் போக வேண்டுமென்ற எண்ணத்திற்கு மாறாக எப்போதும் போல ஒன்பது மணிக்கு மேல்தான் முழிப்பு வந்தது. அப்படியும் சோம்பல் தீராது அசதி உடலை முறுக்கிக் கொண்டு இருந்தது. படுத்திருப்பதின் சுகம் அவனை கவ்விக் கொண்டு இருந்ததால், அப்படியே கண்களை மூடிக் கொண்டுப் படுத்திருந்தான்.
இரவு முழுவதும் கண்வலிக்க அலைந்து நடந்து திரிவதும், அதைப் பகலில் தீர்க்கும் விதமாகப் படுத்துக்கிடப்பதும் யாசகர்களுக்கு மிகவும் பிடித்தமானதுதான்.அவன் கண்களைப் பொத்திக் கொண்டு வராத தூக்கத்தை தனக்குள் வரவழைக்க முயன்றான். அவன் தலைமாட்டில் யாரோ வந்து அமர்வது போலவும், ஏதோ பொருள்களை வைப்பது போலவும் கேட்டது, விழிதிறந்துப் பார்க்கலாமா என்று எண்ணியவனுக்கு. "அப்படி யார் வந்து விடப் போகிறார்கள். யாராவது

தர்காவிற்கு வந்த ஆளாக இருக்கும்" என்று எண்ணிக்கொண்டு திறக்காது படுத்திருந்தான்.
கொஞ்சநேரம் எந்தச் சலனமும் இல்லை. அவன் அடுத்த திசைப்பக்கம் திரும்பி படுத்தபோது லேசாகக் கண்களைத் திறந்தான், எதிர்த்தாற்போல் எவர்சில்வர் தூக்கு வாளியும், தண்ணீர் பாட்டிலும் இருந்தன. அவன் முகத்துக்கு அருகில் வைத்திருந்ததைப் பார்க்கும் போது அவனுக்கு வேண்டியவர்கள் யாரோ வைத்துவிட்டு போனது போல் இருந்தது. அந்தக் காது வளைந்த எவர்சில்வர் தூக்கு வாளியை எங்கேயோ பார்த்ததுப் போலவும் தோன்றியது. கொஞ்சம் திருப்பிப் பார்த்தான். கனமாக இருந்ததைப் பார்க்கும்போது ஏதோ கொண்டு வந்திருக்கிறார்கள். காது வளைந்ததை வைத்து அது யாருக்குரியதாக இருக்கும் என்றும் அதற்குள் என்ன இருக்கிறது என்றும் எண்ணிப் பார்ப்பது சரியா வென தோன்றியது.
"ஏங்க நேரமாச்சி சவுறா மாமிகிட்ட டீயைச் சுடவச்சிக் கேட்டேன். சுடவச்சி தந்திருச்சி. எந்திரிச்சி மூஞ்சியெ கழுவிவிட்டு வாங்க. டீ சாப்புடலாம்.." என்ற குரல் அவனுக்கு மிகவும் பழக்கமானதுதான். சடக்கென எழுந்துப் பார்த்தபோது முத்தாச்சி திண்டை ஒட்டி நின்று கொண்டிருந்தாள்.
அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது "உண்மையிலேயே முத்தாச்சிதானா இல்லே. தூக்கக்கிறக்கத்திலே அவ மாரி தெரியுதா," என்று தனக்குத் தானே கேட்டபடி கண்களைக் கசக்கிவிட்டு பார்த்தான்.
எப்போதும் அவனுக்கு அனுகூலமாகவேக் காரியங்கள் நடைபெறுவதாக எண்ணிக் கொண்டிருப்பவன். பெரிய அளவிற்கு அவன் பட்டினி கிடந்தது இல்லை. தேவை உள்ளதுக்குச் செலவழிக்கக் காசும் எங்கிருந்தோ வந்து விடுகிறது. தினமும் எந்தக் கவலையுமின்றித் தூங்கவும் முடிகிறது. இதற்கு மேல் என்ன பெரிய வாழ்க்கை இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் அவன் எதிர்பார்த்து இருந்தது ஓடி வந்து அவன் கைகளுக்குள் விழுந்திருக்கிறது.
முத்தாச்சி இப்போது அப்படித்தான் ஒரு மாயப் பெண்ணைப் போன்ற வசீகரத்துடன் வந்து நிற்கிறாள். வெடுக்கென எழுந்து விலகிக் கிடந்த வேஷ்டியைச் சரிப்படுத்தி, எழுந்து முகம் கழுவிவிட்டு வந்தான். பக்கத்தில் டீயோடு இருந்த முத்தாச்சி. இன்னும் கொஞ்சம் அழகாய்த் தெரிந்தாள். எப்படியும் ஜிமிக்கி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று மனது அடித்துக் கொண்டது.
முத்தாச்சியும் அவனைப் போலவே எல்லாமே தேடாமல் கிடைக்கும் பொம்பளையாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டான். அவள் வாழ்க்கையில் பல விஷயங்கள் அவளைத் தாண்டி

நடந்துகொண்டே இருக்கிறது. மகன் அவள் மீது உயிரையே வைத்திருக்கிறான். ஆனால் அவள் ஏன் தன் மீது நேசம் கொண்டு வந்திருக்கிறாள் என்று தக்கரைக்கு இன்றுவரை புரியவில்லை. இத்தனைக்கும் அவன் எதற்குள்ளும் அடங்காதப் புதிர் போன்று ஊமையாய் இருப்பவன். பெரிய ஆணழகனோ. நிறத்தவனோ கிடையாதுதான். இப்போதும முள் தாடி வேறு வளர்ந்தபடியிருக்கிறது. அவளுக்கு ஏன் தக்கரை மீதான தீராத நேசம். அவனுக்குள் நிகழும் சில புதிர்களும் இன்பங்களும் இருப்பதை அனுபவிப்பவனாகவே இருக்கிறான். ஆச்சரியமாகத்தான் இருக்கிறது அவன் வாழ்க்கை. யோசனைகளில் புகுந்து கொண்டு அமைதியாக இருந்தான்.

"என்னா... ரொம்ப யோசனையாயிருக்கு... இந்தாங்க டீய குடிச்சிக்கிட்டே யோசியுங்க" என்று சூடானத் தேநீரை அவன் கைகளில் கொடுத்தாள். சூடா தேநீர் அருந்துவதுதான் அவனுக்கு பிடிக்கும். அதுவும் காலையில் கட்டாயமாக வேண்டியதிருக்கிறது. வெளிக்கி போகணும்னா ஒன்ணோ, ரெண்டோ டீ போட்டாத்தான் போகமுடியும் இல்லாட்டி அன்னைக்கு பாடு அவ்வளவுதான்" அவன் சொல்லிக் கொண்டான்.

சரியான விகிதத்தில் கலந்து உருவாக்கிய தேநீர் தேவாமிர்தம்தான். கெட்டியான பாலில் போடவேண்டும். அப்படி கெட்டியாகப் போட்டு குடிக்கிற டீ ரெண்டு மணி நேரத்திற்கு மேலாக பசியைத் தாக்குபிடிக்கும். முத்தாச்சியின் தேநீரும் அப்படித்தான் இருக்கிறது. சூடாகக் குடிக்கக் குடிக்க அவனுக்கு இனிமையாக இருந்தது. அவள் உண்மையிலேயே பெருங்குடும்பத்தில் பிறக்க வேண்டியவள்தான் அதற்கான அனைத்துக் குணாம்சங்களும் கொண்டவளாக அவனுக்குத் தெரிகிறாள். முத்தாச்சிக்கு அப்படி ஒரு கைமணம் உண்டு. வாய்முகூர்த்தமும் அவளுக்கு வாய்த்திருக்கிறது. அவளைப் புகழந்து கொண்டே இருப்பான். அவளோட திறமைகளை அறிந்தவன். இரந்து வாழும் ஒரு பெண்மணிக்கு எப்படி இத்தனை திறமை வாய்த்தது. எல்லா இனிமைகளும் அவளிடம் வந்து ஒட்டிக்கொண்டதுப் போல இருந்ததைக் குறித்து மகிழ்ச்சியாய் இருந்தது.

ஒரு வெள்ளிக்கிழமை ஜீம்ஆ தொழுகையின் போது, ஒரு பெண்ணிடம் பல கெட்டகுணங்கள் இருந்தாலும் அவளிடம் உங்களுக்குப் பிடித்த ஒரு நல்ல குணம் இருக்கும். அதற்காக அவளை நீங்கள் நல்லமுறையில் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நபிகள் சொன்னதாக இமாம் பயான் (சொற்பொழிவு) செய்தது ஞாபகத்திற்கு வந்தது. முத்தாச்சியிடம் அவன் எந்தக் கெட்டகுணத்தையும் பார்த்ததில்லை.

அவன் தேநீரைக் குடித்துவிட்டு, அவளோடுக் கொடி மரத்து திண்டில்

அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான். பெருங்காற்று அங்கிருந்த மரங்களைத் தலைவிரித்து ஆடச்செய்தது. பூவரச மரத்தினின்று மஞ்சள் இலைகள் மஞ்சள் இதயங்களைப் போல பறந்து போனதைப் பார்த்தபடி இருந்தான். தூரத்தில் நின்ற அரசமரத்தின் கிளைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்ற அரச இலைகள் மேலும் உதிர்ந்து முழு அம்மணமாகிக் கொண்டிருந்தது. அதன் சிறிய கிளைகள் வெண்மையாய்த் தெரிந்தன. ஒன்றிரண்டு இலைகளோடும் காற்றில் ஆடும் அரசமரத்தின் அழகு அதிசயமாக இருக்கிறது.

மொத்த மரமும் ஒட்டு மொத்தமாய் தளிர் இலைகளைக் கொண்டு ஆடுவதும், இலைகள் அத்தனையையும் உதிர்த்துவிட்டு நிற்பதும் அரசமரத்தின் இருமுகக் கம்பீரத்தைக் காட்டுவதாக இருக்கிறது. எப்போதும் அரச மரம் அரசமரம்தான். கோடைக் காலத்தின் பகலை விட இரவின் வெக்கை தணல்பூமியாய் மாற்றியிருந்தது.

மனிதர்கள் மட்டும் கோடைக் காலத்தில் தோற்றுப் போனவர்களைப் போலவே ஆகிவிடுகிறார்கள். வெயில் எல்லோரையும் விரட்டிக் கொண்டிருக்கிறது. தாடி மயிர்கள் அங்கொன்றுமாய் இங்கொன்றாய் வெறித்து நிற்க தக்கரை அதைப் பார்த்தபடி இருந்தான்.

ஆற்றையோ, வாய்க்காலையோ, குளத்தையோ ஒட்டி நிற்கும் பெருமரங்களின் குளிர்ச்சியும், கம்பீரமும் அலாதியானது. வேனில் காலங்களில் பூக்களோடு சிரித்தபடி எல்லோரையும் தனக்குள் பொதிந்து கொள்கிறது. ஒரு பெட்டைத் தன் சிறகுகளுக்குள் தன்குஞ்சுகளைப் பூட்டிக் கொள்வதைப் போல. கோழிக் குஞ்சுகளுக்கு வெப்பம் தேவையெனில் மனிதனுக்கும், மாடுகளுக்கும் குளிர்பதனக் குடையாகிறது நீர்நிலை மரங்கள். படித்துறை மரங்களின் எல்லா நிழல்களிலும் மனிதர்களும் மாடுகளும் அவனும் முத்தாச்சியும் அருகருகே அமைதியாக இருந்தார்கள். யாரோ ஒருவர் உணவுப் பார்சல்களை ஆளாளுக்கு கொடுத்துக் கொண்டுப் போனார். சிறுபிள்ளைகள் வாங்குவதற்காக அவர்களைச் சுற்றினார்கள். அவர் பெரியவர்களிடம் மட்டுமே கொடுத்துக் கொண்டு வந்தார்.

இரண்டுப் பார்சல்களைக் கைநீட்டி வாங்கிய முத்தாச்சி, "இன்னைக்கு பேராச்சியம்மன்தான் படியளக்குது பாத்துக்கோ" என்றாள். அவனைப் பார்த்து. அவன் சிரித்தபடியே, "ரெண்டையும் நீயே சாப்புடு" என்றான் "நீ சாப்புடாட்டி நான் சாப்பிடமாட்டேன்" என்று அவள் சொல்லவும், அவன் காதில் அவன் எதையோ கிசுகிசுத்தான். அவள் நாணம் மேலிட "போங்க" என்றாள்.

வரிசையாக அமர்ந்திருந்த யாசகர்கள் வருகிறவர்களின் முகத்தைப் பார்த்தார்கள். அவர்கள் முகத்தைப் பார்ப்பது ஒன்றே அவர்கள்

பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கச் சொல்லிவிடும். யாசகர்கள் யாரிடமும் எதுவும் கேட்கவில்லை. ஆனாலும் ஆளுக்கு ஐம்பது ரூபாய் பிரிந்திருந்தது. இரவு வரை அமர்ந்திருக்கும் பிச்சைக்காரர்களுக்கு உணவும், பணமும் எவ்வளவு கிடைத்தது என்று அதிகம் கவலைப் படுவதில்லை. அவர்களிடம் பேராசை எப்படி இல்லையோ அதிருப்தி என்பதும் அதிகம் கிடையாது. அன்றைக்குள்ளது கிடைத்து விட்டால் அப்படியே ஓய்வெடுப்பவர்கள்தான் அதிகம் இருப்பார்கள். அவர்கள் பணத்தையும் தாண்டி வேறு எதை எதையோ எண்ணியபடியே பொழுதைக் கழிப்பவர்கள்.

அவன் ஜோல்னா பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கைக்கம்பை எடுக்க முயன்றபோது, அவள் நான் வைத்துக் கொள்கிறேன் என்று எடுத்துக் கொண்டாள். இருவரும் நடக்கையில் முத்தாச்சி கைப்பிடிக்க விழைந்தாள் அவன் "ரோடு தெரிஞ்சுக்கோ" என்று சொல்லிக் கையை உதறினான். வண்ணார்பேட்டையில் சாலையைக் கடக்கமுடியாமல் திகைத்து நின்றபோது, அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போனாள் முத்தாச்சி. அப்போது அவனுக்குத் தேவையாகவும் இருந்தது. கண்டிப்பாக அவள் கை தேவைப்படும்போது கேலி செய்வாள் என்று எதிர்ப்பார்த்தான். அவள் அது குறித்து எதுவும் பேசவில்லை. அவனுக்காக, அவனைப் பாதுகாக்க மட்டும் அவள் செயல்படுவதாக உணர்ந்தான். முத்தாச்சி மேலும் அவன் உள்ளத்தில் வளர்ந்து கொண்டேதான் இருந்தாள்.

இரவில் பஸ் ஏறிப் பாளையங்கோட்டையில் இறங்கி அப்படியே சிவன்கோவில் வழியாகப் போய், தெற்கு பஜார் வழியாக தபால்நிலையம், ஆல் இந்திய ரோடியோ அலுவலகம் தாண்டி பேசியபடியே நடந்து பாளையங்கோட்டை பேருந்து நிலையத்திற்கு வந்தார்கள். இருவரும். திண்டில் அமர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"எதுக்கு வந்தோம் இப்படி நடந்து வந்து திண்டில் உடகார்ந்து பாத்துக் கொண்டிருக்கவா" அவளது நையாண்டிக்கு பதில் சொல்லத் தக்கரை விரும்பவில்லை. அவனுக்குள் முத்தாச்சி விரும்பும் காமத்தைக் கிளர்த்தும் பதில் கொச்சையாக இருந்தது. எப்போதும் பதில் சொல்வதில் இருக்கும் திருப்தியைவிட, பதில் சொல்லாமல் மௌனமாக அதைப் பற்றி எண்ணுவதே அவனுக்குத் திருப்தியாக இருக்கிறது. அந்த சொல்லாத பதில்தான் அவனைக் கிளர்த்திக் கொண்டேயிருக்கிறது. அன்று முழுவதும் இருவரும் ஒன்றாக இருந்தது அபூர்வம்தான்.

"நீ கங்கைகொண்டானுக்கு வாறீயா...? என்ற அவனது கேள்வியால்

அவள் திக்குமுக்காடிப் போனாள்.
"நம்ம ரெண்டுபேரும் பேட்டைக்கு போவோமா" என்றாள் அவள். அவன் எப்போதும் போல எதுவும் சொல்லாமல் கம்மென்று உட்கார்ந்திருந்தான்.
"சரி. நான் தர்காவுக்கு வரவா" என்றாள்.
"ஆமா..வா" என்றான்.
தக்கரை பெரும்பாலும் ஆம் அல்லது ஆமா வென தலையாட்டல் மட்டும்தான். அவ்வாறு "ஆமா." என்று வாய்விட்டுப் பதில் சொன்னது அவளுக்காத்தான். தக்கரை அவன் மீது கொஞ்சம் இளகிப் போயிருந்ததை அறிந்தவள் அதற்குமேல் பேசவில்லை., கங்கைகொண்டான் பிளவர் மில் நிறுத்தத்தில் இருவரும் இறங்கும்போது நன்றாக இருட்டி விட்டிருந்தது. கிளைகளும், இலைகளும் ஒன்றாகிக் கறுத்திருந்தன. அவன் கைக்கம்பை அவளிடம் கொடுத்து விட்டு அவள் கையைப் பற்றியபடி மெதுவாக தர்காவை நோக்கி நடந்தான். ஒருவரின் கை மற்றவருக்கு குளிச்சியாகத்தான் இருந்தது.
காதோரம் சுருண்டு கிடக்கும் முடி ஆடிக்கொண்டிருக்க அவனைப் பார்த்துச் சிரித்தபடி நின்று கொண்டிருந்தாள் முத்தாச்சி. எப்படியாவது அதற்கு தகுந்தாற்போல் ஒரு தொங்கட்டம் வாங்கிக் கொடுக்கணும் என்று ஆசை அவனுக்குள் தோன்றியடி இருந்தது.
இன்னும் கொஞ்சம் அவள் ஒட்டியபடி நடந்தாள். அவன் அதற்கு எதுவும் சொல்லவில்லை. தர்கா கோபுரத்தில் லைட் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது.

## அத்தியாயம் -27

குலசேகர ஆழ்வார் தெரு

கிளாரிந்தா ஆலயத்தின் முன்புற வேப்ப நிழலில் எப்போதும் போல யாசகர்கள் குவிந்து கிடந்தார்கள். முதுகிழவிகளும் காலற்ற பையனும் அவனது காலிபருமாக அவர்களை எப்போதும் ஏசிக்கொண்டிருக்கும் தாடிக் கிழவனும் ஆபாசமாக வேஷ்டியை திரைத்தபடி உட்கார்ந்திருக்கும் அந்தக் கறுத்த மனிதனும் அமர்ந்திருந்தார்கள். தாடியைக் கைகளால் வழித்துவிட்டபடி எப்போதும் யாரையாவது ஏசியபடி இருப்பான் தாடிக்காரச்சடைக் கிழவன். அதுவும் குறிப்பாக வடக்குப் பக்கம் குடையை விரித்து நட்டியபடி படுத்திருக்கும் மாடத்தியை ஏசுவார். அவள் எப்போதும் படுத்துக் கொண்டுதான் இருப்பாள். வேப்பமரத்து நிழல் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து போவது பற்றி அவளுக்கு சொரணையில்லை.
மர நிழலையும் கொடுத்து வெக்கையை தடுத்துவிடும். மரம் காற்று வருவதற்கு இடைஞ்சலின்றி நாப்பத்தஞ்சு டிகிரி கோணத்தில் குடையைச் சரித்து வைத்திருப்பாள் மாடத்தி.
"மாடத்தி எப்பவும் போல குடைக்குள்ள கிடந்த மானிக்கிப் படுத்துக்கிடக்க. பொறவு, எல்லாத்தையும் போல எனக்கும் தாங்கங்க. படுத்துக் கெடந்துகிட்டு பரலோகம் போகப் போறீயா.எங்கயாவது எடுபட்டுப் போவ வேண்டியதானே.."
"வே... கெழட்டு மனுசரே கொஞ்சம் வாயெ அளந்து பேசும். நாக்க இழுத்து வச்சி அறுத்துப் போடுவேன். கிழட்டு பெயலா போயிட்டியேன்னு பாக்கேன். நாக்க தொங்கப் போட்டுக்கிட்டு அலையுரதபாரு. எவெ படுத்துக்கிடக்கா, எவ நிமிந்திருக்கான்னு. சாவத் தண்ணி இல்லாம" என்றாள். தொண்டையைக் கனைத்தபடியே. கமறிக் கொண்டிருந்தக் காறலைத் துப்பி மண்ணால் மூடினாள்.
"அதான் பாட்டிலு வச்சிருக்கியே. எடுத்துக் குடி..."
அவர்களுக்குள் மாற்றி மாற்றி ஏசிக்கொண்டிருப்பது எழுதி வைக்கப்படாத சட்டம் போல. குளோரிந்தா ஆலயத்து நெட்டிலிங்க மரங்களிலிருந்து பழுத்த இலைகள் குறுங்கத்திகளைப் போல விழுந்து கிடந்தன. சுற்றிலும். விழுந்து கிடந்த வேப்பமர சருகுகளை யாரோ கூட்டிச் சேர்த்து வைத்திருந்தார்கள். அதன் மேலே கிடந்த ஒரு நெட்டிலிங்க இலையின் கூர்நுனி சடச் சடவென படபடத்துக் கொண்டிருந்தது. அமைதியான ஆலயத்தைச் சுற்றிக் காற்றும் வலம் வந்து சில்லறை வேலைகளைச் செய்து கொண்டிருந்தது. சோத்துப்பெட்டி சுவற்றில் சாய்ந்தபடிப் புத்தகம் படித்துக்

கொண்டிருந்தான். அநேகமாக அவனுக்குப் பிடித்த சித்தர்கள் பற்றிய புத்தகமாக இருக்கலாம். தாடிக் கிழவன் எண்கோணச் சாக்லெட் டப்பாவில் சேர்ந்திருந்த ரூபாய்களை எடுத்து எண்ணினான். அறுநூறு ரூபாய்க்கு மேல் இருந்தது. தலைகளை எண்ணிப் பார்த்தான் பதினெட்டு பேர் இருந்தார்கள்.  மனக்கணக்குப் போட்டுப் பார்த்தான். ஆளாளுக்கு முப்பதி மூணு ரூபாய் வந்தது.
"பதினெட்டு பேரு இருக்கோம். தலைக்கு  முப்பத்தி மூணு ரூவா வருது.. நாப்பது ரூவா தாரேன். ஏழு ரூவா எடுத்து வையுங்க" என்றான் கிழவன். காலையில் ரெண்டு மணி நேர கலெக்ஷன்.
"அவரு சொன்ன தொகையை எல்லாரும் வாங்கிக் கொண்டார்கள். ஏலே.. சோத்துப்பெட்டி.. என்னிக்கி கலெக்சன் அதிகமாக வரும் தெரிஞ்சுக்கிட்டு வந்து தொந்தரவு பண்ணாதே. பெரிய ராசா மாரி படிச்சிக்கிட்டு உக்காந்திருக்கே ரூவாயெ பிரிச்சிட்டு போறதுக்கு இது ஒண்ணும் சந்த மடமில்லே தெரிஞ்சுதா..?"
"ஆமா நீரு வெட்டி முறிக்கிறீரு. ஒழுங்கா குடுப்பேன்னு சொல்லித் தான் உன்ன வச்சிக்கிட்டு அழுவுது. சும்மா புலம்பித் தீக்காமெ கொடும்" என்றான். அதற்கு மேல் பேசினால் அவ்வளவுதான். எல்லாப் பொம்பளைகளும் சேந்துக்கிட்டு கொத்திப் போடக்கூடாது எனப் பயந்து கொடுத்தார்.
தலையில் ஒரு துண்டை இறுக்கிக் கட்டியிருந்த மொட்டைக் கிழவி பழையச் சோத்தை தின்றுக் கொண்டிருந்தது. அந்த சோறு பாதி மஞ்சளும் பாதி  வெள்ளையுமா இருந்தது. கால் குட்டையான மாற்றுத் திறனாளி கையில் இருந்த காலிபர் கம்பை அக்குளுக்குள் வைத்துக் கொண்டு ஆலயத்திற்குள் தண்ணீர் பிடிக்கப் போனான். அவன் தலையில் மாட்டுவதற்கு வசதியாக நீளக் காதுகளோடு இருந்த பை முதுகில் கிடந்தது. இரவில் பத்து மணிக்கு மேல் அவன் காந்தி மார்க்கெட் பக்கம் போவதைப் பார்க்கலாம். எடை கூடிய  அந்த பெரிய பையின் கனத்தைத் தாங்கி அவன் தலையும் கழுத்து நரம்புகள் புடைத்து முறுக்கிக் கொண்டு கெட்டிப் பட்டுத் தெரிகிறது. அவனது அழுக்கு பேண்ட் முட்டு பக்கமும் முதுகு பக்கமும் கறுத்துப் போயிருந்தது. நேர் தையல் உள்ள பகுதிகளில் எல்லாம் அழுக்குக் கறுப்பாகக் கோடுப் போட்டிருந்தது. உடலும் அழுக்கும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்தவைப் போல் இருக்கும்படியானப் பிச்சைக்காரன் வகையைச் சார்ந்தவன். அவன் பையின் முனையில் தெரியும் ஜிப்போட்ட போம் லெதர் பைபிள் புத்தகம் அவன் கிறிஸ்தவனாய் இருக்கலாம் என்று சொல்லவைக்கிறது.
அவன் ஆலயத்திற்குள் தண்ணீர் எடுக்கச் செல்வதற்கும் அக்குளுக்குள்

ஊன்றுகம்பை மாட்டிக் கொண்டுச் செல்ல வேண்டியதிருக்கிறது. சோத்துப்பெட்டிக்கு தான் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்து கொடுக்கலாமே என்று தோன்றுகிறது. ஆனாலும் அவன் அதற்காகப் பிரயத்தனப்பட்டு எழுந்து செல்வதற்குள் ஊன்றுகம்பில் போய்விட்டு வந்து விடுவான். சோத்துப் பெட்டி குளோரிந்தா ஆலயத்தின் முன் உட்கார்ந்தால் ஒன்றிரண்டுத் தடவைகளுக்கு மேல் எழ மாட்டான்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த நரைத்த தலைப் பெண் அவனிடம் கேட்டாள். "ஏய்யா.. உனக்கு கலியாணம் ஆயி புள்ளக் குட்டியெல்லாம் இருக்காய்யா?"

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு அவனது பதிலுக்காக அவன் வாயைப் பார்த்தாள். பக்கத்திலிருந்த வேறு கிழவிகளும் அவன் பதிலுக்காகக் காத்திருப்பதுப் போல அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு இந்தக் கிழவிகளுக்கு எதுக்கு பதில் சொல்லணும் என்று தோன்றியது. பதில் சொல்லாமல் அவர்கள் விரோதத்தைச் சம்பாதித்தால் அவ்வளவுதான் ஜாடைமாடையாகப் பேசி அறுத்துக் கிழித்துப் போட்டு விடுவார்கள். அதுவும் பச்சை பச்சையாகப் பேசித் தீர்த்து விடுவார்கள். அதற்காகவாவது பதில் சொல்லியாக வேண்டும்தான். அவன் மெதுவாகச் சொன்னான், "ஆகலைங்க"

"ஏய்யா நீ மைனர் கணக்கா இருக்கே. ஒருத்தியைப் பார்த்து கலியாணம் முடிக்க வேண்டியதானெ.."

அவன் பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். அந்த இடத்தில் அப்படி இருப்பதுதான் சரியானதாகவும் இருக்கும்.

"ம்னு சொல்லுய்யா. நாளைக்கே ஒரு பொண்ணுப் பாத்திருவோம் என்ன சொல்றே.." என்று அவள் சொல்லவும் பக்கத்திலிருந்தப் பாட்டிகள் ரெண்டு பேரும் காவிப்பற்கள் தெரிய இளித்தார்கள்.

"அதெல்லாம் வேண்டாம்மா"

"ஏன்யா நீ ஆம்பிளைதானே. ஒரு நாழி தவிட தூக்குற பலம் இருக்கிற வரைக்கும் ஆம்பிளைக்கு ஆசை இருக்கும்யா. நீ இப்பொ உம்முன்னு தலையெ ஆட்டு. நாளைக்கு ஒரு லட்டுபோல பொண்ணக் கொண்டுவந்து உம்முன்னால நிப்பாட்டுறேன்" என்றாள்.

"அப்போ.. நாளைக்கு நம்ம சோத்தப்பெட்டி மாப்பிள்ளை ஆகப்போறாரு" என்றாள் இன்னொருத்தி. பேச்சு சோத்துப் பெட்டியை மாப்பிளையாக்கி நீண்டு கொண்டேயிருந்தது. அன்றைக்கு கிழவிகளுக்கு சோத்துப்பெட்டி காமெடிப் பீஸ் ஆகிப்போனான். பொண்ணு பாக்கிறேன் சொல்றவ, பொண்ணு மாப்பிள்ளை துப்புச் சொல்றவளா, இருக்காளே. "ஒருவேள இவா பொம்பள புரோக்கரா

இருப்பாளோ" என்று தோன்றிக் கொண்டே இருந்தது அவனுக்கு.
அன்றைக்கு இரவில் அவன் புத்தகங்களை எல்லாம் எடுத்து வைத்துவிட்டு அதையேச் சிந்தித்துக் கொண்டிருந்தான். ஒருவேளை அவனுக்குள்ளும் பெண்ணாசை ஒளிந்திருக்கிறதோ என்று ஆராய்ந்தான். ஆமாம்.. அப்படி இருந்தால்தான் என்ன என்று சமாதானம் சொல்லிக் கொண்டான். அதற்குமேல் ஒரு பெண்ணைக் குறித்து எண்ணமுடியவில்லை. அவன் அப்பா அவன் கண்முன்னே வந்து நின்றார். "போதும், போதும்" என்று மனம் அடித்துக் கொண்டது.
அன்றையத் தூக்கத்தை தொலைத்ததுதான் மிச்சம். அவனால் எதுவுமே முடிவுக்கு வரஇயலவில்லை. பட்டினத்தாரும் பத்ரகிரியாரும் அவன் எதிரே நின்றுப் பாடல்கள் பாடிப் புலம்புவது போல இருந்தது. அடுத்தநாள் குளோரிந்தா ஆலயத்திற்குச் செல்வதில்லையென முடிவு எடுத்தான். அப்படியே போனாலும் எல்லோரையும் விட்டு ஒதுங்கி இருக்கவேண்டும் என்றும் தோன்றியது.
ஆலயத்தின் உள் பகுதி மிகவும் அமைதியாக இருந்தது. எல்லோரும் தியான அறையில் முட்டங்கால் போட்டு ஜெபித்துவிட்டு மௌனமாக அமர்ந்துவிட்டு வெளியே வந்தார்கள். கர்த்தர் பிள்ளைகளின் அன்பும், இரக்கமும் அவர்களின் யாசகத் தட்டை ஒவ்வொரு நாளும் மூன்று நான்கு முறை நிறைக்க வைத்து, பணத்தை அள்ளிக் கொடுத்தபடி இருக்கிறது.
வருகிறவர்கள் எல்லோரும் முழங்காலிட்டு ஜெபிக்க வசதியாக முட்டளவிற்கு வைக்கப் பட்டிருக்கும் எவர்சில்வர் கைப்பிடிக் கிரில் தடுப்பை ஒட்டி நீளச் செவ்வகத்தில் பஞ்சு மெத்தைப் போட்டிருக்கிறது. அதில் முட்டு கால்களை ஊன்றி நீண்டநேரம் ஜெபிக்கிறார்கள். சிறிய ஊசி பல்பில் தீச்சுடர் கீழிருந்து மேலேறி ஆடுகிறது. சிவப்பு லைட்டிங்கில் சிலுவை பிரகாசமாகத் தெரிகிறது. சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் எந்த அடிப்படையில் வந்து சிலுவை முன்பு அமர்ந்து ஜெபிக்கிறார்கள் என்று தெரியவில்லை. எல்லா மனிதனுக்கும் இன்னும் பூர்த்திச் செய்யப்படாத பல தேவைகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன.
புகை மண்டிய இரும்புப் பெட்டியினுள் இருக்கும் மெழுகுவர்த்தி ஸ்டாண்டில் ஒழுகிய மெழுகுவர்த்திகளின் சுடர் நாக்குகள் ஆடிக்கொண்டிருந்தது. அதன் சுடர் வெப்பத்தில் மெதுவாக மெழுகு உருகி கம்பி வழியாய் இறங்கித் தரையில் ஒரு அடுக்கு மலையை உருவாக்கியது. உற்றுப்பார்க்கிறபோது பெரு நகரங்களில் பல்லடுக்கு கட்டிடங்களின் சிறு மாதிரியாகவும் தோன்றுகிறது. மீண்டும் வழிகிற குழம்பு அதில் இறங்கி மஞ்சள் பனி நதியாய் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும் ஏற்றும் புதிய மெழுகுவர்த்தியின் குழம்புகள் அந்த நதிகளின் மீது இன்னொரு நதியை உருகியோட வைக்கிறது. அந்த மஞ்சள் நதிகளின் கிழக்கு நோக்கிப் பயணத்தைத் தொடர்கிறது ஒவ்வொரு நாளும் பழைய நதியின் மீது ஒரு புதிய நதி ஊர்ந்து செல்வது அழகாகத்தான் இருக்கிறது.

சூசைக்கு அதன் ஓட்டத்தை பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது. எத்தனை முழங்காலிட்ட ஜெபங்களின் நீட்சியாக இருக்கிறது அதன் முன்னே கண்கசிய உருகிய மனத்தோடு நிற்கும் பெண்ணோடு அவள் மகளும் நிற்கிறாள், சுடர்களின் நாக்குகள் ஆடுவதைப் பார்த்தவுடன் மினுமினுக்கும் மஞ்சள் சேலையில் குனிந்து கிண்ணிகளில் இருக்கும் அந்த தேவஎண்ணெயைத் தொடுகிற பெண்ணின் நீண்ட சிலுவை டாலர் உள்ள சங்கிலி மெதுவாக ஆடுகிறது. அவள் அடர்த்தியான கேசத்தின் வகிட்டில் தேய்த்துக் கொள்கிறாள்.

சூசைக்கு சீர்த்திருத்த கிறிஸ்தவத்தின் மேல் பெரிய பிடிப்பில்லை. அவர்களின் ஆராதனை அவனுக்கு வெற்றுக் கூடு போலத்தான் அறிகிறான். திருப்பலி யென்று சொல்லிவிட்டு. அதன் அப்பத்தையும், ஒயினையும் அவர்கள் புனிதம் போல் கருதுவதில்லை. அவனுக்கு வைனும், அப்பமும் இயேசுவின் இரத்தமும் சதையுமல்லவா, ஒருநாள் பிரிட்டோ பாதர் அந்தோணியார் ஆலயத்தில் அவன் நாக்கில் வைத்தபோது அவன் உடல் சில்லிட்டுப் போனது. இயேசு எல்லாப் பெரு வியாதிக்காரர்களையும் சொஸ்தமாக்குவார் என்ற நம்பிக்கை அவனை விண்ணுலகம் வரை அழைத்துச் சென்றது. மாதாவும், அந்தோணியாரும் அருகில் அமர்ந்திருக்க இயேசு கிறிஸ்து இஸ்பிரீத்து சாந்து போல அவன் கண்களில் தெரிந்தார்.

அந்த நாளிலிருந்துதான் அவன் நிமிடத்திலிருந்து புண்கள் காய்ந்துப் போனது ஆலயத்தின் மகிமைதான் என்று எண்ணிக் கொள்கிறான். ஒவ்வொரு நாளும் போகையிலும் வருகையிலும் அவன் கெபி அருகில் நின்று சிலுவை போடாமல் எங்கும் போக மாட்டான். அப்படிப் போட்டுவிட்டால் அந்த அந்தோணியாரே நேரில் வந்து ஆசிர்வதித்தது போல் இருக்கும். அந்தோணியாரும், மாதாவும் ஏசுவைத் தங்கள் கரங்களில் ஏந்திக் கொண்டிருக்க அதில் எந்தக் கிறிஸ்தவனும் கரைந்து போய்விடுவான்தான்.

வேனிற்கால வெயில் மனிதர்களை மட்டுமல்ல எல்லோரையும் கரித்துக் கொட்டிக் கொண்டிருக்கிறது. எதிரே இருக்கும் செவன் டாலர் பள்ளியின் குழந்தைகள் சத்தம் மெதுவாகவேக் கேட்கிறது. அவன் தன் தலைப் பாகையை எடுத்துத் துடைத்து விட்டு, வெயில் வெக்கை

தாளாமல் தலையில் முண்டாசு போல் மடித்துப் போட்டுக் கொண்டான். சோத்துப் பெட்டியாவது, தக்கரை அண்ணனாவது கூட இருந்தால் கொஞ்சம் சுகமாக இருக்கும் என்று தோன்றியது.

கிழடுத் தட்டிப் போனப் பெண்கள் அந்த பின்பகல் வெயிலுக்கு அடங்கிப் போய், பேசவேண்டுமென்ற பேச்சுக்களையும் பேசாமல் கிறங்கிக் கிடந்தார்கள். நீண்டு கொண்டே போகும் பகல் சட்டென மாலைப் பொழுதாய் மாறாதா என்று மருகியபடி படுத்தும் கண்ணைமூடிக்கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள் யாசகர்கள்.

சூசை அந்தக் கருக்கல் நேரத்தில் தக்கரையாவது சோத்துப்பெட்டியாவது வருகிறார்களா என்று ரெண்டு சாலையிலும் போய்ப் பார்த்துவிட்டு வந்தான். யாரும் வருவதைப் போலத் தெரியவில்லை.

ஆலய நிர்வாகி எல்லா விளக்குகளையும் எரியச் செய்தார். ஆலயத்தின் முகப்பில் இருந்த பெரிய சுருள் விளக்கு வெண்ணிற வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. யோவான் கல்லூரிச் சாலையிலிருந்துத் தோள்பையுடன் வேகமாக வந்த சோத்துப்பெட்டி வேகவேகமாகத் தெற்கு பஜார் தெருவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அவன் சூசையைப் பார்த்திருந்தால் நின்றிருக்கக்கூடும். அவனது வேகநடை அவன் வேறெங்கோ போவதை உணர்த்தியது.

சூசை அவனை நோக்கி நகர்ந்தவாறு, "சோத்துப் பெட்டீ.." என்று சத்தம் கொடுத்தான். முதல் சத்தத்தில் அவன் நிற்கவில்லை. அவனுக்கு ஒருவேளை காது கேட்காமலோ அல்லது உள் வாங்கியிருக்காமலோ இருக்கலாம். மீண்டும் சத்தம் போட்டு அழைத்தான் சூசை. திரும்பிப் பார்த்துவிட்டு அங்கேயே நின்றான் நிறைகுளத்தான். அவனோடு பேசும் நிலையில் இல்லை. ஏதோ முக்கியமான வேலைபோல அவசரத்தில் இருந்தான். அதுபற்றிக் கேட்டதற்கும் அவன் விளக்கமாகச் சொல்லவில்லை. கடந்து போவதில் குறியாய் இருப்பவன் பேசிக்கொண்டு நிற்பானா என்ன? சொல்லியபடியேப் பேசியும் பேசாமலும் கடந்து போனான். அவனது மனக்குதிரை வேகம் எடுத்துப் புழுதிப் பறக்கப் பறந்துக் கொண்டிருந்தது.

சூசைக்கு அன்று கடைசியாகக் கொடுத்த பதினேழு ரூபாயையும் சேர்த்து மொத்தம் நூற்றி அம்பது ரூபாய்தான் கிடைத்தது. அந்த இரவில் அங்கேயே படுத்துக் கொள்ளலாமா என்று எண்ணினான். சிமிண்டு தரையும், மூன்றாம் பிறை நாளின் குளுமையும். அந்த இடத்தின் அமைதியும் அவனுக்குப் பிடித்திருந்தது. எட்டரை மணிக்கு ஆலய நிர்வாகி ஆலயத்தின் இரும்புக் கேட்டை இழுத்து அடைத்துப் பூட்டிவிட்டு வேகவேகமாக வடக்குப் பார்த்துப் போனார்.

அதற்குள் இருந்த அனைத்து யாசகர்களும் இருப்பதற்கும் படுப்பதற்குமான நீண்ட அட்டைகள், தண்ணீர் பாட்டில், பைகளைத் தூக்கிக் கொண்டு வடக்கும் தெற்குமாகப் போனார்கள். தலையில் பெரும் அழுக்குப் பையை தூக்கிப் போட்டுக் கொண்டு ஊன்று கோலுடன் கடைசியாக நடந்துக் கொண்டிருந்த பையன் சூசையைப் பார்த்து கிளம்பலியா என்றான்.

"என்னப்பா.. எல்லாரும் போயிடுவாங்களா?" என்றான் சூசை.

"ஆமாண்ணே. பொம்பளைக எல்லாத்துக்கும் இங்குதான் வீடு இருக்கு அவுங்க அவுங்க வீட்டுக்குப் போயிடுவாங்க. நான் மார்க்கெட்டுல போயி படுத்துக்குவேன்" என்றான்.

எங்கோ ஒரு நாய் கனத்த குரலோடுக் குரைத்த சப்தம் கேட்டது. அந்த சப்தம் அவனுக்குரிய நாய் போலத் தோன்றியது. தெருவில் விடப்பட்ட நாயென்றாலும் அதன் குரல் மாறிவிடுமா என்ன? இப்போதைக்கு கூட அது அவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம். அதன் கூர்மையான கண்கள் இரவில் ஒளிர்ந்தபடி இருக்கக்கூடும். எல்லாவற்றையும் கடந்த நேசமல்லவா அது. அதற்கென்று தனக்குக் கொடுத்த ரொட்டியை அவனது அலமாரியில் வைத்திருக்கிறான். நாளை லெபர் ஹோமிலிருந்து எடுத்துக் கொண்டு அதைப் பார்க்கப்போகவேண்டும் என்று எண்ணிக் கொண்டே நடந்துபோனான்.

அவன் குளோரிந்தா ஆலயத்தின் முகப்பில் லேசாக ஒளிர்ந்த எவர்சில்வர் போர்டைப் பார்த்தான். வேப்பமரத்தின் நிழல்கள் இருளாகக் கவிழ்ந்து ஆலயத்தின் முகப்பில் தனிமையில் கிடந்தன. அந்த தனிமை இருளுக்குள் ஒரு சோகம் படர்ந்திருப்பது போலத் தோன்றியது சூசைக்கு.

## அத்தியாயம் -28

கூலவாணிகர்புரம்

முத்தாச்சியும், தக்கரையும் மூன்று மணி நேரமாக கண் தெரியாதோர் பள்ளி முன் காத்து நின்றார்கள். 1890லேயே பாளையங்கோட்டையில் குருடர்களுக்கென்று ஒரு பள்ளி வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் கட்டியிருக்கிறார்கள். அன்றிலிருந்து இன்று வரை, கண்தெரியாதோர் கல்வி பயின்று, சிறு தொழில்கள் செய்தும், வேலைகள் செய்தும் பிழைத்து வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று மிஷெனெரிகளுக்குத்தான் தோன்றியிருக்கிறது.
அந்தப் பள்ளியின் கீழ்புறம் இன்றும் கண்தெரியாதோர் பலர் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் அமரும் இருக்கைகளுக்கும் கார் இருக்கைகளுக்கும் வயர் மூலம் பின்னிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எங்கேயோ பார்ப்பது போல் பார்த்தபடிப் பின்னிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் போதெல்லாம், கண் தெரியாதவர்களுக்கும் நம்பிக்கை ஒளியைக் கொடுத்தபடி இருக்கிறார்கள்.
அதைவிடவும் இனிமையான செய்தி ஒன்று அந்தப் பள்ளியைப் பற்றி உண்டென்றால், வருடாவரும் அந்தப் பள்ளியின் பழைய மாணவர்கள் கூடி நடத்தும் பழைய மாணவர்கள் விழாதான்.
முத்தாச்சிக்குப் பொறுமை தாளவில்லை. எப்போதும் வாரத்தில் ஒருநாள் குட்டித்துரையைப் பள்ளிமுடிந்தவுடன் பார்த்துச் செல்லலாம். தக்கரை பொறுமையின்மை கடந்தவன் போல முகத்தை வைத்துக் கொண்டு இருந்தான்.
"சே.. எம்புட்டு நேரமாச்சி இப்புடி அஞ்சரைக்கு மேலதான் பாக்க விடுவோம்னு சொன்னா அஞ்சு மணிக்கு மேல வந்திருப்போம்லா. இன்னிக்கு மத்தியானத்துக்கு மேல பாக்கலாம்னு சொல்லிப்புட்டு இப்படிக் காக்கப்போட்டிருக்காவளே..." மூன்றாவது நபருக்கு கேட்காத அளவில் புலம்பிக் கொண்டிருந்தாள். அவன் அவளைப் பார்த்து, "முத்தாச்சி..ஸ்..ஸ்..." என்று எச்சரிப்பது போல அமைதிப் படுத்தினான்.
முத்தாச்சிக்கு நொடிப் பொழுதும் மணி நேரமாக கனத்தது. சீக்கிரமாப் பாத்துட்டு, போவணுமேங்கிற கவலையும் கூட. அவனுக்கு நேரமானால் நல்லதுதான். அவளை அனுப்பிவிட்டு மெதுவாகத் தர்காவிற்குப் போய்க் கொள்ளலாம் என்ற எண்ணம்தான்.
இந்தப் பள்ளியில்தான் மைதானத்தைச் சுற்றி இன்று வரை நாலைந்து வாதமடக்கி மரங்கள் நிற்கின்றன. அதன் சிறு இலைகள் ஒரு ஈர்க்கில் வரிசை வரிசையாக கோர்த்திருக்கும். அதன் மெல்லிய கண்ணாடித்தாள்.

போன்ற பூ இதழ்களைச் சுற்றி மஞ்சள் சிவப்பு வெள்ளைக் கலரில் இருக்கும் புள்ளிகள் இருக்கும். கொத்துக் கொத்தாய் மரத்தின் மேல்பகுதியில் பூத்திருக்கும் அழகே தனிதான். ஆனால் வேனிற் காலத்தில் பூப் பூத்து சின்ன அவரைக்காய்கள் போல தொங்கும். முன்பு மைதானத்தின் புல்தரைப் பார்க்க பச்சைப்பசேலென மிகவும் அழகாக இருக்கும் இப்போ தண்ணீர் இல்லாமல் கட்டாந்தரையாக் கிடக்கிறது. கிளிக்கு ரொம்பவும் பிடித்த காய்கள் அவை. அழகாக சிறியகீழ் அலகால் குடைந்து நாக்கைச் சுழட்டி விதையை மட்டும் தின்று விட்டு வீசிவிடும்.
கிராமத்தில் தக்கரையும் அவனது நண்பர்களும் குச்சிக் கம்பு விளையாடப் போகும்போது இதன் முற்றிய காய்களைப் பறித்து இரண்டாகப் பிளந்து தொலி நீக்கிச் சாப்பிட்டது ஞாபகத்திற்கு வருகிறது, பூக்கள் இப்போது பிஞ்சு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றன. எதிர்த்த ஆலயத்தின் கருப்பசாமியின் கையில் இருக்கும் நீண்ட குறு அரிவாள் காற்றை வெட்டுகின்றது. மெதுவாக மணி அடிக்கும் சப்தம் கேட்டது. மற்ற பள்ளிகளைப் போல, மணியடித்தவுடன் பைக்கட்டுகளைத் தூக்கிக் கொண்டு ஓடி வருபவர்கள் அல்ல. அவர்கள் இன்னும் மெதுவாகப் பாடங்களை முடிக்கும் நோக்கத்தோடு அமர்ந்திருக்கிறார்கள். அவர்களின் கைவிரல்கள் புத்தகத்தில் எழுத்துகளைக் கையால் உரசிப் படித்துக் தேடிக் கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு மாணவிகள் ஒருவர் தோளை ஒருவர் பிடித்துக் கொண்டு சிரித்தபடியே வேறொரு அறை நோக்கிப் போனார்கள். கண்ணாடியை அணிந்திருக்கும் அந்த பெண்கள் கண்கள் சுருங்கியும் பற்கள் தெரியவும் சிரித்தும் பேசியபடிப் போகிறார்கள்.
முத்தாச்சியின் மகன் வருகிற சுவடே தெரியவில்லை. அவன் ஏதோ படித்துக் கொண்டிருக்கக்கூடும். முத்தாச்சி அவன் வருகையைப் பார்த்துப் பார்த்துச் சலித்து விட்டதால் அதற்கு மேல் பார்க்க விரும்பாமல் பேச ஆரம்பித்தாள்.
"அவன் பொஸ்தகம் எப்படி இருக்கு தெரியுமா.. அப்படியே பெரிய அட்டையிலே ஊசியால குத்தி வச்சிருக்காங்க. அதெக் கைவிரலால் தொட்டுத் தொட்டு அம்மா, அணில், ஆடுணு? படிக்கான். நா ரொம்ப ஆச்சரியப்பட்டுப் போனோங்கயா."
"ஆமா அதுக்கு பிரெய்லின்று பேரு. படிச்சிக்காட்டுனானா.."
"ஆமாங்க. நலலா படிச்சிக் காட்டுனா.."
யாரோ ஒருத்தி முத்தாச்சி மகனைக் கைபிடித்து அழைத்து வருவது தெரிகிறது. "தூரத்தில் வரும் போதே "அம்ம்மா" என்று சத்தமிட்டுக் கொண்டே வந்தான்., அவன் கையை உலுக்கியபடி, "உங்கப்பாவும் வந்துருக்கார்டா.." என்றாள்.

"வா குட்டித்துரை.. என்ற முத்தாச்சியின் குரல் அருகில் இருப்பதை உணர்ந்து," ஆமாம்மா.. வாங்க.. வாப்பா வாங்க" என்றான்.
"ஆமாப்பா.." என்றான் தக்கரை. வாதமடக்கி மரத்தில் கழுத்தாரம் போட்டக் கிளி காலால் காயைப் பற்றிக் கொண்டு அலகால் பருப்பை மட்டும் தின்றுவிட்டு சடக்கென போட்டது. அந்த தட்டையான காய் மெதுவாக காற்றில் பறந்துச் சரிவாய்த் தரையிறங்கியது. "கீ" என்று சத்தமிட்டு கிளி பறந்து போனது.
ஒருகணம் தன் காதுகளை விடைத்த குட்டித்துரை கிளியின் சப்தம் மீண்டும் கேட்குமா என்பது போல ஏறிட்டுப் பார்த்தான். அதன் பிறகு சப்தம் கேட்கவில்லை. கிளிகள் எப்போதும் ஒரு இடம்விட்டு பறக்கும் போது "கீயென" ஒரு குரல் கொடுத்துவிட்டுத்தான் விடை பெறுகின்றன.
"அம்மா இந்தா பறந்து போறது கிளிதானே. அதன் குரல் ஒத்தையிலும் காட்டுக்குள்ள கூட்டமா கேட்டப்போ ரொம்ப இனிமையாயிருந்திச்சி. கம்ப்யூட்டர்ல கேட்டோம்மா. எல்லாப் பறவைகளின் குரலும் அது எப்ப எப்ப குரல் கொடுக்கும்ங்கறதையும். சொல்லித்தந்தாங்க ரொம்ப நல்லாயிருந்துச்சி."
"அப்படியா குட்டித்துரை. இதெயெல்லாம் சொல்லிக் கொடுப்பாங்களா.."
"ஆமா அம்மா. இன்னிக்கு கிளி, புறா, வாத்து, மைனா, கோழி, கொக்கு எப்படியிருக்கும்னு சொல்லித்தந்தாங்க. இப்பம் பறந்து போச்சே கிளி அது எட்டு இஞ்ச் நீளப் பறவை. நீண்ட ரெண்டு இறக்கைகள் வால் போல இருக்கும். உடம்பு நல்லா வெல்வெட்துணி மாரி ரொம்ப மென்மையா இருக்கும். உடலெல்லாம் பச்சை, மூக்கு மட்டும் சிவப்புன்னு சொல்லித்தந்தாங்க... இப்ப எனக்கு எது எது என்ன பறவென்னுச் சொல்லத் தெரியும்மா"
"அது எப்டிடா.. உனக்குத் தெரியுது?"
"அதாம்மா அதே மாதிரி பிளாஸ்டிக்ல செஞ்ச பறவையக் கொடுத்து அது நீள அகலத்தை தொட்டு பாத்து தெரிஞ்சிக்கிட்டோம். அது குரல கம்ப்யூட்டர்ல போட்டுக் காட்டுவாங்க அதனால தெரியும்" அவன் முகம் மலர்ச்சியாக இருந்தது. நிறையப் புது விஷயங்கள் தெரிந்து கொண்டதை. உணர்த்தும் விதத்தில் கையை வைத்துச் சொல்லிக் காட்டினான். அவன் கைவிரல்களின் அசைவில் வாத்து நீந்தியதைப் பார்க்க மகிழ்ச்சி முத்தாச்சி முகத்தில் படர்ந்தது.
"அம்மா.. கிளி அம்பு போல பாய்ந்துப் பறக்குமாம். றெக்க அடிச்சாலும் உடம்பு ராக்கெட்போல நேராப் போவுமாம். போகும்போதே அப்படியும் இப்படியுமா சரியுமாம். சடக்கென் வளைஞ்சி திரும்புமாம் அப்படி

அழகா பறக்குமாம்மா.. சார் சொன்னாங்க. ரொம்ப அழகாயிருக்குல்லே" என்றவனை அப்படியே மகிழச்சியோடு கட்டிப்பிடித்துக் கொண்டாள்.
தக்கரைக்கும் மனம் நெகிழ்ந்து போனது. அவனருகில் போய்த் தலையைக் கோதினான். அவன் கோதுதலை உள்வாங்கிய குட்டித்துரை தன் கையைத் தூக்கித் தக்கரையின் கையைத் தடவிப் பார்த்தான். முடிகள் நிறைந்த ஆணின் கையென்பதும், தக்கரையினுடையது என்பதையும் அறிந்தவுடன் மகிழ்ச்சியில் "ரொம்ப நன்றி வாப்பா. ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கு" தக்கரைக்கும் மகனைச் சீராட்டுகிற உறவில் இதயம் படபடத்தது. இத்தனைக்காலம் எப்படி இந்த நேச உறவுகள் அற்று வாழ்ந்தோம் என்று அடித்துக் கொண்டது.
"ரெண்டுபேரும் ஏன் தனித்தனியாகக் கெடந்து கஷ்டப் படுகிறீங்க, நானும் ஸ்கூலுக்கு வந்துட்டேன். அம்மாவும் ஒத்தைக்கட்ட ஆயிட்டாள். ரெண்டு பேரும் சேந்து ஒண்ணா மண்ணா இரிங்களேன்" என்றான் குட்டித்துரை..
குட்டித்துரை அப்படிச் சொல்வான் என்று எதிர்பார்க்கவில்லை. மின்னல் போல் அந்தச் சொற்கள் ஊடுருவி தக்கரையின் உடலைக் குலுங்கச் செய்தன. ஏதோ நினைத்தவாறு தக்கரை குட்டித்துரை தலையில் வைத்திருந்த கையை வெடுக்கென எடுத்தான். பெருமலையிலிருந்து விழும் வெள்ளி அருவிபோல ஒர் உணர்ச்சி அவன் உடலெங்கும் பரவியது.
"என்ன வாப்பா... தப்பா சொல்லிட்டனா?" என்றான் சன்னமான குரலில்.
"இல்லப்பா. நீ தப்பா சொல்லல. அதெத்தான் நானும் யோசிச்சிக்கிட்டு இருக்கேன் எதுக்கு அம்மாவுக்கு கஷ்டம்."
"ஒண்ணுமில்லே... ரெண்டு பேரும். ஓண்ணா இருந்தா ஒருத்தருக்கு ஒருத்தர் ஆதரவு துணை.. அது நல்லதுதானே எதுக்கு நீங்க நாலு பேரூட்டே கையேந்திக்கிட்டு நிக்கணும்"
முத்தாச்சி எதுவும் பேசாமல் தலையைத் தூக்கித் தக்கரையை நிமிர்ந்துப் பார்த்தாள். அவன் கண்களில் நீர் கோர்த்திருந்தது. அவள் வலதுகையை அவன் மீது வைத்து "எப்படி புள்ள சொல்றான் பாத்தீங்களா?" என்பது போலக் கையைக் காட்டினாள்.
"சரிப்பா. நான் இன்னைக்கே பேட்டைக்குப் போறேன். நீ நல்லாப்படி" என்றான் தக்கரை. குட்டித்துரை அம்மாவைப் பார்த்து சொன்னான்.
"அம்மா.. எனக்கு ஒரு கண்ணாடி வாங்கணுமாம். சார் சொன்னார். கண்ணாடி போட்டுத்தான் எங்கயும் போவணுமாம். அப்பத்தான் கண்ணுக்குழித் தெரியாதாம்"
"சரிப்பா.. சீக்கிரமே வாங்கிரலாம் சார்ட்ட வந்து கொடுத்து உனக்குத்

தரச் சொல்றேன்" என்றாள்.

அவன் தலையாட்டி விட்டு நின்றான். அவள் கொண்டுவந்த சாப்பாட்டை எல்லோரும் சாப்பிட்டுவிட்டு, பள்ளிக்குள் அனுப்பிவைத்தாள் குட்டித்துரையை. அவன் சிரித்துக் கொண்டே இருவரின் கையைப் பிடித்தபடியும் நடந்து பள்ளிக்கு உள்ளே சென்றான்.

அதன்பிறகு முத்தாச்சியும், தக்கரையும் ஒருவரை ஒருவர் எதற்கெனப் புரியாமல் மாறி மாறிப் பார்த்துக்கொண்டார்கள். சிலசமயம் மிகுந்த அன்பும், துயரமும் அவ்வாறுப் பார்க்கச் சொல்லத் தூண்டுகிறது.

எப்போதும் போல அவன் அதிகம் பேசாமல் இருவரும் பஸ் ஏறி இரட்டை சீட்டில் அமர்ந்து முத்தாச்சி வீட்டுக்குப் போய் கொண்டிருந்தார்கள். எதையோ எண்ணியபடி முந்தானையால் முத்தாச்சி கண்களைத் துடைத்துக் கொண்டே வந்தாள்.

## அத்தியாயம் -29

பேரின்பலோகத் தெரு

சோத்துப்பெட்டி இப்போது முழுவதுமாக மாறிப் போயிருந்தான். யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் பட்டினத்தார், பத்திரகிரியார், பீருமுகம்மது அப்பா, பாம்பாட்டிச் சித்தர், குணங்குடியார், அழுகுணி சித்தர் ஆகியோர்களைப் பற்றிய பேச்சுத்தான்.

"மரத்தில் மறைந்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை என்பது போல, அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும், பிண்டத்தில் இருப்பது அண்டத்திலும் இருக்கிறது என்கிறான். அண்டசராசரங்கள் அனைத்தும் பிண்டத்திலிருந்து, பிரம்மத்திலிருந்து உருவானதுதான். பிரம்மமே மூலாதாரம். மனிதனும் அப்படித்தான். பிண்டமாய்ப் பிறந்துப் பரிணாமத்தில் மனிதனாகிறான். மனிதன் மரித்த பின்பு பிண்டமாகிப் போகிறான். ஒரு முழு மனிதன் மூலாதாரத்தை மெய்யொளியை தன் நெற்றிப் பொட்டுக்கு உள்ளே இருக்கும் காலி வெளியில் நிலை நிறுத்தணும். பாம்பென நெளியும் குண்டலினியை அங்கே நிலை நிறுத்தணும்" என்கிறான்.

மேலப்பாளையத்தில் சூபிஞானி ஒருவர் சொன்னதாக , "அவனது தேட்டமே, எனது நாட்டமாயும், எனது நாட்டமே அவனது தேட்டமாய் இருக்கிறது" என்கிறான். ""வெளங்கலையே" என்று யாராவது கேட்டால் போதும், மும்மலத்தில் ஆரம்பித்து ஆறு மூலஸ்தானங்கள் வரைபோய் ஒரு பெரிய சொற்பொழிவே நிகழ்த்திவிடுகிறான்.""உடம்பை வளர்த்தோன் உயிர் வளர்த்தோனே' என்று உடம்புதான் இறைவனின் ஆலயம், உயிரின் மூலம் என்றும் உடம்பினுள் இருக்கும் மூல அக்னியை எந்த உறுப்பினால் உபயோகப்படுத்துகிறானோ அதைப் பொறுத்து அவன் வாழ்வு அமையும் என்கிறான். கால்களுக்கு இடையில் இருப்பதைப் பயன்படுத்துபவன் கடையனென்றும், வயிறுக்கு மட்டும் பயன்படுத்துபவன் மயிரைப் போன்றவனென்றும் பெரிதாய்ப் பேசுவான்.. தலையில் மூல அக்னியைப் பயன்படுத்தியவன்தான் புத்தர், ஏசு, ஈன்ஸ்டீன், அப்துல்கலாமெல்லாம் என்று வாழ்க்கை விளக்கம் பேசுகிறான்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சூசை கேட்டான், "பின்னே எப்படிண்ணே உனக்கு சோத்துப்பெட்டின்னு பேரு வந்துச்சி" என்று கேட்டுவிட்டான். அவ்வளவுதான் நிறைகுளத்தானுக்கு கோபம் வானமண்டலத்திலிருந்து பொத்துக் கொண்டு வருவது போல வந்து

விட்டது.

"நான் எவ்வளவு மேன்மையான ஆன்மீகம் பற்றிப் பேசுகிறேன். நீ கேலிப் பேசிக் கொண்டு அலைகிறாய். அதுதான் சூசை ஒன்ன ஆண்டவன் இப்படி வச்சிருக்கான்" என்று திட்டித் தீர்த்து விட்டான்.

"அண்ணே, கோபப்படாதீங்கண்ணே." அவன் சிறிது நேரம் மிகவும் அமைதியாக இருந்தான். பிறகு,

"டேய் சூசை. நான் சொல்றத கேளு. சும்மா பெருசா தெரிஞ்ச மாரி கேள்வி கேட்காத. குருவிடம் கேள்வி கேட்பவன் ஞானம் பெறமாட்டான். கேள்வி என்பது இருட்டு, பதில் என்பதுதான் பகல். இருளுக்குள் இருப்பவன் ஒளியைப் பார்க்கமாட்டான். அப்படி இருக்கக் கூடாது, சூசை நான் சொல்றத கேக்கிறியா... இன்னிக்கு இருக்கவன் நாளைக்கு இல்லை. இவன் மண்டைய போட்டுட்டான் வச்சிக்க இவன் அதுக்குப் பொறவு செத்த சவமாக மாறிவிடுவான். சவம் கொஞ்சநேரத்திலேயே அழுவ ஆரம்பிச்சிடும். இத வச்சிக்கிட்டு என்னாமா வம்போக்கித்தனம் பண்ணிக்கிட்டு திரியுறானுவொ. இந்த உடலப் பத்திப் பட்டினத்தார் சொல்ற பாடல் படிச்சான்னா வேறு என்னத்தையும் பேச மாட்டான். பட்டினத்தார் உடம்பத்தி என்னல்லாம் சொல்றாருன்னு கேளுங்க." புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

நாற்றப் பாண்டம், நான்கு முடித்து ஒன்பது
பீற்றல் துண்டம், பேய்ச்சுதை தோட்டம்
அடலைப் பெரிய சுடலை திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம்...

எப்படில்லாம் சொல்றார் பாத்தியா ஆசையெனும் கயிற்றால் ஆட்டுவிக்கும் பம்பரமாம் இந்த உடல் இதோட முடியல இன்னுமிருக்கு கேளு,

மாயாவிகாரம், மரணப் பஞ்சரம்,
சோற்றுத்துருத்தி, தூற்றும் பத்தம்,
காற்றில் பறக்கும் கானப்பட்டம்,
விதிவிழித் தருமன் வெட்டும் கட்டை,
சதுர் முலைப்பானன் தைக்கும் சட்டை
ஈமக்கனலில் இடுசில விருந்து
காமக் கணலில் கருகும் சருகு,
கிருமி கிண்டும் கிழங்கழி சருகு...

"சே.. இந்த உடல வச்சிக்கிட்டு என்னா வரத்து வாரான் இந்த மனுசன்.

அவர் சொல்றாரு கேளுங்க. காமக் கனலில் கருகும் சருகாகும், காமத்தீயில் சருகாகிப் போகுதாம் இந்த உடல்.
நாற்றப் பானை மட்டுமில்லை, பீத்தல் துணியாம், இதை வச்சிக்கிட்டு மனுசன் உலகத்தையே ஆட்டிப் படைப்போங்கிறான். சாவு எப்போதும் உள்ளே வச்சிருக்கும் பஞ்சாரமா இருக்கிறவன் ஆயிரம் வருஷம் வாழ்வோம்னுப் பீத்திக்கிட்டு அலையுதான்.
மனுஷனுக்குள்ளே இருக்குற மூலஸ்தான ஒளியைக் கண்டுப் பிடிச்சு அதைத் தலைக்கு கொண்டு போனான்னா அவன் இந்த லோகத்துல உள்ள மாயா சக்தியை எல்லாம் அறிய ஆரம்பிச்சிருவான். அவன்ட்ட இச்சாசக்தியும் வந்திரும். அம்புட்டுதேன் என்ன உருவம் வேணும்னாலும் எடுத்துக்கிட்டு ஏழேழு லோகமும் போய்ட்டு வருவான். அப்படிப்பட்ட அட்டமாசித்திகளை எல்லாரும் மறந்திட்டான். எவென் அதப்பத்தி யோசிக்கான்...
சூசை தூங்கியிருந்தான் "ஏலே கிறுக்குப் பயலே.. எம்புட்டு பெரிய தத்துவத்த பேசிக்கிட்டு இருக்கேன், சீக்குக் கோழி கெணக்கா தூங்குறே..."
இப்போதெல்லாம் சோத்துப்பெட்டி திருச்செந்தூருக்கு அடிக்கடி போய் விடுகிறான். ஆன்மீக உரையாடலுக்கு ஒரு சங்கம் இருக்குதுதாம். சாப்பாடு எல்லாம் தண்ணீபட்டப் பாடுதானாம். சீடர்கள் குழுவினர் நான் வாங்கிக் கொடுக்கிறேன், நா வாங்கிக்கொடுக்கிறோம் என்று அவர்களுக்குள் சண்டைப் போட்டுக் கொள்கிறார்களாம். பெருமையாக சொல்லிக் கொண்டுத் திரிகிறான. சோத்துப்பெட்டி எல்லாருடன் பேசும் போது கல்லாப்பிழையும், கருதாப்பிழையும் என்றுதான் ஆரம்பிக்கிறான்.
பொறவு ஏண்டா.. பாளையங்கோட்டையில் பொறுக்கித் தின்னுக்கிட்டு அலையுதே என்றாலும் பொறுமையாகப் பதில் சொல்கிறான்.
"அட்டமா சித்தின்னு எட்டு சித்திகளும் ஒருங்கே சேர்ந்துக் குண்டலினியை எழுப்பனும்னா எங்கயும் தங்கி வாங்கிச் சாப்பிட்டு கேளிக்கையாக வாழக் கூடாது. ஒருநாள் ஒரு ஊட்டுலத் தங்கலாம். கூடுனா ரெண்டு, அதுக்கு மேல மூன்றுநாள் தங்கலாம். அதுக்கு பொறவு அந்த ஊர்லயே இருக்கப்புடாது. இருந்தா சித்தி வாய்க்காது. எந்த சோறும் எனக்கு உறவைத் தந்துவிடக் கூடாது. அதுனால நான் எங்கயும் தங்குறதில்ல. அது சரில இம்புட்டு கேள்வி கேக்கியே. உனக்கு அட்டமாசித்தின்னா என்னான்னு உனக்கு ஏதாவது தெரியுமால" என்று கேட்டான்.
நிறைகுளத்தான் வாயைக் கட்டக் கலியாண வீட்டுச் சாம்பார் வாசத்தால் மட்டும்தான் முடியும். பாளையங்கோட்டையில் வெள்ளை வேட்டி

என்றால் திருச்செந்தூரில் காவிக்குத் தாவி விடுகிறான்.
இப்போது அடிக்கடி அய்யாக்கண்ணு வக்கீல் வீட்டுச் செல்லும் அவனுக்கு ஏகத்தடபுடலில் சாப்பாடு கிடைத்துவிடுகிறது. இரவில் நடக்கிற போதெல்லாம் எப்போதும் போல சீட்டி ஒலியும் சினிமா பாட்டும் அவன் போகும் இடமெல்லாம் அவன் முதுக்குப்பின்னால் வழிந்தோடுகிறது.
சூசைக்கு இது சாப்பிடும் நேரம். பேரின்பலோகத் தெருவிற்குப் போனால் ஜான்சியம்மா பழையசோறாவது கொடுக்கும். அதோட கூடுதலா பழையகறி இல்லாட்டி ஊறுகாயா மேலே வச்சித்தான் கொடுக்கும். அவனுக்கென்றே அல்லது வருகிறவர்களுக்குக் கொடுப்பதற்கென்றேப் பேப்பர் அட்டையும் வாங்கி வைத்திருக்கிறது.
"பேரின்பலோகத் தெருவுக்கு போறேன்ணே வாறீங்களா.." என்றான் சூசை, நிறைகுளத்தானைப் பார்த்து. நிறைகுளத்தான் முகம் சுழித்துக் கொண்டு விடை கொடுத்தான.
"ஏன் வரலை" என்ற சூசைக்கு "எனக்கு நான் இருக்கிற இடத்துக்கே வரும்" என்றான். ஆன்மீகம் சாதாரண மனநிலையைத் தாண்டி வேறொரு நிலைக்கு கொண்டு போயிருக்கிறது சோத்துப் பெட்டியை.
சூசை காலை கெந்திக் கெந்தி நடந்துப் போவதைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான். சோத்துப் பெட்டி. யாராவது ஒரு சாப்பாடுப் பார்சலைக் கொண்டுத் தரக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியது. பிளாஸ்டிக் கவருக்குள் நொறுங்கிக்கிடக்கும் அப்பளத்திற்குள் சாம்பார், பொறியல், பாயாசம் போன்றவை சின்னச் சின்ன நெகிழிப் பார்சல்களாக இருக்கும். அந்தப்பார்சல் அவன் கண்களில் தோன்றியது. அதற்குள்ளிருந்து எல்லாம் சேர்ந்த மொத்தமான வாசனைத் தூக்கலாக இருக்கும். அந்த வாசனையைச் சீக்கிரம் இழந்துவிடமாட்டான். அரைமணிநேரம் அந்த வாசத்தில் கிளர்ச்சியடைந்த பின் முழுப்பசி அவனுக்கு வரும். அப்போதுதான் முழுமையாகச் சாப்பிடமுடியும்.
வெயில் கொஞ்சம் தாக்கத்தைத் தளர்த்தியிருந்தது. நீண்டிருந்த வேப்பங்கிளைகள் காற்றில் ஆடுகையில் வெயில் தார்ச்சாலையில் பாண்டி விளையாடிக் கொண்டிருந்தது. எதிரே இருந்த சின்னத் திண்டில் தாய் வெள்ளாடும் அதன் இரண்டு குட்டிகளும் தலை சரித்து படுத்துக் கிடந்தன. குட்டிகள் தூங்குகின்றனவா எனத் தலையை சிலுப்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தூங்கிக் கொள்கிறது.
நிறைகுளத்தானுக்கு ரெண்டுமணி நேரமாக யாரும் சாப்பாடு கொண்டு தருவார்கள் என்றிருந்தக் கனவுப் பொய்த்தது. பிறகு சோர்வுடன் பையில் தலை வைத்துச் சாய்ந்தான். காலையில் வக்கீல் வீட்டில் சாப்பிட்டு இருந்தான். இரவுக்குள் எப்படியும் சாப்பிட்டுவிட வேண்டும்

என்பதே எண்ணமாயிருக்கலாம்.
தலையைத் தூக்கி சூசை வருகிறானா என்றுப் பார்த்தான். மங்கிய வெயில்தகிக்கும் சாலையில் ஒரு சுடுகுஞ்சி இல்லை. அவன் கண்களை மூடியபடி மீண்டும் தலைச் சாய்த்துக் கொண்டான்.
ஊதி ஊதிப் பொறுக்கிவிட்டு வெள்ளாடு தன்குட்டிகளைக் கூட்டிக் கொண்டு எங்கோ போய்விட்டது. இனி பெரியதாகத் தன்னை உலர்த்திக் கொள்ள அரசமரத்திடம் இலைகள் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒன்றுயொன்று ஒட்டிக் கொண்டு இருப்பது போலத்தான் இருக்கிறது. மழையற்ற காற்றோடு சலிப்புத் தட்டிவிட்டதோ என்னவோ அசையாது நிற்கிறது. அதன் ஆட்டபாட்டமும் கலகலப்பு ஓசையும் புதிய தளிர் இலைகள் வந்தபிறகுதான் ஆரம்பிக்கும். அதுவரை மௌனத்தில் கரைந்தபடி இருக்க வேண்டியதுதான்.
மெல்லிய நீண்டசேலையால் மூடிக்கொண்ட பெண் போல வானம் இருண்டு கிடக்கின்றது. அங்குமிங்குமாய் சிறியப் பொத்தல்களில் மேகங்கள் நகர்கின்றன. சோத்துப் பெட்டிக்கு 'அன்னவிசாரம் அதுவே விசாரம்' என்பதுப் போலப் பசியில் கிறங்கிப் படுத்திருந்தான். வேப்பநிழலும், குளிர் காற்றும் பசியை வாதைச் செய்யாததால் தூங்கிப்போய்விட்டான்.
கெந்தி நடந்து வந்தச் சூசையின் கையில் நெகிழிப் பையில் சாப்பாடு தொங்கியபடி இருந்தது. அவன் சோத்துப்பெட்டித் தூங்கிக் கொண்டிருப்பான் என்று எண்ணவில்லை.
"சோத்துப்பெட்டி.. சோத்துப்பெட்டி.." என்ற சூசையின் குரல் சன்னமாகக் கேட்க கண்களைத் திறக்கமுடியாதது போலத் திறந்து பார்த்தான். பசி அவனைத் தின்று போட்டிருந்தது. சோத்துப்பெட்டி பேசும் அத்தனைத் தத்துவங்களையும் தாண்டி அன்னம்தான் அவனது பிரதான தத்துவம் என்பது இன்றும் மாறவில்லை.
சூசைக்கும் தெரியும், சோத்துப்பெட்டி எல்லாம் பேசுவான். சாப்பாட்டிற்கென்று போகமாட்டான். ஒருத்தனும் அவனுக்கு சோறு கொண்டுவந்து ஊட்டிவிட மாட்டான். அங்கேயே பசி தாங்காமல் படுத்துக் கிடப்பான் என்று எண்ணிக் கொண்டே வந்தான். அதுதான் நிகழ்ந்திருந்தது.
சாப்பாட்டை அவனிடமிருந்து வாங்கியவன் அப்படியேப் பிரித்து ஆவ்ஆவ்வென்று அள்ளி விழுங்கினான். என்னமோ கொலைப் பட்டினி கிடந்தவனைப் போல சோத்துப் பெட்டிக்கு பசி தாங்க முடியுமா என்ன?
சூசை அவன் அள்ளி விழுங்குவதையும், தண்ணீர் குடிக்கையில் நெஞ்செல்லாம் ஒழுகுவதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்படி

கொடும் பசிக்கான எந்த காரணியும் இல்லாமல் சோற்றைப் பார்த்த ஆவலில் சாப்பிடுவதாக எண்ணிக் கொண்டான்.
சோத்துப்பெட்டி எங்கும் திரும்பிப் பார்க்கவில்லை. சாப்பிட்டு விட்டு எப்போதும் போல ஏப்பம் விட்டான். ஒரு வழியாய் சாப்பிட்டாகிவிட்டது. இனி எங்காவது ஒரு வசமான இடம் பார்த்து அப்படியே கட்டையச் சாத்தவேண்டும்.
சோத்துப்பெட்டியோடு ஒட்டிப் பழகியவர்களுக்குத்தான் அவனைப் பற்றித் தெரிந்திருக்க முடியும். அப்பாம்மா வைத்த பெயர் நிறைகுளத்தான். ஆனால் யாரோ வைத்த சோத்துப் பெட்டிதான் அவனுக்குப் பொருத்தமாக இருக்கிறது.
அவன் தன் தகப்பனிடம் மனைவியை இழந்துவிட்டு வெறும் கையோடு வெளியேறிய நாளிலிருந்து அவனுக்குப் பல பெயர்களும், பல முகங்களும் தேவைப்பட்டு இருக்கலாம். இருபது வருடங்களுக்கு முன், யாரிடமும் போய் தன் சோகக்கதையை கொஞ்சமும் கிலேசமின்றிச் சொல்லிக் கொண்டுத் திரிந்த போது ஊரில் அவனைப் பைத்தியம் போல் எண்ணினார்கள். அதை அவன் அறியவந்தபோது, சொந்த ஊரைவிட்டு வெளி வந்து வள்ளியூர், நாங்குநேரி என கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து பாளையங்கோட்டையில் வாழ்க்கை என்றாகிவிட்டது.
இப்போது அவன் சித்தர்களைக் கையில் எடுத்துக் கொண்டு அலைகிறான். அதுவும் அவனை எங்கெல்லாம் அழைத்துக் கொண்டுபோய் என்னவெல்லாம் செய்யப் போகிறதோ, அவனே அதை அறிய மாட்டான். வாழ்க்கையைக் குறித்தச் சூட்சுமத்தில் அவன் நிலைத்திருக்க விரும்புகிறான். எதுவுமற்ற அவன் வாழ்வில் அவர்களே அவனுடன் கூட இருக்கிறார்கள் ஏதாவது ஒரு சித்தன் பாடலுக்குள் ஒளிந்துகொண்டு அந்த நாளை பழைய நினைவுகள் அண்டாதவாறு நகர்த்திவிட அதுவே சரியாக இருக்கிறது.
சோத்துப்பெட்டி சிந்தனையில் மூழ்கிக் கிடப்பதைப் பார்த்துவிட்டு, "நான் போறேன்" என்று சொல்லிவிட்டு கிளம்பினான். சூசை போவதை பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு "திக்" என்று இதயம் அடித்துக் கொண்டது. முந்தைய இரவுகளில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகள் இதயத்தை மேலும் துடிக்க வைத்தது.
எப்போதும் ரயில்வே நிலையங்களிலோ, பேருந்து நிலையங்களிலோ முன்பு போல தூங்க முடிவதில்லை. திடீரெனக் காவலர்களின் கைத்தடி காலைப் பதம் பார்க்க அவன் கண்களைத் திறக்கும் போதே தூக்கம் சிதைந்துப் போகிறது. அதைவிடவும் குடிகாரர்கள் தொல்லை எதையும் மிஞ்சி விடுகிறது.

மூன்று நான்கு பேர் சேர்ந்தபடி எல்லோரையும் குச்சியால் அடிப்பது, காலால் எத்துவது, கையில் இருக்கும் பொருட்களைக் கொண்டு எறிவது என ஏதாவது செய்து தூக்கம் கலைந்து விடுகிறது. பிச்சைக்காரர்களை ஏளனம் செய்தல் மிகவும் எளிதாகயிருக்கிறது. எளியவர்களையும், யாசகர்களையும் அடிப்பது சீண்டுவது என்பது அவர்களுக்கு காமெடியாகவும் பொழுதுப் போக்காகவும் ஆகிவிடுகிறது.

அன்றைய நாளில் நள்ளிரவில் அவன் நினைத்தது போல நடந்துவிட்டது. தீடீரென்று சோத்துப் பெட்டி உட்பட பதினைந்துப் பேரை எழுப்பிப் பிடித்துக் கொட்டக் கொட்ட விழிக்கும்படி உட்கார வைத்தார்கள். திடீரென ஒரு போட்டோவைக் காட்டி இவனைத் தெரியுமா? எதுக்கு இங்கே வந்தீங்க, எப்ப வந்தீங்க. கேள்விகளும், லத்தி அடிகளும் விழுந்தபடி இருந்தன. காலையில் ஒருவனைப் புறங்கை கட்டிக் கொண்டு வந்தார்கள்.

எல்லாக் காவலர்களும் வேகமாக ஒன்றுகூடியபடி புறங்கை கட்டியவனை உள்ளறைக்கு இழுத்துச்சென்றார்கள். அவனது கதறலும் கூச்சலும் ரயில்நிலையம் முழுக்கக் கேட்டது. அதன்பின்புதான் அவனையும் மற்றவர்களையும் வெளியே போகச் சொன்னார்கள். இப்படித்தான் சோத்துப்பெட்டி எல்லா இரவுகளையும் பயந்து கொண்டே கழிக்க வேண்டியதிருக்கிறது.

தோளில் இருக்கும் நீளப்பை எப்போதும் அவனுக்கு பாரமாகத் தெரிந்ததே இல்லை. அது அவனின் உடலின் ஒரு பாரமாகியிருந்தது.

எங்கு படுப்பது என்பது அவன் பையை இறக்கிவைத்த பின்பும் கனத்தபடியேதான் இருக்கிறது. சோத்துப்பெட்டிக்கு மட்டுமல்ல, எல்லா யாசகர்களுக்கும் இதுதான் நிலைமை. எப்போது விடியுமென்றே தூங்குபவனாகவும் தூங்காதும் கழிக்க வேண்டியிருக்கிறது பெரும்பாலான இரவுகளில் வானத்தைப் பார்ப்பான். இருள் வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுவது மனதைப் பிரகாசமாக்கி விடுகிறதுதான்.

## அத்தியாயம் -30

எஸ்.பி.ஆபீஸ்

பேராச்சி உட்காரவும், படுப்பதற்கும் வசதியாக உள்ள அட்டையைத் தூக்கிக் கொண்டு காலையிலேயே வந்துவிட்டாள். தோளில் தொங்கும் பையில் அவளது வெத்திலைப் பையும், தண்ணீர் பாட்டிலும் இருக்கும்.
நோக்கால் ஒடிந்த வில்வண்டி எவ்வித அசைவுமின்றி தலைகுப்புற நின்று கொண்டிருந்தது. அதன் சக்கரக்கால்கள் ஒவ்வொன்றாக விலகியிருந்தன. உள்ளே இருந்தப் பட்டுத்துணிக் கிழிந்து பிதுங்கித் தொங்கியது. வீட்டிலிருந்து வீசியெறியப்பட்ட ஒரு முதிய பெண்ணைப் போல அசைவற்று நிற்கிறது. பேராச்சி வருகிற போதெல்லாம் அதைப் பார்க்கிறதுதான் ஜோலி. பாவாடைத் தாவணி அணிந்திருக்கையில் அண்ணன் திருமணத்தின் போது முன் கோஸ் பெட்டியில் அமர்ந்திருந்ததும், அவளின் கலியாணத்தில் தலைநிறைய மல்லிகைப் பூச்சரம் தொங்க, வைக்கோல் மெத்தையில் எதிரே பூவானி மச்சானைப் பார்க்காமல் தலைகுனிந்தபடி அமர்ந்திருந்ததும் ஞாபகத்தில் வந்து தொலைக்கிறது. சரி கழுதையை இப்ப நெனைச்சு என்ன பிரயோசனம்" என்று எண்ணிக்கொள்வாள். ஆனாலும் அந்தக் கழுதை, தினம், தினமும் ஞாபகத்தில் வந்துதான் தொலைக்கிறது. தம்பி புண்ணியத்துல தன்னை இவ்வளவு காலம் தங்க வச்சிருக்கானே என்று தம்பி மாரிக்காக ஒரு ஜெபம் வைத்துக்கொள்வாள் ஆலயத்தை நோக்கி.
வெற்றிலைப் போட்டு சிவந்திருக்கும் பேராச்சியின் வாய் என்னவோ சிறியது தான். ஆனால் தொண்டையைக் கனைத்துக் கொண்டும், வெற்றிலைச் சாறை விழுங்கிவிட்டு செறுமிக் கொண்டு பேசிக் கொண்டேயிருக்கும் அவள் பேசுவதைக் கேட்பதற்காகவே மூக்கம்மாளும், கொட்டாரத்துக்காரியும் வருவார்கள். கத்தாழை நார் போல வெளுத்துக் கிடக்கும் தலைமுடியைப் பேன்சீப்பால் அங்குமிங்குமாகத் தலையை ஆட்டியபடி சீவிக் கொண்டிருந்தாள் பேராச்சியை விட வயது மூத்தபாட்டி. கத்தாழைநாரு பாட்டி அந்தோணியார் கோவில் கெபிபக்கம் படுத்துவிட்டு எஸ்.பி. ஆபிஸ் பக்கம் தண்ணீர் பிடித்துக் கொண்டுவந்து அமர்ந்திருந்தாள். ராத்திரி வரைக்கும் இங்கேதான் கெடை. பத்து தடவை படுத்தபடியும் எழுந்தபடியுமாய் இருக்கும். ஊரைக் கேட்டால் கோவில்பட்டிக்கு வடக்கே ஏதோ ஒரு பட்டின்னு சொல்லும். எவன் கண்டான் அந்த ஊரையெல்லாம் என்று பேராச்சி முடித்துக் கொள்ளுவாள்.
யாரும் வருவதற்கு முன்பே வந்துவிட்ட பேராச்சி, ஆலயத்திற்குள் சென்று தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள். வாய் மொற மொற

வென்றிருந்தது. வெற்றிலையை நீவிக்கொண்டிருக்கும் போதே மூக்கம்மாள் வடக்கேயிருந்தும், தலையில் பையைப் போட்டபடி ஊன்று கோலில் வரும் நடுத்தர வயதுப் பையனும் வந்துக் கொண்டுருந்தார்கள். குளிர்ந்த காற்று மரங்களைச்சுற்றியபடி போய்க் கொண்டிருந்தது. காலையில் வெயில் தவிர அந்த இடத்தில் ஒரு நகர்வு இல்லை. போராச்சிக்கு பேச ஆள் வேண்டும் இல்லாவிட்டால் பொசமுட்டிப் போகும். இவளோட பேச ஆம்பித்தால் எப்போது வம்பில் முடியும் என்பது யாருக்கும் தெரியாது.
சூசை மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தான். ரெண்டு நாளாக எங்கும் போக முடியாமல் கிடந்தான். எதுவும் இல்லாமல் அங்கு கொடுக்கும் ரொட்டியும், சோத்துக்கட்டியும் திங்க முடியவில்லை. எப்படியாவது வந்துவிடவேண்டும் என்று மெளள மெளள நடந்து வந்திருந்தான். தலையில் விலகிக் கிடந்த துண்டை காதை மறைத்து முண்டாசுப் போட்டுக் கொண்டு அமைதியாய் அமர்ந்தான். அன்று முழுவதும் எங்கும் செல்லக் கூடாது என்று எண்ணிக் கொண்டேதான் வந்திருக்கிறான். பேராச்சிக்கு வாய்க்குப் பயந்து குளோரிந்தா நடைப்படியில் மெதுவாக அமர்ந்தான்.
"லே.. சூசை வர்றதெல்லாம் சரிதான். எல்லாத்துக்கும் சமானமா அம்புட்டு கொடுங்க, இம்புட்டு கொடுங்கன்னு கேக்கப்புடாது. சொல்லிப்புட்டேன். நாங்க பத்து வருசமா பாப்பாத்தி ஆலயத்துல பழியா காத்துக் கெடக்கோம் தெரிஞ்சுக்கோ" வாயைக் கொடுத்து வம்பை வாங்கிக் கட்டிக் கொள்ளப் பயந்து சூசை ஒன்றும் பேசாமல் அமைதியாயிருந்தான். அவள் மீண்டும் சீண்டினாள்.
"என்னலே. உம்முன்னு இருக்கே... நாங்க தர்றத வாங்கிக்கிடணும். சரியா.. வாயத் தொறந்து பதில் சொல்லு. என்ன கொழக்கட்டையா வச்சிருக்கே"
"யக்கா. நானே 102 டிகிரி காயச்சல்னு கஷ்டப்பட்டு வந்திருக்கேன். நீங்க என்னான்னா, காலங்காத்தாலயே சண்டைக்கு வந்துக்கிட்டு. நா ஒண்ணும் கேக்கல, கொடுத்தா கொடுங்க போதுமா?" என்றான்.
அவள் வெற்றிப் புன்னகையோடு அவனைப் பார்த்தாள். அவனுக்கு எரிச்சல் வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. தன் கையால் கழுத்தில் கையை வைத்துப் பார்த்தான். கணப்பாய் காயச்சல் அடித்தது.
ஊன்றுகோல் பையன் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, காய்ச்சல் அடிக்காண்னே என்றவன் பையைத் திறந்து ஒரு டப்பாவை எடுத்து "இந்தாங்க.. டோலோ மாத்திரை போடுங்கண்ணே.." என்றான்.
அவனுக்கு அத்தனை ஆச்சரியம் அழகாக ஒரு டப்பாவில் போட்டு ஒரு நெகிழிக் கவருக்குள் இருந்து அழகாக எடுத்துக் கொடுத்தான். மாத்திரை

டப்பாவைக் கூட அழகாக வைத்திருக்கும் அவனுக்கு ஏன் இப்படி ஒருவாழ்க்கை, ஏன் தெருவில் அடித்துபோட்டிருக்கிறது அவனை என்று எண்ணத் தோன்றியது. ஊனமுற்றவர்கள் இந்தச் சமுகத்தில் எந்த உதவியுமின்றி ஏதிலிகளாக அலைவதற்கு யார் காரணம், எப்போதும் போல எண்ணியபடி இருந்தான்.

"எண்ணன்னே.. ரொம்ப யோசனை. மாத்திரையைப் போடுங்கண்ணே, எக்ஸ்ப்ரிலாம் ஆவலே. பாத்துதான் தாரேன். எக்ஸ்பரி ஆச்சுன்னா தூரப் போடட்டுறுவேன்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் மாத்திரையை முழுங்கிவிட்டு தண்ணீரைக் குடித்தான். அவன் சிரித்தபடியே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

தென்பகுதியில் ஏழெட்டு பெண்களும், வடபகுதியில் நான்கைந்து பேரும் வந்துவிட்டார்கள். எல்லாருக்கும் பணத்தைப் பிரித்துக் கொடுக்கும் எடிசன் செறுமிக் கொண்டும், தனக்குள் ஏதோ பேசிக்கொண்டும் குறுக்கும் மறுக்குமாக அலைந்தபடியிருந்தார். அரை இஞ்ச் அளவிற்கான தாடியில் நறுக்கு மீசையோடு வெள்ளைமுடியில் அழகாக இருந்தார்.

எப்போதும் குடைக்குள் படுத்திருக்கும் மாடத்தியம்மாள் குடையை விரிக்காமல் சும்மாபடுத்துக் கிடந்தாள். அவள் சேலை மாராப்பு கொஞ்சம் விலகிப் பெருந்தனங்கள் வெளியே பிதுங்கித் தெரிந்தன. அதைப் பார்த்தபடி இருந்த எடிசன் பிதுங்கிய தனங்களை வேறு யாரும் பார்க்கிறார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தான். ஜாடைமாடையாக "ஏளா மாடத்தி ஒழுங்காபடுளா" என்றார். அவள் எப்போதும் போல அவரைச் சீண்டி வார்த்தைகளால் விளையாடினாள்.

"அது பாட்டுக்கு கெடக்கு. நீருவேணா வந்து ஒதுக்கி போடும்" என்றாள். அவருக்கு மேற்கொண்டு அவளிடம் என்ன பேசவது என்று தெரியாமல் எல்லாரையும் ஏசுவது போலத் திட்ட ஆரம்பித்தார்.

"இங்க எவெ சொன்னபடி கேக்கா அவொ அவொ வந்து இங்கே பட்டா போட்டுக் கொடுத்த மாரி இருக்காளுவோ, படுக்காளுவொ, வாறாளுவொ.. அவொ அவொளுக்கு ஊடுவாசல்னு இருந்தால்தானே தெரியும். பேசிக்கொண்டே இருந்தார்.

"இந்தா பாரும்... பெரீய மனுசன்னு பாக்கோம். இங்கெ என்னா அவுத்துப் போட்டுக்கிட்டு நீ வா, நாவான்னா அலையுதோம். சும்மா சூத்தப் பொத்திக்கிட்டு போரும். இல்லாட்டி நல்லாப்படாது" பேராச்சி, வெத்திலைப் போட்ட வாயைக் கொதப்பிக் கொண்டே பேசினாள்.

"ஏ.. பேராச்சி. உன்னெ எவம்ளா பேசினா.. இவொ கெடக்க கெடயை நீ வந்து பாரு" என்றார் எடிசன்.

"அவெ கெடக்கான்னா நீரு அவொ காமாட்டுல போயி கெடையும்.

அதுக்கு எல்லாத்தையுமா பேசுவீரோ" என்றாள் சத்தமாக கோபம் மாடத்திக்கு பொத்துக் கொண்டு வந்தது. எதுத்து பேசினா சண்டைக்காடு ஆகிவிடும் என்று பயந்தாள். ஒருதடவை அப்படி சண்டை வந்து சாய்ந்திரம் வரைக்கும் அவள் குடும்பத்தை இவளும், இவள் குடும்பத்தை அவளும் இழுத்துக் கூட்டிக் கொடுத்ததில் போய் முடிந்தது. கொஞ்சம் பேராச்சியைக் கண்டால் பயம்தான் மாடத்திக்கு. திரும்பத் தூங்குவது போலப் படுத்துக் கொண்டாள்.
பேராச்சிக்கும் மாடத்தியோடு போட்ட சண்டை ஞாபகத்திற்கு வந்து தொலைந்தது. அவளைப் பற்றி சன்னமானக் கீச்சுக்குரலில் பேச ஆரம்பித்தாள்.
"மொலய தொறந்து போட்டு கெடக்காளே எடுபட்ட முண்டை.. இருவது வருஷமா பாளையங்கோட்டை எங்கே, ஐங்குசன் எங்கேன்னு லோல் போட்டுட்டு இங்கே வந்து சுத்தச் செறுக்கி கெணக்கா படுத்துக் கெடந்துக்கிட்டு பைசா துட்டு வுடாம வாங்கிட்டு போயிருதா. நம்மொ காலையிலெர்ந்து ராத்திரி வரைக்கும் வேனாக் கொதிக்கிற வெயில்லையும் மழையிலயும் கெடந்து சாவுதோம்" என்றாள்.
அரைமணிநேரத்திற்கு மேல் மாடத்தியின் வாழ்க்கை கதை ஒரு திரைப்படம் போல ஓடியது. அவளைக் கட்டிக் கொடுத்தது. அவள் புருஷன் குடிகாரனாகி இவளை வைத்து வியாபாரம் செய்தது, அவன் சீக்கிரமாகச் செத்துப் போக, புள்ளை இல்லாததால இன்னொருத்தனை வச்சிக்கிட்டது, அதுக்கு பிறகு, தெருவெங்கும் அலைந்தது எனப் பேராச்சி பெருங்கதை சொன்னாள்.
கேட்டுக்கொண்டிருந்த இசக்கி அம்மாளுக்கு பொசு பொசுவென்று வந்தது "இவளப் பத்தி ஆயிரம் கதெத் தெருவுல கிடக்கு. இவெ அடுத்தவங்களைப் பத்தி சொல்ல வந்துட்டா" என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டாள் பேராச்சியை ஒரு கேவலமான பார்வையில் பார்த்தாள் இசக்கியம்மா.
" இசக்கி நான் சொல்றது பொய்யின்னா அந்தத் தாடி எடிசன்னட்ட கேட்டுப் பாரு அவெ வண்ட வாளத்தை"
"அடி ஆத்தா.. அதெ எடிசன்ட்ட கேக்கவா. அவனே அவெ முந்தாணியெ புடிச்சிக்கிட்டு அலையணும் பாக்கான். அவென் அவளெப் பத்தி என்னத்த சொல்வான் அது சரி. நம்ம பொளப்பே நாறி போயிக் கெடக்கு. இதுல எதுக்கு அவளெப் போயி பேசிக்கிட்டு" தலையைத் தொங்கப் போட்டுக்கிட்டு அமர்ந்த இசக்கியம்மாவைப் பார்த்தப் பேராச்சிக்கு கோபம் பொத்துக் கொண்டது அவள் தனது பேச்சை எட்டுக் கட்டைக்கு உயர்த்திக் கத்தியபடியே ஆடத் துவங்கினாள்.
"எந்தக் கள்ளச் சிறுக்கியும் என்னைப்பத்தி வாயில பல்லுப் போட்டு

பேசமுடியாது நானும் பத்து பதினைந்து ஊட்டுல பத்துப் பாத்திரம் தேயச்சுத்தான் கஞ்சி குடிச்சேன். எந்தப்பய ஊட்டுலயும் நான் எந்தப் பயலையும் ஏறிட்டு பாத்தது கிடையாது. அவனுவதான் நாய் போல நாக்கத் தொங்கவுட்டுக்கிட்டு அலைவானுவொ. எவனுக்கும் நான் பிடி கொடுத்ததில்லே.."
"அதுசரி.. நீதான் மாமரத்தடி ஊட்டுக்காரரு உங்கிட்ட வந்து உன்னை சேத்து வச்சிக்கிறேன் சொன்னதா சொன்னால்லா..."
"அது வேற இசக்கியம்மா. அதுக்கு அவர்ட்ட என்ன வச்சி பாக்க உமக்குத் தரம் கிடையாதுன்னு சொல்லிட்டேன்" என்றாள் பேராச்சி.
"மாமரத்தடி ஊட்டுக்காரன் தடிவீரனும் செத்துப் போயிட்டான். பின்ன அதெப் பேசி என்ன பிரயோசனம்" என்றாள் கூட இருந்த கொட்டாரத்துக்காரி.
"ஏ.. கொட்டாரத்தா.. என்னமோ நா கொன்னு போட்ட மாரில்லா பேசுறே. செருக்கிகளெ கொஞ்சோம் பேசவுட்டா, போற வாறவனுவளுக்கும் கூட்டி வுட்டுருவாளுவொ" என்று பேச்சு உள்ளுக்குள் திரும்ப, எடிசன் எந்திரிச்சு வந்தவர், "ஏம்மா உங்களுக்கு எவள் எவளொடு போனான்னு பேசாம இருக்க முடியாதே. பின்ன பேசிப்புட்டு, அவெ நாக்க ஓட்ட வச்சு நறுக்கணும்னு பேசிக்கிட்டு அலையுறது. வாயெ வச்சிக்கிட்டு சும்மா இருக்கமாட்டியளோ" எடிசன் சண்டை வருவதுபோலத் தெரிந்தால் உடனே வந்து மேற்கொண்டு பேசிவிடாமல் தடுத்து விடுவான்.
அதுக்கு மேல் பொம்பளைகளைப் பேசவிட்டால் அவ்வளவுதான். வசனங்கள் பச்சையாக வந்து விழும். எடிசனுக்கு துட்டைப் பிரித்துக் கொடுப்பதைவிட இதுதான் பெரிய ஜோலி. எல்லாம் கிழடு தட்டி மூக்கணாஞ்சரடு தொலைந்த பழங்கிழடுகள். தங்கள் வாழ்க்கைப் பாடுகளையும் காமம் சார்ந்த அனுபவங்களையும் பேசித்தான் பொழுதைக் கழிக்கமுடியும். அப்படித்தான் கழிக்கிறார்கள். அதை எத்தனைதடவைப் பேசினாலும் அலுக்காததுதான். அதனால் அதையே பேசிக்கொண்டு நேரத்தை கழிக்கிறார்கள். பல வருடங்களாக அங்கு இருப்பவர்களுக்கு அதுதான் சலிக்காத கதையாக இருக்கிறது. அது அவர்களை பழைய காலத்திற்கு அழைத்துச் சென்றுவிடுகிறது. புதிதாக வருகிறவர்களும் அவர்களோடு கலந்து தங்கள் வாழ்க்கையில் நடந்த பாலியல் விகாரங்களை கதையாகச் சொல்லிச் சொல்லி அவர்களோடு கலந்து விடுகிறார்கள். அது அவர்களை ஒன்றிணைத்து அங்கேயே வைத்திருக்கிறது.
இதற்கு நேர் எதிர்மாறான முகமும் உண்டு. யாராவது ஒரு பெரிய மனுசன்

அல்லது பணக்காரன் பணமோ, சாப்பாடோ கொடுப்பது தெரிந்தால் அப்படியே முகம் சிறுத்து சோகத்தைப் பிழியும் முகங்களாகிவிடும். எந்தச் சலனமும், பேச்சும் அற்றுப் போகும். அவர்கள் போன பின்பு, அந்த முகங்கள் எப்போதும் போல கேலி பேசும் நிலைக்கு திரும்பிவிடுகின்றன.

கொடுப்பவர்களுக்கும் இவர்களைக் குறித்து தெரிநதிருக்கக் கூடும்தான். இவர்களைத் தவிர, பெறுவதற்கு வேறு யார் இருக்கிறார்கள் என்பதே அவர்கள் கொடுப்பதற்கும் காரணமாகவும் இருக்கலாம்.

எப்போதும் தொடைவரை வேஷ்டியைத் திரைத்து வைத்துக் கொண்டு கால்களை விரித்தபடி ஆலயச் சுவரில் சாய்ந்து எப்போதும் ஒரே போஸில் உட்கார்ந்திருக்கும் தாத்தாவின் முகத்தில் கோபமும், மனப்பெருமையும் மண்டியிருப்பது தெரிய வரும். தண்ணீர் பாட்டிலும் தோளில் துண்டுமாய் அக்கடாவென்று உட்கார்ந்திருக்கும் அவர் "வந்தால் வரவு" என்பதுப் போலத்தான் தனது மூப்பான இயலாமையை மறைத்தபடி அமர்ந்திருக்கிறார்.

"கொழுப்பெடுத்த செறுக்கியளெ அவுளுவெ சாமானெ அருவா மனையில வச்சுத்தான் அறுக்கணும். கூதிகொழுத்த செறுக்கியோ, ஊட்டுல இருக்காமெ, எந்த கள்ளப் புருசனுக்குச் சேக்குறாளுவளோ.. இங்கு வந்து கெடந்துகிட்டு சிங்கி அடிக்காளுவொ" என்று சத்தமில்லாமல் மெதுவாக ஏசிககொண்டேத் தனித்து இருப்பார். அவர்களோடுச் சேர்ந்து தனக்குரிய பங்கையும் அவர் வாங்கிக் கொள்வதில்லை. மற்றவர்களும் அவரோடு எந்தப் பேச்சும் வைத்துக் கொள்வதில்லை.

மேல்வானத்தை வாயைப் பிளந்தபடிப் பார்த்தபடி இருப்பார். ஏன் இந்த வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டிருக்கக்கூடும்.

## அத்தியாயம் -31

நீதிமன்றம்

குற்றவியல் நடுவர் நீதிமன்ற எண் நான்கில் சோத்துப் பெட்டி உட்பட இருபத்தியேழு பேர்களை வராண்டாவில் வரிசையாக உட்கார வைத்திருந்தார்கள், ரயில்வே போலீசார். அதில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் நரிக் குறவர்கள். அத்தனைபேரையும் முதல்நாள் மாலையிலிருந்து வேட்டையாடிப் பிடித்த ஆர்.பி.எஃப் படையினர் பகல் முழுக்க அவர்களுக்குச் சாப்பிடுவதற்கென்று எதுவும் வாங்கிக் கொடுக்காமல் பசியோடு விட்டு வைத்திருந்தனர். கருக்கலில் எங்கிருந்தோ கொண்டுவந்த பார்சல் சாதத்தைக் கொடுத்து வேனில் ஏற்றி வழக்கம்போல புள்ளிவிபரக் கணக்கை முடிப்பதற்காகக் கொண்டுவந்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியிருந்தனர்.
கண்தெரியாது வெள்ளை முடிகளால் இமைகள் மூடியபடிக் கிடக்கும் கிழட்டு நரிக்குறவன் அவன் மொழியில் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தான். அவன் மனைவியும், அவன் பிள்ளைகளும் அவன் வாயைக் கையால் பொத்தியபிறகும் அவன் உளறிக் கொண்டு பேசுவதை நிறுத்தவே இல்லை. சாகக் கிடக்கும் கிழங்களும், வயிறு ஒட்டி சிறுத்து எலும்பும் தோலுமாகக் கிடக்கும் இளைஞர்கள் சற்று மனநிலைப் பிறண்ட நடுத்தர வயதுக்காரர்கள் என எல்லோரும் அமர்ந்திருந்தனர். கோர்ட்டுக்கு வெளியே வராந்தாவில் வரிசையாக பெயர்சொல்லி உட்கார வைத்தார்கள். இரண்டு பக்கமும் இரண்டு போலீசார் பாதுகாப்பு.
அவர்களுக்கு ரயில்களும், ரயில்வே நிலையமும் தான் வாழ்க்கை. உழைக்கவும், உண்ணவும், உறங்கவும் படுக்கவும் ஒரு சொட்டுத் தண்ணீருக்கும் அதுதான் சத்திரம். இன்றைக்கு அவர்களுக்கு நீதிமன்றத்தின் பிணை போடப்பட்டிருக்கிறது. அவர்களுக்காக வாதாடவும், தண்டம் கட்டவும் யாரிருக்கப் போகிறார்கள்.
கூட்டத்தில் பாதிப்பேர் கண்ணைப் பொத்திக்கொண்டும், தூங்கி வழிந்தபடியும் அமர்ந்திருந்தார்கள். மற்றவர்கள் முகத்தில் தூக்க கலக்கமிருந்தது. வௌவால்கள் போல கறுப்பு கவுன்கள் பறக்க ஒன்றிரண்டு வழக்கறிஞர்கள் வேகமாக தங்கள் சீருடையில் வந்துக் காவலர்களிடம் ஏதோ கேட்டார்கள். ஒன்றுக்கும் தேராது என்றவுடன் சிரித்துக் கொண்டே நீதிமன்றத்திற்குள் புகுந்தார்கள். நீதிமன்றத்துக்குள் இரண்டு மூன்று பேர் நின்று கொண்டு அரட்டையடித்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள்.
சிறு குற்ற வழக்குகளும், போக்குவரத்து விதி மீறல் வழக்குகளும்,

சந்தேக வழக்குகளும், அழிம்பு வழக்குகளும் மாலை ஆறு மணிக்கு மேல் நடைபெறுவதால் அதற்கென்று சில வழக்கறிஞர்கள் மட்டுமே வந்திருந்தார்கள். நரிக் குறவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவே எட்டுமணி ஆகிவிட்டது.
தூங்கி விழுந்தவர்களையும், பேந்தப் பேந்த விழித்துக் ஒண்டிருந்தவர்களையும் அதட்டி எழுப்பி நீதிபதிக்கு முன் நிறுத்தினார்கள். நாலு நறிக்குறவர்களையும் உற்றுப் பார்த்தார் நீதிபதி.
"இவுங்களை எங்கேயிருந்துய்யா புடிச்சிட்டு வந்தீங்க"
எதுவும் பேசாமல் ரயில்வே காவலர் அமைதியாக நின்றார். ஏதாவது பேசி ஏடாகூடமாகக் கூடாது என்ற பயம்தான். அந்த நீதிபதி கண்டிப்புக்கு மிகவும் பெயர் போனவர். அதுவும் போலீஸ்காரர்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யவில்லை என்றால் கடிச்சிக் குதறிவிடுவார்.
பயந்துப் போய் நின்றான் சட்டநாதன். ரயில்வே போலீஸ் காவல் நிலையத்திலிருந்து அனுப்பப்படும் நீதிமன்றக் காவலர் அவர்தான். என்ன கேள்விக் கேட்கப் போகிறாரோ என்று பயந்து போய் ஒடுங்கி நின்றார்.
"எதுக்குய்யா. இவுங்களெப் போயி புடிச்சிட்டு வந்திருக்கீங்க. இவங்களப் பிச்சக்காரங்களாக்கி ரோட்டுலயும், பஸ் ஸ்டாண்டுலயும், ரயில்வே ஸ்டேஷன்லயும் பிச்சை எடுக்க வுட்டுட்டாங்க. இதுல கேஸ் வேற போட்டு ஜெயிலுக்கு அனுப்பனுமா? அவுங்க நாலுபேரும் மேலேயும் இருக்க கேஸை தூர எடுய்யா என்றவர் குறவர்கள் நாலுபேரையும் பார்த்து "உங்களெ விடுதலை பண்ணியாச்சு. போகலாம்" என்றார்.
அதன்பிறகும் நீதிபதி தாங்கள் நால்வரையும் பார்த்து என்ன சொன்னார் என்பது தெரியாமல் நின்று கொண்ருந்தார்கள். "ஏப்பா கான்ஸ்டபிள். விடுதலைப் பண்ணுனது கூடத் தெரியாம அப்பாவியா நிக்குறதெப் பாருய்யா. இனிமே இப்படிப் புடிச்சு கேஸ் போட்டிங்கண்ணா நடக்குறதே வேற" என்று சத்தம் போட்டார்.
"கோர்ட் டவாலி அந்த நான்குபேர் அருகில் சென்று, உங்க நாலுபேரயும் விடுதலை பண்ணியாச்சிப் போகலாம்" என்றான். அவர்கள் கடைசிவரை என்ன நடந்தது என்பது தெரியாமல் நீதிமன்றத்தைவிட்டு வெளியே வந்து, காவலர்கள் என்ன சொல்லப் போகிறாரோ என்று தெரியாமல் காத்துக் கிடந்தார்கள்.
நீதிமன்றத்தில் இருபத்தி மூன்று பேரும் வரிசையாக அரைவட்டம் போல் நிறுத்தப்பட்டு பெயரும் தகப்பனார் பெயரும் சரிபார்க்கப்பட்டது. நிறைகுளத்தான் பெயரை பட்டப்பெயரோடு சேர்த்துக் கூப்பிட்டார்கள்.

யார்பட்டப் பெயரைக் காவலரிடம் சொன்னார்கள் என்றுத் தெரியாவில்லை. ரயிலில் திருச்செந்தூரிலிருந்து அவனுடன் வந்த குருந்தன்தான் சொல்லி இருக்க வேண்டும்.
குருந்தன் கருங்குளத்துக்காரன். ஸ்ரீவைகுண்டத்தில் இறங்கி ஊருக்குப் போவான். அவனும் நாசரேத்தில் வைத்து டிக்கெட் எடுக்காமல் கள்ள ரெயில் ஏறி வந்ததற்காகப் பிடிபட்டுக் கொண்டான். குருந்தனுக்கு வயக்காடும் இரண்டு ஏக்கர் புஞ்சையும் இருக்கிறது. எல்லாம் காய்ஞ்சு தீய்ஞ்சுப் போய்க் கெடக்கிறதாம். ஏதாவது திருச்செந்தூரில் வேலை ஏதும் கிடைக்குமா என்று வந்தவனுக்கு எந்த வேலயும் கிடைக்காமல் அவனுடன் பேசிக் கொண்டே வந்தபோது பிடித்துக் கொண்டார்கள். நாசரேத் அழைத்துச் செல்லும்போது இருட்டுக்குள் தப்பி ஓடிவிட்டான்.
"சோத்துப்பெட்டி என்ற நிறைகுளத்தான்" இரண்டு தடவை சத்தம் போட்டுக் கூப்பிட்டார் டவாலி.
அவனை சோத்துப்பெட்டி என்று அழைத்தது மிகவும் அவமானமாக இருந்தது. சூசையும், தக்கரையும் சொல்லும் போதெல்லாம் பெயர் போலவே தோன்றும். இப்போது மட்டும் அது ஏன் அவமானமாகத் தெரிகிறது என்று அவனுக்கே விளங்க வில்லை. அவனது திருச்செந்தூர் சீடர்கள் அவனை "ஜீ.. ஜீ" என்று அழைப்பதை நினைத்துப் பார்த்தான்.
எல்லோரின் பெயரையும் தகப்பனார் பெயரையும் சரிபார்த்தப் பின்னே, நீதிபதி தீர்ப்பினை வாசித்தார். நீங்கள் ரயில்வே சட்டத்தின் படி சிறுகுற்றம் செய்திருப்பதை ஏற்றுக் கொண்டதால் ஒவ்வொருவரும் இருநூறு ரூபாய் அபராதம் செலுத்தக் கடமைப் பட்டவர்கள். அவ்வாறு செலுத்தாத பட்சத்தில் மூன்று நாள் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. என்று தீர்ப்பினை வாசித்தனர்.
சோத்துப் பெட்டியிடம் அவ்வளவு காசு அப்போதைக்கு இல்லை. எப்போதும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கும் அவனது நீளப்பையில் ரெண்டு பத்து ரூபாயும் சில்லறைகளே மிஞ்சியிருந்தன. யாரும் தெரியாத அவனைப் போல் இன்னொருவனும் பணம் செலுத்தாத நிலைமையில் அவர்கள் இருவரும் காவலர்கள் பாதுகாப்பில் விடப்பட்டார்கள்.
ரயில்வே காவலர்களிடம் வாரண்ட் எழுதிக் கொடுக்கப்பட்டு அதோடு சோத்துப் பெட்டியையும் மற்றொருவனையும் அழைத்துக் கொண்டுப் போனார்கள். எப்போதும் தோளில் வைத்திருக்கும் நீளப்பையை கைகளால் தூக்கிக் கொண்டபடி அவர்களுடன் நடந்து சென்றான்.
இரவில் பத்துமணிக்கு மேல் இருவரின் உடைமைகளையும் பெற்றுக் கொண்டு அதை எழுதி உள்ளே வைத்துவிட்டு ஒரு செல்லில் அடைத்தார்கள். இருளோடு இருளாக அந்த அறையில் இருவரும் இரவு முழுக்கப் பதுங்கிக்கிடக்கும் திருடர்கள் போலக் கிடந்தார்கள்.

## அத்தியாயம் -32

பாளை மத்தியச்சிறை

இருளில் உறைந்துகிடக்கும் அந்த அறைக்குள் மெலிதான வெளிச்சக்கீற்று மெதுவாக எட்டிப் பார்த்தது. கொசுக்கடியும், வெளவால்களின் எச்சவீச்சமும் சாப்பிடாத வயிற்றை குமட்டிக் கொண்டே இருந்தது.

என்னப் பெரிய குற்றம் செய்துவிட்டோம்? இத்தனைபெரிய மதில்சுவருக்குள்ளே இருக்கும் இந்த இருட்டறையில் பிடித்துப் போடும்படியாக இரவு முழுக்க மனக்கிலேசம் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஒரு விதமான பயப்பிராந்தி மனதை மலைப் பாம்பு போல இருக்கிக்கொண்டிருந்தது.

எத்தனைப் பெரிய கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும், திருடர்களும் கிடக்கும் சிறையில் அவனும் படுத்திருக்கிறான். "எத்தனை பேர் நட்ட குழி எத்தனை பேர் தொட்ட முலை" என்று பட்டினத்தார் அவன் முன்னே கோமணத்தோடும் கரும்பு வில்லோடும் நின்று பாடுவதுபோல ஒரு பிரேமை வந்து போனது. மனப் பயத்தின் காரணமாக அவன் மனதில் வெவ்வேறு பிம்பங்களிலான பயம் உருவமற்றும், உருவத்தோடும் தோன்றி மறைந்தன. அவனுடன் வந்தவனுக்கு இது முதல்முறை அல்ல என்பதை அறிய முடிந்தது. அவன் அத்தனைக் கொசுக்கடியிலும் சுவர் ஓரத்தில் ஒண்டிக் கொண்டு படுத்திருந்தான். அப்போதே அவன் தூங்கியிருக்க வேண்டும். அவன் மூச்சுவிடுவது கூடத் துல்லியமாகக் கேட்டது. அந்த இருளில் அவன் எங்காவது ஒரு வெளிச்சத்தின் கீற்று தெரியாதா என்று பார்த்தான். எதுவும் தெரியவில்லை.

இரண்டு கால்களும் விண்விண்னென்று வலித்தன. அநேகமாகச் சரியாகச் சாப்பிடாததால் இருக்க வாய்ப்பிருக்கிறது. அவன் அவளது காலுக்கு மேல் இடதுகாலைத் தூக்கிப் போட்டான். பின் வலது காலைத் தூக்கி வைத்தான். எப்படி உருண்டாலும், ஒருக்களித்துப் படுத்தாலும் தூக்கம் வேண்டுமென்றே வரமாட்டேன் என்றது.

பட்டினத்தாருக்கு நேர்ந்த கொடுமையை விடவா இது பெரியது என்று எண்ணிப் பார்த்துக் கொண்டான். அவருக்கே அப்படி என்றால் நாமெல்லாம் எம்மாத்திரம் என்று மனதைத் தேற்றிக் கொண்டான். "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது சரிதானே. எழுந்து உட்கார்ந்து பிரணாயாமப் பயிற்சி செய்தான் அதுவும் அவனைத் தூக்கத்திற்கு இட்டுச் செல்லவில்லை.

பின்னிரவில் அவனே அறியாமல் கொஞ்சநேரம் அசதியில்

தூங்கியிருக்கலாம். காலையில் நேரத்தோடு வந்த சிறைக்காவலர்கள் ஒவ்வொரு அறையாகப் பூட்டைத் திறப்பது துல்லியமாகக் கேட்டது.
கூடவந்தவன் எதுகுறித்தும் கவலையின்றித் தூங்கிக் கொண்டிருந்தான். தனது வேட்டியை தலைவரைப் போர்த்திக் கொண்டு, தொடைகளுக்குள் கைகளைச் சொருகிக்கொண்டு எதற்கும் அசராத தூக்கத்தில் படுத்து இருக்கிறான்.
"ஏன் தனக்கு மட்டும் இப்படி மனது அடித்துக் கொள்கிறது. ஒரு சித்தனுக்கு துன்பமும், துயரும், மகிழ்வும், களிப்பும் ஒன்று தானே. இன்னும் "ஆசை பற்றி அலைகிறேனோ' எப்போதோ வேண்டாமென்று விட்டுவிட்ட வீடும், மண்ணும், மனையும், மனைவியும் இன்னம் தேவைப்படுகிறதோ. அவனால் மட்டும் எதையும் எண்ணாமல் தூங்கமுடிகிறது மனம் இருக்கிறது என்றால் அதுபோலவே எதுவுமற்ற மனோ நிலைதானே தனக்கும் இருக்கவேண்டும். ஏன் இன்னும் அது சித்திக்கவில்லை. எல்லாம் கடந்துபோனபிறகும், ஏன் பாரம் சுமக்க விரும்புகிறது மனது" பலவிதமாக எண்ணிக் கொண்டேயிருந்தான் சோத்துப் பெட்டி.
திடீரென அவன் அறையின் பெரும்பூட்டு உடைப்பதுப் போன்ற சப்தத்துடன் திறக்கப்பட்டது. இன்னும் கொஞ்சம் வெளிச்சம் உள்ளுக்குள் வந்தது. யாரோ ஒரு சிறைக்காவலர் போட்டிருந்த குனேஹா செண்டு தாவி உள்ளே வந்தது. அந்த வாசம் வெளி உலகினின்று வந்த சுதந்திரம் போலத் தெரிந்தது. அது தனக்குள் வேண்டுமென்று தோன்ற நன்றாக அதை உள்ளிழுத்துக் கொண்டான். ஆமாம் அது சோத்துப்பெட்டியின் அறையில் தீ எரிந்து அழுகிய வீச்சத்தை அப்புறப் படுத்தியது.
சில நேரங்களில்தான் மனிதனுக்கு சில விசயங்கள் புதிதான சித்திரங்கள் போல் தோன்றுகின்றன. அப்படியான ஒரு புதியச் சூழலின் ஞானங்களும் கொடுமைகளும் அவனைச் சுற்றி நின்று கொண்டிருக்கவும் செய்கின்றன.
காவலர் ஒருவர், சோத்துப் பெட்டியைப் பார்த்து, "அவனை எழுப்பு" என்றார். இவன் போய்ச் சத்தம் போட்டுப் பார்த்தான் அவன் எழும்புவதாக இல்லை. "இன்னும் கொஞ்சம் சத்தமாக எழுப்புல" என்றார் காவலர். எதற்கும் அசைவில்லை. காவலரே லத்தியுடன் உள்ளே வந்து தட்டினர். இரண்டு அடிகளுக்கு பின்னே எழுந்த அவனைப் பார்த்து, வெளியே வா. வேறு குவாரண்டிக்கு மாத்தியாச்சு வாங்க" என்று சொல்லி இருவரையும் அழைத்துக் கொண்டு விசாரணைக்கைதிகள் இருக்கும் அறையில் கொண்டுப் போய் விட்டார்கள்.

"ஏலே.. யார்ட்டயும் சண்டைப் போடக்கூடாது. ஏதாவது திமிர்த்தனம் பண்ணுனீங்கன்னா தனிச்சிறையில் போட்டுப் பூட்டுப் போடுவோம். ஆளுல்லாத ஜெயில்ல கிடந்து அழுது சாவவேண்டியதுதான். பாத்துக்குங்க" எச்சரிக்கை செய்து விட்டுப் போனார்கள் சிறைக்காவார்கள்.

சோத்துப்பெட்டி மெதுவாக தலை நிமிர்த்து எல்லோரையும் பார்த்தான். எல்லோரும் ஒரே மாதிரித் தெரிந்தார்கள். எல்லோர் முகமும் பளிச்சென்று இருப்பதாகத் தெரிந்தது. யாரும் எந்தக் குற்றமும் செய்யாதவர்கள் போலத்தான் தெரிந்தார்கள்.

ஒவ்வொருவரும் எதற்காக உள்ளே வந்திருக்கிறார்கள். அவர்கள் புள்ளகுட்டியெல்லாம் என்னசெய்வாங்க? எப்படி இவர்கள் இந்த சோகத்தைத் தாங்கிக் கொள்வார்கள்? என்றெல்லாம் எண்ணிக்கொண்டான்.

சிறிதுநேரத்திலேயே அவனது சோக எண்ணங்கள் எல்லாம் உடைந்துவிட்டது அவனைப் பார்த்தவர்கள் கேலியாகவும், கிண்டலாகவும் பேச ஆரம்பித்ததும், இடுப்பைத் தொட்டு கீச்சுக் கீச்சு மூட்டியதும் அவனைச் சுழல வைத்து ஓடவைத்ததும், அவர்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதைத் தெரிவித்தது. அவன் ஜெயிலுக்குள் வந்த குற்றச் செயல் குறித்துக் கேட்டுவிட்டுச் சிரித்தார்கள். "வந்ததே வந்தாய், பெரிசா அம்பது அறுபது நாளு இருக்க மாரி வரவேண்டாமா?" என்றார்கள்.

மெதுவாகத் தனியாக உட்கார்ந்து அவன் மூச்சுப் பயிற்சிச் செய்வதைப் பார்த்தவர்கள் அவனிடம் வந்து பேச ஆரம்பித்தார்கள். அவன் தங்குதடையின்றிச் சித்தனிலிருந்து பித்தன் வரையிலான பாடல்களை எடுத்துவிட்டான். எல்லோரும் அவனைத் தேவதூதர் போல வாய் பிளந்து பார்த்தார்கள்.

பரப்பிரம்மம் ஆகிய பிரபஞ்சம் சுத்தவெளியாய் இருந்ததாகவும், இருளோடு இருளாக இருந்தது. மேகத்தோடு மேகம் சேர்ந்தா எப்படி வெடிப்பு ஏற்பட்டு மின்னலும் இடியும் கடைசியில மழையும் உருவமாய் வருதோ, அதேபோல் இருளும் இருளும் சேர்ந்து ஒளியை உருவாக்கிப் பிரகிருதியானப் பிரபஞ்சம் தோன்றியது. பிரபஞ்சத்தின் ஐம்பூதங்கள் வழியாகத்தான் மனுசன் பிறந்தான்.

இந்த உடல்ல 12,000 நாடிகள் இருக்கின்றன. உடலின் தத்துவங்கள் 96. நீர் நெருப்பு, காற்று, வான் நிலம், இப்படி பஞ்ச பூதத்தை ஒருத்தன் ஒழுங்காகத் தெரிஞ்சிக்கிட்டா போதும். ஒருவன் சித்தனாகி விடுவான் என்றான். அவன் பேச்சைக் கேட்கவும் ஆர்வமுடன் வந்து அமர்ந்தார்கள். அவனுக்கும் ஞானம் ஒழுகிக் கொண்டே இருந்தது.

ஒருத்தன் ஆனந்த நிலையை அடையும்னா அவன் அஞ்சுகோசங்களைக் கடைபிடிக்கணும். சாப்பாடுதான் மனுசனின் உடலுக்கு தேவைப்படுது. அதுதான் உடலை உருவாக்குது. அதுனாலப் பருவுடலை அன்னமயகோசம். இதுதான் முதல் கோசம் இரண்டாவது மூச்சுக்கலை பிராணமயகோசம், பத்து வகையான வாயுவை சுவாசிக்கிறோம் நாம அதிலிருந்து பெறும் சக்திதான் அது. அதுக்குப் பொறவு மனோமய கோசம். உடலாலும், மூச்சாலும் வாழும் மனிதன் பஞ்ச இந்திரியங்களையும் தாண்டி மனதால் வாழ்வதுதான் மனோமய கோசம். இதுக்கு பொறவுப் புத்தி விஞ்ஞான மயகோசம். கடேசில ஆனந்த மய கோசம். இந்த உடல் இப்படித்தான் ஆனந்த மயக் கோசத்துச் செல்லுது. இப்படி 5 கோசங்களையும் ஆண்டு அனுபவித்து அடக்கியவன்தான் ஞானி. அப்படிப்பட்ட ஞானிதான், தன்னை ஒறுத்து ஏழு சக்கரங்களையும் எழுப்பி குண்டலினி யோகம் அடைவான். பின்னே, அவன் பிரம்மத்தோடு ஐக்கியமாயிடுவான். பிரம்மம்னா என்ன நெனச்ச. அது பிரபஞ்ச மகாசக்தியாக்கும்".

"அப்படி யாராவது ஆகியிருக்காங்களாண்ணே" என்றான் கேட்டுக்கொண்டிருந்த ஒருகைதி.

"அவுங்கதான் பிரம்மத்தோட இணைஞ்சிருவாங்களே. பிறகு பிரம்மம் வேறா, அவன் வேறான்னு தெரியாது. அதுனால அதுபத்திப் பேசக் கூடாது. அப்படியானவங்களும் பேசுறது இல்ல.

"சோத்துப் பெட்டியின் வாயிலிருந்துச் சக்கரங்களின் பெயர்களும் அவைகள் நிற்கும் சுழிகளும், கண்ணுக்கும் நெற்றி நடுவுக்கும் இடையில நெற்றிக்குள்ள இருக்கும் மூலஸ்தானத்துல இந்திரியத்தை நிறத்துபவன் குண்டலினிச் சக்தியை அடைந்துவிட்டால் அம்புட்டுதான். அவன் நெனைச்சது நடக்கும். நெனைச்ச உருவம் எடுப்பான்" மூச்சு வாங்கிவிட்டு மீண்டும் பேசினான்.

"நீயான்னு" ஒரு படம் வந்துச்சே. அதுலப் பாம்பு சடக்கென அழகான நடிகையா மாரிடும்லா. அது கூடுவிட்டு கூடு பாயுறது. முதன் முதலில் பாம்பு வடிவத்துலதான் அதுதான் அவன் இச்சாசக்தியின் மூலம் எந்த ரூபத்தையும், எடுக்கமுடியும். ஏன்னா மனிதனின் விந்து பாம்பு போல் தான் இருக்கும். பிறக்கும் கருவும் பாம்பு போலத்தான் இருக்கும். பிறகு பிரணாயாமம் பெற்ற மனிதனாகும்.

பேசப்பேச அவன் தன்னை மறந்த நிலைக்குப் போனான். அவனது சீடர்கள் அவனுக்கு சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார்கள். மூன்று நாளும் ஞானமார்க்கம், சித்த மார்க்கம், பிரம்ம மார்க்கம் குறித்த விளக்கங்களில் அவனது சக கைதிகள் மயங்கிப்போனார்கள். அடிக்கடி அதற்கு உதாரணமாக, சினிமாக்

கதைகளும் எடுத்து விடுவான்.
எல்லாரும் சித்தர்களின் பாடல்களைப் படிக்கணும் என்று சொன்னான். பட்டினத்தார் பெரிய கப்பல் வியாபாரி, கடைசியில் சித்தராகி பிச்சை எடுத்துதான் சாப்பிட்டார். அவரு சீடர் பத்திரகிரியார் யாருன்னு நெனைச்சீங்க. மன்னரா இருந்தவர். அவரும் பிச்சை எடுத்துச் சாப்பிட்டுதான் மோட்சம் போனார். அவ்வப்போது சித்தர் பாடல்களையும், அருணகிரியார் பாடல்களையும் உருக்கமாகப் பாடினான். பின்பு அப்படியே மௌனமாகி அமர்ந்து விடுவான். அவன் பாடுவதைக் கேட்ட கைதிகள் அவன் பெரிய சித்தன் என்றும், அவனுக்கு தங்கமாக மாற்றும் ரசவாதம் தெரியும் என்றும் பேசிக் கொண்டார்கள்.
சோத்துப்பெட்டிக்கு அவனைச் சுற்றியமர்ந்து கேட்கும் கைதிகளைப் பற்றிக் கேட்டபோது அவர்கள் வசதியானவர்களும், வீடும், காடும், தோட்டமும் தொரவும் உடையவர்கள் என்று அறிந்தான். அவர்களெல்லாம் இவனது ஆன்மீகக் கருத்துக்களைக் கேட்டு விட்டு உருகி நிற்பது அவனை ஒரு அசாதாரண மன நிலைக்கு உந்தித்தள்ளியது.
அவனுக்குள் ஒரு புதிய மனிதன் தோன்றுவதுபோலத் தெரிந்தான். சிறுவயதிலிருந்து மனப்பாடம் செய்திருந்த அத்தனைப் பாடல்களும் அவனை ஒரு தளத்திற்கு மேலே நிறுத்தின. அவன் பேச்சும், இசையும், மனப் பாடமாய் ஒப்புவிக்கும் சித்தர்பாடல்களும் அந்த மூன்று நாளில் எல்லாக்கைதிகளையும் பிரமிக்க வைத்தன.
கைதிகளில் ஒருவன் சிறைக் காவல்துறைக் உதவி கண்காணிப்பாளரிடம் சொல்ல அவரும் தனது அறைக்கு அழைத்துக் கொண்டு போய் இவனிடம் ஆன்மீகம் கேட்டது அவனை எட்டமுடியாத இடத்திற்கு ஏற்றிவிட்டாற்போல ஆகிவிட்டது.
இரவுகளில் மௌனமாய்த் தியானம் செய்தான். கைதிகள் பலர் அவனை ஒரு பெரிய சாமியாராகப் பார்க்க ஆரம்பித்தார்கள். அதில் அவன் கரைந்து போகுமுன்பே மூன்று நாட்கள் ஓடிபோய் விட்டன. கைதிகள் சிலர் அவன் கையில் நூறு இருநூறு என்றுத் திணித்துவிட்டு போனார்கள். அவனுக்கு ஏண்டா மூன்று நாள் என்று நீதிபதி தண்டனை சொன்னார் என்று இருந்தது. ஒரு வாரம், பத்து நாள் கொடுத்திருக்கக்கூடாதா என்று தோன்றியது.
சிறையில் அடைபட்டது அவனை வேறொரு உயரத்திற்கு அழைத்துச் சென்றிருந்தது. ஏதோ ஒரு புரியாத மகிழ்ச்சி அவனுக்குள் புகுந்து கொண்டது. வேண்டா வெறுப்பாக தனது நீண்டப் பையை வாங்கிக் கொண்டு சிறையிலிருந்து வெளியெறினான் சோத்துப்பெட்டி (என்ற) நிறைகுளத்தான்.

## அத்தியாயம் -33

கல்லறைத்தோட்டம்

அன்று வெள்ளிக்கிழமை. தக்கரையும், முத்தாச்சியும் பள்ளிவாசலுக்கு எதிரே இருந்த நிழலில் எதர்ரெதிரே அமர்ந்திருந்தார்கள். இருவர் மனதிற்குள்ளும் ஒரு பனிப் போர் நடந்து கொண்டிருந்தது. முத்தாச்சிக்கு சேர்ந்து வாழணும்னு ஆசை. தக்கரை தான் மதில் மேல் பூனையாக இருக்கிறான். "தவளைத் தண்ணிக்கு இழுக்கு ஓந்தான் கரைக்கு இருக்குதுங்கிற மாதிரி இருவரும் தவிக்கிறார்கள். இருவருக்கும் ஒருவர்மேல் ஒருவருக்குப் பிரியம் இருக்கிறதுதான். ஆனால் தக்கரைக்கு ஏன் சேர்ந்து வாழ எண்ணமில்லை என்பதுதான் முத்தாச்சிக்கு விளங்காத புதிராக இருந்தது. ஆனாலும் அவள் அவனைவிட்டு எங்கும் பிரிந்து விடவுமில்லை. தலைகவிழ்ந்து எதுவும் பேச விரும்பாத நிலையைத் தெரிவிப்பதுபோல அமர்ந்திருந்தாள்.

எப்போது முத்தாச்சி பேச ஆரம்பிப்பாள் எனத் தக்கரையும், அவன் ஏதாவது பேசட்டுமே என அவளும் காத்திருக்கிறார்கள். சில சமயம் அது ஆர்வமாகவும், பலசமயம் அது கொடுமையாகவும் இருக்கிறது. அந்த மௌனம் இருவரையும் சலனப்படுத்திக்கொண்டேதான் இருக்கிறது. அவள்தான் வெள்ளிக்கிழமை என்று ஞாபகப்படுத்தி அவனைத் தர்காவிற்கு அழைத்து வந்திருந்தாள். அவனும் அவள் அழைத்ததற்காக வருபவன் போல் வந்தான்.

தக்கரை தனது தோள் பையையும் கைக்கம்பையும் எப்போதும் யாரிடமும் கொடுப்பதில்லை. அது அவனின் பொக்கிஷம் போல கொடுத்துவிட்டால் தன் உடலிலிருந்து ஏதோ ஒன்று இல்லாதது போல இருப்பான். அவன் கைக்கம்பு அவனது கைக்கு அடக்கமாகக் கீழே கிடந்தது. தோள்ப்பை மட்டும் முத்தாச்சி அருகில் இருந்தது. அது அவளருகில் இருப்பதே அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவள் மீதான அன்பு கொஞ்சமேனும் அவனிடம் இருக்கிறது என்பதின் அத்தாட்சி என அதனை எண்ணிக் கொண்டாள்.

ஓன்றிரண்டு செந்நிற காய்களை உதிர்த்துக் கிடத்தியிருக்கிறது வாதாம் மரம். அந்த மரத்தின் முதிர்ந்த சிவந்த இலைகள் தரையெங்கும் கிடந்தன. அதில் ஒன்றைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டே யிருந்தாள். முத்தாச்சி. சிவப்பா அல்லது சிவப்பை போன்ற நிறமா என்று சொல்ல முடியாத நிறத்தில் இருந்த இலையின் சில இடங்களில் மஞ்சள் பொட்டுக்கள் இருந்தன. அடுக்கடுக்காய் இருக்கும் நரம்புகளில் கைவைத்து அதன் மேடுபள்ளங்களில் உராய்ந்தப் படியே இருந்தாள். அந்த தடவலில் விரல்கள் மேடான நரம்பினைத் தொட்டபடி

அதோடு பயணித்து அடுத்த நரம்பின் தடவுதலுக்குப் போனது. அவளது கண்களும் மனமும் வேறு எங்கோ இருந்தன.
தக்கரை தன் பின்னந் தலைமுடியை விரலால் நீவிக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் அவன் மனது எதனையும் எண்ணியதில்லை. இப்போது ஏனோ முத்தாச்சியைக் குறித்து அலை பாய்ந்தபடியே இருக்கிறது. அவளது காதோரத்து சுருள்முடி காற்றில் ஆடவும் அவன் மனது மீண்டும் ஜிமிக்கி நோக்கிச் சென்றது. அவன் எவ்வளவு பணம் தன் தோள்பையில் இருக்கும் என்று இன்று எண்ணிப் பார்க்க முடிவு செய்தான். அல்லது தர்கா நிர்வாகியிடம் தனது இறப்புச் செலவுக்கென கொடுத்து வைத்திருக்கும் பணத்தை வாங்கிவிடவேண்டும் என எண்ணினான். ஜிமிக்கி அவள் காதில் ஆடிக்கொண்டிருக்க வேண்டும். அதுவும் சுருள்முடியோடுச் சேர்த்து அதுவும் ஆடவேண்டும் போலிருந்தது.
அப்போது பின்னங்கால் தெறிக்க சூசை கால்களை அகலவிரித்துப் போட்டு இழுத்து இழுத்து வேகமாக நடந்தபடி வந்தான். தக்கரையும், முத்தாச்சியும் இருப்பதைப் பார்த்தவுடன் அவனையறியாமல் வேகம் அதிகரித்தது. அவன் நெற்றியும் கழுத்தும் வேர்த்து முத்துக் கோர்த்திருந்தன. கன்னத்தில் ஓடிய வியர்வையைத் தலைத் துண்டின் முந்தியால் துடைத்தாள்.
"தக்கரையண்ணே உங்களுக்கு சேதி தெரியுமா? படபடப்புடன் சொன்னான்.
"ரொம்ப படபடப்பா இருக்கே என்ன செய்தி?"
"ரொம்ப சங்கடமா இருக்குண்ணே. நம்ம அன்னப்பால் தலையில அடிபட்டு செத்துப் போயிட்டான்"
தக்கரை நிமிர்ந்து, சூசையின் முகத்தை ஏறிட்டான்.
"ஆமாண்ணே, அவன் குடிச்சிப் போட்டு ராத்திரி வந்த பயல் சாக்கடைக்குள்ள கால விட்டு பின்னந்தலையில அடிவாங்கி அங்கினேயே செத்துப் போயிருக்கான். முந்தா நாளு ராத்திரி விழுந்து கிடந்தவன் நேத்து பகல் பன்னெண்டு மணி வரைக்கும் யாரும் எதுவும் சொல்லலண்ணே. எல்லாரும் பாத்துட்டுப் பாத்துட்டு, பிச்சக்காரன்தானேனு போயிட்டாங்கபோல. பேராச்சியம்மன் படித்துறையில் மஞ்ச சேலை கட்டி, நெத்தியில் குங்குமம் வச்சிருப்பாள்ல இருளாயி அக்கா, அவ கத்தி கூப்பாடுபோட்டு அதுக்கு பொறவுதான் போலீசுக்கு தகவல் சொல்லி அங்கினேயே போட்டோவும் எடுத்திட்டு கம்போஸ்ட் யார்டுல புதைக்க கொண்டு போனாங்க. எல்லாம் முடிக்க மூணு மணி ஆயிட்டு. அதுக்கு பொறவுதான் வந்தோம். இருளாயி அக்காதான் தலையெ விரிச்சிப் போட்டுக்கிட்டு ஓடிவந்து சத்தம்போட்டு அழுதாள். நாங்க ஓடிப் போயி பாக்கும் போது பாடியெக் கார்ப்பரேஷன்

வண்டியில் ஏத்திட்டாங்க. ரெண்டு தோட்டிங்க மட்டும்தான் இருந்தாங்க யாரும் வாறீயளான்னு கேட்டாங்க. நானும், புதுக்குறிச்சி செங்கானும் ஏறினோம். வண்டி எங்கப் போகுதுன்னு பாத்தேன். குப்பை கிடங்கு பக்கத்துல போயி நின்னுச்சி. நான் ஓடிப்போயி எங்க அன்னப்பாலு கத்தோலிக்க கிறிஸ்தவன் அவனெ ஆர்சி கல்லறையிலதான் அடக்கணும்னு சொன்னேன். அதுக்கு அவுங்க என்ன சொன்னாங்க தெரியுமா?"
அவன் கண்களில் இருந்து தாரைதாரையா கண்ணீர் வந்தது. துண்டால் துடைத்தபடி கொஞ்ச நேரம் பேசமுடியாமல் திணறினான்.
"என்ன சொன்னாங்க தெரியுமா? போப்பா. இப்படித்தான் போனதடவ சிலுவக்குறி போட்ட சட்டை போட்டிருந்த ஒரு அனாதை பொணத்த பாத்தவுடன் எல்லா சர்ச்சுக்கும் போன் பண்ணி வாட்ஸப்புல அவன் படத்தெ அனுப்பினோம். அவுங்க பாத்துட்டு இப்படி ஆளு எங்க சபையில் இல்லேண்டாங்க. சில சர்ச்சுல பதிலே சொல்லல. பகல் முழுக்க நாத்தமான பாடியெ வச்சிருந்து ராத்திரி இங்கென கொண்டுவந்து புதைச்சோம்"ன்னாங்க.
அங்க இருந்த அதிகாரி ஒருத்தர் சொல்றாரு, "எப்பா புதைக்கிறவனும் மனுசன்தானே. இப்படி குப்பையும் சாம்பலுமா கெடக்குற எடத்துல ராத்திரி குழியெத் தோண்டி புதைக்குறது எவ்ளோ கஷ்டம். பூச்சிபட்ட கெடக்குற எடம். ஒண்ணுலாட்ட ஒண்ணு ஆச்சுன்னா எங்களால பதில்சொல்ல முடியுமா?ன்னு... சுத்திமுத்தி பாத்தேன். ஒரே குப்பைமேடு. அங்கங்கே தீ வச்சிருக்காங்க. சாம்பல் பறக்க எறிஞ்சிக்கிட்டே இருக்கு. என்னைக்கோ செத்துப் போன நாயோ நரியோ கெடக்குதுபோல. அதோட அழுகின சதையின் நிணம் நாறிக்கிட்டே இருந்துச்சு. பாதி ஆளுங்க மூக்க துணியால மூடிக்கட்டிக்கிட்டுதான் நிக்கவே செஞ்சாங்க. அந்த குப்பைக்குள்ள குப்பையா தோண்டி பாடியெ உள்ள தள்ளி விட்டு மண்ணெப் போட்டு முடிட்டாங்க. என்னால கண்கொண்டு பாக்க முடியல்ல. இப்ப நெனைச்சாலும் அன்னப்பாலுக்கா இந்தக் கெதின்னு இருக்கு' சூசை சொல்லி முடிச்சிட்டு கொஞ்சம் அவீதியாயிருந்தான்.
ரெண்டு நாளா பேராச்சியம்மன் படித்துறை பூராவும் அவன் பேச்சுத்தான். "இந்த பிச்சைக்காரங்க சாப்புடாமக் கிடந்தா ரேஷன் அரிசி வாங்கிட்டு வந்து பொங்கி சோத்தை எல்லாம் அதுகளுக்குக் கொடுத்துட்டு தான் வடிகஞ்சியில் கொஞ்சம் பருக்கைய போட்டு குடிச்சிட்டு போவான். அப்படி அன்னப்பாலு மாரி ஆளு எப்படிக் கிடைப்பான் இனிமே இந்தப் பிச்சைக்காரங்களுக்கு பேராச்சியம்மன் கோவில் ஊழியர்கள் மருகி மருகிப் பேசிக் கொண்டார்கள்.
"அன்னப்பால் எப்படியிருப்பான்" என்று கேட்டாள் முத்தாச்சி. கழுத்து

வரைக்கும் தலைமுடிய விரிச்சிப் போட்டுக்கிட்டு கறுப்புத் தாடியோட இருப்பான்ல அவன்தான் என்றான் தக்கரை.
"ஆமா கொஞ்சம் பொம்பள சாடையிலை பேசுவானே அவனா"
"எம்புட்டு நல்ல பையன் அவன்ட்ட நல்லா காசு உண்டுமே. பணத்தை சேத்து சேத்து வச்சிருப்பானே. ரெண்டு கையிலயும் நெறைய மோதிரம் போட்டுப்பானே அதுல ரெண்டோ மூணோ தங்கம்னு சொல்வாங்களே.."
"ஆமாம் அவன் வச்சிருந்தப் பணம், மோதிரம் எல்லாம் யாரு அடிச்சிட்டு போனாங்களோ தெரியல. கையில்ல மோதிரமும் இல்லை. வேறு எந்தபடியான ரொக்கமும் இல்லை என்றுச் சொல்லி விட்டார்கள். எப்படியும் அவன்ட்ட பத்து நாப்பதினாயிரம் ரூவா இருக்கும். இது போகப் பாங்கிலயும் பணம் போட்டு வச்சிருந்தான். அதுல்லாம் என்னாகுமோ தெரியல.
"பிச்சைக்காரன் செத்தா பிணத்தோட போவும்னு சொலவடை. நமக்கென்ன வீடு இருக்கா, வாசல் இருக்கா, ரேஷன் கார்டு இருக்கா. ஆதார் கார்டு இருக்கா., எது இருக்கு அரசாங்கம் வீடு வாசல் இருக்கவனுக்கே எதுவும் கொடுக்க மாட்டேங்குது நம்மள மாரி சொத்து சொகம் இல்லாதவனுக்கு எப்படித் திரும்பி கொடுக்கும். எல்லாம் கோவிந்தாதான்." எதுவுமற்று அனாதைப் பிணமாகிவிடுகிறான். பிச்சைக்காரன் எம்புட்டுப் பணம் வைத்திருந்தாலும். அன்னப்பாலுவுக்கு இந்தக் கதியானு தக்கரையின் மனம் வெந்து நீறிக் கொண்டிருந்தது.
"வாழ்றதுக்கும் சாவுறதுக்கும் எடம் சமுதாயத்தில் ஒதுக்கிக் கொடுக்கணும்னே. இல்லாட்டி பிச்சக்காரன்னு ஒரு சர்டிகேட்டு கொடுக்கணும். அதெவச்சி ரேஷன் கார்டு எல்லாம் கொடுக்கணும்ணே"
"யாரு என்ன சொல்லி என்னத்துக்கு. எதுவும் நடக்கப் போறதில்லே. யாரோ ஒருத்தர் மாம்பழச் சங்கத்துல வந்தப் பிச்சக்காரங்க எல்லாத்துட்டயும் சொல்லி வாங்க கலெக்டர்ட்ட மனு கொடுப்போம்னு கூப்பிட்டார். எங்களுக்கும் ரேஷன் கார்டு தரணும்னு எல்லாரும் கேட்டுட்டு வந்தோம் இதுவரைக்கும் பதிலே சொல்லலியாம்" என்றான். தக்கரை.
"ஆமா பேசிப்பேசிக் கலைய வேண்டியதான். எல்லாம் பனிக்காலத்துல நாயி கனவு கண்டாப்லதான். அது காலைல எந்திரிச்சா எங்கே கலியாண ஊடு எங்கே விஷேசம்னு ஓடுமாம்ல, குளிருக்கு போர்வை வாங்க ஜவுளிக்கடைபோவணும்னு நெனைக்குமா. அதுபோலதான் நடக்கும்" என்றான். சூசை.
"அன்னப்பாலு எப்படிப்பட்ட பையன். எல்லாத்துக்கும் ஓடோடி வந்து ஒதவி செய்வானே. சோறு பொங்கணும்னா அம்புட்டு ஆசையோட

பொட்டச்சி கெணக்காச் செய்வான். எல்லாரும் சாப்புட்ட பொறவுதான் அவென் சாப்புடுவான்" என்றாள் முத்தாச்சி.

"குடிச்சி குடிச்சி வம்பா போயிட்டான். தூத்துக்குடி பக்கத்துல ஒரு கிராமம் அந்த ஊரு பேரு நெஞ்சுக்குள்ள இருக்கு வரமாட்டேங்குது. தாழைகுளம் பக்கத்துல உள்ள ஊரு. நல்லபேரு. குடிச்சி குடிச்சி பொண்டாட்டி புள்ளயளெ வுட்டுட்டு வந்தவன் இங்கினேயே வந்து செத்துப் போயிட்டான்" என்றான். தக்கரை எம்புட்டு பெரிய குடும்பத்துக்காரனா இருந்தாலும் பிச்சைக்காரன் எல்லாரும் ஒரே சாதிதான். அவன் இருந்தாலும் இறந்தாலும் யாரும் கண்டுக்க போறதில்லே."

பாங்கொலி கேட்க ஆரம்பித்ததும் எல்லோரும் அமைதியானார்கள். சோத்துப்பெட்டி தூரத்தில் வந்து கொண்டிருந்தான. அவன் தோள் பை சிறிதாகி இருந்தது. காவி வேட்டி உடுத்தியிருந்தான். நெத்தியில் பட்டையாகத் திருநீறு இட்டிருந்தான்.

சூசை அவனது கோலத்தைப் பார்த்து சிரித்தபடி "என்ன பெரிய்ய சாமியாராயிட்டே போலத் தெரியுதே?"

"சாமியார் இல்லடா சித்தனாயிட்டேன். பாரதிகூட ஒருதடவை சொல்வார். நான் சித்தராயிட்டென்னு அது மாரி நானும் ஆயிட்டேன். சித்தனுக்கு சாதியும் மதமும் கிடையாது" என்றான்.

"நான் இங்கேயே இருக்கேன். நீங்க போயிட்டு வாங்க" என்று அந்த இடத்தில் அமர்ந்து கண்ணை மூடியபடி தியானத்திற்குள் செல்லும் பொருட்டு மூக்கை பொத்திக்கொண்டு மூச்சை இழுத்தான்.

## அத்தியாயம் -34

பாளை பேருந்துநிலையம்

தக்கரை இரண்டு நாளாகத் தர்காவை விட்டு எங்கும் போகவில்லை. உடம்புக்கு ஏனோ அசதியாக இருந்தது. அதைவிடவும் மனசும் சரியில்லை.
பாளையங்கோட்டைக்குப் போய் காலாற நடந்துவிட்டு வரணும் என்று ஆவலாக இருந்தது. ஆனால் அதற்கென எழுந்து புறப்பட்டுப் போக மனம் வரவில்லை அம்புட்டு அசதியும் மனச்சோர்வும் அவனைக் கவிழ்த்துப் போட்டிருந்தது.
அப்படியே தர்கா கொடிமரத்திண்டில் அமைதியாக வந்து இருந்தான். தனது தோள்பையையும் கம்பையும் பட்டியலிலேயே வைத்திருந்தான். அவன் கண் பார்வைக்கு முன் அது அசையாது இருந்து கொண்டிருந்தது. தார்ச் சாலையில் ஓடிய பஸ்களின் பின்னே காற்று கொண்டு வந்து போட்ட தூசி பறந்து போனது. தூரத்தில் காற்று சுழன்று சுழன்று கெம்பு சுத்திச் சுழல்போல மாறி அத்தனை குப்பைகளையும் வானத்திற்கும் பூமிக்குமாகச் சுழன்று ஒவ்வொரு இடமாய்ப் பறந்துபோய் மாவுமில் பகுதிக்குப் போய் வானத்தில் குப்பைகளோடு ஏகியது. ரெண்டு பனை உசரத்திற்கு அத்தனைக் குப்பைகள் வட்டமிட்டு அதன் வேகம் கூடியதைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.
சித்தாற்று ஓடையில் தண்ணீர் இல்லாததால் மான் பூங்காவிலிருந்து தண்ணீர் குடிப்பதற்காக மான்கள் வந்து நின்றன. தண்ணீர்த்தொட்டி அருகே இருந்த தவலைப் பானையில் குட்டிமான் முதலில் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தது.
மூன்று கிளையிட்ட கொம்புள்ள பெரிய மான் யாரும் வருகிறார்களா என்று மிரட்சியோடு பார்த்துக் கொண்டிருந்தது. மற்ற மான்கள் பொறுமையோடு சூழ்ந்து நின்றன. முள்மரங்களும், பூவரசு மரங்களும் மழையற்றுப் போனதால் வெயிலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் காற்றில் அல்லாடியபடி நின்று கொண்டிருந்தன.
ஒரு சொட்டு வெயிலோ மழையே இறங்காத பூவரசு அளவற்ற அடர்ந்த இலைகளுள்ள இம்மரங்களின் இலைகள் சிறுத்துப் போய் தனித்தனியாக நின்றது. அதன் எந்தக் கிளையிலும் ஒரு சின்னப் பம்பரக்காயைக் காணோம். கொறண்டிச் செடிகளும், புல்புதர்களும் காய்ந்துச் சருகாகிச் சரடாக மாறியிருந்தன. வெயிலின் கொடுமை வானத்தை மட்டுமல்ல, பூமியையும் திறந்து போட்ட அடுப்படிப் போலக் கிடத்தியிருந்தது.
திடீரென வானம் கறுத்துச் சுற்றிலும் கருமேகங்கள் இறங்கின.

சில்லென்றக் குளிர்ந்த காற்றுத் தாவித்தாவிக் கீழ் பக்கமாகப் முள்ளுக்காட்டிற்குள் போய்க் கொண்டிருந்தது. கன்னி மூலையிலும் அக்னி மூலையிலும் பளார் பளாரென்று மின்னல்கள் வெட்டின.
கோடையிடிக்கு முன்பே மழைத் துளிகள் பொட்டுப் பொட்டாய் தெறித்து விழுந்தன. சோவென மழைபிடித்து அடித்தது. ஒரு மணிநேரம் மழையில் தர்கா மணலை நனைத்து மேலேறி தண்ணீர் நதிபோல் ஓடியது. அதில் ஓடிய நண்டின் கால்கள் நான்கு நான்கு புள்ளிகளை வரிசையாக வைத்துக் கொண்டே போனது.
மழை உக்கிரமாகி விட்டால் அதன்பிறகு அதை நிறுத்தமுடியாது. ஓயும்வரை பெய்தபடியே இருக்கும். தரைப் பள்ளங்களில் தேங்கிய நீரில் வானம் தெரிய ஆரம்பிக்கும். தக்கரை கொடிமரத்தை விட்டு நகரவே யில்லை. மழையெல்லாம் அவன் தலை நனைத்து இறங்கி வழிய, உடல் நனைத்து வேட்டி துண்டு எல்லாத்தையும் நனைத்தது.
குளிர் நதியாய் உடலுக்குள் இறங்கியது. நீண்ட தலைமுடியை அப்படியே சூப்பிய பனங்காய் போல மழை நனைத்துப் போட்டிருந்தது. பெய்து ஓய்ந்தபின்பும் இன்னும் மழை வேண்டுமென்பது போல ஆடாமல் அசையாமல் ஒரு மரம் போல உள்வாங்கியபடி இருந்தான்.
இரவுக்குள் இன்னும் இரண்டு மழை பெய்தால் அவன் முளைவிட்டு விடுவான் போலிருந்தது. தர்காவில் இருந்த பிள்ளைகள் தர்கா மொட்டைமாடி தூம்புக் குழாயில் விழுந்த மழையில் குளித்தன. அதன் குளிர்ச்சியும், மழை வாசமும் அவர்களைக் குளிக்கச் சொல்லிக் கொண்டே இருந்தது. தக்கரைக்குத் தலையைத் துவட்ட மனமில்லை. அவன் குளித்துவிட்டுக்கூட தலையைத் துவட்டுவது இல்லை. முடியெல்லாம் அப்படியே படிந்துச் சீவியதைப்போல நெற்றியையும் பிடரியையும் மறித்துக் கிடப்பதையும் அவன் பொருட்படுத்தவில்லை. அப்படியே வேட்டியும் துண்டும் காயும்வரை அங்கேயே உட்கார்ந்திருக்க விரும்பினான். குளிர்மழையை ரசித்தபடி எப்போதும் போல அவன் மௌனமாயிருந்தான். பட்டியலில் தங்கித் தர்காவிற்கு நேர்ச்சையுடன் வந்தவர்களும், சில்லா தங்கியிருப்பவர்களும் வந்து அதிசயமாய் அவனைப் பார்த்தார்கள். சுலைகாவுக்குத் தெரியும் தக்கரையைப் பற்றியும் அவன் மழையில் நனைவது பற்றியும். இப்போது வந்தவர்களுக்கு அவனைப் பற்றி என்ன தெரியும்?
பேருந்திலிருந்து இறங்கி வேகவேகமாய் ஓடி வருவதுபோல வந்தாள் முத்தாச்சி. தக்கரையின் மழை நனைந்த கோலம் கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். அவன் அருகில் போய் அமர்ந்தபடி, "ஏங்க.. ஏங்க" என்றாள்.
அது முத்தாச்சியின் குரல் என்பதை அறிந்தவனாகத் தலை முடியை

ஒதுக்கிவிட்டபடி அவளைப் பார்த்தான். "என்ன இந்த நேரத்தில்' என்பது போலக் கையை மடக்கிக் கேட்டான்.
"ஏங்க குட்டித்துரை பத்தி உடனே பேசணுமாம். அவனுக்குக் கண்ணாடி வாங்கணுமாம். பள்ளிக்கூடத்துலக் கூப்பிட்டாங்கன்னு பக்கத்து ஊட்டுக்குப் போன் வந்தது. பெத்தவங்க உடனே வரணுமாம். சொன்னாங்க."
அவன் அசையாமல் இருந்தவாறே "நான் வரணுமா?" என்றான்,
"ஆமாங்க... எனக்கு என்ன தெரியும். எதுக்குக் கூப்புட்டு வுட்டாங்கோன்னு தெரியல. பயமாயிருக்கு நீங்களும் வந்தீங்கண்ணா நிம்மதியாயிருக்கும்.."
அவனுக்கு குட்டித்துரையைப் பார்க்க வேண்டுமென்று ஆசைதான். குட்டித்துரையின் பூவிழுந்த கண்கள் அவனைப் பார்ப்பதுப் போலத் தோன்றியது. முத்தாச்சியின் கலைந்துப் பறந்து கிடந்த தலைமுடியை சீவச் சொல்லிவிட்டுப் புறப்பட ஆயத்தமானான்.
அவன் ஏதும் பேசாமல் எழுந்திருந்து தனது இருப்புப் பட்டியல் இடம் நோக்கிப் போனான். துவைத்த வேட்டியும் சட்டையும் போட்டுக் கொண்டு "போவோம்" என்று சொல்லியபடியே தோளில் பையைப் போட்டான். அவள் கம்பை எடுத்துக் கொண்டு அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.
"இல்லே முத்தாச்சி. கம்பெ கொடு மழை பெஞ்சிருக்கு களியும், செம்மண்ணும் வழுக்கும் மண் தரையில் எது சகதின்னு தெரியாம போயிடும்"
அவள் கம்பை அவன் கையில் கொடுத்துவிட்டு முன்னே போனாள். அவளே பேருந்தில் பயணச் சீட்டு எடுத்தாள். பேருந்தில் பாளை பேருந்து நிலையம் இறங்கி இருவரும் நடந்தபடி பேசிக் கொண்டே போனார்கள்.
"ஏங்க நீங்க வரமாட்டேன் சொல்லிறுவீங்களோன்னு பயந்தேன். நல்லவேளை வந்துட்டீங்க. நம்மபுள்ள கொடுத்து வச்சவன்தான்" அவன் சிரித்துக் கொண்டே சொன்னான், "நா வரல்லேன்னு சொன்னா நீ விட்டுறுவியாக்கும்" என்றான்.
அவள் அவனைப் பார்த்து மகிழ்வோடுக் கண்களைப் படபடத்தாள். அதில் "ஆமா வுட்றுவேனா" என்பது இருந்தது.
குருட்டுப் பள்ளிக் கூடத்தில் அவர்களை எதிர்ப்பார்த்துக் காத்திருப்பதுபோல அவர்களை அழைத்துச் சென்றார்கள்.
அவன் கட்டுரைப் போட்டியில் தமிழ்நாடு அளவில் பெற்ற பரிசினையும் பெருமனதோடுப் பேசினார்கள். அவனுக்குத் தனிப் பயிற்சிக் கொடுத்துப் பெரிய படிப்புக்குத் தயாராக்கப் போகிறோம் என்றும் சொன்னார்கள்.

தக்கரையும் முத்தாச்சியும் அமைதியோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். ரெண்டு பேரு பேரும் மதமும் வேறு வேறாக இருக்கே. என்ன மதம்னு போட என்று கேட்டார்கள். ஒரு நிமிடம், பதில் சொல்ல இருவரும் ஆடிப்போனார்கள்.

அருகிலிருந்த குட்டித்துரை சொன்னான் ஜாதி, மதம் ரெண்டு காலத்திலேயும் டேஷ் போட்டு விடுங்கள் என்றான்.

"என்னப்பா சொல்றே நாளைக்கு ஏதாவது சலுகை கிடைக்குமே" என்றார் ஆசிரியர்.

"இல்ல சார் எங்கம்மாவோ, எங்க வாப்பாவோ ஒரே மதமா மாறிட்டாங்கன்னா நல்லதுதான் அதைப் போட்டுக்கலாம்" என்றான்.

"என்ன சொல்றீங்க" என்று கேட்டார் ஆசிரியர்.

முதன் முதலாக வேகமாக வாயைத் திறந்து பேசினான் தக்கரை. "இல்லைங்க. நா முஸ்லிமா இருக்கிற மாரி, அவ இந்துவா இருக்கிறா இதுல யாரு எந்த மதத்துக்கு மாறுனதாலயும் எங்களுக்குச் சாப்பாடு கிடைக்கப் போறதில்லே. பிச்சை போடுறவங்க எல்லாரும் எல்லா மதத்துலயும் இருக்குறாங்க. நாங்க எல்லாத்திட்டையும் வாங்கிச் சாப்புடறோம். பின்னே எதுக்கு சாதியும் மதமும். எல்லா விழாக்களுக்கும் போறோம். அப்புறம் எதுக்கு ஒரு இன்னவங்க நாங்கன்னு ஒரு அடையாளம். எம்மொவன் சொல்ற மாரியே போட்டுறுங்க"

முத்தாச்சி அழுகை வந்துவிட்டது "எம்மொவன்' என்று சொன்ன வார்த்தை இன்றுதான் முதன்முதலில் வந்திருக்கிறது. அவளுக்குக் கண்ணீர் பொலபொலவென வழிய மூக்கைச் சிந்திக் கொண்டாள்.

"ஏங்க சார் ஏதாவது மதம்னு போட்டா சலுகை கிடைக்கும்னா முஸ்லீம்னு போட்டுங்குங்க. நானும் முக்காடு போட்டு மாறிக்கிடுதேன் சார்." என்றாள் முத்தாட்சி.

ஆசிரியர் அவளை ஏறிட்டு ஆச்சரியமாகப் பார்த்தார். அதற்குள் முத்தாச்சி முந்தானையை எடுத்து அழகாக முக்காடு போட்டிருந்தாள். அந்த முக்காட்டிற்குள் இருந்த அவள் முகம் அழகாகத்தான் இருந்தது.

"அய்யா.. பேர வேணுன்னாலும் முத்தாச்சிங்கிறதுக்குப் பதிலா மும்தாஜின்னு போட்டுக்கிங்க" என்றாள்.

"ஓ.. பேரெல்லாம் கூட செலக்ட் பண்ணியாச்சா", வாத்தியார் சிரித்தபடியே சொன்னார்.

"சார் அவெ சொல்றத கேக்க வேண்டாம். இதுவரைக்கும் அவளுக்கான சாப்பாட்டை அவ தான் உழைச்சி சம்பாத்யம் பண்ணி சாப்டுட்டிருக்கா. அவ எப்பவும் போல இருக்கட்டும் சார்", என்றான் தக்கரை.

அலுவலக வேலைகளை முடித்துவிட்டு வந்த ஆசிரியர், "கொஞ்ச நேரம் பேசிவிட்டு குட்டித்துரையை அனுப்பிவையுங்க" என்றார்.

"எப்படிப்பா இந்த பரிசு வாங்குனே" என்று கேட்டாள் முத்தாச்சி அவன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னான் எல்லாத்துக்குமே நீங்க ரெண்டுபேரும்தான் காரணம். எப்பவும் உங்க ரெண்டுபேரையும் நல்லா வாழ வைக்கணும்னு நெனைச்சிக்கிட்டு இருக்கேன். அதுதான் முக்கியமான காரணம். மேற்கொண்டு படிச்ச எல்லாம் அப்படியே நினைவுல நிக்குது. அதுக்கு எங்க வாத்தியார்கள்தான் காரணம். அதுக்கும் மேல அவுங்கதான் புஸ்தகங்களைப் படிக்கத் தாராங்க. வேதப் புத்தகங்களையும் தாண்டி எல்லாத்தையும் படிக்கச் சொல்லுவாரு, எங்க தேவசகாயம் சார். அவுருக்கு சாமி கும்புடுன்னு சொல்றவங்க மேல் நம்பிக்கையில்ல. எல்லா சாமியும் மதமும் ஒண்ணுதான்ம்பாரு. அதுதாம்மா காரணம்"

அவன் பேசப் பேசக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போல இருந்தது தக்கரைக்கு.

## அத்தியாயம் -35

குலசேகரம்

சோத்துப்பெட்டி பிச்சைப் பாத்திரமாகவே இருக்க விரும்புகிறான். அதுதான் ஏதுமற்ற மனிதனுக்கானப் பேராசையாகவும் இருக்கிறது. பழைய உணவுகளால் நிரம்பி வழிகிற போதெல்லாம், அதனை காலியாக்கிவிட்டு சுத்தமானப் பாத்திரமாய் இருக்க அவன் மனம் அடித்துக் கொள்கிறது. அந்தக் கரும் திருவோட்டில் மெல்லியதாய் கிளைத் தோடும் நார் வரிகள் அதன் வெற்று வாழ்வை நதிகளின் மொழியில் எழுதியிருக்கிறது. அதுதான் அதன் அழகாயுமிருக்கிறது. சிலசமயம் சில்லறைக் காசுகளோடு சேர்ந்து கீதமிசைத்தாலும் மௌனமே அதன் விருப்பமாயிருக்கிறது. அதன் உட்குழிக்குள் பிரபஞ்சத்தில் பேரொலியின் கீதம் கேட்டுக் கொண்டே யிருக்கிறது. மேல்புறமாக வாய்திறந்து, உட்புறம் குவிந்திருக்கும் அது அழகிய வானத்தையும் அவனுக்குச் சொல்லித்தருகிறது. அதன் தூய பளிங்குத் தன்மையில் தனக்கு புத்தி வேண்டும் எனச் சொல்லிக் கொள்கிறான் அவன்.

சோத்துப்பெட்டி ஜெயிலில் இருந்து வந்த பிறகு எல்லாவிதத்திலும் மாறிப்போனான். அவன் தனக்குள் ஒரு சித்தன் உறைந்திருக்கிறான் என்று பேச ஆரம்பித்திருக்கிறான்.

கடந்தமுறை திருச்செந்தூர் போன போது சந்தித்த பெருந்தாடி கிழவரும், அவர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து கால் நடையாகப் பல ஷேத்திரங்களைத் தரிசித்துவிட்டு, கடைசியாகத் திருச்சீரலைவாய் முருகன் பாதத்தில் அவன் உருண்டு விளையாடிய கடற்கரை மணலோடு கலந்து போகப் போவதாகப் பேசிக் கொண்டிருந்தார். மனிதனின் உடம்பில் ஏழாயிரத்து இருநூறு நாடிகள் இருப்பதாயும் தன் நாடி தன் மனச்சுழியத்தில் இருப்பதாயும் சொன்னார்.

அவரது பேச்சிற்குத் தகுந்தாற்போல நீண்டு தொங்கியதாடி காற்றிலாடி அலைந்து கொண்டிருந்தது. அந்த தீட்சண்யமான கண்கள் எல்லோருடனும் ஊடுருவிப் பார்த்தன. அவர் கால்களில் விழுந்தவர்கள், அவர் திருப்பாதத்தில் தாமரை இதழ்களைக் கண்டதாய்ப் பேசிக் கொள்கின்றனர்.

மூலஸ்தானத்தில் நெற்றிப் பொட்டுக்கும் கண்களுக்கும் இடையே இருக்கும் பக்தியில் சக்கரம் மேலும் கீழுமாய் ஓடிக் கொண்டிருப்பதாய்ச் சொன்னார். இந்த திருத்தலத்தின் முருகன் எப்போதும் குழந்தை இறைவனாக இருப்பதற்கும் அந்த ஓட்டமே காரணம் என்றார். அவனைக் கூர்ந்துப் பார்த்துவிட்டு தன்கையில் வைத்திருந்த

திருவோட்டைக் கொடுத்தார். இனி நான் ஏகாந்தம் போகிறேன். என்றார். நாளைக் குலசேகரப்பட்டினம் போய்க் கல்பெட்டியில் அரபுநாட்டிலிருந்து வந்த மூன்றாம் சேரமான் பெருமாள் சூபியைச் சந்திக்கப் போவதாகவும், அவனுடன் திருப் பொருத்தம் கண்டுவிட்டு, திருச்செந்தூரில் மணல்துகளாக மாறப் போவதாகவும் அவனிடம் சொன்னார்.

அவனை உற்றுப் பார்த்துவிட்டு "நீ இனி சோற்றுக் குடுக்கையல்ல, எல்லாம் விட்டு விலகி ஞானக் குடுக்கையாக வாழ்வாய். உன்னோடு அந்தரத்தில் வந்து பேச வருவேன்" என்றும் சொன்னார்.

அவரின் உடலிலிருந்து ஒரு பச்சையான வாசம் வந்து கொண்டேயிருந்தது. அவனையுமாறியாமல் அது நாசிக்குள் ஏறி அவனை லயிக்கவைத்தது. அதிலிருந்து அவர் கொடுத்துச் சென்ற திருவோட்டைப் பத்திரமாக வைத்திருக்கிறான்.

தாடிக் கிழவர் அந்தத் திருவோட்டைப் பற்றிச் சொன்னார் அவனிடம். "இதைப் பிச்சைப் பாத்திரமாய் எண்ணாதே இதை கையில் வைத்துக் கொண்டு எந்தத் திசையில் நடந்தாலும் அதுவே வழியைக் காட்டும். அந்த ஒளி ஏதாவது ஒரு புண்ணியத்தலத்திற்கு இட்டுச் சொல்லுமென்றார். பிச்சை எடுப்பவன் என்பவன் பிச்சைக்காரனாடா. அவன் ஞானி, சூபி, ஞானச்சுடர். அவன் பிச்சை எடுப்பதில்லை. அவன் ஏதுமற்றவன். என்னைத் தொடர்ந்து தனது ஞானமார்க்கத்தை நீ எடுத்துச் செல் என்றார். அதுதான் சோத்துப்பெட்டியை இப்போது பேச வைத்திருக்கிறது.

இனிமேல் தான் இங்கிருக்கப் போவதில்லையெனவும், சதுரகிரி மலைக்குப் போய்த் தியானத்தில் ஈடுபடப் போவதாகவும் சொன்னான் சோத்துப்பெட்டி. அவன் பேசப் பேச அவன் நிறைகுளத்தானாக ஆகிக் கொண்டிருந்தான்.

சூசைக்கு அவன் பேசியவற்றில் பலதும் விளங்காவிட்டாலும், அதில் ஏதோ ஒன்று இருப்பதாக எண்ணிக் கொண்டான். நிறைகுளத்தான் சாமியாராகப் போகிறான் என்பது தெரிந்தது. சாமியார் என்றவுடன் அவர்கள் ஊரில் பங்குத்தந்தையாகவும், தலைமை ஆசிரியராகவும் இருந்த ஞானப்பிரகாசம் அடிகளார் ஞாபகத்திற்கு வருகிறார். எத்தனை மேன்மையான ஆன்மா தன் திரண்டச் சொத்துக்களை பிள்ளைகள் படிப்பதற்காக அள்ளி அள்ளிக் கொடுத்தார் அவரைப் பார்க்கப் போகிறவர்கள் ஆசையோடு எது கொடுத்தாலும் அது ஏழை மக்களுக்கே போய்ச் சேர்ந்துவிடும் ஒவ்வொரு நாளும் நிரம்பி வழியும் அவர் பாத்திரம் அன்றன்று காலியாக்கப்படும். இயேசுவின் மெய்யான வாழ்வில் திளைத்தவர். சாமியார் அவரைப் போலவே

நிறைகுளத்தானும் மாறிவிடவேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.
சூசை இளக்கமான மனநிலையில் இருந்தான். வெளிரிய முகத்தோடு சிரித்தான்.
"என்னடா சொல்றே. என்னோட வாறியா எல்லாத்தையும் கர்த்தராகியப் பிரும்மம் பாத்துக்கிடும் வாடா"
"இல்லண்ணே. நீங்கள் எதுஎதுயெல்லாமோ பேசுறீங்க. எனக்கு அதுலாம் ஒண்ணும் தெரியாது. இப்படியே இருந்துட்டு போறதுதான் எனக்கு சரின்னுபடுது."
"அப்படியில்லப்பா. எல்லாத்தையும் சிவம் பாத்துக்கும். நம்மையும் வழி நடத்தும். எங்க தாடிச் சாமியாருக்கு ஏகப்பட்ட சீடர்கள் எல்லாரும் பணங்காசோட நிக்கிறாங்க. ஆனா அவருக்கு பிடிச்சிவரோட ஊட்டுக்கு போவாரு. அதுமாரித்தான். நீயும் ஒரு நாளைக்கு அவரோட அருளைப் பெறுவாய். அப்போ நீ கேட்டதெல்லாம் கிடைக்கும். ஆசைப்பட்டதெல்லாம் நடக்கும்டா வா"
"இல்லண்ணே நானோ லெப்பர். மத்தவங்க என்னோட இருக்கச் சங்கடப்படுவாங்க. ஏன் அது உங்களுக்கும் சங்கடமாகும். பொறவு எனக்கு வேறு எந்த மாரியும் இருக்கப் பிடிக்கல. ராத்திரியாச்சுன்னாத் தங்குறதுக்கு லெப்பர் விடுதி இருக்கு. மத்த ஊர்ல இருக்குறமாரி தெரியல் அதுனால் என்னால வெளியூர்ல வாழமுடியாது. ஆழம் தெரியாம காலை விடக்கூடாதுல்ல. நான் வரல்ல நீங்க போய் வாருங்கோ" என்றான்.
"சூசை ஒண்ணும் நெனைக்காதே, நீ ஆசைப்பட்டதெல்லாம் கிடைக்கும் பேசாமெ வா நம்மோட" என்றான். நிறைகுளத்து சாமி போல.
"இல்லைங்க. நா ஆசப்பபடுற காலமெல்லாம் போயிடுச்சி. இனிமேல் எனக்கு எந்த ஆசையும் இல்லை. இப்படியே மனுசப்பயலா வாழ்ந்திட்டு மனுசனாச் செத்துப் போயிரனும். இதுக்குமேல ஆசயெல்லாம் இல்லன்னே நீங்க நல்ல மாரியா போய்ட்டு வாங்க"
சோத்துப்பெட்டி அவனைப் பார்த்தான். எப்போதும் போலான சூசையாக அவன் கண்ணுக்கு தெரியவில்லை. எல்லாவற்றையும் கடந்துவிட்டவனாக நின்றான் சூசை. அவன் முகத்தில் ஒரு திருப்தி பொலிந்திருந்தது. பெருவியாதியின் வீக்கங்களுக்கு அப்பாலும் மகிழ்ச்சி அவன் முகத்தில் ஒளிர்ந்தது. அதற்கு மேல் நிறைகுளத்து சாமியாகிவிட்ட சோத்துப்பெட்டி எதுவும் பேசவில்லை. யாரையோ எதிர்பார்த்தபடி காத்திருந்தான். நிறைகுளத்தானை யாரும் பார்க்க வரவில்லை. "நீ யாரிடமும் சொல்லவில்லையா" என்று சூசை கேட்டான்.
"இல்லே. தக்கரையிடமும், முத்தாச்சிட்டயும் சொல்லலாம்னு

நினைத்தேன் ஆனா அவுங்க ரெண்டுப் பேத்தையும் பாக்கவே முடியரதில்லை. முன்னமாரி அடிக்கடி வரமாட்றாங்களே"

நிறைகுளத்தான் கடேசியாக மீண்டும் ஒருதடவை, பேரூந்து நிலையத்தைக் சுற்றிப் பார்த்துவிட்டு, "சூசை போய்ட்டு வாரேன்" என்று சொல்லிவிட்டுப் பேரூந்தில் ஏறினான்.

கனத்த இதயத்தோடு இருவரும் கைகாட்டிக் கொண்டனர். பேருந்து நிலையத்திற்குள் ஒரு வட்டம் விட்டு தெற்கு புறவழிச்சாலையில் ஏறி வேகம் எடுத்தது.

தக்கரை அண்ணனைப் பார்க்காமல் போகும் நிறைகுளத்தான் பயணம் சூசைக்கு வலியைக் கொடுத்தது. அன்றிரவு சூசை தூங்காமல் சோத்துப்பெட்டியையே நினைத்துக் கொண்டு உருண்டு உருண்டு கிடந்தான்.

மற்றபடி அவனைப் பொறுத்து அவன் தெளிவாகவே முடிவு எடுத்திருந்தது மகிழ்ச்சியாக இருந்தது. இனிமேல் எதற்கு தேவையற்ற நிறை வாழ்வு என்பதாக உணர்ந்தான்.

## அத்தியாயம் -36

திருச்சபை

மலைகள் உயர உயரமாய் சுற்றிலும்நின்றுக் கொண்டிருந்தன.
மரங்கள் காற்றில் பேயாட்டம் ஆடின. அவன் பேய்க் காற்றினால் தள்ளாடியபடி நடந்தான். காற்றில் அடித்து வந்த குப்பைகள் வண்ணமயமாகப் பறந்துப் போயின. அப்படியே கறுத்தப் பெரிய வௌவால்கள் ஒன்றிரண்டாக முதலில் வந்து ஆயிரக்கணக்கில் பறக்க ஆரம்பித்தன. மலைகள் கரைந்து கரைந்து கல்லறையின் சிலுவைக்கு மேல பருந்துகள் உட்கார்ந்து கொண்டு அவனையேப் பார்த்தபடி இருந்தன. பாறை அளவுள்ள கழுகு ஒன்று பறந்து வந்து அவனைப் பனியனோடு தூக்கிக்கொண்டது. எத்தனை பெரிய கழுகு அது. அதன் சிறகுகள் வானத்தையே மறைத்து விட்டன. அவன் கைகால்களை உதறித் துடித்து,தன் பனியன் கிழியத் தரையில் வந்து விழுந்தான்.
கல்லறைக்கு நடுவில் அலங்கோலமாகப் படுத்துக்கிடந்தான். எங்கும் தீப்பிடித்து கருகிய முடியின் வாசனை. மீண்டும் கழுகுகளின் குரலோசை பேரொலியாய்க் கேட்க ஆரம்பித்தது.
சடக்கெனக் கண்விழித்து எழுந்தான் சூசை. அவனுக்குள் பெரும் கிலி தோன்றி அவனை இறுக்கிப் பிடித்துக்கொண்டது. இந்தக் கனவு அவன் சீக்கிரம் இறந்துவிடப் போகிறான் என்பதைச் சொல்வதாக உணர்ந்தான். தக்கரை இருந்தால் இந்த கனவுக்கான அர்த்தத்தைக் கேட்கலாம். "அவரை எங்கே பார்ப்பது?" என்ற கேள்வி விடையின்றித் தவித்தது.
லெப்பர்களுக்கான விடுதியில் வாராவாரம் ஏதோ ஒரு அறக்கட்டளைசார்பில் பழங்களும் பிரெட்டும் கொடுப்பார்கள். அது அவன் தலைமாட்டில் இருந்தது. எல்லோரும் எழுந்து வெளியே போய்க் கொண்டிருந்தார்கள். ஏதாவது டீக்கடையில் டீ குடிக்கப் போவார்கள். சிலர் அதிகாலை யிலேயே யாசகத்திற்கு கிளம்பி விடுபவர்களும் உண்டு.
அவன் தனது பெட்டின் கீழ் இருக்கும் சைடு பெட்டியில் பிரட்டையும் பழங்களையும் வைத்தான். காலையில் கண்ட கனவிற்கான விளக்கம் சடக்கெனத் தோன்றி மறைந்தது. அன்னப்பாலைப் போல குப்பை கிடங்கில் நம் உடல் புதைக்கப் பட்டுவிடக்கூடாது என்று எண்ணினான்.
அன்று பத்துமணிக்கு கல்வெட்டாங்குழி அந்தோணியார் கோவில் பங்கு தந்தை அந்தோணி குரூஸ் அடிகளாரைப் போய் பார்த்தான். அவன் அன்னப்பாலின் சாவைக் குறித்து அவரிடம் சொன்னான். என்னைப்போல பலரும் கத்தோலிக்க வேதத்தில் இருந்தும், நாங்கள்

சபையில் அங்கத்தினர் இல்லை. நீங்கள் சபையில் எங்களைப் போன்றோரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். எங்களுக்கு திருச்சபை உறுப்பினர் அட்டை வழங்கப்பட வேண்டும் என்றான்.
குரூஸ் அடிகளார் எப்போதும்போல மெல்லிதாகச் சிரித்தபடிக் கேட்டுக்கொண்டார்.
"கண்டிப்பாகச் சபையில் உறுப்பினராக்கி விடுதல் அவசியம்" என்றார். ரேஷன் கார்டு, ஆதார் அட்டை போன்றவை இன்றி சிரமத்துடன் இருப்பதை அறிந்த அவர், "நமது சபை கொடுக்கும்
சான்றிதழை வைத்து ஆதார் அட்டை எடுங்க, ரேஷன் கார்டு வாங்குங்க" என்றார்.
சூசை தன்னுடைய ஆசை குறித்துச் சொன்னான். பாதர் உடனடியாக அதை ஏற்றுக் கொண்டார் நமது திருச்சபை எல்கைக்குள் இருப்பவருக்கு கண்டிப்பாக சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்கிறேன்.
"சூசை, கண்டிப்பாக ஒவ்வொரு கத்தோலிக்கனுக்கும் திருச்சபை சட்டப்படி கல்லறை வழங்கப்படல் வேண்டும். உனக்கும் அதன்படி கல்லறை வழங்கப்படும். ஆதனால் அதுகுறித்து எந்தக் கவலையும் படாதே" என்றார் பாதர்.
அவனுக்கு மிகுந்த மகிழ்சியாய் இருந்தது. பாதரிடம் ஆசீர்வாதம் பெற்ற போதே மனது நிறைந்தது போலிருந்தது. அப்படியே கண்கலங்க ஆலயத்தை விட்டு வெளியேறினான். ஏசு இரண்டு கைகளையும் அகல விரித்தபடி வானாந்திரத்தில் நின்று கொண்டிருந்தார்.
அந்த உயரமானப் பீடத்தில் நின்றிருக்கும் அவரது கைகள், "என் கையில் எதுவுமில்லை' என்பதுபோல விரிந்திருந்தன. இருந்தும் வானளவு விரிந்திருந்த அந்த இருகைகளும் தன்னை ஏந்தி இருப்பதாக உணர்ந்தான். அவரின் செட்டைகளின் கீழ் அவனும் அடைக்கலம் என்பதைப்போல உணர்ந்தான். இனி அவனுக்கு மரணம் ஒரு பொருட்டல்ல என்பது போல எண்ணிக் கொண்டான்.
அவன் கண்ட கனவிற்கு பலன் கிடைத்து விட்டதாக உணர்ந்தான். இதைப் பற்றி யாரிடமாவது சொல்லித் தீர்க்க வேண்டும். தக்கரையைத்தான் மீண்டும் மனது தேடுகிறது. வேறுயாரும் வந்த மாதிரியும் தெரியவில்லை. அவன் மெதுவாகப் பேருந்து நிலையத்தில் அமர்ந்தபடி தனது இருக்கைக்குச் செல்வது போலச் சொல்லிக் கொண்டிருந்தான்.
மின்னல் வெட்டுவது போல அவன் மனதில் ஒரு எண்ணம். தூத்துக்குடி தஸ்நேவிஸ் மாதா கடல் அலைகளின் மீது ஆடி வருவதைப் போல இருக்கிறது. நுரைபொங்கும் கடல் அலைகள் மாய்ந்து மாய்ந்து ஓடி வருகின்றன.

அந்த சூரியன் சிவந்த வண்ணத்தால் மேகங்களை வரைந்து அதன் முனைகளில் அலுமினியப் வண்ணத்தால் கோடுகள் போட்டிருந்தான். காற்றும் ஏதுமின்றி வேர்வை நசநசப்பாய் இருந்தது. எழுந்து கோபாலசாமி கோவில்பக்கம் போக எண்ணுகையில் பேருந்திலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான் லெப்பர் விடுதியில் அவனது பக்கத்து இருக்கை பாவநாசம்.

அவனிடம் காலையில் கண்ட கனவைப் பகிர்ந்து கொள்ளலாமா என்று நினைத்தான். அவனிடம் சொன்னால் அது விடுதி முழுவதும் பறந்துவிடும் அந்தப் பஞ்சுப் பொதிக்குள் தீ வைத்தமாதிரி எல்லோரும் சேர்ந்து அவனைக்கேலி செய்து விடுவார்கள் என்ற பயம் தோன்றியது.

யாரிடம் சொல்லி என்ன பயன்? நினைத்தபடி பாதர் திருச்சபையில் சேர்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார் பிறகு என்ன வேண்டியதிருக்கிறது.

"போதும் இந்த வாழக்கை எதையும் தேடி ஓடி என்ன செய்துவிடப் போகிறோம் சோத்துப்பெட்டிக்கு ஏழு சக்கரம் எட்டுச்சக்கரம் உடல்ல இருக்காம் அதைத் தலைக்கு கொண்டு வரப் போறானாம் அப்படிக் கொண்டு வந்தா எது கேட்டாலும் கிடைக்குமாம். அந்த ஆசையில் ஓடுதாம் நமக்கெதுக்கு இந்த வாழ்கையைத் தாண்டி வேளா வேளைக்கு திங்கிறதுக்கு எல்லாம் கெடைக்கு பொறவு எதுக்கு வேண்டி ஓடணும் போதும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்துன்னு பெரியவங்க சொல்றது சரியாதான் இருக்கும்" என்று எண்ணிக் கொண்டான்.

அந்தப் பழமொழி அவனுக்காக அருளப்பட்டதாகவே உணர்ந்தான்.

பாவநாசம் இறங்கி எங்கயும் திரும்பாமல் மேட்டுத்திடல் நோக்கி நடந்து போனான் அவனுக்கான நடையில் அவன் போய்க் கொண்டிருக்கிறான்.

திருமணம் செய்து கொள்ள விரும்பாத பாவநாசம், தனது சகோதரியின் குழந்தையைப் படிக்க வைத்து ஆளாக்கிக் கொண்டிருக்கிறான். சிறுகச் சிறுகச் சேர்த்த மஞ்சள் கயிற்றுடன் இருந்த ஒரே சகோதரிக்கு தங்கச் சங்கிலியாக மாற்றினான். அந்தக் குடும்பத்தில் அவன் பங்களிப்பு அதிகம். அதற்குமேல் அவனுக்கு வேறு எந்த அக்கறையும் இல்லை என்றுச் சொல்லிக்கொள்ளத் தயங்கியதே இல்லை. சூசைக்கும் அவனைப் போலவே அவன் போகிற பாதையிலே நடக்கலாம் என்று தோன்றத்துவங்கியது.

## அத்தியாயம் -37

பேருந்து நிறுத்தம்

குட்டித்துரை கடைசியாகக் குருட்டுப் பள்ளிக்கூடத்தில் வைத்துச் சொன்னவை அனைத்தும் தக்கரையைப் புரட்டிப் புரட்டி எடுத்தன. இரண்டு மூன்று பகல்களையும், இரவுகளையும் தின்று போட்டது அது. இதுநாள்வரைக்கும் எந்தச் சொல்லும் அவன் நினைவுகளை இவ்வளவு புண்ணாக்கியதில்லை. அந்த கேள்வி இத்தனை நாள் வாழ்க்கையும் கேள்விக்குறியாக்கிவிட்டது அவனது சொற்கள் ஏதோ அவனது உண்மையான உணர்வு விழித்துக் கொண்டது போல் இருந்தது.
அவனது அப்பா காலை அஞ்சு மணிக்கே எழுந்து பல கிலோ மீட்டர் சைக்கிளில் சாமான்களோடுப் போய் ஹைக்கிரவுண்டில் கடைவைத்தவர். கடையோடு ஹோமியோபதியும் படித்து அவரது ஊரில் சிலருக்கு மருந்தும் கொடுத்து வந்தார்.
மூத்த அண்ணனும் அப்படித்தான். அம்மா ஊரானப் பொட்டல்புதூரில் அவனது மாமாமார்கள் கர்நாடகா, ஆந்திராவில் அணைகட்டு, கப்பல்கட்டும் தளங்களில் இன்றும் கடை வைத்து தொழில்செய்து கொண்டிருக்கிறார்கள். அவன் எப்படி இதுவரை ஒரு ரூபாய்க்குக் கூட உழைக்காமல் போய்விட்டது எப்படி நிகழந்தது என யோசித்தான்.
உழைக்கவும், பாடுபடவும் இறைவன் கைகளையும், கால்களையும் தந்தபிறகும், அதைப் பயன்படுத்தத் திறன் இருந்தும் எது அவனை உழைக்கவிடாமல் தடுத்தது எது என்றுமனம் கேள்விகேட்டது. முந்தானைச் சேலைக்குள் மூடியபடி பழனிக்கு அழைத்துச் சென்ற வள்ளியின் முகம் மங்கலாகத் தெரிந்தது. அவள்தான் காரணம் என்றால் அதன்பிறகும் அவன் வேறு பெண்ணோடு ஓடவில்லை. பெண்ணிச்சை என்பதில் அவன் அத்தனை அக்கறையோடு உள்ளவன் அல்ல என்பதுதான் உண்மை. ஏதோ அவனைச் சுற்றிலும் இரண்டு மூன்று பெண்கள் உலா வந்தும் அவன் அவற்றில் மூழ்கிவிடவில்லை.
குட்டித்துரை சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவன் காதுகளில் ஒலித்தன...
"நா நல்லாப் படிச்சி... நல்ல வேலைக்குப் போயி வாப்பாவையும் அம்மாவையும் நல்லபடியா வச்சிக் காப்பாத்துவேன்" ஒரு சிறு உள்ளத்தில் இத்தனைத் தெளிவான வார்த்தைகளா? அவனின் திடமான நம்பிக்கை தனக்கும் ஏன் ஏற்படாமல் போனது என மருகினான். கண்ணிலிருந்து திரண்ட நீர்த்துளி. கன்னங்கள் வழியே இறங்கியது. கண்களைத் துடைத்துவிட்டுப் பார்த்தான். புதிய உலகம் ஒன்று வெள்ளைக் குடையாக விரிந்து இருப்பதாகப்பட்டது. இளம் வெள்ளை

வெயில் தர்காவின் கீழச்சுவரில் பெரிய மினாராவை வரைந்து வைத்திருந்தது.
தக்கரை உள்ளங்கையால் தனது கன்னத்தைத் தடவிப் பார்த்தான். தாடி அடர்ந்திருந்தது. மெதுவாகத் தோளில் பையைப் போட்டபடி வெளியே போனான். பிளவர் மில் நிறுத்தத்தில் ஏறி தாழையூத்தில் இறங்கினான். அங்குள்ள சலூன் ஒன்றில் சவரம் பண்ணிக்கொண்டான். கன்னத்தை இப்போது தடவிப் பார்த்தான். ஸ்னோ போட்ட தாடை வழுவழுப்பேறி யிருந்தது. தர்காவிற்கு வந்ததும் பைப்பைத் திறந்து குளிரக் குளிரக் குளித்தான். உடலும் மனமும் ஜில்லென்று ஆகிவிட்டது.
இப்படியே பாளையங்கோட்டை போகலாமா? ஒரு கணம் யோசித்தான். பாளையங்கோட்டை போய் என்ன செய்யப் போகிறோம்? சாமியார் ஆகிவிட்ட நிறைகுளத்தானும், எப்போதும் போல அப்படியே இருக்கும் சூசையும் கண்முன்னே வந்து நின்றார்கள். இந்த மனநிலையில் அவர்கள் இருவரும் அவனுக்காய் என்ன செய்து விடமுடியும். அவர்களை இன்று சந்தித்து அவர்களிடம் சொல்லிவிடவேண்டும் என்று தோன்றியது.
பாளையங்கோட்டை போய் இறங்கினான். பஸ்ஸ்டாண்டு திண்டில் தோளுக்குள் தலையைப் போட்டபடி உட்கார்ந்திருந்தான் சூசை. பார்த்தவுடன் நிமிர்ந்து உட்கார்ந்தவன் சோத்துப்பெட்டியின் சதுரகிரி பயணத்தையும், அவனை அழைத்ததையும் விலாவரியாகச் சொன்னான். அவனுக்கு சோத்துப்பெட்டி சித்தன் ஆனதும், சூசை தனது வாழ்க்கை இப்படியே கழிந்து இப்படியேக் கடந்துபோய் விடட்டும் எனத் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதும் மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. அதைவிடவும் அவனின் மாற்றமும் சேர்ந்துகொண்டது சிலசமயம் மாயாஜாலங்கள் போல் எல்லாமே சரியாகச் சேர்ந்து நடந்துவிடுகின்றது. அப்படியான தருணம் இது என்றே தோன்றியது.
கொஞ்சம் வேகமாக நடந்து பார்த்தான். உடலில் எந்தப் பலகீனமும் இல்லை என்றே தோன்றியது. இதுவரைக் கையில் கம்பு ஊன்றி நடந்தது அநாவசியம் என்றே தோன்றியது. மகன் குட்டித்துரையின் வார்த்தைகள் மீண்டும் அவனது குரலில் காதில் ஒலித்தது அந்த வெயில் அவ்வளவாக உரைக்கவில்லை. காற்று குளிர் கொண்டு வந்து சில்லிட வைத்தது.
முத்தாச்சியைப் பார்க்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. ஒருவேளை அவனது கேள்விக்கு அவளிடம் விடை இருக்கவும் கூடும். அவள் அப்படிப்பட்டவள்தான் என்று தோன்றியது. வாதம் வந்து கைமுடங்கிப் போன முத்தாச்சியின் அம்மா அவளைப் பிச்சைக்காக அழைத்து சென்றதால் அவள் அப்படி ஆகிவிட்டாள். அதுக்குப் பிறகு

கண்தெரியாத குட்டித்துரைக்காக அவள் பிச்சை எடுக்க நேரிட்டுவிட்டது. இல்லாவிட்டால் அவள் வேலைக்குப் போயிருக்கக் கூடியவள்தான். யதார்த்த வாழ்க்கையும் சூழ்நிலையும்தான் எல்லோர் வாழ்க்கையும் அதன் போக்கில் இயக்கி விடுகிறது. அவள் வாழ்க்கையும் அப்படித்தான் யாசக வாழ்வாக அமைந்துவிட்டது.

அவனோடு தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டான் சூசையும் தனக்குப் பெருவியாதி மட்டும் இல்லையென்றால் உழைக்கத்தான் செய்வேன் என்றான். மதியம் ஒரு பார்சல் சாப்பாடு வாங்கி இருவருமாகச் சாப்பிட்டார்கள். வெள்ளிக்கிழமையில் பணம் அதிகம் கிடைத்துவிட்டால் அப்படிச் சாப்பிடுவது வழக்கம். இருவரது வாழ்வும் இணையப்போவதில்லை என்று தோன்றியதால் மாலை வரை பேசிக்கொண்டிருந்துவிட்டு அந்தி சரிய இருவரும் புறப்பட்டார்கள்.

பேருந்தில் அமர்ந்திருக்கும் போது ஏதாவது ஒருகடையில் இரவுக் காவலாளி வேலை கேட்கலாம் என்று தோன்றியது சிந்தாமதார் தர்காவை நிர்வகித்து வரும் அனாதை நிலையத்தினரிடம் போய் வேலை கேட்கலாம் என்றும் தோன்றியது. எப்போதும் அவனைப் பரிவுடன் எதிர்கொள்ளும் வி.ஆர்.பெல்ட் ஓனரிடம் கேட்கலாம் என்றும் அவன் எப்படியாவது வேலையில் சேர்ந்து,

குட்டித்துரையிடம் அதைத் தெரிவிக்கணும் என்று மனதில் தோன்றிக் கொண்டிருந்தது.

குட்டித்துரை பெரியப் படிப்புப் படித்து வேலைக்கு போயி மதுரைக்கோ, சென்னைக்கோ அவனையும் முத்தாச்சியையும் பெரிய மாடி வீட்டுக்கு அழைத்துச் செல்வது போல மனச்சித்திரம் வளர்ந்தது. அது நடக்கும் என்றே மனதும் சொன்னது. முத்தாச்சி வீட்டின் முகப்பில் நின்று அவனை வரவேற்பது போலவும் காட்சி தோன்றியது. அவள் அருகில் வளர்ந்த பையனாய் கோட்சூட்டில் குட்டித்துரை நின்று கொண்டிருப்பதுப் போலவும் தெரிந்தது. அதுவே பெரிய மகிழ்ச்சி ஊற்றை அவன் உள்ளத்தில் உருவாக்கியது.

பேருந்து நிறுத்தத்தில் இறங்கி முத்தாச்சியின் வீட்டுக்கு நடந்து போனான். முத்தாச்சி மாநகராட்சி குடிநீர் பிடித்துக் கொண்டிருந்தாள். அவனை அந்தச் சூழ்நிலையில் அந்த நேரத்தில் எதிர்பார்க்கவில்லை. அதுவும் கையில் கம்பு இன்றி நடந்து வருவதை பார்த்துவிட்டு தண்ணீர் பிடிக்கும் கவனத்தில் வேறு யாரோ என்று தண்ணீர் குடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

நீர்த்தேக்கத் தொட்டி அருகில் இருப்பதால் தண்ணீர் பீய்ச்சி அடித்தபடி இருந்தது. முத்தாச்சி தண்ணீர்க் குழாயை அடைத்துவிட்டு குடத்தின் மேல்பகுதி தண்ணீரைக் கையால் வழித்துச் சேந்திவிட்டுக் குடத்தை

தூக்கி இடுப்பில் நிறுத்தினாள். அவள் குனிந்துக் குடத்தைத் தூக்கும்போது ஒரு மனிதனின் நிழல் அங்குப் படிந்திருப்பதைப் பார்த்தாள். யாராவது தண்ணீர் பிடிக்க வருபவர்களாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

குடம் இடுப்பில் ஏறவும் தக்கரை புன்னகைத்தபடி நின்றிருப்பதைப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. சடக்கென இடுப்பிலிருந்து இறக்கிக் குடத்தை தண்ணீர் பைப்பின் திண்டில் வைத்தாள்.

"ஏன் வைக்கிறே? வீட்டுக்குத்தானே... போவோம்" என்றான் தக்கரை.

தக்கரையின் குரல்தானா அது என்று ஒரு கணம் திகைப்பு ஏற்பட்டது மீண்டும் குடத்தை ஒக்கலில் வைத்துக் கொண்டு நடந்தாள். அவன் அவள் பின்னால் நடந்தான். கொஞ்சதூரம் நடந்துவிட்டு, "எப்பம் பஸ்சில வந்து எறங்குனிரு" என்றாள்.

"இப்பதான் எறங்கி நடந்து வாரேன்"

முத்தாச்சி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் நடை கொஞ்சம் வேகம் எடுத்திருந்தது. அவனும் நடந்து போனான். குடத்தை வீட்டில் வேகவேகமாக வீட்டுக்குள் போனவள் சேலையை ஒழுங்குப்படுத்திக் கொண்டு "டீ போடுறேன்" என்றாள். அவன் அங்கு கிடந்த ஸ்டூலில் உக்கார்ந்திருந்தான் டீயை அவன் கையில் கொடுத்துவிட்டு அவன் அருகில் உட்கார்ந்தாள். அவன் பேசாமல் அவளின் வேகமானச் செய்கைகளைப் பார்த்தபடி இருந்தான்.

"என்ன வந்துட்டிங்க"

"ஆமாப்பா வந்துட்டேன்.."

அவன் சொன்னதை விளங்கிக்கொண்ட முத்தாச்சி,

"ஆமா.. அதுதான் சரி" என்றாள்.

முத்தாச்சிக்கு "இனிமேல் என்கூடத்தான் இல்லே இங்கத்தான் இருக்கப் போறீங்களான்னு கேக்கணும்" போல தோணியது. வாய் வரை வந்தச் சொல்லை அடக்கிக் கொண்டாள். இங்கே வந்துவிட்ட பின்னே எதுக்கு அந்தக் கேள்வி. அதைக் கேட்டு வேறு பதிலை ஏன் சொல்லவைக்கணும் என்று எண்ணி மௌனமானாள்.

"கொஞ்சம் இருங்க... கூட ரெண்டு குடம் தண்ணீர் எடுத்துக்கிறேன்." என்று சொல்லிவிட்டு ஓடி ஓடி தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்தாள். மடமடவென விறகு அடுப்பில் சோறு பொங்கி இறக்கினாள்.

குறைந்த வெளிச்சத்தில் பல்பு மினுங்கிக் கொண்டிருந்தது. நாளைக்கு கூடுதல் வாட்ஸ் பல்ப் போடணும் என்று சொன்னாள். பக்கத்துப் பலசரக்கு கடையில் காய்கறி வாங்கி சமைத்தாள் எல்லாம் முடிய எட்டரை மணிக்கு மேலாகிவிட்டது. இடையிடையே அவனுக்கு வயிறு பசிக்கிறதா வேறு ஏதும் வாங்கிட்டு வரட்டுமா என்று கேட்டுக்

கொண்டாள். தக்கரை எதுவும் வேண்டாமென சொல்லிவிட்டு எப்போதும் அமைதியாக அமர்ந்திருந்தான். அவளின் நடவடிக்கைகளில் அவன் மீதான பிரியம் வெளிப்பட்டுக் கொண்டே இருப்பதைப் பார்த்து ரசித்தபடி இருந்தான்.

கூப்பிட்டு முடித்தவுடன் அவன் ஏதாவது வாட்ச்மேன் வேலை, ஏதாவது சின்ன வேலைக்குப் போவலாமான்னு நினைக்கிறேன். என்பதைச் சொன்னான். அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

"இல்ல முத்தாச்சி. மொவன் குட்டித்துரை சொன்னது என்னை அப்படியே மாத்திவிட்டுடுச்சி என்றான். நல்லா படிச்சி நல்லவேலைக்கு போறவனோட அப்பன் பிச்சையெடுக்குறது நல்லா இருக்குமா? நீயே சொல்"

அவள் பதில் எதுவும் சொல்ல முடியாமல் திணறினாள். அவன் மீதான ஆச்சரியம் அவளைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. கடைசியாக அவள் சொன்னாள்.

"நீங்க நினைக்கிறபடியே செய்யுங்க. நல்லதுதான்" என்றாள்.

"நாளைக்கே நான் எம்ஓசிக்கு போயி வேலைக்கு கேக்கப் பேசுறேன்" அவள் அதை ஆமோதித்துவிட்டு கேட்டான் "அப்போ நான் என்ன செய்யட்டும்?" என்றாள்.

" நீ என்ன செய்யணும் நெனைக்கியோ அதெச் செய்யு. உன்ன நான் எதுவும் சொல்லல "அது ஒன் இஷ்டம்" என்றான்..

"அப்படில்லாம் சொல்லாதிங்க. இனிமே நானும் ஏதாவது வேலைக்கு, ஒண்ணும் கெடைக்கலன்னா ஊட்டு வேலைக்காவது போறேன்" என்றாள்.

"நான் முதல்ல வேலை தேடிக்கிறேன் அதுக்கப்புறம் உனக்கு தேடலாம். கொஞ்சம் பொறுமையா இரி" என்றான் அதன்பிறகு ஒரு மணிநேரமாக சோத்துப்பெட்டி சதுரகிரி போனது, சூசை பாதரைப்பார்த்தது, அவன் முடிவு, குட்டித்துரையின் படிப்பு எல்லாவற்றையும் குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள். பேசப்பேசத் தொலையாத சங்கதிகள் வந்து கொண்டேயிருந்தன.

மணி பதினொன்றுக்கு மேலாகியிருந்தது.

"முத்தாச்சி நாளைக்கி காலம்பறவே எம்.ஓ.சி.க்கு போயி வேல கேக்க போவணும் கொஞ்சம் படுப்போம்" என்றவனைக் கட்டிப் பிடித்து அவன் கழுத்தின் வழியாக முகத்தைத் தேய்த்து மேலேற்றி கன்னத்தில் முத்தமிட்டாள்.

அந்த முத்தத்தின் ஈரம் காலை வரையில் காயவில்லை அவளது அணைப்பிற்குள்ளே தக்கரையும் உலர்ந்து கிடந்தான்.

## அத்தியாயம் -38

தாழை ஊற்று

அதிகாலையிலேயே முழிப்பு தட்டியது. அந்தப் புதிய சூழலும், வெதுவெதுப்பான உடலும், கிளுகிளுப்பான மனமும் அவனை சீக்கிரம் எழுப்பியிருக்க வேண்டும்.

அதிகாலையின் மென்காற்று மழையை விடவும் சுகமானது. உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் நனைத்துவிடும். காலை நேரத்தில் தெளிவாகச் சிரிப்பதற்கும் அதுதான் காரணம். தவிட்டுக்குருவி மரக்கிளையில் அமர்ந்து வாலை வீச்வீச் என்று ஆட்டிக்கொண்டிருந்தது.

அவனுக்கு முன்னால் எழுந்த முத்தாச்சி அடுப்படிக்குள் ஏதோ செய்து கொண்டிருந்தாள். இவள் ஏன் இப்படியிருக்கிறாள் என்று ஒரு கணம் சிந்தித்தான். இத்தனை சீக்கிரம் எழுந்து தன்னை அனாதை நிலையம் சென்று வேலை கேட்க செய்வதற்காக அவள் செயல்படுவதை உணர்ந்தான்.

அவனது தொண்டைக் கனைப்பைக் கேட்டவள் "டீ வேணுமா எந்திரிச்சி மூஞ்சிய கழுவுங்க" என்றாள். அவனுக்கு ஏன் எழுந்திருக்க வேண்டும் என்பது போல இருந்தது. திரும்பிப் படுக்கக்கூட மனமின்றி படுத்திருந்தான். தூரத்தில் எதிர்வீட்டு மோட்டுவளையில் நின்றபடி அணில் ஒன்று விசில் அடிப்பது போலக் கத்திக் கொண்டிருந்தது.

கறுப்புப் பல்லி ஒன்று ஓட்டுக்கம்பில் அமைதியாக நின்றது. அதன் உடலில் வரிவரியாக வெள்ளை மற்றும் கருப்புக்கலரில் இருந்தது சிறு அசைவுமின்றி எதற்காக இந்த ஊமைவேடம் என்று தெரியவில்லை. பட்டைகள் இருந்தன. ஓட்டுச் சாய்ப்பின் இடைவெளியில் சூரிய வெளிச்சம் ஒளியைப் போலப் பாய்ந்து வந்தது. அதற்கு எதிர்திசையில் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

"எந்திரிங்கையா. நேரத்தோடு போக வேண்டாமாய்யா" முத்தாச்சியின் குரல் அடுக்களையிலிருந்து ஓடி வந்தது. அவன் வேண்டா வெறுப்பாய் படுக்கையை விட்டு எழுந்து மூஞ்சிக் கழுவப் போனான். முகம் கழுவியவுடனே டீ குடிப்பதும், குளித்துவிட்டு வெளுத்த உடையில் வெளியே கிளம்புவதும், உடனே கிளம்பி பேருந்து ஏறி ஏதோ ஒரு இலக்கு நோக்கி செல்வதும் அவனுக்கு அந்நியமாகவும் எரிச்சலாகவும் இருந்தன.

அதிகாலை நேரத்தில் அவன் செயல் பட்டதே இல்லை. பொதுவாக பிச்சைக்காரர்கள் அதிகாலையில் எழுந்து விடுகிறவர்களாய் இருப்பார்கள். அவ்வாறு அதிகாலையில் விழிப்பவர்களும் இன்றைக்கானக் கடமையை உடனடியாகச் செய்ய எண்ணுவதில்லை.

கால நேரத்தில் கடமையாற்றுபவன் பிச்சை எடுக்க மாட்டான். தக்கரையும் எந்த வேலையையும் உடனடியாக செய்து முடிப்பவனல்ல.
முத்தாச்சிக்கு அவனைக் கிளப்பிப் பேருந்து நிறுத்தத்திற்கு அழைத்து வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. அவனாகப் புறப்பட்டால் இன்னும் இரண்டு மணிநேரம் கூடுதலாகி இருக்கும்.
பேருந்து ஏற்றிவிடும் வரை அவள் காத்திருந்து அனுப்புவதும், வண்டிப் புறப்பட்ட உடனே கையசைத்து டாட்டா காட்டுவதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் சிக்கவைக்கும் செயல் என்று அவனுக்குத் தோன்றியது. தனது கன்னத்தைத் தடவி பார்த்தான். நேற்றைய முகமழிப்பு இன்னும் வளுவளுப்பாகவே இருந்தது. தாடிமுடி இல்லாது அவன் கன்னங்களில் சொரசொரப்பு தொலைந்து போனதாகக் கருதினான். மழுமழுவென்றிருப்பது அவன் வாழ்க்கையில் அந்நியமான செயல் போன்றிருந்தது.
காலை வெயில் கொஞ்சம் இதமாக இருந்தது. அவனது வெளுத்த உடையை வேர்வை நனைக்கவில்லை தகிக்காத இந்த வெயிலில் அவனுக்கு இந்த பேருந்துப் பிரயாணம் அவசியமா என்றுகூட தோன்றியது.
முத்தாச்சி இரவில் அவனையொட்டி கண்சொருக மயங்கிக்கிடந்தது ஞாபகத்திற்கு வந்தது. அவளுக்காகவாவது அவன் அனாதை நிலையத்திற்கு சென்று வேலை கேட்பது என்ற முடிவு சரியாகத்தான் தோன்றியது.
எதையும் முறைப்படி செய்துப் பழக்கமில்லை. எந்த நேரம் எழுந்திரிப்பது, எந்த நேரம் தூங்குவது, எப்போது சாப்பிடுவது, மற்ற செயல்களை எப்போது செய்வது என்பது யாசகர்களின் வாழ்வில் தேவையல்லாத ஒன்று, சித்தம் போக்கு சிவம் போக்கு என்பதுதான் அவர்கள் வாழ்வு. தக்கரை கூடப் பலசமயம் நினைத்திருக்கிறான். எந்தக் கால வரையறைக்குள்ளும் தன்னைத் திணித்துக் கொள்ளாதவன் தான் முழுமையான யாசகன். இரவு எட்டுமணி வரைக்கும் குளோரிந்தா ஆலயத்தின் படுத்துக் கிடந்துப் பணத்தைப் பங்குப் போட்டபடி போகிறவள். பிச்சைக்காரி அல்ல. அவள் துட்டுமேல் கண்ணாயிருக்கும் காரியக்காரி. பிச்சைக்காரன் அதையும் தாண்டி அல்லது அதற்கு முன்னாடி அங்கேயே இருப்பவனாக அல்லது வெளியேறி வேறு இடத்தில் அடைபவனாக இருப்பான்.
இயற்கையாக அவன் மனம் எங்கெல்லாம் அழைக்கிறதோ அங்கெல்லாம் போகிறவனாக இருக்கிறான். அவனுக்கு வேனிற்காலமும், கூதிர்காலமும் எல்லாப்பருவகாலங்களும் ஒன்றுதான்.
தக்கரைக்கான மனமும் அப்படிப்பட்டதுதான் எந்தத் தேவையும்

அவனுக்கில்லை. வாழ்க்கைக்குறித்த எந்த முன் தயாரிப்பும் இதுவரை செய்து கொண்டதுமில்லை.

முதன்முறையாக இன்றுதான் வேலை கேட்டு ஒரு நிறுவனத்தின் தலைவாசலைத் தட்டுவதற்காகப் போகிறான். அதுவும் தன்னோடு வாழவிரும்பும் முத்தாச்சிக்காகவும் மகன் குட்டித்துரைக்காகவும்.

பேருந்து வேகமாகவேப் பயணித்துக் கொண்டிருக்கிறது. சருகோலைகளாய் வட்டமிட்டுக் கிடக்கும் பனைமரங்கள் தாண்டி பின்னோக்கிப் போகின்றன. வறட்சிக்குப் பின்னும் அவை சுமங்கலியாக இருப்பதைப் போல தோன்றின.

ஹைகிரவுண்டில் இறங்கி அனாதை நிலைய அலுவலகத்திற்குள் செல்ல வேண்டுமென்றால். அதன் முன்னால் பாதுகாவலராக நிற்கும் காவலரிடம் தெரிவிக்க வேண்டும் அவன் உள்ளே சென்று ஒப்புதல் பெற்று வந்தபின்பு, ஒரு நோட்டில் தனது முகவரி மற்றும் தகவல்களை அளித்தபிறகே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவான். சடக்கென மனத்தில் ஒரு கஷ்டமான கவலை சூழ்ந்தது.

மாதச் சம்பளக்காரனுக்கு தினமும் பணம் கிடைக்காது, மாதம் ஒரு தடவைதான் பணத்தைப் பார்க்கமுடியும், அதேபோல் தினமும் காலையிலேயே எழுந்து வேலைக்குப் போகணும், மாலை வரை வேலை பார்க்கணும், என்பதெல்லாம் அவன் எந்தக்காலத்திலும் எண்ணிப் பார்க்காத விஷயங்கள். அவனால் இதற்கெல்லாம் ஒப்புக் கொண்டு வேலை செய்வது கடினம்தான். அதைவிடவும் ஐந்து நேரம் தொழுகைசெய்ய வேண்டும் என்றால் அவன் என்னசெய்யப் போகிறோம் என்று அவனுக்கே விளங்கவில்லை.

பாளை பேருந்து நிலையத்தின் கீழோரத்து திண்டிலோ, அதற்குக் கீழோ சூசை தூங்கிக் கொண்டிருக்கக்கூடும் அவனிடமும் ஒரு யோசனைக் கேட்டுக் கொள்ளலாம் என்று தோன்றியது. பாளை பேருந்து நிலையத்தில் இறங்கி சூசையைத் தேடினான். சூசை அங்கு இருப்பதற்கான எந்தச் சுவடும் இல்லை. தரையில் பேப்பர் விரித்து அதன்மேல் துண்டைவிரித்து படுக்கும் பழக்கமுடையவன். அப்படி பேப்பரோ, விரிப்போ, பேப்பர்களோ காணப்படவில்லை.

உடல் முழுக்க கரியும் எண்ணெயுமாய் தலையெல்லாம் கிரீஸ் தடவியது போல அலையும் மனப்பிறழ்வுக்காரன் பஸ்நிலையத்திற்கு வேகமாக சத்தம் போட்டபடி விர்ரேன்று கிழக்கே போவதும் திரும்பி வருவதுமாய் இருக்கிறான். மூசுமூசு என்று மூச்சு இளைத்தபடியே அங்குமிங்குமாய் இடித்துக் கொண்டு விரைவான் சிலவேளைகளில் யாரையோத் தாக்குவதுபோ கத்திக் கொண்டு வேகமாக விரைவதும், மற்ற நேரங்களில் ஒடுங்கியும் இருப்பான்.

தக்கரை அணிந்திருந்தப் புத்தாடை அவனால் ஒரு இடத்தில் உட்கார்ந்து யாசகம் கேட்க மனதில்லாமல் ஆக்கிவிட்டது. அவன் மதியம் ரெண்டு மணி வரை சூசையை எதிர்பார்த்து நேரத்தைப் போக்கிவிட்டான். இனி சூசை வரமாட்டான் எனத் தெரிந்தவுடன் அப்படியே எழுந்து அனாதை நிலையம் நோக்கி நடந்தான். நடக்க நடக்க, கால்கள் நடக்க மறுத்தன. அப்படியே வீராவரம் (ஜங்ஷன்) போய்விடலாம் என்று தோன்றியது. வெளுத்த உடை அவனுக்கு எரிச்சலைத் தந்தது.

இந்த நேரத்தில் முத்தாச்சியும் அவள் வீட்டில் சோறும் கறியும் பொங்கி வைத்து அவனுக்காக மகனுடன் காத்துக்கொண்டிருப்பாள் என்று எண்ணிக்கொண்டான். ஆனாலும் அவள் பாவம்தானே இன்னும் ஒருமாதத்திற்கு எவ்வித வரவும் இல்லாமல் அவளால் எப்படி சமாளிக்கமுடியும் என்ற பரிதாபமும் கூடவே அந்த எண்ணத்துடன் சேர்ந்து வந்தது.

அடுத்த அரைமணி நேரத்தில் சந்திப்பு ரயில் நிலையத்தின் முன்பு நின்றான். கன்னக்கிழவித் தலையில் கட்டியத் துண்டுடன் கைக்கம்பை ஊன்றி சிறிது குனிந்து நின்று பிச்சைக் கேட்டபடி நின்றாள்.

முதுகில் காலைத்தூக்கிப் போட்டுக் கொண்டு உடுக்கை அடித்தபடிப் படுத்துக்கிடந்தப் போலியோ பையன் மாவேல் நடுச்சாலைக்கு தன் படுக்கையை மாற்றினான். இன்னும் அதிகச் செலவு அவனுக்கு இருக்கலாம். ரெண்டு மணி நேரமும் படுத்துவிட்டு அந்தக் காசில் ஒரு குவாட்டரையும் நாலு புரோட்டா ஒரு சிக்கன் 65 என எல்லாவற்றையும் தின்றுவிட்டு படித்திண்டில் உட்கார்ந்து பேச ஆரம்பித்து விடுவான். நடுச்சாலைக்கு வந்து படுத்துவிட்டால் அவனைத் தாண்டியோ, மிதித்தபடியோ செல்ல வேண்டியிருக்கும்.

பார்த்தவுடன் பாக்கெட்டில் கை விட்டு போட்டுவிடுவார்கள் யாராக இருந்தாலும். காலற்றவன் தன் கையூன்றிகளை நீட்டி வைத்துக் கொண்டுக் காலைக் காட்டியவாறே உட்கார்ந்திருந்தான். அத்தனை வேகமாய் ரயிலுக்குச் செல்பவர்களிலும் அவன் செலவிற்கும், குடும்பத்திற்கும் சேர்த்து வருமானம் பார்த்துவிட்டுத்தான் போகிறான்.

ஒருவன் கிழவியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு, அவள் தட்டில் ஏதோ போட்டுவிட்டு போகிறான். அந்தியின் கருமைப் பற்றிக் கொள்ள விடாமல் மின்விளக்குகள் ஆங்காங்கே எரியத் துவங்குகின்றன.

பெருமா அண்ணன் த.மு.ரோட்டின் கீழ்க்கடைசியில் சரிந்து நடந்து வருவது தெரிகிறது. அவர்தான் இவர்களிடம் காலையில் கொடுத்தப் பணத்தை வசூலிக்கணும். சிலருக்கு பாட்டில், சிலருக்கு சாப்பாடு என எல்லாவற்றையும் வாங்கிக் கொடுக்கணும். அவரது வேகமான நடையில் அவரது பணிகளை சீக்கிரம் முடிக்க வேண்டும் என்பது

தெரிகிறது.
அவனுக்கு அதற்கு மேல் அங்கு நிற்க மனம் தோன்றவில்லை. சந்திப்புப் பேருந்து நிலையத்திற்குள் சென்றுக் கோவில்பட்டி பேருந்தில் ஏறினான். பைபாஸ் சாலையில் ஏறியபோது, நடத்துனர் "சீவலப்பேரி விலக்கில் பஸ் நிக்காது தாழையூத்துல ஏறங்கிக்கோ" என்று சீட்டைக் கணிணி இயந்திரத்தில் எடுத்துக் கொடுத்தார்.
தாழையூத்தில் மெதுவாக இறங்கி வடக்கே பார்த்தான். கும்மென்று இருட்டாக இருந்தது. சிமிண்டு ஆலையில் மஞ்சள் விளக்குகள் மினுக் மினுக்கென்று எரிந்தபடி இருந்தன. சங்கர் பள்ளி தாண்டியவுடன் மானூர் மலைக்காற்று கீழ்திசையைக் குறிவைத்தபடி பாய்ந்து சென்றுகொண்டிருந்தன.
எது வந்தால் என்ன? தர்காவிற்கு சீக்கிரம் போய்விடவேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாக நடையை எட்டிப் போட்டான். அவன் வேகத்திற்கு ஏற்ப ஜோல்னாப் பை முன்னும் பின்னுமாய் ஆடிக்கொண்டிருந்தது.
தர்கா பட்டியக்கல்லில் நல்லாப் படுத்து எந்திரிச்சா எல்லாம் சரியாகிவிடும் என்று அவனுக்கு தோன்றியது. சாரலும், குளிர் காற்றும் இருட்டும் அவனது நடையை தடுத்து நிறுத்திவிட முடியாதுதான். அதெல்லாம் அவனுக்கு நேசத்திற்குரிய நண்பர்கள்தானே.
நவீன உலகத்தின் எல்லாச் செயற்கைகளையும் அதன் கேடுகளையும் காலில் போட்டு மிதித்தவாறு யாசகர்கள் நடந்து கொண்டே இருக்கிறார்கள். நடப்பது என்பதுதான் பெரும் பிச்சைக்காரர்களின் வாழ்வை நகர்த்திக் கொண்டே இருக்கிறது.
ஆதி மனிதனின் காலம் தொட்டு வருகிற பழக்கமல்லவா அது. ஆதி மனிதனுக்கான காலின் வலிமைதான் அவர்களைக் கொஞ்சம் வேகமாக நடக்கத் தூண்டிக் கொண்டே இருக்கிறது. எல்லாம் முடங்கிப் போன பிச்சைக்காரர்களின் எஞ்சிய ஒரே இயக்கம் நடைதான்.
அதனால்தான் என்னவோ, தக்கரையும் தனக்கு பிடித்தமான நடையில் எப்போதும் பயணிக்கிறான். தனது ஜோல்னா பையுடன் திசையறியாத ஊர்களையெல்லாம் அவன் கால்களின் மூலமாகவே கடந்துபோய் இருக்கிறான்.
இந்த நடைதானே அவன் வாழ்க்கையில் பல சம்பவங்களையும், திருப்பங்களையும் கொடுத்தபடி இருக்கிறது. வேலைக்குபோய் இந்த நடையை மறந்துவிட்டால் வாழ்க்கை என்னவாகுமோ என்ற பயம் அவனுக்குள் எழுந்தது. அந்தப் பயம் ஒரு பெரிய கனவுச் சுழல்போல விரிவட்டமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. வேலை சிறைக்குள் மாட்டிக்கொள்ள அவன் மனது விரும்பவே இல்லை. அதைவிடவும்

அத்தனை இனிமைகளையும் வாழ்வில் வழங்கிய நடையை எப்படி அவனால் இழக்க இயலும்?.

எத்தனை வருடமாக அவன் எங்கெல்லாமோ நடந்திருக்கிறான். கைக்கம்பு இல்லாதது வேறு நடையின் போக்கைக் கொஞ்சம் தளர வைக்கிறது. மெதுவாக எத்தனைத் தூரம் நடக்கமுடியும்? இன்னும் அவன் எவ்வளவு தூரம் நடக்க வேண்டியதிருக்கிறது..?

தூங்கி எழுந்தவுடன் கை கம்பு ஒன்றை தயார் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தவிர வேறொன்றும் தோன்றவில்லை தக்கரைக்கு.

***

முற்றும்